# உயிராக நானிருப்பேன்



சத்யா இராஜ்குமார்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உயிராக நானிருப்பேன் |
| ஆசிரியர் | : சத்யா இராஜ்குமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : செப்டம்பர், 2011 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 236 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம்<br>தபால் பெட்டி எண்: 667,<br>பு.எண்: 32/7, ப.எண்: 107/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.90.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# உயிராக நானிருப்பேன்

# உயிராக நானிருப்பேன்

## 1

''தாரிணி!''

''வர்றேம்மா... என்னமா, சொல்லுங்க.''

''என்னடி இது?''

''எதுமா?''

''இந்த டிரஸ்ஸத்தான் கேக்கறேன்.''

''ஏன் நேத்து நான் உங்ககிட்ட கேட்டுட்டுத்தானே போட்டிருக்கேன்...''

"அதெல்லாம் சரிதான். ஆனா இப்ப புடிக்கல. பாக்கறவங்க நாலு பேர் என்னடி நினைப்பாங்க..."

"இதுல நினைக்க என்னமா இருக்கு?"

"ம். இது வீட்டுக்கு அடங்காது போலிருக்குன்னு நினைச்சுக்குவாங்க. ஏம்மா என்ன இப்படியெல்லாம் பேச வெக்கற?"

..........

"போ. போய் சுடிதாரோ, சேலையோ மாத்திட்டுப் போ."

"அம்மா, ப்ளீஸ்மா. எல்லாரும் ஒரே மாதிரிப் போடலாம்னு ஏற்கெனவே ஃப்ரண்ட்ஸ் கூடப் பேசி வெச்சுட்டேம்மா."

"அதுக்கெல்லாம் ஒன்னும் பண்ண முடியாது. சொன்னாக் கேளு."

அவ்வளவுதான். அதற்கு மேல் பேச ஒன்றுமில்லையென்பதைப் போலத் தாய் தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டிருக்க, தனது தாயின் கட்டளைப் பேச்சில் செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்தாள் தாரிணி.

"என்னடி?"

"சரிமா, நான் எங்கயும் போகல."

"ஏன் போகல? அந்த டிரஸ்ஸத்தான் போட வேண்டாம்னு சொல்றேன்."

ஒரே மாதிரி உடுத்தலாம்னு அனைவரும் சேர்ந்து பேசி முடிவு செய்ததற்குப் பிறகு, இனி தான் மட்டும் வேறு உடையில் சென்றால் தன்னைக் கேலி பேசியே ஒரு வழி செய்துவிட மாட்டார்களா?



மகளின் சிறிதாகிப் போன முகத்தைப் பார்த்த லட்சுமிக்கும் என்ன தோன்றியதோ, "சரி சரி, இன்னைக்கு ஒரு நாளைக்குப் பரவாயில்ல. ஆனா இனிமேல் இந்த மாதிரி துணியெல்லாம் போடறதப் பத்தி நினைச்சுக் கூடப் பாக்கக் கூடாது. சொல்லிட்டேன்," என்றார்.

தாயின் வார்த்தைகளில் முகம் மலர்ந்திருந்த தாரிணி, "தேங்க்யூமா!" என்றாள்.

"நீங்க பயப்படற அளவுக்கெல்லாம் இந்த ஜீன்ஸ் பேண்ட், டாப்ஸ்ல தப்பு எதுவுமில்லமா..."

"போதும், இதுக்கு தான் வேண்டாம்னு சொன்னேன். போ. போய்க் கிளம்பற வேலையப்பார்த்துட்டு சாயங்காலம் நேரத்தோட வீடு வந்து சேர்ற வழியப்பாரு."

தனது தாய் எதுவும் சொல்லாமல் இருந்திருந்தால் எப்படியோ, அவ்வளவாகப் பிடிக்காவிட்டாலும் தனது தோழிகளின் கட்டாயத்திற்காக அந்த உடையைப் போடச் சம்மதித்திருந்த தாரிணிக்குத் தான் சம்மதிக்காமலே இருந்திருக்கலாமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

தனது தாய் பாட்டுக்கு இன்னும் புலம்பிக் கொண்டிருப்பது கேட்க, மனதிற்கும் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

கடைசியில் தனது தோழிகளின் மேல்தான் எரிச்சலாக வந்தது.

மற்றவர்களுடைய சூழ்நிலையைப் பற்றி சிறிதும் எண்ணிப் பார்க்காமல்....

இத்தனைக்கும் பிறகு, ஏனோ அந்த உடையில் தாரிணியால் சாதாரணமாக இருக்க முடியவில்லை.

பேசி வைத்துக் கொண்டது போலத் தோழிகள் அனைவரும் அவளது உயிர்த் தோழியான ஹரிணியின் வீட்டில் சந்தித்துக் கொண்ட போது, மீண்டும் ஓரளவு பழைய மனநிலைக்குத் திரும்பி விட்டிருந்தாள் தாரிணி.

பார்த்ததுமே அனைவரும், ''வாவ் தாரிணி!'' என்று ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

''அட சொன்ன மாதிரியே சாதிச்சுட்டாளே!'' என்று ஒருத்தி சொல்ல, ''நிஜமாவே தாரிணி தாரிணி தான்!'' என்றாள் இன்னொருத்தி.

''எது எப்படியோ நம்ம எல்லார விடவும் அவளோட ஹைட்டுக்கும், ஸ்ட்ரக்சருக்கும் தாரிணிக்குதான் இந்த டிரஸ் ரொம்பப் பிரமாதமா மேட்ச் ஆகுது!'' என்று ஹரிணி சொல்ல, ''அது சரிதான்,'' என்று அனைவருமே அதை ஆமோதித்தார்கள்.

இப்படி அனைவரும் தனது உடையைப் பற்றியே ஆச்சரியமாகப் பேசியதில் தான் சொல்லி வைத்துக் கொண்ட படியெல்லாம் தான் மாடர்ன் டிரஸ்ஸில் வர மாட்டோமென்று அனைவரும் எதிர்பார்த்திருந்ததும் புரிந்தது.

ஆனால் நான் ஒன்றைச் சொல்லிவிட்டுப் பிறகு அதைச் செய்யாவிட்டால் அல்லவா நீங்கள் ஆச்சரியப்பட வேண்டுமென்று சிரித்துக் கொண்டாள் தாரிணி.

அதெல்லாம் சரிதான். ஆனால் அதற்கு உன் அம்மாவிடம் எத்தனை திட்டு வாங்கினாயோ, அதோடு இனி மேலும் தொடர்ந்து வாங்கப் போகிறாயோ என்று தோழிகள் அனைவரும் மிகச் சரியாகக் கணித்து விட்டதில் தான், மனதிற்குள் மிகவும் ஆச்சரியமாகிப் போய் விட்டிருந்தது தாரிணிக்கு.



ஆனாலும் வெளியே, ''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல!'' என்று மறுத்து வைத்தாள்.

அங்கு வந்திருந்தவர்கள் அனைவருமே தாரிணியுடன் கல்லூரியில் உடன் படித்தவர்கள்.

ஏற்கெனவே பேசி வைத்துக் கொண்டு மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொருவரின் வீட்டில் வைத்துச் சந்தித்துக் கொள்வதையும் அவர்கள் அனைவரும் வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சுற்றில் இந்த முறை வந்திருந்தது ஹரிணியின் வீடு.

''ஆனாலும் நீ ரொம்பப் பாவம் தாரிணி!'' என்று நித்யா சொல்ல, ''சரிதான், என்ன விட்டுட்டு வேற ஏதாவது விஷயமிருந்தாப் பேசுங்களேன்,'' என்று அவ்வளவு நேரமும் முயன்று கடைப்பிடித்து வைத்திருந்த பொறுமை காற்றில் பறக்கச் சொன்னாள் தாரிணி.

''அதானே பாத்தேன். இன்னைக்கு ஏன் அம்மா பேசாமலே இருக்கான்னு இப்பதான் நினைச்சேன்!'' என்று அதையும் தானே சொன்னாள் நித்யா.

அதற்குப் பிறகு அவர்களுடைய பேச்சு வேலை, அதிலிருக்கும் நிறை குறைகள் எனத் திரும்பியிருந்தது.

அவர்கள் அனைவரும் கடந்த வருடம் தான் எம்.பி.ஏ. முடித்திருந்தார்கள்.

அந்த செட்டிலேயே தாரிணியுடையது தான் சற்று ஏழ்மையான குடும்பமாக இருந்தது.

மிகவும் நன்றாகப் படிப்பாள் என்பதால், மெரிட்டிலேயே தனது முழுப்படிப்பையும் முடித்து விட்டிருந்தாள், தாரிணி.

மிகவும் அமைதியானவள் என்பதால் யாருடனும் அவ்வளவு விரைவில் பழகிவிடாத தாரிணி கல்லூரியின் கடைசி வருடத்தில்தான் அந்த செட்டில் சேர்ந்திருந் தாள். அதுவும் அவளுடைய உயிர்த் தோழி ஹரிணியால்.

ஆனால் ஹரிணி தாரிணிக்கு நேர் எதிர். அனை வரிடமும் மிகவும் கலகலப்பாகப் பேசுவாள்.

''நான் மட்டும் தான் வேலை கிடைக்கலையேன்னு இருந்தேன். ஆனா இப்பக் கடைசியா நானும் வேலைக் குப் போக ஆரம்பிச்சுட்டேன். நம்ம செட்ல இப்ப எல் லாருமே சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டோம்!'' என்று ஹரிணி சொல்ல, ''அது சரிதான்,'' என்று அந்தச் சிறு பெண்கள் அனைவருமே தங்களுக்குள் சற்றுப் பெருமையாகத்தான் உணர்ந்தார்கள்.

ஒவ்வொருவரும் தங்களுடைய வேலைகளைப் பற்றி சுவாரஸ்யமாகச் சொல்ல, பிறகு அதைப் பற்றிப் பேசு வதில் நேரம் போனது.

''என்ன தாரிணி, உன் வேலையப் பத்தி நீ எதுவுமே சொல்ல மாட்டேங்கற?'' என்று அனைவரும் மீண்டும் தன்னைப் பார்க்க, ''அவ என்னத்த சொல்லுவா?'' என் றாள் விகாசினி.

''ஏன்?''

''பின்ன? அவளோட பாஸ்தான் வயசான தாத்தா வாச்சே!'' என்றாள் அவள்.

''அட அது வேறயா? எப்படி சரியா நம்ம தாரிணிக் கின்னு பாத்தே எல்லாம் இப்படி அமையுது?'' என்று தேவி நக்கலாகக் கேட்க, அனைவரும் கொல்லென்று சிரிக்க ஆரம்பித்திருந்தார்கள்.



அவர்கள் பேசுவதனைத்தையும் சிரித்த முகத்துடன் தாரிணி பார்த்துக் கொண்டிருக்க, ''ஹலோ, அவ வேல செய்யறது எவ்வளவு பெரிய கம்பெனி தெரியுமா? முதல்ல அவ வாங்கிட்டிருக்கற சம்பளத்துல பாதியளவு கூட இன்னும் நம்ம யாரும் வாங்க ஆரம்பிக்கல, தெரிஞ் சுக்கோங்க!'' என்று பட்டென்று சொன்னாள் ஹரிணி.

''அடடா, அவளோட ஃப்ரண்ட்ட சொன்னா இவ ளுக்கு என்ன கோபம் வருது பாத்தீங்களா?'' என்று அனைவரும் ஹரிணியைக் கிண்டல் செய்ய ஆரம்பித் திருக்க, ''இங்க இருக்கற எல்லாருமே எனக்கு ஃப்ரண்ட்ஸ் தான்!'' என்று புன்னகையுடன் உடனே சொன்னாள் தாரிணி.

''ஆனாலும் நீ ரொம்பப் பாவம் தான் தாரிணி. யங்ஸ்டர்ஸ் கூட வேல செய்யறது எவ்வளவு ஜாலியா, சூப்பரா இருக்கு தெரியுமா? பாவம், உனக்கு அதுக்குக் குடுத்து வைக்கல!'' என்று உணர்ந்து அக்கறையுடன் சொன்னவர்களைப் பார்த்த தாரிணிக்குச் சிரிப்பு தான் வந்தது.

மனதிற்குப் பிடித்த அமைதியான வேலையோடு அதற்குக் கை நிறையச் சம்பளமும் கிடைக்கும் போது அதற்கு மேல் வேறு என்ன என்று அவளால் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

''ஆனா அப்படியிருக்கப் போகத்தான அவங்க வீட்ல இவள வேலைக்கு அனுப்பவே சம்மதிச்சிருக்காங்க,'' என்று நித்யா சொல்ல, ''அப்படியெல்லாம் ஒன்னுமில் லையே,'' என்று வேகமாக மறுத்தாள் தாரிணி.

''அது சரிதான். தாரிணியத்தான் நம்ம செட்ல வேலைக்குப் போகவே மாட்டான்னு நினைச்சோம்.

ஆனா அப்புறம் பாத்தா நம்ம செட்ல வேலைக்கு ஜாய்ன் பண்ணின முதல் ஆளே அவதான். இப்ப மாடர்ன் டிரஸ்க்கும் மாறிட்டா. இனி அப்படியே கொஞ்சம் கொஞ்சமா பாய் ஃப்ரண்ட்ஸ்... சம்திங் சம்திங்..."

எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ, "போதும், இதுக்கு மேல ஒரு வார்த்த கூடப் பேசாதீங்க!" என்று பட்டென்று சொல்லி விட்டிருந்தாள் தாரிணி.

"அடடா மேடம்க்கு எவ்வளவு கோபம் வருது!" என்று விகாசினி சாதாரணமாகப் பேச, "பேச்சுல கூட ஒரு லிமிட் இருக்கணும்னு எதிர்பார்க்கறவ நான், ஸாரி!" என்று முடித்து விட்டிருந்தாள் தாரிணி.

அதற்குப் பிறகு ஹரிணியின் வீட்டில் மதிய உணவு, பின்னர் அவர்கள் அனைவருமே ஒன்று சேர்ந்து ஒரு சினிமா என அனைத்தையும் முடித்துக் கொண்டு தோழிகள் அனைவரிடமும் விடைபெற்றுக் கொள்ள, மாலை ஆறரை மணிக்கு வீட்டிற்கு வந்து சேர்ந்திருந்தாள் தாரிணி.

"வாடிம்மா, உன் கலாச்சாரம் இந்தத் துணியோட நின்னுடுச்சா இல்ல அதுக்கும் மேல ஏதாவது..."

தனது தாயின் குரலில் தெரிந்த எரிச்சலோடு, தனது தோழிகளும் அதே போலக் கேட்டது தான் தாரிணிக்கு அப்பொழுது நினைவிற்கு வந்தது.

ஏனோ மனம் மிகவும் பாரமாகிவிட்டிருக்க, எதுவும் பேசாமல் தன்னுடைய அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டவள் தான், அணிந்திருந்த உடையைக் கழற்றிக் கீழே வீசியெறிந்து விட்டு மிகவும் பழைய நைட்டியொன்றை எடுத்து மாட்டிக் கொண்டு படுக்கையில் விழுந்தாள்.



தோழிகள் அனைவரும் முக்கியமாக ஹரிணி மிகவும் வேண்டிக் கேட்கிறாளே என்று பார்க்காமல், இந்த உடையை அணியச் சம்மதிக்காமல் இருந்திருக்க வேண்டுமோ எனத் தோன்றியது.

ஆனால் இப்பொழுது புத்தி வந்து என்ன பயன்? இனி இந்த அம்மாவும் இதையே வைத்துக் கொண்டு எத்தனை காலத்திற்குப் பேசப் போகிறார்களோ என்று மனம் மேலும் பாரமாகி விட்டிருந்தது அவளுக்கு.

அதற்கும் மேலாகத் தன்னுடைய தோழிகள்.

இந்தப் பெண்களால் எப்படி மற்றவர்களுடைய மனதைப் பற்றி சிறிதும் யோசித்துப் பார்க்காமல் அப்படியெல்லாம் பேச முடிகிறதோ என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இருந்திருந்து தன்னை எப்படி மற்றவர்கள் அப்படியெல்லாம் நினைக்கலாம் என்றும்.

தான் அப்படியெல்லாம் தவறான பாதையில் செல்ல வேண்டுமென்றால், சூரியன் மேற்கே அல்லவா உதிக்க வேண்டும்!

## 2

முதல் நாள் நடந்ததின் எதிரொலியாகவோ என்னவோ, மறுநாள் வேலைக்கு ஒரு பழைய நடுத்தரமான காட்டன் சேலையை எடுத்து அணிந்து கொண்டாள் தாரிணி.

அதற்காக அது நாள்வரை வேறு மாதிரி சென்றாள் என்று பொருளில்லை. தோற்றத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதைச் சற்று குறைத்துக் கொண்டாள் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இனி எப்போதும் இப்படித்தான் செல்ல வேண்டு மென்றும் மனதிற்குள் முடிவு செய்து விட்டிருந்தாள்.

அந்தக் கம்பெனியின் எம்.டி.யுடைய பி.ஏ.வான தாரிணி வழக்கம் போலத் தன்னுடைய இடத்தில் ஹேண்ட் பேக்கைக் கொண்டு போய் வைத்துவிட்டு வந்து தனது வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

தொடர்ந்து வந்த பத்து நிமிடங்களில் உள்ளே வந்த எம்.டி.க்கு எழுந்து நின்று வணக்கம் சொன்னவள், பிறகு மீண்டும் அமர்ந்து தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

அறுபது வயது ஏன் அதற்குமே சற்று கூடுதலான வய துடைய எம்.டி.யிடம் வேலை செய்வதில், தேவையற்ற பிரச்சனைகளென்று எதுவுமில்லாமல் அவளுக்குமே வேலை திருப்திகரமாக இருந்தது.

ஆனால் அதற்கு நேர் மாறாகச் சொன்ன தனது தோழி களின் பேச்சு நினைவிற்கு வர, எரிச்சலும் கோபமும் மனதிற்குள் ஒரு சேரத் தோன்றின.

ஆனால் அடுத்த வினாடியே தான் ஏன் இப்படி தோழி கள் விளையாட்டிற்குச் சொல்வதைக் கூட சீரியஸாக எடுத்துக் கொண்டு யோசிக்கிறோமென்று தனது எண் ணத்தின் போக்கைத் திருத்திக் கொண்டு விட்டிருந்தாள்.

தாரிணியின் இயல்பும் அதுதான். அவளால் எப் பொழுதுமே யார் மீதும் கோபத்தை - அது மிகவும்



சிரமப்பட்டே என்றாலும் கூட - இழுத்து வைத்துக் கொண்டிருக்க முடியாது.

தாரிணி வேலை செய்வது நெல், தானியம், பருப்பு வகைகள் போன்றவற்றை அரைக்கும் அரவை இயந்திரங் களைச் சற்று பெரிய அளவில் உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனத்தில்.

அன்று காலையில் தாரிணி வேலைக்கு வந்தபோது, எம்.டி. ஏற்கெனவே வந்து விட்டிருந்ததைக் கண்டாள்.

அதற்கும் அன்று வழக்கத்தை விடவும் ஐந்து நிமி டங்கள் முன்னதாகவே வேறு டியூட்டிக்கு வந்து விட் டிருந்தவளுக்கு, ஒருவேளை எம்.டி. ஏதாவது சொல்லி விடுவாரோ என்று மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

ஆனால் அறைக்குள்ளேயே வந்து விட்டிருந்தவளுக்கு அதற்குப் பிறகு தான் அங்கு மற்றொரு இளைஞனும் மார்பில் கைகளைக் கட்டியவாறு அங்கு இருந்த அந்தப் ப்ளைவுட் தடுப்பின் சுவரில் சற்று இலகுவாகச் சாய்ந்த படி நின்றிருந்தது தெரிந்தது.

அதற்குள் அவர்களுக்கு அருகிலேயே வந்து விட் டிருந்தவள் இருவருக்கும் வணக்கம் சொன்னாள்.

புதியவனுக்கு நாம் எதற்காக வணக்கம் சொல்ல வேண்டுமென்று மனம் நினைத்தாலும், வாய் தானா கவே வணக்கம் சொல்லி விட்டிருந்ததை அதற்குப் பிறகு தான் உணர்ந்தாள்.

கூடவே எம்.டி.யைப் போல அல்லாமல் புதியவன் ஒரு தலையசைவுடன் அதை ஏற்றுக் கொண்டது ஏனோ அவளுடைய மனதிற்குச் சற்று இதமாகக் கூட இருந்தது.

''சரி, நீ இனி என்ன சொல்றியோ அத வெச்சுத்தான் மேல ஆக வேண்டியதப் பார்க்கணும்,'' என்று எம்.டி. புதியவனிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

''நான் சொல்ல என்ன இருக்கு? எத்தன லட்சங்கள பிஸினஸ்ல இருந்து எடுத்தீங்களோ அதையெல்லாத்தையுமே உடனே திருப்பிடுங்க போதும்,'' என்று அவன் எம்.டிக்குப் பதில் சொன்னதும்.

''அதெப்படி...'' என்று வேகமாக எதையோ சொல்ல வந்துவிட்டுப் பிறகு பேசாமல் விட்டு விட்டிருந்த எம்.டி.யின் செய்கையில், ''சரிப்பா. அவ்வளவுதான். இனி வேலையப் பாக்கணும். மூணு மாசம் ரொம்பப் பெரிய கேப்!'' என்று அந்த இளைஞன் இன்னும் தொடர்ந்து மேலே சொன்னவையெதுவுமே தாரிணியின் காதுகளில் விழுந்திருக்கவில்லை.

அப்பாவா, அப்படியானால் இவன்தான் அந்தச் சின்ன எம்.டி.யா?

ரொம்ப ஸ்ட்ரிக்ட், ஸ்பீட், பங்க்சுவாலிட்டி என்றெல்லாம் இவனைப் பற்றி சிலர் பேசிக் கொண்டது நினைவுக்கு வந்தது.

''எதுக்கும் கொஞ்சம் யோசிச்சு உன் முடிவுல ஏதாவது மாற்றம் இரு...'' என்று அதற்கு மேல் பேச்சு வராமல் தயங்கிய பெரிய எம்.டி.யைப் பார்த்த தாரிணிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''யோசிச்சுன்னா அப்புறம் இன்னும் எத்தனையோ தப்புகள் சொல்ல வேண்டியதிருக்கும். இத முதல்ல செஞ்சுடுங்க. வேணும்னா அதையும் ரெண்டு நாள்ல



சொல்லிடறேன்,'' என்று அவன் பேச்சை முடித்திருந்தான்.

ஏதோ யோசனையுடன் சில வினாடிகள் அமர்ந்திருந்த பெரிய எம்.டி. பிறகு, ''சரிப்பா. பாக்கறோம்,'' என்று கிளம்பியது தெரிந்தது.

அதற்குப் பிறகு ஏனோ தாரிணியால் தொடர்ந்து எந்த வேலையையும் செய்ய முடிந்திருக்கவில்லை. தன்னை அழைத்துச் சிறிய எம்.டி. எதையாவது சொல்லிவிட்டால் என்ன செய்வதென்று அவளுடைய மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

தந்தையிடமே வெட்டு ஒன்று துண்டு இரண்டென்றால்...

கடவுளே! இனிமேல் தான் இங்கே தொடர்ந்து வேலை செய்ய முடியுமா?

அவள் மனதிற்குள் எண்ணிப் பயந்து கொண்டிருந்தது போலவே சிறிய எம்.டி. தன்னை அழைத்ததில் மனதிற்குள் பக்கென்றது தாரிணிக்கு.

அடுத்த சில வினாடிகளிலேயே அவள் எம்.டி. குரு பிரசாத்திற்கு முன்பாகப் போய் நின்றிருக்க, ''உக்காரு,'' என்றான் அவன்.

அவனுடைய ஒருமை அழைப்பு மனதிற்குள் படவே செய்தாலும், அவனுடைய இறுக்கமான முகம் அவன் எப்பொழுதுமே அப்படித்தானோ என்று நினைக்க வைத்தது.

ஆனால் அடுத்த வினாடியே அது சரிதான், தேவையற்ற வழியல் கேலிப் பேச்சுகளுக்கு இது எவ்வளவோ மேலென்று மனதிற்குச் சற்று இதமாகக் கூட இருந்தது.

''பரவாயில்ல ஸார்,'' என்று தாரிணி சொல்ல, கையிலிருந்த எதையோ கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததிலிருந்து பார்வையைத் திருப்பித் தன்னை நிமிர்ந்து பார்த்தவனைத் தானும் நேருக்கு நேராகப் பார்த்தாள் தாரிணி.

''உட்காரச் சொன்னதா ஞாபகம்.''

அவனுடைய வார்த்தைகளில் உடனே அமர்ந்து விட்டிருந்தவள், அவன் மேலே என்ன சொல்லப் போகிறானோ என்பதைப் போல அவனையே பார்த்தாள்.

''உன் பேரு?''

''தாரிணி ஸார்.''

''வேலையெல்லாம் பழகிட்டயா?''

''ஓரளவுக்கு ஸார்.''

''இனிமேல் நீ எனக்குதான் பி.ஏ. தெரியுமா?''

''ஓ.கே. ஸார்.''

எதுவும் பேசாமல் தன்னைப் பார்த்தவனுடைய பார்வையில் என்ன இருந்தது என்பதைத் தாரிணியால் கண்டு கொள்ள முடியவில்லை.

''இனி நீ நிறைய மாற்றங்கள எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முதல்ல வேலைல ஸ்பீட் வேணும்.''

''ஓ.கே ஸார்!'' என்றவளுக்கு அப்படியானால் இப்பொழுது நமக்கு வேலையில் வேகம் போதாது என்று சொல்கிறானா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''நீ ஸ்லோன்னு சொல்ல வரல. பெரிய எம்.டி.யோட ஸ்பீடுக்கு இவ்வளவு நாளும் வேல செஞ்சிருப்ப. ஆனா



இனிமேல் என் ஸ்பீடுக்கு மாறணும்னு சொல்றேன். அவ்வளவு தான்.''

''ஓ.கே ஸார்.''

''அதோட எந்த ஒரு ரிப்போர்ட்டுமே நான் கேட்டதும் வந்ததில்ல. ஆனா வேல பரவாயில்ல. நீட்டா இருந்தது.''

ஏதோ இந்த அளவிற்காவது ஒத்துக் கொள்ள மனம் வந்ததே என்று நினைத்தவளுக்கு, அப்படியானால் ஒவ்வொரு முறையும் தான் ரிப்போர்ட் தயாரித்துக் கொடுத்ததும் இவனுக்குத்தானா என்றிருந்தது.

அதோடு ஒவ்வொரு முறையும் சிரத்தையெடுத்துத் தான் தயார் செய்து கொடுப்பதைப் பெரிய எம்.டி. தான் ஒருமுறை கூடத் திறந்து பார்த்ததில்லையே என்று நினைத்துக் கொண்டதும் இப்பொழுது நினைவிற்கு வந்தது.

''இத்தன நாளா நீ செஞ்சுட்டிருந்தது ஐம்பது பர்ஸன்ட் வேலதான். இனிமேல் டபுளாகும்!'' என்றவன், ''சரி. நீ போய் இனி உன் வேலையைப் பாரு.'' என்றான்.

தன்னுடைய இடத்திற்கு வந்து வேலையைப் பார்க்க ஆரம்பித்திருந்தவளுக்கு, அவ்வளவு நாளும் இல்லாத வகையாக வேலையில் ஏனோ மிகுந்த பயம் வந்து விட்டிருந்தது.

ஆனால் போகப் போகத்தான் பெரிய எம்.டி.யோடு ஒப்பிடும்போது சிறிய எம்.டி.யிடம் வேலை செய்வது சவாலாகவும் அதே நேரம் சுவாரஸ்யமாகவும் இருப்பதைத் தெரிந்து கொண்டாள்.

அதே நேரம் இயல்பாகவே சுறுசுறுப்புடன் செயல்படும் தன்னுடைய குணம் சிறிய எம்.டி.யின் வேகத்திற்குச்

சுலபமாக ஈடு கொடுப்பதையும் ஒரு விருப்பத்துடன் உணர்ந்தாள்.

அனைத்திற்கும் மேலாக மிகப் பெரிய வித்தியாச மொன்றும் இருக்கவே செய்தது. வேலை சிறப்பாக இருக்கும் பட்சத்தில் அதைத் தட்டிக் கொடுக்க அவன் தவறுவதே இல்லை என்பது தான் அது.

ஆனால் அப்பொழுதும் அவனுடைய முகத்தில் மருந்துக்குக் கூட சிரிப்பு என்பது இருந்ததே இல்லை என்பதும்.

ஏன் இப்படி இருக்கிறான்? அப்படித்தான் கொஞ்சம் சிரித்தால் என்னவாம் என்று பல முறை ஏளனமாகக் கூட நினைத்திருக்கிறாள்.

ஒருவேளை நாம் அப்படி சிரித்தால் எங்கே அவள் வந்து அட்டையாக ஒட்டிக் கொண்டு விடுவாளோ என்று பயந்து போய்விட்டான் போலிருக்கிறதென்று நினைத்த வளுக்குச் சிரிப்பு கூட வந்து விட்டிருந்தது.

உடனே இருந்திருந்து தன்னைப் போய் அப்படி யாராவது நினைக்க முடியுமா, வாய்ப்பே இல்லையென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் தாரிணி.

கூடவே நாமா இப்படியெல்லாம் யோசிக்கிறோ மென்று ஆச்சரியத்துடன் நினைத்துப் பார்த்தவளுக்கு மனிதமனம் எவ்வளவு விசித்திரமானதென்றும் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

அவசியமென்று இல்லாமல் ஒரு வார்த்தை அவனாக வந்து பேச நேர்ந்தாலும் கூட நாம் பேசிவிடக் கூடா தென்று நினைத்ததும், அதே மனம் இப்பொழுது வேறு மாதிரி எதிர்பார்ப்பதும்.

அன்றோடு சிறிய எம்.டி. வந்து ஒரு வாரம் முடிந்து விட்டிருந்தது.

பெரிய எம்.டி. இருக்கும்பொழுது தொடர்ந்து செய் யப் பெரிதாக வேலையென்று எதுவுமில்லாமல் குற்ற மனப்பான்மையுடன் பாதிக்கும் மேலான நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தவளுக்கு, இப்பொழுது காலை வந்ததும் உடனே சிறிது நேரத்தில் மாலையாகி விடு வதைப் போல இருந்தது.

அந்த அளவிற்குச் செய்வதற்குச் சவாலான வேலைகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தன.

# 3

எம்.டி. கேட்டிருந்த ஒரு ரிப்போர்ட்டை எப்படி யாவது அன்று மாலை கிளம்புவதற்குள் தயார் செய்து கொடுத்து விட வேண்டுமென்று மிகவும் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தவள், திடீரென்று யாரோ சிலர் உள்ளே வரும் சலசலப்பில் நிமிர்ந்து பார்த்தாள்.

அழகான சிறுமி ஒருத்தி, அதிக பட்சம் நான்கு வயது தான் இருக்க முடியும். டாடி என்று அழைத்துக் கொண்டே உள்ளே வருவதைக் கண்டாள். கூடவே இன்னொரு ஆணும்.

அதற்குள் எம்.டி.யின் அருகிலேயே வந்து விட்டிருந்த அந்தச் சிறுமி, டாடி என்று சந்தோஷமாக அழைத்துக் கொண்டே அவனுடைய காலைக் கட்டிக் கொண்டதைக் கண்டாள்.

டாடியா என்று தாரிணி ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றிருக்க, "அடச் செல்லமே! வா வா!" என்று குனிந்து அவனது குழந்தையைத் தூக்கிக் கொண்டிருந்த எம்.டி. குருபிரசாத். "வா, உக்காரு." என்று உள்ளே வந்திருந்த அந்த இளைஞனையும் வரவேற்று உபசரிப்பதைக் கண்டாள்.

"இங்க வீட்டுக்கு நைட் வரலாம்னு எவ்வளவு சொன்னாலும் கேட்டுக்காம ஒரே அடம் அழுகை!" என்று அந்தச் சிறுமியைப் பற்றிச் சொல்லிக் கொண்டே அமர்ந்த அந்த இளைஞன் பார்ப்பதற்கு எம்.டி.யின் ஜாடையை ஒத்திருந்தது தெரிந்தது.

அதே நேரம், "என்னடா, அப்படியா செஞ்ச?" என்று குருபிரசாத் தனது மகளைப் பார்த்துக் கேட்க, "ஆமா டாடி. அதனால தான் என்னப் பெரியப்பா உங்ககிட்டக் கூட்டிட்டு வந்திருக்கார்," என்று தனது மழலை கலந்த மொழியில் அழகாக ஒத்துக் கொண்டாள் சிறுமி.

"பாரு. நீ ஃபாரின் போயிருந்தப்ப எப்படியோ, ஆனா நீ வந்துட்டதுக்கப்புறம் ஹன்ஸி உன்னக் கேக்கறது ரொம்பவும் அதிகமாயிடுச்சு. சுத்தமா வெச்சுட்டே இருக்க முடியல."

மீண்டும், "ஆமா டாடி!" என்று அழகாக ஒத்துக் கொண்டு விட்டுத் தனது கழுத்தைக் கட்டிக் கொண்ட மகளைத் தானும் ஆசையுடன் அணைத்துக் கொண்டான் குருபிரசாத்.

அப்படியானால் இந்தச் சிறுமி அவனுடைய மகளே தானா?



நம்ப முடியாத ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த தாரிணியால் ஏனோ வேலையில் கவனத்தைச் செலுத்தவே முடிந்திருக்கவில்லை.

ஆண்கள் இருவரும் பேசிக் கொண்டதிலிருந்து அவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்பது தெளிவானது.

"சரி, நான் கிளம்பறேன்," என்று வந்தவர், அதாவது எம்.டி.யின் அண்ணன் கிளம்பியிருக்க, "வீட்டுக்கு வந்துட்டுப் போலாமே," என்றான் குருபிரசாத்.

"இல்ல. இன்னொரு நாள் பாக்கலாம்," என்று அவர் கிளம்பியே விட்டிருக்க, "நாமளும் போலாம் டாடி," என்று தனது தந்தையைப் பார்த்தாள் சிறுமி.

"போலாம்டா. அப்புறம் நீ ஏன் அப்படி அடம்புடிச்ச?"

"ம். நீங்க திரும்பவும் என்ன விட்டுட்டு வெளிநாட்டுக்கே போய்டுவீங்களோன்னு ரொம்ப பயமா இருந்தது டாடி. அதுக்குதான்."

"ம்கூம். இனி என் செல்லத்த விட்டுட்டு நான் எங்கயுமே போக மாட்டேன்."

"நிஜம்மா?"

"நிஜமா தான்டா."

"அது எனக்கும் தெரியும் டாடி. ஆனா எங்க ஸ்கூல்ல படிக்கற ஹரிஷ் தான் அப்படி சொன்னானாக்கும்."

"என்ன சொன்னான்?"

"அவங்க எல்லார்க்கும் மம்மி, டாடி இருக்காங்களாம். ஆனா உனக்கு மம்மியே இல்ல. டாடியும் விட்டுட்டு தூரமாப் போய்ட்டா. நீ ரொம்ப பாவம் அப்படின்னு சொன்னான்."

"அப்புறம் உனக்கு யாரு டெய்லி சாக்லேட் வாங்கித் தருவாங்கனு கேக்கறான் டாடி."

"அடடா, அப்ப அவன் நிறைய சாக்லேட் சாப்பிடற பையனா?"

"ஆமா டாடி. அவன் பல் ஒன்னு ப்ளேக் ஆயிடுச்சு. அவன் பேட்பாய். அவன் சொல்றதையெல்லாம் கேட்டுக்கக் கூடாதுன்னு பெரியப்பாவும் எங்கிட்ட சொன்னாரே."

"பாத்தியா, நிறைய சாக்லேட் சாப்பிடற பையன பேட்பாய்னு சொல்றாங்க. நீயும் நிறைய சாக்லேட் சாப்டா அப்புறம் உன்னையும் எல்லாரும் அப்படித்தான் சொல்வாங்க."

"என்ன பேட் கேர்ள்ன்னு தான டாடி சொல்வாங்க!" என்று தனது மகள் கை கொட்டிச் சிரித்ததை ஆசை தீரப் பார்த்தான் குருபிரசாத்.

"அப்புறம் என் குட்டிப் பாப்பா காலையிலிருந்து என்ன பண்ணிட்டிருந்தது?"

"வினய், நிஷா கூட விளையாடினேன்."

"அப்படியா?"

"நான் இனிமே உங்கள விட்டுட்டுப் போகவே மாட்டேன் டாடி!" என்று தன் மேல் வாகாகச் சாய்ந்து கொண்டு செல்லம் கொண்டாடிய மகளிடம், "ஏன்டா?" என்று கேட்டான் குருபிரசாத்.

"அதான் என்ன யார்க்கும் புடிக்காதே. ஆனா உங்களுக்குப் புடிக்குமா டாடி?"

"ரொம்ப, ரொம்ப. உன்ன எல்லாருக்குமே ரொம்பப் புடிக்குமேடா செல்லம்."



"அப்ப ஏன் நிஷா, வினய் அப்படி சொன்னாங்க?"

"என்ன சொன்னாங்க?"

"பெரியம்மா, பெரியப்பா, தாத்தா, பாட்டிக்கு எல்லாம் அவங்களதான் புடிக்குமாம். உங்களுக்கு மட்டும் தான் என்னப் புடிக்குமாம்."

"அவங்க சும்மா விளையாட்டுக்குதான்டா செல்லம் அப்படியெல்லாம் சொல்லியிருக்காங்க."

"நீ ரொம்ப அடம். அதனால நீ எனக்கு வேண்டாம்னு பாட்டியும் சொன்னாங்களே."

"அப்ப அடம் பண்ணினயா?"

"ஆமா டாடி. உங்ககிட்ட வரணும்னு அழுதேன்!" என்று பாவமாகச் சொன்ன தனது குழந்தையைப் பார்த்தவனுக்கு ஏனோ மனதிற்கு மிகவும் கஷ்டமாகி விட்டிருந்தது.

எத்தனை முக்கியமான உடனே பார்த்தாக வேண்டிய வேலைகள் இருந்தாலும் சரிதான், ஞாயிற்றுக் கிழமையான நாளைய ஒரு நாளையாவது முழுக்க முழுக்கக் குழந்தைக்காக அவளுடைய விருப்பப்படி செலவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டான் குருபிரசாத்.

"சரிடா செல்லம், கம்ப்யூட்டர்ல கொஞ்ச நேரம் கேம்ஸ் விளையாடிட்டிருக்கியா? அப்பா என் வேலைகளையெல்லாம் சீக்கிரம் முடிச்சுட்டு வந்துடறேன்."

"சரி டாடி," என்ற சிறுமி, "நீங்க பக்கத்துல இருந்தா நான் அடம் புடிக்கவே மாட்டேன்!" என்று தனது தந்தை கம்ப்யூட்டரில் வைத்துக் கொடுத்த விளையாட்டைச் சமர்த்தாக விளையாடத் தொடங்கி விட்டிருந்தாள்.

தான் சொல்வதையெல்லாம் அப்படியே கேட்டுக் கொண்டு தன்னுடன் நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டிருந்த தனது நான்கு வயது மகளைப் பார்த்த குருபிரசாத்திற்கு இனியிருக்கும் வாழ்க்கை முழுவதையும் தனது குழந்தைக்காகவே வாழ்ந்துவிட வேண்டும் போல மனதிற்குள் ஒரு உத்வேகம் பிறந்திருந்தது.

அதற்குப் பிறகு பாவம் குழந்தையைக் காக்க வைத்து விடக் கூடாதென்று தான் பார்த்து முடிக்க வேண்டிய வேலைகளை வேகமாகப் பார்க்க ஆரம்பித்து விட்டிருந்தான்.

மிகவும் மும்முரமாக வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கிவிட்டிருந்த தாரிணிக்கு மிகவும் மெதுவாகவே என்றாலும் தந்தையும் மகளும் பேசிக் கொண்டது காதில் விழவே செய்தது.

ஆனாலும் முயன்று ஒரு வழியாகத் தனது வேலையை முடித்தே விட்டிருந்தாள்.

மேலும் சில நிமிடங்கள் எடுத்து மீண்டுமொரு முறை அதைச் சரிபார்த்து முடித்தவள், அதை அவனுடைய பார்வைக்கு வைப்பதற்காக எடுத்துக் கொண்டு வந்தாள்.

அதே நேரம், ''ரெண்டு நிமிஷத்துல டாடி வந்துடறேன்,'' என்று தனது மகளிடம் சொல்லிவிட்டு அவன் நகர்வது தெரிந்தது.

நேராகச் சென்று எம்.டி.யின் டேபிளில் ரிப்போர்ட்டை வைத்தவள், தன்னைத் திரும்பிப் பார்த்த சிறுமியைப் பார்த்து அழகான புன்னகையொன்றை உதிர்த்தாள்.

நாமும் பதிலுக்குச் சிரிக்கலாமா வேண்டாமா என்பதைப் போல யோசித்துக் கொண்டே தன்னைப் பார்த்த



சிறுமியைப் பார்த்தவளுக்கு, அப்படியே அதனுடைய தந்தையைப் போல என்று தோன்றியது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். உடனே, ''எங்க டாடி போட்ட கேம்ஸ்!'' என்று பெருமையாகச் சொன்ன சிறுமியைத் தானும் புன்னகையுடன் பார்த்தாள் தாரிணி.

''அடடா! அதுதான் ரொம்ப நல்லார்க்கா?'' என்றவள், ''எம் பேரு தாரிணி. உன் பேரு?'' என்று கேட்டாள்.

''ஹன்ஸிகா!'' என்று அழகாகப் பதில் சொன்ன சிறுமி, ''என் டாடிக்கு எல்லாமே தெரியுமாக்கும்!'' என்று பெருமை பொங்கச் சொன்னதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருந்தது.

''ஓ அப்படியா? நீயும் நல்லா விளையாடுவ போலிருக்கே.''

''ம். எங்க டாடி தான் சொல்லிக் கொடுத்தார்!'' என்று மீண்டும் தனது தந்தையின் புகழ் பாடிய குழந்தையிடம், ''நீ ரொம்ப சமர்த்து!'' என்று சிரித்தாள் தாரிணி.

பார்ப்பதற்கு அழகாக அதே சமயம் மிகவும் சுட்டியாக இருந்த சிறுமியை ஏனோ மிகவும் பிடித்துப் போய் விட்டிருந்தது தாரிணிக்கு. நினைத்ததோடல்லாமல் அதைச் சிறுமியிடமும் வெளிப்படையாகவே சொன்னாள்.

எம்.டி. உள்ளே வரும் அரவத்தில் சற்றே நகர்ந்து பின்னால் வந்திருந்த தாரிணி, ''ஸார், நீங்க கேட்ட ரிப்போர்ட்ஸ்!'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

''வெச்சுடு. நான் பாத்துக்கறேன்,'' என்றவன், ''நீ கிளம்பு,'' என்று மீண்டும் தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டிருந்தான்.

''தேங்க்யூ ஸார்!'' என்று விட்டு வந்து தனது ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் தாரிணி.

சிறுமி தன்னைப் பார்த்தால் டாடா சொல்லிவிட்டுப் போகலாம் என்னும் ஆசையில் அவளைப் பார்த்துக் கொண்டே அவள் அந்த இடத்தைக் கடக்க, அது குருபிரசாத்தின் கண்களில் படத் தவறவில்லை.

ஆனால் கம்ப்யூட்டர் விளையாட்டில் மும்முரமாக இருந்த சிறுமி நிமிர்ந்து கூடப் பார்த்திருக்கவில்லை.

சரி, இனி தாங்களும் கிளம்பலாமென்று நினைத்துக் கொண்டே, ''என்னடா விளையாடிட்டிருக்க?'' என்று தனது குழந்தையின் அருகில் வந்தான் குருபிரசாத்.

அப்பொழுது தான் விளையாட்டிலிருந்து நிமிர்ந்து தனது தந்தையைப் பார்த்த சிறுமி மிகவும் முக்கியம் போல, ''அப்பா, அந்த அக்காவுக்கும் என்ன ரொம்பப் புடிக்குமாம்!'' என்று ஆசையுடன் சொன்னாள்.

''வாயாடி! ஏதோ ஒன்னு சொல்லிட்டே இரு.'' என்று தனது குழந்தையின் கன்னத்தில் ஆசையாகத் தட்டினான் குருபிரசாத்.

''ஆமா டாடி, இப்ப எங்கிட்ட வந்தே சொன்னாங்க!'' என்று மீண்டும் தனது தந்தை அதை ஒத்துக் கொள்ள வேண்டுமென்னும் பாவனையில் அழுத்தமாகச் சொன்னாள் சிறுமி.

அதைக் கேட்ட குருபிரசாத்திற்கு எரிச்சலோடு கோபமும் ஒருசேரத் தோன்றின.

முதலில் மகளைப் பிடிக்குமென்று விட்டுப் பிறகு தன்னிடம் அவளுடைய புத்தியைக் காண்பிப்பாளாக இருக்குமென்று ஏளனத்துடன் நினைத்தான்.



தனது தந்தை சொன்னது அப்பொழுது பார்த்து நினைவிற்கு வந்தது குருபிரசாத்திற்கு.

அவர் சொன்னது ஒரு ஓரத்தில் இருந்தாலும், அவனுக்குமே ஏனோ அந்தத் தாரிணியிடம் ஏதோ ஒட்டாத தன்மை இருப்பதைப் போலத் தோன்றிக் கொண்டே தான் இருந்தது.

தன்னை என்னவென்று நினைத்திருக்கிறாள். அதற்கெல்லாம் இவள் எவனாவது இளிச்சவாயனை அல்லவா பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

ஒருவேளை அவள் நல்ல பெண்ணாக சாதாரணமாகத் தான் நடந்து கொள்கிறாளோ, தவறைத் தன்னுடைய கண்களிலேயே வைத்துக் கொண்டு பார்ப்பதால் தான் இப்படியெல்லாம் தோன்றுகிறதோ என்று நினைத்தவன், உடனே மீண்டும், ம்கூம், அப்படியில்லை என்று நினைத்துக் கொண்டான்.

மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தவனுக்கு மகள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''சரிடா, இனி நாமளும் கிளம்பலாமா?''

''ஐய்! ஜாலி ஜாலி!'' என்று குதித்த மகள், ''எனக்கு நிறைய ஐஸ்கிரீம் வாங்கித் தாணும். ஓ.கே.வா?'' என்று கேட்டதைப் புன்னகையுடன் பார்த்தான்.

சரிதான் என்று மகளுடன் வெளியே வந்தவன் அன்றையும், அன்றைக்கு மறுநாளான ஞாயிற்றுக் கிழமையையும் போதும் போதுமென்னும் அளவிற்குத் தனது குழந்தையுடனேயே செலவிட்டான்.

தனது குழந்தை ஹன்ஸிகாவுக்கும், தனது அண்ணனுடைய இரண்டு குழந்தைகளுக்கும் பொம்மைகள்,

துணிகள் என நிறைய வாங்கிக் குவித்தவன் இரவு எட்டு மணிக்குக் குழந்தையுடன் வீடு வந்து சேர்ந்திருந்தான்.

வாங்கி வந்திருந்தவை அனைத்தையும் வீட்டிலிருப் பவர்கள் அனைவருக்கும் மகள் ஆசையுடன் எடுத்துக் காட்டியதையும், குழந்தைகள் மூவரும் அவரவர்களுக்குச் சேர வேண்டியதைப் பிரித்து வைத்துக் கொண்டதையும் சந்தோஷமாக வீட்டு அங்கத்தினருடன் சேர்ந்து பார்த் துக் கொண்டிருந்தான் குருபிரசாத்.

டிபனை முடித்துக்கொண்டு அன்றைக்கெல்லாம் சுற்றி அலைந்திருந்த கசகசப்பு தீரக் குளித்து விட்டுத் தனது மகள் தூங்கச் செல்ல, சிறிது நேரம் தானும் அவளருகில் அமர்ந்திருந்துவிட்டுப் பிறகு தூங்கியதும் எழுந்து ஹாலுக்கு வந்தான்.

இந்தப் பிஞ்சு மனதிற்குள்ளும் எத்தனை ஆசைகள், ஆதங்கங்கள் என்று நினைத்தவனுக்கு மனம் ஏனோ மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

எல்லாவற்றையும் விட தன்னிடம் போலக் குழந்தை மற்றவர்களிடம் ஆழமாகப் பழகவில்லையோ என்றும் குருபிரசாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்னதான் கோடி கோடியாக வாங்கிக் குவித்தாலும் பிஞ்சுக் குழந்தைகளின் முதல் தேவை தாய் தந்தையி னரின் அன்பு தானோ என்றும்.

''வாப்பா.''

..........

ஹாலில் அனைவரும் அமர்ந்திருப்பது தெரியத் தானும் சென்று அமர்ந்தவன், ''என்னதான் வேலை யாவே இருந்தாலும் ஒரு வாரம் கழிச்சு தான் இப்பதான்



உனக்கு வீட்டு ஞாபகம் வந்திருக்கு. அதுவும்கூட குழந்த ரொம்பவும் அடம்புடிச்சு உன்னைத் தேடியே வந்துட்ட தால இல்லையா?'' என்று ஆதங்கத்துடன் கேட்ட தாயைப் பார்த்தான்.

''அட என்னமா, நீங்க மாறவே மாட்டிங்களா?''

''அது சரி. உன்ன மாதிரியே எல்லாரும் மனசக் கல்லாக்கிக்க முடியுமா?''

அப்படிக் கேட்ட தாயைப் பார்த்தவனுக்குச் சிரிப்பு தான் வந்தது.

உண்மையில் யாருடைய மனம் கல்லாகி விட்டதாம். கஷ்டப்பட்டு இரவு பகல் பாராமல் உழைத்துத் தொழி லைத் தான் தூக்கி நிறுத்திக் கொண்டிருக்க, சிறிதும் மனச்சாட்சியே இல்லாமல் அதிலிருந்து லட்ச லட்சமாகப் பணத்தை எடுத்து நீராய்ச் செலவழித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கா? இல்லை தனக்கா?

ஆனால் உடனே அண்ணனும், தந்தையும் செய்வ தற்குத் தாய் என்ன செய்வார், பாவமென்று தனது எண் ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டான் குருபிரசாத்.

பெற்றவர்களுக்காகத் தான் பாடுபட்டாக வேண்டியது தன்னுடைய கடமைகளில் ஒன்றுதான். ஆனால் வெட்டி யாகப் பொழுதைக் கழித்துக் கொண்டும், வீண் பெருமை களுக்காகப் பணத்தைப் பணமென்று பாராமல் செலவு செய்து கொண்டும் திரியும் தனது அண்ணன் குடும்பத் திற்காகத் தான் ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டு மென்று அவனால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

''கைக்குழந்தையை விட்டுட்டு மகராசி போய்ச் சே...
துட்டா! இனி உன் வாழ்க்கை இப்படியே போறதாப்பா...

''பின்ன எப்பிடிமா போகணுங்கறீங்க?''

''இன்னொரு கல்யா...''

''போதும்மா, இதுக்குத்தான் இந்த வீட்டுக்கு வரே...
எனக்கு யோசனையா இருக்கு.''

''ஏன், அப்படியென்னப்பா நான் தப்பாக் கேட்டு...
டேன்.''

''போதும்மா, இனியொரு தடவ இந்த விஷயத்த...
பத்தி யாருமே பேசக்கூடாது. அத நான் விரும்பல.''

அந்தத் தொனியில் குருபிரசாத் சொல்லி விட்ட...
பிறகு மீண்டும் அதைப் பற்றிப் பேசும் துணிச்சல் அந்த...
வீட்டில் யாருக்குமே இருக்கவில்லை.

மற்றவர்களுக்கு எப்படியோ, ஆனால் பெற்ற தா...
மனதிற்குக் கஷ்டமாக இருந்தது. முக்கியமாக அந்தப்...
பிஞ்சுக் குழந்தையை நினைத்து.

ஏனென்றால் பெரியவனின் குழந்தைகள் இருவரும்...
மம்மி டாடி என்று அவர்களுடைய பெற்றவர்களிடம்...
செல்லம் கொண்டாடுவதைப் பார்த்துத் தனக்கு மட்டும்...
அப்படியெல்லாம் இல்லையே என்று அந்தப் பிஞ்சின்...
மனம் என்ன பாடுபடுகிறது என்பதை அவர் அறியாதவர்...
அல்லவே.

பிறகு இவனைக் கல் நெஞ்சுக்காரனென்று சொல்லா...
மல் என்ன செய்வதாம்.

இவனுக்கு வேண்டுமானால் ஒரு துணை தேவையில்...
லாமல் இருக்கலாம். ஆனால் பிறந்ததிலிருந்தே...



பெற்றவர்களைப் பிரிந்து வாடும் அந்தக் குழந்தையின் மனம் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இவனுக்கு யார் எடுத்துச் சொல்லிப் புரிய வைப்பது.

ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்துவிட்ட தாயும், இருந்தும் இல்லாததைப் போல நடந்து கொள்ளும் தந்தையும்.

நினைக்க நினைக்க மனம் ஆற மறுத்தது அம்சவள்ளிக்கு.

அதிலும் சற்று முன்னர் தனது தந்தையுடன் வந்து இறங்கிய போது அந்தக் குழந்தையின் முகத்தில் தெரிந்த அந்த அளவு கடந்த சந்தோஷத்தையும், எல்லையற்ற ஆனந்தத்தையும் பார்த்தவருக்கு அந்த மகிழ்ச்சி எப்படிக் குழந்தையின் முகத்திலிருந்து மறையலாமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''நான் சொன்னது ஞாபகம் இருக்குதான?'' என்று குருபிரசாத் தனது தந்தையையும் அண்ணனையும் பார்க்க, எதைக் கேட்க வருகிறானென்பதைத் தெரிந்து கொள்ளும் பாவனையில் அனைவரும் அவனைப் பார்த்தார்கள்.

''இந்த சில மாசங்கள்ல பிஸினஸ்ல இருந்து எடுத்த பணம் திரும்ப வந்தாகணும், அதுதான் ஆரம்பத்துலயே பிஸினஸ் வேண்டாம்னு மொத்தமாப் பிரிச்சுட்டு வந்துட்டிங்களே, அப்புறம் எப்படி நீங்க பிஸினஸ்ல இருந்து பணத்த எடுக்கலாம்?''

குருபிரசாத் கேட்க, அதற்கு மற்ற ஆண்கள் இருவரும் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அமர்ந்திருந்தனர்.

''பிஸினஸ்ல வர்ற புது ஆர்டர்ஸ்க்கு ஃபண்ட்ஸ் எக்ஸ்ஸா தேவைப்படும்னு தான் பேங்க்ல சேத்து

வெச்சுட்டிருந்தேன். ஆனா அத நீங்க உங்க இஷ்டத்துக்கு எடுத்து கண்ட செலவு செஞ்சிருக்கீங்க. என்ன பண்ணுவீங்களோ தெரியாது. இன்னும் ஒரு வாரத்துல நீங்க பேங்க்ல இருந்து ட்ராப் பண்ணின பணத்தத் திரும்பக் கட்டியாகணும். சொல்லிட்டேன்,'' என்றவன் கிளம்புவதற்காக எழுந்தே விட்டிருந்தான்.

''சரி. நான் கிளம்பறேன்.'' என்ற சிறிய மகனிடம், ''காலைல போலாமேப்பா?'' என்றார் அம்சவள்ளி.

''அதுக்கெல்லாம் நான் எங்க குடுத்து வெச்சிருக்கேன். பிஸினஸ்க்குள்ள இன்னும் என்னென்ன குளறுபடிகள் நடந்திருக்கோ, அதையெல்லாம் தெரிஞ்சுக்காம நிம்மதியாத் தூக்கம் கூட வராது,'' என்றவன் கிளம்பியே விட்டிருந்தான்.

''குழந்தை காலைல எழுந்து கேட்டா நான் என்னப்பா பதில் சொல்லட்டும்?'' என்ற தாயிடம், ''அதெல்லாம் நானே சொல்லியிருக்கேன். அதுக்கும் மேல கேட்டா எனக்கு போன் பண்ணிக் குடுத்துப் பேசச் சொல்லுங்க,'' என்றான்.

ஒன்றரை மணி நேரங்களில் நேராகக் கம்பெனியை வந்தடைந்திருந்தவன், தான் வெளிநாடு போயிருந்த அந்த மூன்று மாதங்களுக்கான கணக்கு வழக்குகளையும் முதலில் பார்த்து முடித்தான்.

பிறகு ஆர்டர்ஸ் ஃபைலை எடுத்துப் பார்த்தவனுக்குத் தான் இருந்து பார்த்திருந்தால் எப்படிப் போயிருக்குமோ அதில் பாதியளவு கூட கடந்த மூன்று மாதங்களாகப் போயிருக்கவில்லை யென்பது தெரிந்தது.



ஆர்டர்கள் வழக்கம் போல நிறைய வந்திருந்தாலும் அதற்கு இவர்கள் சரியான மதிப்புக் கொடுத்திருக்கவில்லையென்பது பார்த்த உடனேயே தெரிந்தது.

# 4

அன்று காலையில் தான் வேலைக்கு வந்தபோது, எம்.டி. ஏற்கெனவே வந்து விட்டிருந்ததைக் கண்டாள் தாரிணி.

என்ன இவன் இரவெல்லாம் தூங்கவே மாட்டானோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வழக்கம் போல எம்.டி.க்கு வணக்கம் சொன்னவள், பிறகு சென்று தனது ஹேண்ட் பேக்கை அதனிடத்தில் வைத்துவிட்டு வந்து வேலையைத் தொடங்கி விட்டிருந்தாள்.

சிறிது நேரம் சென்றிருக்க, சற்றே தயக்கத்துடன் தனக்கு முன்னால் வந்து நின்றிருந்தவளைப் பார்த்தான் குருபிரசாத்.

அன்று ஏற்கெனவே சற்று உர்ரென்று இருந்தவன், ''ஸார், எனக்கு இன்னைக்கு ஒரு அரை நாள் லீவ் வேணும்,'' என்று கேட்டவளை எரிச்சலுடன் கோபமாகப் பார்த்தான்.

''இப்ப எவ்வளவு முக்கியமான ஆர்டர்ஸ் போயிட்டிருக்குன்னு தெரியாதா உனக்கு? இப்படித்தான் நினைச்சா லீவ் வேணும்னு ஆரம்பிச்சுடுவியா?'' என்று கோபம்

வெளிப்படையாகவே தெரியக் கேட்டவனைப் பார்த்தாள் தாரிணி.

உடனே தான் வேலைக்குச் சேர்ந்திருந்த இந்த மூன்றரை மாதங்களில் தான் இப்பொழுது தான் முதன் முறையாக விடுமுறை கேட்கிறோமென்பது இவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே என்று நினைத்துக் கொண்டாள்.

"நான் கேள்வி கேட்டா பதில் வந்தாகணும்."

"ஒரு முக்கியமான வேலை ஸார், அவாய்ட் பண்ண முடி..."

"அப்படி முடியலேன்னா பேசாம வீட்லயே இருந்துக்க வேண்டியதுதான, அத விட்டுட்டு இப்படி திடீர் திடீர்னு வந்து லீவ் கேக்கறதையெல்லாம் என்னால என்கரேஜ் பண்ண முடியாது."

அப்படியே அமைதியே உருவாகத் தனக்கு முன்னால் நின்றிருந்தவளைப் பார்த்த குருபிரசாத்திற்கு எப்படியெல்லாம் நடிக்கிறாள் என்று தோன்றியது.

ஏதோ ஆண்களை ஒரு வினாடி கூட நிமிர்ந்து பார்த்தே பழக்கமில்லாதவளைப் போலவும், அவசியத்திற்காக என்று கூட ஒரு வார்த்தை யாரிடமும் நின்று பேசாதவளைப் போலவும், அனைத்துமே வேடம்.

எவனாவது ஏமாந்தவன் இருந்தால் அடடா எவ்வளவு பிரமாதமான பெண்ணென்று மெச்சிக் கொள்ளக் கூடச் செய்யலாம். ஆனால் நம்மிடம் அந்தப் பருப்பெல்லாம் வேகாதென்பதை முதலில் அவளுக்குப் புரிய வைத்து விட வேண்டுமென்று ஏளனத்துடன் நினைத்துக் கொண்டான் குருபிரசாத்.



இவள் வந்து இல்லாத ஜாலமிட்டுத் தன்னை அவளுடைய வலைக்குள் விழ வைப்பாளாமா?

ஏன், தன் மனைவியே கூட இவளைப் பற்றிப் பெருமையாக நிறைய முறை சொல்லியிருக்கிறாளே.

என் தங்கை மிகுந்த திறமைசாலி. உலகத்திலேயே இல்லாத அறிவாளி. அவள் நினைப்பது எதுவானாலும் அதைச் சாதித்து முடிக்கும் வரை ஓய மாட்டாள் என்றெல்லாம்...

என்ன பேசுகிறாயென்பதே புரியவில்லையே என்னும் பாவனையில் தனக்கு முன்னால் நின்றிருந்தவள் பார்க்க, தான் நினைப்பதையெல்லாம் கேட்டே விட்டிருந்தான் குருபிரசாத்.

"அப்படியெல்லாம் உன்னிஷ்டத்துக்கு நினைச்சா வரப்போக இருக்கற வேலையெல்லாம் இங்க நடக்காது. அதே மாதிரி உம் மனசுக்குள்ள நீ நினைச்சுக்கிட்டிருக்கறதும்."

நான் நினைப்பதா, அப்படித் தான் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறோமென்று இவன் நினைத்துக் கொண்டிருக்கிறான்.

"என்ன உண்மையக் கண்டு பிடிச்சுட்டேன்னு அதிர்ச்சியா இருக்கா?"

"ஸாரி ஸார், நிஜமா நீங்க என்ன பேசறீங்கன்னே எனக்குப் புரியல."

"நீ என்ன திட்டத்தோட இங்க வேலைக்கு வந்திருக்கேங்கறது தெரியும்னு சொல்றேன்."

என்னதான் அவன் சொல்ல வருவது என்னவென்றே புரியாவிட்டாலும், தன்னை ஏதோ தவறாக நினைத்துப்

பேசுகிறான் என்கிற அளவில் மட்டும் தாரிணிக்கு நன்றாகவே புரிந்தது.

ஆனாலும் அது என்னவென்று புரியாமல் தான் அவசரப்பட்டு எதையாவது பேசிவிடக் கூடாதென்று, ''அப்பிடித்தான் உங்களுக்குத் தெரிஞ்சதக் கொஞ்சம் சொல்லுங்களேன்,'' என்று அமைதியாகவே கேட்டாள் தாரிணி.

''என் குழந்தை மூலமா என்னக் கல்யாணம் பண்ணிக்கத் திட்டம்...''

இன்னும் சற்று விரசமாக அதாவது உள்ளதை உள்ளபடியே கேட்க நினைத்திருந்தாலும், அந்த மாதிரியான வார்த்தைகளை அப்படியே சொல்ல அவனுக்கு மனம் கூசிப் போயிற்று.

ஆனால் அதற்கே எதிரே நின்றிருந்தவள் அந்த அளவிற்குக் கோபப்படுவாளென்று அவன் சற்றும் எதிர் பார்த்திருக்கவில்லை.

''போதும் மிஸ்டர், நீங்க என்ன அந்த அளவுக்கு உலகத்துல இல்லாத மன்மதனா?'' என்று ஏளனமாகக் கேட்டவளால் என்ன முயன்றும் தன்னைச் சிறிதும் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

''முதல்ல ஒரு பொண்ணுகிட்ட இப்படியெல்லாம் சம்பந்தமே இல்லாமப் பேச உங்களுக்கு வெக்கமா இல்ல?''

பத்தினியைப் போல சீறிக் கொண்டு பேசினால் அதை உண்மையென அப்படியே நம்பி விடுவோமென்று நினைத்துக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது.



''நீ என்னதான் கோபப்பட்டாலும் அதையெல்லாம் உண்மைன்னு நம்பிக்க நான் ஒண்ணும் பைத்தியம் கிடையாது.''

''நீங்க இனி எதுவோ அதெல்லாம் எனக்குத் தெரியாது,'' என்று ஏளனத்துடன் சிரித்த தாரிணி, ''மனுஷன்னா தற்பெருமை கொஞ்சம் இருக்க வேண்டியது தான். ஆனா இது ரொம்பவும் அதிகம்!'' என்றாள்.

''என்னவோ நான் இல்லாதத சொல்ற மாதிரி எதுக்காக இப்படி நடந்துக்கற?''

''நிஜமாவே உங்களுக்கு மூள ஏதாவது குழம்பிப் போச்சா? சரி, அப்படியே நீங்க சொல்ற மாதிரி நான் வளைச்சுப் போட்றவளாவே இருந்தாலும் கூட ஏற்கெனவே ஒரு குழந்தைக்கு அப்பாவான உங்களப் போய் ஏன்...''

சை... என்று மனம் கசந்து போய்விட, அதற்கு மேல் ஒரு வார்த்தை பேசக்கூடத் தாரிணியால் முடிந்திருக்கவில்லை.

இனியும் தொடர்ந்து அவனிடம் வேலை செய்வதைப் பற்றி ஏனோ அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தன்னைப் போய் என்னவெல்லாம் சொல்லி விட்டானென்று நெஞ்சு துடித்தது.

அதுவும் சற்றும் சம்பந்தமே இல்லாமல் வலையாம், திட்டமாம்...

என்ன முயன்றும் கோபத்தைச் சிறிதும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போக,

"என்னால இனிமேல் இங்க ஒரு நிமிஷம் கூட வேலை செய்ய முடியாது. நான் என் வேலையை ரிஸைன் பண்ணிக்கறேன்," என்றாள்.

"அப்படியெல்லாம் உடனே நின்னுட முடியாது. வேற ஒருத்தங்கள எடுத்து அவங்க நீ செஞ்சுட்டிருக்கற வேலையெல்லாத்தையும் நல்லாப் பழகணும்."

அதுவரை கூட இவனிடம் எப்படி... என்னைப் பற்றி என்ன தெரியும் இவனுக்கு?

எவனாவது ஒரு மாதிரிப் பார்த்து விட்டாலே உடலெல்லாம் புழுக்கள் ஊர்வதைப் போல அருவருத்துப் போய்விடும் தன்னைப் போய்...

எதிரிலிருப்பவன் ஏளனத்துடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, அதையே அவனிடம் கேட்டாள் தாரிணி.

"என்னப் பத்தி என்ன தெரியும் உங்களுக்கு? ஓ ஸாரி, நல்ல குடும்பப் பொண்ணுங்களப் பத்தித் தெரிஞ்சவங்ககிட்டக் கேக்க வேண்டிய கேள்விய உங்ககிட்டக் கேட்டா, நீங்க என்ன பண்ணுவீங்க பாவம்!" என்று விரக்தியாகச் சிரித்தாள்.

"எது எப்படியோ எங்கிட்டக் கேட்ட மாதிரியே வேற பொண்ணுங்ககிட்டக் கேட்றாதீங்க. எல்லாருமே என்ன மாதிரி பாவம்னு பாத்துட்டிருக்க மாட்டாங்க பாருங்க, அதோட என்னளவுக்கு அப்பாவியாவும் இருக்க மாட்டாங்க."

"நீ அப்பாவியா இருந்தா அதுல எனக்கும் திருப்தி தான்!" என்று போனால் போகிறது என்பதைப் போலப்



பேச்சை முடித்து விட்டவனைப் பார்த்த தாரிணிக்கு மனம் சற்றும் ஆறியிருக்கவே இல்லை.

தன்னை ஏன் அப்படியெல்லாம்... அதிலும் இவன் தன்னைப் பார்த்து முழுமையாக இன்னும் ஒரு வாரம் கூட முடிந்திருக்கவில்லையே.

சரியான சபல புத்திக்காரனாக இருப்பானோ?

பாவம், அவனுடைய மனைவியையும் இவன் என்னென்ன கொடுமைகளெல்லாம் செய்தானோ.

போய் வேலையப் பாத்தா நல்லா இருக்கும்னு நினைக்கறேன் என்று குரு பிரசாத் தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்திருக்க, பின்னே இருக்காது. இவன் பாட்டுக்குப் பேச வேண்டியவற்றையெல்லாம் பேசிவிட்டு வேலையையும் பார்க்கச் சொல்வான்...

என்ன முயன்றும் அதற்குப் பிறகு தாரிணியால் மனதை வேலையில் முழுமையாக ஈடுபடுத்தவே முடிந்திருக்கவில்லை.

தன்னை எதற்காக அப்படியெல்லாம் பேசினானென்று மனம் துடித்தது.

அப்படியென்ன பெரிய மன்மதன் இவன்? அப்படிப்பட்ட மன்மதனே நேரில் வந்தாலும் கூட தன் மனம் சலனப்படாது என்பது பாவம் இந்த மன்மதனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே.

அன்று வீட்டிற்குச் சென்று சேர்ந்த பிறகும் கூட அவளால் நடந்ததை மறந்திருக்க முடியவில்லை.

பார்ப்பவர்கள் எல்லாரும் விசாரிக்க, அவர்களிடம் ஏதேதோ சொல்லி அவர்களை நம்ப வைப்பதற்குள் மிகவும் சிரமப்பட்டுத் தான் போனாள்.

# 5

மனதிற்கு ஏதோ சரியாகப் படாததில் ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்திக் கொள்வதற்காக அன்று இரவு ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான் குரு பிரசாத்.

நேராகச் சென்று தனது மகளைப் பார்த்தவன், அவள் நன்றாகத் தூங்கி விட்டிருந்ததில் தலை முடியைக் கோதி விட்டவாறு சில நிமிடங்கள் அவளருகில் அமர்ந்திருந்து விட்டுப் பிறகு எழுந்து ஹாலுக்கு வந்தான்.

ஒரே நாளிலேயே வந்திருக்கிறான் என்றால் பணத்திற்காக இருக்குமோ என்று அவனுடைய அண்ணன் ஹரிஹரனுக்கும், தந்தை ராகவேந்திரனுக்கும் மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

தந்தையும், அண்ணனும் ஹாலில் அமர்ந்திருக்க, தானும் சென்று அமர்ந்து சில வினாடிகள் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பிறகு விஷயத்திற்கு வந்தான் குரு பிரசாத்.

''அந்தப் பொண்ணு தாரிணி சுமிதாவோட சொந்தம் தான்னு உங்களுக்கு உறுதியாத் தெரியுமாப்பா?'' என்று தனது தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

அவ்வளவு எளிதாகப் பெரிய பாறாங்கல்லையே தலையில் தூக்கிப் போடுவாரென்று சற்றும் எதிர்பார்த்திருக்காத குருபிரசாத், ''இல்லப்பா, அந்தத் தாரிணி வேற. இந்தத் தாரிணி வேற!'' என்று தனது தந்தை



சொல்வதைக் கேட்டுச் செய்வதறியாது அமர்ந்து விட்டிருந்தான்.

''ஏம்பா, ஏன் கேக்கற?''

''தெரிஞ்சுக்கலாமேன்னு தான்,'' என்ற மகனிடம்,

''பேரு ரெண்டுமே ஒன்னுங்கறதாலயும் வேலைக்கு வர்றேன்னு சுமிதாவோட சித்தி மகளான அந்தத் தாரிணி கேட்டுக்கிட்டே இருந்தான்னு நீ சொன்னதாலயும் நானே அப்படி நினைச்சுக்கிட்டேன்பா!'' என்றார் ராகவேந்திரன்.

''சொந்தம்னா நெருங்கின சொந்தம் ஒண்ணும் கிடையாதே. சுமிதாவுக்குத் தூரத்து உறவு முறைல சித்தி மகளாகணும்,'' என்று அதுவரை கணவனும் மகனும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுச் சொன்னார் அம்சவள்ளி.

''அது சரிதான். நாமளும் யாருமே இன்னும் அவளப் பாத்தது கூடக் கிடையாதே!'' என்ற தந்தையைப் பார்த்தவனால், மூன்று மாதங்களாகத் தினமும் பார்த்துக் கொண்டே இருந்தவர் எப்படி, என்ன என்பதை அவளிடமே விசாரித்திருந்தால் இப்பொழுது இந்தப் பிரச்சினையே வந்திருக்காதே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அது மட்டுமல்லாமல் நன்கு அறிந்தவரைப் போல அந்தப் பெண்ணைத் தனது மனைவியின் சொந்தமென்று சொன்னதோடு மட்டும் விட்டுவிடாமல் அந்தப் பெண்ணின் மேல் தவறான அபிப்ராயம் கொள்ளும் படியும் வேறு எதற்காகச் சொல்ல வேண்டும் என்றும்.

அது சரிதான். என்றைக்கு யாருடைய குணத்தை இவர்கள் சரியாகக் கணித்திருக்கிறார்களென்று ஏளனத்துடன் நினைக்கத் தோன்றியது.

ஆனாலும் முழுத் தவறையும் நம்மேல் வைத்துக் கொண்டு மற்றவர்களுடைய குணநலன்களைப் பற்றி யோசிப்பதில் என்ன பயன் என்றும்.

குருபிரசாத்தின் மனைவியுடைய தூரத்து உறவு முறைப் பெண்ணான தாரிணி என்னும் அந்தப் பெண், அவன் வெளிநாடு கிளம்பும் மும்முரத்தில் இருந்தபோது, அவளுக்கு ஏதாவது வேலை வேண்டுமென்று அவனைச் சிலமுறை அழைத்துப் பேசியிருந்தாள்.

அவளுடைய பெற்றவர்களின் மறைவிற்குப் பிறகு மனைவி அவளுடைய தூரத்து உறவுக் குடும்பமான அந்தத் தாரிணியின் வீட்டில் தான் சில வருடங்கள் இருந்தாள் என்பதும், அதற்குப் பிறகு வேலையொன்றைத் தேடிக் கொண்டு அவள் வெளியே வந்து விட்டதும் மனைவி சொல்லி அவன் அறிந்து கொண்டவை.

எப்பொழுதும் பணமே குறியென்று இருக்கும் அவர்களிடம் அப்படி நான் அங்கு இருக்க நேர்ந்த அந்த சில வருடங்களிலேயே எனக்காக என்னுடைய பெற்றவர்கள் விட்டுச் சென்ற பணம், நகை முழுவதையும் கூட இழக்க நேர்ந்து விட்டதென்று மனைவி ஆதங்கத்துடன் சில முறை சொல்லிக் கொண்டதும், அது மட்டுமல்லாமல் திருமணத்திற்குப் பின்னரும் கூட அவர்களிடமிருந்து அந்தச் செலவு இந்த நோயென்று பணம் கேட்டு மனைவிக்கு வரும் கடிதங்களை மனைவி அவளே தன்னிடம் காட்டிப் பணத்தை வாங்கி அனுப்பி வைத்ததும் நிறைய முறை நடந்திருக்கிறது.



அப்பொழுதெல்லாம் என்ன செய்வது, பெற்றவர்களை இழந்து உலகம் என்னவென்றே தெரியாமல் தவித்தபோது சொந்தமென்று என்னை வைத்து ஆதரித்த நன்றிக் கடனுக்காகச் செய்தாக வேண்டியிருக்கிறதென்று மனைவி சொல்லிக் கொண்டது. அவனுக்கும் நியாயமாகவே பட்டது.

ஆனால் அதுவே ஒரு எல்லையைத் தாண்டிச் செல்லும்போது, அப்படித்தான் நடந்தது.

கேட்கிற அளவிற்குக் கிடைக்குமென்று நினைத்துக் கொண்டார்களோ என்னவோ, அதற்குப் பிறகு அவர்கள் கேட்கிற தொகை அதிகமானதோடு, கேட்கும் இடைவெளியும் குறைந்து போனது.

ஆனால் அதெல்லாம் நடந்து முடிந்த விஷயங்கள். இப்போதைக்கு அவசியம் இல்லாதவையும் கூட.

ஆனால் அவசரப்பட்டு அந்தப் பெண்ணைப் போய் அப்படிப் பேசி விட்டோமே, இனி அவளிடம் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டாலும் கூட, தான் பேசியதனைத்தும் இல்லையென்றாகி விடுமா?

''அதுக்கப்புறம் நேத்துக் காலைல தான் எதிர்பாராத விதமா ஒரு விசேஷத்துல சுமிதாவோட பெரியப்பாவப் பார்க்க நேர்ந்ததுப்பா. அவரே வந்து அறிமுகம் பண்ணிக்கிட்டுப் பேசினார்.''

''அவரு பொண்ணு தாரிணி இங்க வேலைக்காக அப்ளை பண்ணலாம்னு இருந்தப்பதான் ஃபாரின்ல போய் படிக்கறதுக்கான சான்ஸ் வந்து இப்ப அங்க போய்ட்டாளாம். இனி எந்த ஏமாந்தவன் தலைல கைய வெச்சாங்களோ!'' என்று தனது தந்தை அவர் பாட்டுக்கு

ஏதேதோ சொல்லிக் கொண்டே போக, அதெல்லாம் குரு பிரசாத்தின் காதிற்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

இப்படி அவசரப்பட்டு விட்டோமே என்று அவனுடைய மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

என்னதான் தனது தந்தையே சொல்லியிருந்தாலும் கூட, அதைத் தீர விசாரிக்காமல் அவசரப்பட்டுப் பேசி விட்டது தன்னுடைய தவறே அல்லவா?

தான் சொன்னவற்றையெல்லாம் கேட்க நேர்ந்த போது அந்தப் பெண்ணின் உள்ளம் என்ன பாடு பட்டிருக்கும்.

அதனால்தான் அந்த அளவிற்குக் கோபப்பட்டாளோ?

இன்னும் அவள் என்ன கோபப்பட்டாலும் சரிதான், தவறு தன்னுடையதென்று உடனே அழைத்துப் பேசி விட வேண்டுமென்று பரபரத்த மனதைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

அந்தச் சிறு பெண் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள். எவ்வளவு பெரிய தவறை எவ்வளவு சாதாரணமாகச் செய்து விட்டிருக்கிறோமென்று அவனுக்குச் சற்றும் மனம் ஆற மறுத்தது.

ஆனால் இனி என்ன நினைப்பாள் என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாதே! யோசிக்காமல் முட்டாள்தனமாகத் தான் செய்து விட்டிருக்கும் தவறைத் தானே அல்லவா சரியும் செய்தாக வேண்டியிருக்கிறது.

அவள் கோபத்தில் பேசியதை எல்லாம் நினைத்துப் பார்த்தவனுக்குத் தான் எவ்வளவு பெரிய பழியைப் போட்டிருந்தும் கூட தன்னை எப்படி இப்படியெல்லாம்



சொல்லலாம் என்று தாங்கிக் கொள்ள முடியாமல் ஏதேதோ கேட்டாளே தவிர, அப்பொழுதும் தவறாக அதாவது தரம் இறங்கி ஒரு வார்த்தை கூடப் பேசியிருக்கவில்லையே என்றும் அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இதுவே வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால்... இதிலிருந்தே அவள் பிரமாதமான பெண்ணென்பது புலனாகிறதே.

மறுநாள் காலை வரை எப்படியோ நேரம் போயிருக்க, சற்று யோசித்துப் பேசியிருக்காமல் வழக்கத்திற்கு மாறான பரபரப்புடன் அதுவும் ஒரு சிறு பெண்ணிற்காகப் பார்த்துக் கொண்டு தான் படும்பாடு அவனுக்கே விசித்திரமாக இருந்தது.

## 6

தினமும் காலையில் வந்ததும் அவளாகவே வந்து விஷ் செய்பவள் அன்று தன் பக்கமாகத் திரும்பிக் கூடப் பார்க்காதது குரு பிரசாத்தின் கருத்தில் படத் தவறவில்லை.

சரிதான், சில நிமிடங்களில் நாமே அழைத்துப் பேசலாமென்று அவன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, அவள் தனக்கு முன்னால் வந்து நின்றிருந்ததைக் கண்டான்.

''என்னோட ஒன் மந்த் ரெஸிக்னேஷன் லெட்டர்!'' என்று ஒரு கவரை டேபிளில் அவனுக்கு முன்பாக வைத்தாள் தாரிணி.

"திட்டம் போட்டு வலை வீசி விளையாட்றதுக்காக வெல்லாம் வேலைக்கு வந்துட்டுப் போற டைப் நான் கிடையாது. உங்ககிட்ட வேலைக்கு வந்த மத்த பொண்ணுங்க மாதிரியே தான் நானும் இருப்பேன்னு கனவுல கூட நினைச்சுடாதீங்க.

"என்னது ரொம்ப பூவர் ஃபேமிலி. நான் வாங்கற மாச சம்பளத்துல எனக்குன்னு கமிட்மெண்ட்ஸ் நிறைய இருக்கு.

"நீங்க ஒரு ஸ்டாஃப் எடுத்து ட்ரெய்ன் பண்றதுக்காக மட்டும் தான் நான் இருக்கறதா திரும்பவும் தப்புக் கணக்குப் போட்டுடாதீங்க. இந்த ஒரு மாசத்துக்குள்ள நானும் வேற வேலை தேடியாகணும்.

"அதுக்குள்ள எனக்கு வேற வேலை கிடைக்குதோ இல்லையோ, ஆனா ஒரு மாசத்துக்கு மேல ஒரு நிமிஷம் கூட என்னால இங்க வேல செய்ய முடியாது."

மிகவும் முயன்று அமைதியாகப் பேசியவளின் குரலில் இருந்த கோபமும் எரிச்சலும் வெளிப்படையாகவே தெரிய, "நானும் உங்கிட்ட கொஞ்சம் பேசணும்," என்றான் குருபிரசாத்.

அப்படிச் சொன்னவனை இன்னும் என்ன பழியைப் போடப் போகிறாய் என்பதைப் போல, மிகவும் முயன்று கொண்டு வந்திருந்த சாதாரண முகத்துடன் பார்த்தாள் தாரிணி.

"ஒரு மிஸ் அண்டர்ஸ்டேண்டிங்கினால நேத்து நான் அப்படிப் பேசிட்டேன், மன்னிச்சுடு."

அப்படிச் சொன்னவனைப் பார்த்த தாரிணியின் கோபம் முன்னிலும் அதிகம் தான் ஆகியிருந்தது.



"என்ன கூலா சொல்லிட்டிங்க. நேத்திலிருந்து நான் பட்ட மனக் கஷ்டத்துக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க? இல்ல, அத உங்களால இல்லாம தான் செய்ய முடியுமா?" என்று ஏளனமாகக் கேட்டாள் தாரிணி.

அவளுடைய கோபத்திற்கு நூற்றுக்கு இருநூறு சதவிகிதமாகவே நியாயம் இருந்ததால், அவனால் மேலே எதையும் பேச முடிந்திருக்கவில்லை.

நியாயமாகவே என்றாலும் தன்னுடைய ஆதங்கம் தீரும் மட்டும் பேசி விட்டிருந்தவள் மீண்டும் நிமிர்ந்து பார்த்த போது, எதிரே அமர்ந்திருந்தவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"உன் கோபம் ரொம்பவும் நியாயமானது. அதனால இன்னும் என்னவெல்லாம் சொல்லணும்னு தோணுதோ எல்லாத்தையும் சொல்லிடு. ம்..." என்று மேலும் தொடர்ந்து அவளையே பார்த்தான் குருபிரசாத்.

அவன் அப்படிச் சொல்லிவிட்ட பிறகு அதற்கு மேல் ஏனோ தாரணியால் ஒரு வார்த்தை கூடப் பேச முடிந்திருக்கவில்லை.

அதற்கு மேலும், "என்னங்க, அவ்வளவே தானா? நான் செஞ்ச தப்புக்கு இதெல்லாம் போதவே போதாது!" என்று அவன் கேட்டதில் பாதி சாதாரண மனநிலைக்கே வந்திருந்தாள்.

"ரியல்லி, ஐ அம் வெரி ஸாரிமா!" என்று மீண்டுமொரு முறை அவன் உணர்ந்து சொன்னதில் கிட்டத்தட்ட பழைய மனநிலைக்குத் திரும்பியே விட்டிருந்தாள் தாரிணி.

ஆனால் அவள் அதை அவனிடம் சிறிதும் காட்டிக் கொள்ளவில்லை.

"தப்பாப் புரிஞ்சுக்கிட்டுப் பேசிட்டதாலயே அதுக்கான காரணத்தையும் நான் உங்கிட்ட சொல்லக் கடமைப்பட்டிருக்கேன்," என்றவன், "ஆனாலும் இப்ப வேலையப் பாக்கலாமே," என்றான்.

இப்பொழுதாவது தான் பேசி விடலாமென்று நினைத்தவள், "ஷ்யூர்..." என்று விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்திருந்தாள்.

அவன் அநியாயமாகப் பேசி விட்டது எதுவும் இல்லையென்றாகி விடாது என்றாலும், அவன் இறங்கி வந்து இரண்டு முறை மன்னிப்புக் கேட்டு விட்டதற்குப் பிறகு தாரிணியால் மேலும் கோபத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

மிகவும் நியாயமானவள் என்பதால், நிச்சயம் அவன் சொன்னது போலத்தான் ஏதாவது நடந்திருக்க வேண்டும். இல்லையென்றால் தேவையில்லாமல் பேசி விட்டு அவனிடம் வேலை செய்யும் ஒரு பெண்ணிடம் போய் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் அவனுக்கும் இல்லையே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்தப் பிரச்சனைக்குப் பிறகு எம்.டி. தன்னிடம் சற்று நன்றாக, அதாவது முன்னைப் போலக் கடினமான முகத்துடன் இல்லாமல் சாதாரணமாக நடந்து கொள்வதைத் தாரணியால் புரிந்து கொள்ள முடிந்தது. அது ஏனோ அவளுக்குப் பிடித்தும் இருந்தது.

அப்பொழுதும் புன்னகை, அவசியமில்லாத பேச்சு என எதுவுமே இருக்கவில்லை. ஏன், முன்னிலும் சற்று



கவனத்துடன் தொலைவில் நிறுத்துகிறானோ என்று கூடத் தோன்றியது தாரிணிக்கு.

அதனால் எல்லாம் குருபிரசாத்தின் மேலிருக்கும் மதிப்பு அவளுக்கு மேலும் சற்று கூடி விட்டிருந்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

நான்கு நாட்கள் சென்றிருந்தன.

ஒரு வேலையாக எம்.டி.யின் இடத்திற்குத் தாரிணி சென்றிருக்க, "இதுக்கு இனியும் மதிப்பிருக்கா?" என்று அவன் தனக்கு முன்பாக நகர்த்தியிருந்த அந்தக் கவரைப் பார்த்தாள்.

அது நான்கு நாட்களுக்கு முன்பு தான் கொடுத்திருந்த ராஜினாமாக் கடிதம் என்பது தெரிந்தது.

பதிலுக்காக அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, இல்லை, அதற்கு இனி மதிப்பில்லை, குப்பைத் தொட்டிக்குப் போக வேண்டியது தானென்று சொல்லிவிட மனம் நினைத்தாலும், அதை வார்த்தையாகச் சொல்ல அவளால் முடிந்திருக்கவில்லை.

அதைச் சொன்னால் இவனுக்குத் தன் மேலிருக்கும் மதிப்புக் குறைந்து போய் விடுமோ என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. கூடவே எம்.டி.யாகவே இருந்தாலும் அவனுடைய மதிப்பிற்குத் தான் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும்.

அப்படியானால் மதிப்பில்லையென்று சொல்லிவிட வேண்டியதுதானே என்று கேள்வி கேட்ட மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"அப்ப மதிப்பில்ல, அப்படித்தான?"

குருபிரசாத் கேட்க, "அப்படின்னு ஒரேயடியா..." என்று தொடர்ந்து பேச முடியாமல் அவனைப் பார்த்தாள் தாரிணி.

"அப்ப ஒரு பாதி மதிப்புப் போயிடுச்சுன்னு வேணும்னா எடுத்துக்கலாமா?"

"ம்...."

"ஒரு நல்ல திறமையான பி.ஏ.வ இழக்கறதுல எனக்கு விருப்பமில்ல!" என்று விட்டு அவன் தன்னைப் பார்க்க, "ஓ அதே போல ஒரு நல்ல எம்.டி.யை இழக்கத் தானும் தயாரில்லையென்று சொல்ல வேண்டுமாக்கும்!" என்று ஏளனத்துடன் நினைத்தாள் தாரிணி.

தான் நினைத்ததையே யூகித்தவனைப் போல, "அதுக்காக நீ என்ன நல்ல எம்.டி.ன்னு ஒத்துக்க வேண்டிய அவசியமில்ல. உன்னைப் பொறுத்தவரைக்கும் நான் மோசமான எம்.டி. தாங்கறது எனக்கே தெரி..."

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. "அச்சச்சோ! அப்படியெல்லாம் இல்ல ஸார்!" என்று அவசரமாக மறுத்தாள் தாரிணி.

"நிஜம்?"

"நிஜமா தான் ஸார். அதோட அன்னைக்கு நடந்தத நான் எப்பவோ மறந்துட்டேன்!" என்று மனதார உணர்ந்து சொன்னாள்.

"குட், இது உன் இயற்கையான நல்ல குணத்தக் காட்டுது!" என்று தானும் அதே போலச் சொன்னான் குருபிரசாத்.

மீண்டும் அவன் தன்னையும், கவரையும் பார்ப்பது தெரிய, "இதுக்கு இனிமேல் மதிப்பே இல்ல ஸார்!"



என்று தானாகவே அந்தக் கவரை எடுத்து நான்காகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டே விட்டிருந்தாள் தாரிணி.

அதே சமயம் அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, தாரிணியால் ஏனோ தனது முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை.

அதற்கு மேலும் கடிதத்தைக் கிழித்துத் தான் குப்பையில் போடுவதைப் பார்த்து அப்பாடா என்று அவன் வெளிப்படையாகவே நிம்மதிப் பெருமூச்சு விட, அவனுடைய பாவனையில் சிரித்துக் கூட விட்டிருந்தாள் தாரிணி.

வெண்பற்கள் பளீரிட அழகாகச் சிரித்தவளின் முகத்திலிருந்து ஏனோ குருபிரசாத்தால் பார்வையைத் திருப்பிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதே சமயம் அதைக் கவனித்திருக்காத தாரிணி, தன்னைப் பிடித்திருந்த ஒரு பெரிய பிரச்சனை தானாகவே அகன்று விட்டாற் போல அவளும் தன்னையறியாமலேயே ஒரு பெருமூச்சு வெளியிட்டாள்.

அதைப் பார்த்த குருபிரசாத், "என்ன?" என்று புன்னகையுடன் அவளைப் பார்க்க, அவனுடைய சிரிப்பை அப்பொழுது தான் முதன் முறையாகக் கண்ட தாரிணி தன்னை மறந்து நின்று விட்டிருந்தாள்.

தன்னிலை உணர்ந்து அவள் மீண்டும் நடப்பிற்கு வந்தபோது, சில வினாடிகள் முடிந்து போய் விட்டிருந்தன.

ஐயோ, இப்படி நடந்து கொண்டு விட்டோமே என்று அவள் தனக்குள் கூனிக் குறுகிப் போயிருக்க, அதைத்

தான் பார்த்து விட்டதைப் போல குருபிரசாத் வெளியே காட்டிக் கொண்டிருக்கவில்லை.

ஏனோ அதற்கு மேல் தொடர்ந்து ஒரு வினாடி கூட அவளால் அங்கு நிற்க முடியாது போக, "நீங்க ஒரு டீடெய்ல் கேட்டிருந்தீர்களே, நான் போய் அத ரெடி பண்ணட்டுமா ஸார்?" என்று விட்டால் அங்கிருந்து ஓடியே விடுவாள் போலக் கேட்டவளைப் பார்த்து மனதிற்குள் சிரித்துக் கொண்டான் குருபிரசாத்.

"ஆமா, உடனே போய்ப் பாரு," என்று அவளை அனுப்பி விட்டுத் தானும் தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான் அவன்.

தன்னிடத்தில் வந்து அமர்ந்தவளுக்கு, ஏனோ மிகப் பெரிய தவறு ஒன்றைச் செய்து விட்டதைப் போல, இருந்த உற்சாகமனைத்தும் காணாமல் போய்விட, மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

அப்படிப் பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் புதிதாகப் பார்ப்பதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்து விட்டோமே என்று நினைத்து நினைத்து மிகவும் மனம் சங்கடப்பட்டுப் போனாள்.

கூடவே இனி எப்போதும் இப்படி நடந்து கொண்டு விடக்கூடாது என்று தனக்குத் தானே பலமுறை சொல்லிக் கொண்டாள்.

# 7

பதினைந்து நாட்கள் சென்றிருந்தன.



இருவருமே அவரவர் வேலைகளில் முழுக் கவனத்தையும் செலுத்துபவர்கள் என்பதால், அனைத்தும் சுமுகமாகப் போய்க் கொண்டிருந்தன.

தனக்கு முன்னால் தயக்கத்துடன் வந்து நின்றிருந்தவளை, நிமிர்ந்து பார்த்தான் குருபிரசாத்.

"ஸார்! எனக்கு மன்டே லீவ் வேணும்," என்று கேட்டவளால், முன்பு ஒரு முறை விடுமுறை கேட்கப் போய்த் தான் பிரச்சனையே வந்ததென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

குருபிரசாத்திற்கும் அதே எண்ணம் தான் என்பதையும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

"என்ன, சொல்லு?"

"இல்ல, லீவ் வேணும்னா கொஞ்சம் முன்னாடியே சொல்லச் சொல்லியிருக்கீங்க. ஆனா..."

"பரவாயில்ல. இப்பவும் ரெண்டு நாள் முன்னாடி தான கேக்கற," என்றவன், "பர்மிஷன் க்ரேண்டட்!" என்றான்.

"தேங்க்யூ ஸார்."

"ஏன், அன்னைக்குக் காய்ச்சல், தலைவலி ஏதாவது வரப் போகுதா?"

விடுமுறைக்கான காரணத்தை மறைமுகமாகக் கேட்கிறான் என்பது புரிய, "இல்ல, ஸார். என்னப் பொண்ணு பாக்க வர்றாங்க!" என்றாள் தாரிணி.

"ஓ, ரொம்ப சந்தோஷம்!" என்றவனின் முகத்திலிருந்த உண்மையான சந்தோஷம் வெளிப்படையாகவே தெரிய, "ஆனா எனக்குத் தான் பிடிக்கல!" என்றாள் அவள்.

"ஏன்?"

"ஏன்னா இந்த இயர் தான் படிச்சே முடிச்சேன். அதோட எனக்கு வயசு இருபத்தியொன்னு தான் ஆச்சு."

"ஏன் இது தான சரியான ஏஜ். ஏதோ பதினோரு வயசுல வீட்ல கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கம்பல் பண்ற மாதிரி ஃபீல் பண்ற?"

"அதுக்காக..."

"எதுக்காக இருந்தாலும் வீட்ல பெரியவங்க நல்லது தான் செய்வாங்கன்னு நம்பு."

"அது சரிதான். ஆனா இந்த நல்ல வேலைய விட வேண்டியது வந்துடுமோன்னு தான் எனக்குத் தயக்கமா இருக்கு!" என்று நினைத்தவளால், அதை வெளியே சொல்ல முடியவில்லை.

அதற்கு அவன் வேறு மாதிரி அர்த்தம் கற்பித்துக் கொண்டால் என்ன செய்வதென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

செவ்வாய் அன்று வேலைக்கு வந்தபோது ஏற்கெனவே வந்து விட்டிருந்த குருபிரசாத் அவளை, "வா, வா!" என்று வரவேற்றான்.

அவனுடைய வரவேற்பில் சிரித்துக் கொண்டே, "குட் மார்னிங் ஸார்!" என்றாள் தாரிணி.

"வெரி குட்மார்னிங். அப்புறம் முகத்துல தெரியற ஒளியப் பாத்தா அவசரப்பட்டு அந்த ரெஸிக்னேஷன் லெட்டரக் கிழிக்காமலே இருந்திருக்கலாமேன்னு யோசிக்கற இல்லையா?" என்று கேட்டவனைப் பார்த்து, "ம்கூம். இல்ல ஸார்," என்றாள்.



"என் சந்தோஷத்துக்கான காரணமே வேற. நேத்து வீட்டுக்கு யாருமே வரல. அதுகூட மதியத்துக்குப் பக்கம் தான் எங்களுக்குத் தெரிஞ்சது. இல்லன்னா வேலைக்காவது கிளம்பி வந்திருப்பேன்..."

"யாருமேன்னா?"

"பொண்ணு பாக்கத்தான் ஸார். அந்தப் பையனுக்கு வேற ஒரு பொண்ணோட காதலாம். அத நேத்துக் காலைல தான் அவங்க வீட்லயே சொல்லியிருக்கான்."

"ஓ. இப்பிடி ஆயிடுச்சே..."

"சரியா தான் ஸார் ஆகியிருக்கு. உன்னக் கண்டிப்பா இனியொரு ரெண்டு வருஷத்துக்குத் தொல்லையே பண்ண மாட்டோம்னு வீட்ல சொல்லிட்டாங்க, தெரியுமா?" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் தாரிணி.

"அது சரி. பெத்தவங்களுக்குத்தான அந்தக் கஷ்டம் தெரியும், உனக்கென்ன?"

அவன் விளையாட்டுக்கு சொல்வது புரிய, "அது சரி, ஜாலியா இருக்கறவங்களப் பாத்தா உங்களுக்குப் பொறாம. வேறென்ன?" என்றாள் தாரிணி.

"பேசாம கல்யாணத்தப் பண்ணிக்கோ. அப்புறம் மேரேஜ் லைஃப்ப அனுபவிக்க ஆரம்பிச்சதுக்கப்புறம் பெத்தவங்க சொன்னத நாம ஏன் முதல்லயே கேட்டிருக்கக் கூடாதுன்னு ஃபீல் பண்ணுவ."

எதற்காக அவன் அப்படிச் சொன்னானோ. ஆனால் அவன் சொன்னதைக் கேட்டு முகத்தைச் சாதாரணமாக வைத்துக்கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமல் தோற்றாள் தாரிணி.

உடனே ஏதோ கல்யாணம் பண்ணிக்கிட்டா சுதந்திரம் போயிடும்னு நீ தப்புக் கணக்குப் போட்டுட்டிருக்கியே. அதனால சொல்றேன் என்று அந்தக் கடைசி இரண்டு வார்த்தைகளுக்குச் சற்று அழுத்தம் கொடுத்தே சொன்னான் குருபிரசாத்.

''சரி, நீ வேலையப் போய்ப் பாரு.'' என்று எம்.டி. தனது டேபிளுக்கு வந்த போனை அட்டெண்ட் செய்து பேச ஆரம்பித்து விட்டிருக்க, நேராகத் தன்னிடத்திற்கு வந்து சேர்ந்தாள் தாரிணி.

என்றைக்கும் இல்லாத வழக்கமாக அன்று தன் மனம் அலைபாய, என்ன முயன்றும் அதைத் தாரிணியால் சிறிதும் தடுக்க முடிந்திருக்கவில்லை.

அவளுடைய எண்ணங்கள் ஓடியதும், குருபிரசாத்தைச் சுற்றித்தான்.

தனக்கு இவ்வளவு அறிவுரை சொல்கிறானே, ஏன் இவன் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள வேண்டியது தானே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்னதான் தான் உண்டு, தன் வேலையுண்டென்று இருந்தாலுமே கூட குருபிரசாத் போனில் தனது மகளுடன் பேசியதை அவள் நிறைய முறை கேட்க நேர்ந்திருக்கிறது.

அவனே ஒரு தாயாகவும் இருந்து குழந்தையைப் பேணிக் காக்கும் விதம் தாரிணிக்கு மிகவும் பிடித்த ஒன்று.

கூடவே அவனுடைய மனைவியிடமும் இப்படித் தான் அன்பு செலுத்தியிருப்பானோ என்றும்.



அவனுக்கு மனைவியாகப் பாக்கியம் பெற்ற அந்தப் பெண் மிகவும் கொடுத்து வைத்தவளாக இருந்திருக்க வேண்டும் என்று நினைத்தவளுக்குத் தனது எண்ண ஓட்டத்தின் தவறு புரிந்தது.

ஆனால், பாவம்! அந்தப் பெண்ணுக்கு இருந்து வாழக் கொடுத்து வைக்கவில்லையே.

## 8

இப்பொழுதெல்லாம் அவசியத்திற்குச் சிரித்துப் பேச நேர்ந்தால் அது இருவருக்குமே தவறாகப் படவில்லை.

ஏன் இருவருமே அதைத் தங்களுக்குள் விரும்பினார்கள் என்று கூடச் சொல்லலாம், அதே சமயம் அவர்கள் இருவருமே அதை வெளியே காட்டிக் கொள்ளவும் விரும்பவில்லை.

முக்கியமாகத் தாரிணி.

அந்த வாரத்தில் தொடர்ந்து நிறைய இயந்திரங்களுக்கு ஆர்டர்கள் இருந்ததால் நிற்கக் கூட முடியாத அளவிற்கு அனைவருக்கும் வேலையே சரியாக இருந்தது.

அது ஒரு விதத்தில் மிகவும் பிடித்துக் கூட இருந்தது தாரிணிக்கு. அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

இயந்திரங்களை டெஸ்பேட்ச் செய்வதற்கான வேலைகளை எம்.டி. சொல்லச் சொல்ல உடனிருந்து அவள் செய்ய வேண்டியிருந்ததே அது.

தான் ஏன் இப்படி மாறிப்போய் விட்டோமென்று அவளுக்கே மிகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

ஆனாலும் குரு பிரசாத்திற்குத் தனது மாற்றம் தெரிந்து விடாதவாறு பார்த்துப் பார்த்து மிகுந்த கவனத்துடன் நடந்து கொண்டாள்.

தாரிணி அப்படி நினைத்துக் கொண்டிருக்க, அவளுடைய மாற்றம் குருபிரசாத்திற்குத் தெரியாமல் இருக்கவில்லை.

அதற்குப் பிறகு அவனும் அவளைப் போலவே வெளிப்படையாகக் கண்ணை உறுத்தாதவாறு முன்பைப் போல - ஏன், அதைவிடவும் அதிகமாகவே - தாரிணியுடன் ஒரு இடைவெளியை ஏற்படுத்திக் கொள்ளத் தொடங்கியிருந்தான்.

என்னதான் தாரிணி நல்ல பெண்ணே என்றாலும் வயது அப்படிப்பட்டதாயிற்றே என்று அதிக வேலையைக் காரணம் காட்டி ஆரம்பத்தில் நடந்து கொண்டதை விடவும் சற்று கடுமையாகவே நடக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

ஒரு மாதம் சென்றிருந்தது.

இப்பொழுதெல்லாம் எம்.டி. முன்பு அதாவது தொடக்கத்தில் இருந்ததை விடவும் கடுமையாகப் பட்டும் படாமல் நடந்து கொள்வது தாரிணிக்கு ஏனோ மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

தொடர்ந்து அவன் அதே போல நடந்து கொண்டதில் மனம் பாரமாகி, ஏனோ எதன் மீதுமே ஈடுபாடு வராமல் கோபம் கோபமாக வந்தது.



வெளிப்படையாக அவனிடமே கேட்டு விடலாமென்று நிறைய முறை மனதிற்குள் நினைத்து விட்டிருந்தவளால், அது மட்டும் ஏனோ முடிந்திருக்கவே இல்லை.

அவனுடைய கடினமான முகம் அதற்கு சிறிதும் இடம் கொடுத்திருக்கவில்லை.

அவன் தான் மிகுந்த கோபக்காரனாயிற்றே, கோபத்தில் தன்னை வேலையை விட்டே நீக்கி விட்டால் என்ன செய்வதென்று பயமாக இருந்தது.

குறைந்த பட்சம் இவன் இன்னும் சற்று கடுமையாக நடந்து கொள்ளத் தொடங்கி விட்டால்...

அதைத் தன்னால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ளவே முடியாதே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. கூடவே அவன்தான் கல் நெஞ்சுக்காரனாயிற்றே என்றும்.

தான் ஏன் இப்படியாகி விட்டோம், தான் போகும் பாதை சரியா என்றெல்லாம் யோசித்தவளுக்கு, அதற்குப் பிறகுதான் அனைத்துமே புரிந்தது.

உடல் சிலிர்த்துப் போய்விட, நாடி நரம்பெல்லாம் அலையலையாக ஒரு இன்ப வேதனை பரவுவதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அதாவது அவளுடைய மனம் குருபிரசாத்தின் பக்கம் சாயத் தொடங்கி விட்டிருந்தது.

ஆம். தாரிணியின் மனம் மனதார அவனை விரும்பத் தொடங்கி விட்டிருந்தது.

எப்படி இது நடந்ததென்று யோசிக்கக் கூட அவளால் முடிந்திருக்கவில்லை. ஏன் எதுவுமே முடிந்திருக்கவில்லை.

அந்த வினாடியே அவனைப் பார்த்தாக வேண்டும் போலப் பரபரத்த மனதை மிகவும் முயன்று கட்டுப் படுத்திக் கொண்டாள்.

இதற்கு ஆயுள் எத்தனை நாட்களுக்கென்று நியாயம் பேசிய மனச்சாட்சியை ஒரு கொட்டு வைத்து அடக்கினாள்.

இப்பொழுது சில நாட்களாகத் தன்னுடைய தோற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்திருந்தாள் தாரிணி.

ஆனால் அதெல்லாம் நூறில் ஒரு பங்காகக் கூட குருபிரசாத்தின் கருத்தில் பட்டிருக்கவில்லை என்பதையும் அறிந்தே இருந்தாள்.

மகா அழுத்தக்காரனென்று மனதிற்குள் வழக்கம் போல எரிச்சலுடன் நினைத்துக் கொள்ள மட்டும் தான் அவளால் முடிந்தது.

அன்றும் வேலைகள் மிகவும் அதிகமாக இருந்ததால் அவை அனைத்தையும் முடிப்பதற்கே மதியம் மூன்று மணிக்கு மேல் ஆகி விட்டிருந்தது.

சரி, இனி என்ன வேலைகள் இருந்தாலும் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீ சாப்பிடப் போ என்று குருபிரசாத் சொல்லி விட்டிருக்க, ஆமாம் தனக்கு இனி அது ஒன்று தான் குறைவு என்று விரக்தியுடன் நினைக்கத் தோன்றியது.

சரியென்று விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்து அனிச்சைச் செயலாக ஹேண்ட் பேக்கைத் தேடியவளுக்கு அதற்குப் பிறகுதான் தான் உணவே எடுத்து வரவில்லையென்பது நினைவிற்கு வந்தது.



அதிக வேலை காரணமாகவோ, அல்லது உணவு இல்லையென்றாகி விட்டதாலோ, நன்றாகவே பசிக்கத் தொடங்கி விட்டிருக்க, என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் தாரிணி.

அதே நேரம் தன்னுடைய டேபிளில் இருக்கும் இண்டர்காம் ஒலிக்க, எடுத்துக் காதில் வைத்தாள்.

எம்.டி. குருபிரசாத் அழைக்க, ''இதோ வர்றேன் ஸார்,'' என்று எழுந்து சென்றாள்.

ஏன் அவன் சாப்பிடும் போது தன்னை அழைக்கிறானென்று யோசித்துக் கொண்டே அவனுடைய டைனிங் ஹால் கதவை லேசாகத் தட்டினாள்.

''வா,'' என்றவனின் குரலில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவள், அங்கு இரண்டு ப்ளேட்கள் வைக்கப்பட்டுப் பரிமாறப்பட்டிருந்ததைப் பார்த்தாள்.

''சாப்பிடலாம், வா...''

''எனக்...''

''ஏன், இன்னைக்கு நீ எடுத்துட்டு வரல தான?''

அது எப்படி இவனுக்குத் தெரியுமென்று அவள் தனக்குள் யோசித்துக் கொண்டிருக்க, ''நீதான சொன்ன!'' என்றான் அவன்.

''நானா?'

''ம்.''

''எப்ப சொன்னேன் ஸார்?''

''இப்பதான்.''

..........

''என்ன புரியலையா? வாயால சொன்னா தானா, அது தான் ரொம்ப நேரமா உன் முகமே காட்டிக் கொடுக்குதே!'' என்றான்.

இதைப்போல் அனைத்தையுமே புரிந்து கொண்டால் என்னவாம் என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ம்கூம் இருக்காது, தான் ஹேண்ட் பேக் கொண்டு வராததைக் காலையிலேயே பார்த்திருப்பானாக இருக்கும்.

''என்ன, உக்காரு,'' என்று தான் அமர்ந்து கொண்டே தாரிணியையும் அமரச் சொன்னான் குருபிரசாத்.

காய் பொரியல் வடகம் என மற்ற பார்த்தங்கள் ஏற் கெனவே பரிமாறப்பட்டிருக்க சாதத்தை மட்டும் எடுத்து இருவருக்கும் பரிமாறிவிட்டுத் தானும் அமர்ந்து கொண் டாள் தாரிணி.

இருவரும் சாப்பிட ஆரம்பித்திருக்க, பசியின் வேகத் தில் குருபிரசாத்தின் ப்ளேட்டில் பாதிக்கும் மேல் காணா மல் போய் விட்டிருந்தது.

''என்ன, டேஸ்ட் புடிக்கலையா?''

குருபிரசாத் கேட்க, ''ரொம்ப நல்லார்க்கு ஸார்!'' என் றாள் தாரிணி.

''சும்மா சொல்லாத.''

''நிஜம்.''

''பின்ன ஏன் அப்படியே வெச்சிருக்க? இல்ல, நீ எப்ப வுமே இப்படிதானா?''

''யார் நானா? நான் ஃபுல்லா சாப்பிடுவேன்.''



''அது சரி,'' என்றவன் தனது ப்ளேட்டில் தீர்ந்து போன வற்றை எடுத்துப் பரிமாறப் போனான்.

அனைத்தையும் அவனுக்கு அருகில் நகர்த்திக் கொடுத்த தாரிணி, ''ஆமாம், அம்மா கூடத் திட்டிட்டே இருப்பாங்க. உனக்குக் கையும், வாயும் சும்மாவே இருக்காதா, இல்ல வயித்துக்குள்ள பிசாசு ஏதாவது புகுந்துடுச்சான்னு கிண்டல் பண்ணிட்டே இருப்பாங்க, தெரியுமா?'' என் றாள்.

''பாத்தாத் தெரியல!'' என்றவனிடம், ''நான் உங்ககிட்ட ஒன்னு கேக்கலாமா?'' என்று தயக்கத்துடன் கேட்டாள் தாரிணி.

''ம்... சொல்லு.''

''உங்க வீட்ல, ஐ மீன் உங்க வொய்ஃப் எப்படி இறந் தாங்க?''

சில வினாடிகள் எதுவும் பேசாமல் பார்த்தவன், ''டெலி வரில, குழந்தைய மட்டும் தான் காப்பாத்த முடிஞ்சது,'' என்றான்.

என்ன முயன்றும் அதிர்ச்சியைத் தாரிணியால் முழுமை யாக மறைத்துக் கொள்ள முடியவில்லை.

''என்ன?''

''எப்படி இந்தக் காலத்துல மருத்துவ விஞ்ஞானம் இவ்வளவு முன்னேறியிருக்கற இப்பப் போய்...''

''அதுதான் நேரம். என்ன பண்ண முடியும்?''

பேசாமல் குனிந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்த வளைப் பார்த்தவனுக்கு ஏனோ என்னவோ போல ஆகி விட்டிருந்தது.

மெல்லவும் முடியாமல், துப்பவும் முடியாம உள்ளே வைத்துக் கொண்டிருக்கவும் முடியாம வெளியே சொல்லவும் முடியாமல் தாரணி படும்பா ஏனோ சில நாட்களாக அவனுக்கே ஒரு மாதிரியாகத்தா இருந்தது.

ஆனால் இப்படிப்பட்ட ஆசை அவளுக்கு எப்படி வந்தது?

அந்த மாதிரியான கற்பனைகளுக்கெல்லாம் தான் ஒரு வினாடி கூட இடம் கொடுத்ததே இல்லையே.

அதிலும் தனது இயற்கைக் குணத்திற்கு மாறாக மிகவு கடினமாகத் தானே எப்பொழுதுமே நடந்து கொண்டிரு கிறோம்.

ஒருவேளை அதுதான் காரணமோ?

ஆனால் இந்த அன்புக்கு எதிர்காலம் இல்லையே.

இவள் சிறுபெண். புரியாது. ஆனால் நாம்...

ஒருவழியாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு மு முரமாகச் சாப்பிடுவதைப் போலக் காட்டிக் கொண்டாள் தாரிணி.

''சரி. நல்லா சாப்பிடுவேன், அது இதுன்னு ஏதேதோ சொல்ற மேடம் சமைக்கறதுல எப்படி?''

''நல்லா சமைப்பேனாக்கும்.''

''எல்லாரும் சாப்புட்ற மாதிரி இருக்குமான்னு கேக்கறேன். கடைசிக்கு இப்ப நீ சாப்புட்ற அளவுக்காவது...''

பல நாட்களுக்குப் பிறகு குருபிரசாத்தின் சிரிப்பு தன்னை என்னவோ செய்ய, லேசாகக் கண்கள் கூடக் கலங்கி விட்டிருந்தன தாரிணிக்கு.



ஆனால் அவன் என்னவென்று விசாரிப்பதற்கு முன்னரே, ''காரம், அதான்,'' என்று சமாளித்து விட்டிருந்தாள்.

''அப்படி ஒன்னும் தெரியலையே,'' என்று தன்னைப் பார்த்தவனைக் கவனிக்காதவள் போல, ''இன்னும் கொஞ்சம் வெச்சுக்கோங்க!'' என்று அனைத்தையும் அவனுக்கு அருகில் நகர்த்திக் கொடுத்தாள்.

எதிரே அமர்ந்திருந்தவளின் முயற்சிகளில் மனம் உருகிப் போய்விட, சாப்பிடுவதில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான் குருபிரசாத்.

''ஹன்ஸிகா நல்லா இருக்காளா ஸார்?''

தன்னையறியாமலேயே கேட்டு விட்டவளுக்கு அதற்குப் பிறகுதான், இதையெல்லாம் நீ ஏன் கேட்கிறாயென்று ஏதாவது கேட்டு விடுவானோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

''நல்லார்க்கா!'' என்று தன்னைப் பார்த்தவனிடம், ''இல்ல, இப்பவெல்லாம் நீங்க அவகூடப் பேசற மாதிரியே தெரியல. அதனால கேட்டேன்,'' என்றாள்.

அதற்கு, ''நான் தினமும் மார்னிங், ஈவினிங் ரெண்டு நேரமும் குறைஞ்சது ஒரு நாலு தடவையாவது பேசிடுவேன், எங்க இருந்தாலும்,'' என்றான் குருபிரசாத்.

தொழிலைப் பார்க்கிறேனென்று அவனொன்றும் குழந்தையை மறந்து விடவில்லையென்பது புரிய, அவன் மேலிருக்கும் மதிப்பும், மரியாதையும் இன்னும் அதிகம் தான் ஆனது தாரிணிக்கு.

# 9

அதற்குப் பின் வந்த நாட்களில் குருபிரசாத் அப்படி யொன்றும் கடுமையாக நடந்து கொண்டிருக்கவில்லை.

அப்படி நடந்து கொள்ள அவனாலுமே முடியவில்லை என்றுகூடச் சொல்லலாம்.

அதிலும் தாரிணியின் மேல் அவனுக்கிருந்த மதிப்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்றது.

இதுவே அவளுடைய இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தால், அதாவது சற்று மோசமான குண முடைய பெண்களாக இருந்திருந்தால் ஒரு ஆடவனின் கவனத்தை ஈர்ப்பதற்கு அவர்கள் என்னவெல்லாம் செய்திருக்கக் கூடுமென்று நினைக்கத் தோன்றியது.

ஆனால் இவளிடம் பேச்சு, நடை, உடை, பாவனை என எதிலுமே நூறில் ஒரு பங்காகக் கூடத் தன்னை ஈர்க்க வென்று எந்தவொரு கீழ்த்தரமான - ஏன், மிகமிகச் சிறிய அளவில் கூட - எதுவுமே இருக்கவில்லை என்பதும் அவனுக்குப் புரியவே செய்தது.

என்ன, அதிக பட்சம் தோற்றத்தில் வேண்டுமானால் சற்று கூடுதல் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறாள். அவ்வளவே.

ஆனால் அதிலும் கூட அதிகப்படியோ, ஒட்டாத தன்மையோ துளியும் இருக்கவில்லையே.



அனைத்திற்கும் மேலாக அவளுடைய பொறுமை, அனைத்து வேலைகளையும் - அது சிறிய, பெரிய என எந்த வேலையாக இருந்தாலுமே கூட - அதைச் செய்வதில் ஒரு நேர்த்தி, வார்த்தைகளின் பிரயோகத்தில் நளினம், தோற்றத்தில் எளிமை என இயல்பாகவே அவளிடம் அமைந்து விட்டிருந்த நல்ல குணங்கள் அனைத்துமே, அவனையறியாமலேயே அவனுடைய கவனத்தைத் தாரிணியின் பக்கம் திருப்பி விட்டிருந்தன என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

எல்லாவற்றிற்கும் மேலாக அவள் எப்பொழுதும் அணியும் பருத்தி நூல் புடவையும் இடைவரை விழும் அவளுடைய நீண்ட கூந்தலும் இயற்கையாகவே அமைந்து விட்டிருந்த அவளுடைய உயரமான, மெலிந்த உடல்வாகிற்குக் கனகச்சிதமாகப் பொருந்திப் போனது. அன்றுதான் முதன் முறையாக அவனுடைய கவனத்தில் பட்டுக் கருத்தை எட்டியது.

கூடவே அவளுடைய அழகிய முகமும், ஆவலுடன் ஒவ்வொரு முறையும் தன் முகம் பார்த்து மலரும் அந்த இதழ்களும், முத்துப் போன்ற பல் வரிசையும்...

ஏனோ இப்பொழுதெல்லாம் குரு பிரசாத்தாலும் முன்னைப்போல இருக்க முடிந்திருக்கவில்லை. அதற்காகத் தன் மனதையும் அவன் அவளிடம் காட்டி விட வில்லை.

ஆனாலும் தான் எப்படி...

தன்னைப்போய் எந்த அளவிற்கு மாற்றி விட்டிருக் கிறாளென்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்ட வனுக்கு உடனே அது உறைத்தது.

•

என்னதான் தான் பணக்காரனாக அந்தஸ்தில் உயர்ந்தவனாக இருந்தாலும் கூட, ஏற்கெனவே திருமணமான தனக்குப் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிப்பார்களா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஏன், தனக்குமே நியாய, அநியாயம் என்று இருக்கிறதே.

நிச்சயம் நாம் நம் மனதை அவளிடம் காட்டி விடவே கூடாது.

அதற்கு மேல் தானும் அவளுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைத்தால் நிச்சயம் அவள் பழையபடி மாறி விடுவாள் என்பதில் அவனுக்கு சிறிதும் சந்தேகமே இருக்கவில்லை.

ஆனால் அதை முடிந்த அளவில் விரைவில் செய்து விட வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவன், பிறகு முயன்று கவனத்தை வேலையில் திருப்பிக் கொண்டு விட்டிருந்தான்.

சில நிமிடங்கள் தான் சென்றிருக்கும். வேலை மும்முரத்தில் தனது மொபைல் ஒலிக்க எடுத்து அட்டெண்ட் செய்து பேசினான்.

''என்ன சொல்றீங்க?''

..........

''சரி, இப்ப எப்படியிருக்கு?''

''நான் உடனே வர்றேன்,'' என்றவன் தாரிணியை அழைத்தான்.

அடுத்த சில வினாடிகளில் வந்து நின்றவளிடம், ''நான் வெளிய கிளம்பணும். முக்கியமா ஏதாவது இருந்தா மட்டும் போன்ல கூப்புடு,'' என்றான்.



வழக்கத்திற்கு மாறாக அவனது முகத்தில் தெரிந்த லேசான பதட்டம், அதுகூட நன்கு உற்றுப் பார்த்ததினால் மட்டுமே தெரிந்தது.

மிகுந்த தயக்கத்துடன், ''யார்க்கு... என்ன...'' என்று தாரிணி முடிப்பதற்குள்ளேயே, ''ஹன்ஸிக்கு ஹை ஃபீவராம். லேசா ஃபிட்ஸ் மாதிரி வந்து ஹாஸ்பிடலுக்கு எடுத்துட்டு வந்துட்டிருக்காங்க,'' என்றவன் அங்கிருந்து கிளம்பி வெகு நேரமாகி விட்டிருந்தது.

கடவுளே என்று மனதிற்கு மிகவும் கஷ்டமாகி விட்டிருக்க, எந்த வேலையும் செய்ய முடியாமல் தாரிணியும் தன்னுடைய இடத்தில் பேசாமல் அமர்ந்து விட்டிருந்தாள்.

அன்று முழுவதுமே குருபிரசாத் அலுவலகத்திற்கு வந்திருக்கவில்லை. மாலை வீட்டிற்குக் கிளம்புவதாகச் சொல்லிக் கொள்ள அழைத்த போதுதான், அவனுடைய மகளைப் பற்றி விசாரித்தாள் தாரிணி.

அவன், 'இப்பொழுது பரவாயில்லை,' யென்று சொன்னது மனதிற்கு எவ்வளவோ இதமாக இருந்தது.

தொடர்ந்து வந்த இரண்டு நாட்களும் கூட குருபிரசாத்தால் அலுவலகத்திற்கு வர முடிந்திருக்கவில்லை, அவன் இல்லாததால் எந்த வேலையும் செய்யப்படாமல் நின்று விட்டிருக்கவும் இல்லை.

செய்ய வேண்டியவற்றை குருபிரசாத் அவ்வப்பொழுது போனில் அழைத்துச் சொல்லிக் கொண்டே இருக்க, தாரிணியும் வழக்கம்போல அனைத்து வேலைகளையும் செய்து கொண்டிருந்தாள்.

ஜூஸ் எல்லாத்தையும் இன்னும் இன்னும் கேட்டு வாங்கிச் சாப்புட்றேன்னு சொன்னாங்க, அதான்,'' என்றான்.

''ஆனா இப்ப நான் ஒன்னுமே குடிக்கலையே!'' என்று அதையும் ஒரு பெருமை போல அழகாகச் சொன்ன சிறுமியை ஆசையாகப் பார்த்தாள் தாரிணி.

''ஏன் குடிக்கல, அப்ப நீ குட் கேர்ள் இல்லையா?''

''நான் குட் கேர்ள். ஜூஸ் தான் இல்ல!'' என்று ஒரு பெரிய குறையைச் சொல்வதைப் போல சிறுமி சொல்ல, ''ஜூஸ் பிழியணும்,'' என்றான் குருபிரசாத்.

''இதோ நான் பிழியறேன். என்ன குட்டிப் பாப்பா, ஓ.கே.வா?'' என்று ஹன்ஸிகாவிடம் கேட்டுக் கொண்டே எழுந்து போய் டிஸ்இன்ஃபெக்டண்ட் ஷொல்யூஷனால் கைகளை நன்கு கழுவிக் கொண்டு வந்து பிழிய ஆரம்பித்திருந்தாள் தாரிணி.

தானும் உதவி செய்கிறேனென்று வந்த சிறுமிக்கும் வேலைகளைக் கொடுத்துச் சிரிக்க வைத்துக் கொண்டே, ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் நிறையச் சாத்துக்குடி ஜூஸைப் பிழிந்து அதை அவளிடம் கொடுத்துக் குடிக்கவும் வைத்திருந்தாள்.

இன்னும் என்று சாத்துக்குடிகளை எடுத்து வந்த சிறுமி விளையாடுவதற்காகத்தான் கேட்கிறாள் என்பது புரிய, அதனுடன் சிரித்துப் பேசிக்கொண்டே கவனத்தைத் திசை திருப்பியிருந்தாள்.

''சாரிடாம்மா பாப்பா, குளிச்சுக்கறையா?'' என்று குருபிரசாத் தனது மகளிடம் கேட்க, ''அக்கா தான்!'' என்று அதற்கும் தாரிணியை நோக்கிக் கை காட்டினாள் குழந்தை.



''வேண்டாம்மா. அவங்க டிரெஸ்...'' என்ற அவனது பேச்சை இடைமறித்திருந்த தாரிணி, ''அதெல்லாம் ஒன்னும் ஆகாது ப்ளீஸ்...'' என்று விட்டு, ''வாடா செல்லம்!'' என்று குழந்தையை அழைத்துக் கொண்டு போனாள்.

பத்து நிமிடங்களில் ஹன்ஸிகாவைக் குளிப்பாட்டித் துணி மாற்றி தலையைச் சீவி அழகாகத் தயார் செய்து விட்டிருந்தாள் தாரிணி.

ஒவ்வொன்றையும் அவள் அனுபவித்துச் செய்தது ஏனோ குருபிரசாத்தின் மனதில் அழியாத ஓவியமாகப் பதிந்து விட்டிருந்தது. மேலும் குழந்தை அவளிடம் நன்றாக ஒட்டிக் கொண்டதும்.

திடீரென்று, ''உங்க பாப்பா பேரென்ன?'' என்று குழந்தை கேட்டதில் திகைத்துப் போய் விட்டிருந்த தாரிணி, உடனே, ''எனக்குப் பாப்பா இல்லை,'' என்றாள்.

''ஏன்?'' என்று பாவமாகக் கேட்டவளிடம், ''ஏன்னா எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலையே!'' என்று சிரித்தாள் தாரிணி.

குழந்தை அதற்கும் இன்னொரு ''ஏன்?'' போட, ''வாயாடி! வா,'' என்று மகளை அழைத்துக் கொண்டான் குருபிரசாத்.

''உன் பொம்மையெல்லாம் அவங்களுக்குக் காட்டலையா?'' என்று அவன் கேட்டதில், அதற்குப் பிறகு குழந்தையின் கவனமனைத்தும் அதில் சென்று விட்டிருந்தது.

''வா, உக்காந்து காபி எடுத்துக்கோ,'' என்று தாரிணியை அழைத்த குருபிரசாத் தானும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டான்.

தாரிணி தானும் அமர்ந்து காபியை எடுத்துக் கொள்ள, "எப்படி வந்த?" என்று கேட்டான்.

"இந்த ஹாஸ்பிட்டல் தான்னு தெரியும். ஆட்டோல வந்து இங்க ரிசப்சன்ல பாப்பாவோட பேர் சொன்னேன். ரூம் நெம்பர் சொன்னாங்க," என்றாள்.

"அதற்குள் இது பெரியப்பா வாங்கிக் குடுத்தது!" என்று ஒரு பொம்மையுடன் ஹன்ஸிகா அருகில் வர, "அட ரொம்ப நல்லார்க்கே!" என்று வாங்கிப் பார்த்தாள் தாரிணி.

"உங்களுக்கும் இதே மாதிரி வேணுமா?"

மழலை மொழியில் என்றாலும் பெரிய மனுஷியைப் போல மரியாதையுடன் பேசியவளின் அழகில் தன்னை மறந்து, தானும் குழந்தையோடு குழந்தையாக ஒன்றிப் போய் விட்டிருந்தாள் தாரிணி.

"அவங்களுக்கு லேட்டாகலையா செல்லம்?" என்று பிரசாத் கேட்டதில் தான் தானும் நடப்புக்கு வந்து கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் தாரிணி.

"ம்கூம்... இன்னும் கொஞ்சம்..." என்று குழந்தை சொல்லிக் கொண்டிருக்க, "அம்மா ஆறு மணிக்குத் தான் வருவாங்க. அதனால இன்னும் கொஞ்ச நேரம் ழிச்சுக் கிளம்பினா சரியா இருக்கும்," என்றாள் தாரிணி.

"என்ன பர்ச்சேஸா?"

"ஆமாம் ஸார்," என்றவள், "பாப்பா பக்கத்துல இங்க ட வேற யாருமே இல்லையா?" என்று கேட்டாள்.

"இருக்காங்க. வேலைக்காரம்மா. ராஜம்மான்னு பேரு. ராம்ப வருஷமா நம்ம குடும்பத்தோட தான் இருக்



காங்க. அவங்க தான் கூட இருக்காங்க. எப்பவும் மதியம் வீட்டுக்குப் போய்ட்டு ஆறு மணிக்கு மேல வருவாங்க."

"ஓ அப்படியா?" என்றவள், "உங்க அப்பா அம்மா?" என்று கேட்டாள்.

"அவங்க காசி, ராமேஸ்வரம்னு ஒரு மாசம் டூர்னு கிளம்பிட்டாங்க. அவங்களப் பாக்காத ஏக்கத்துல தான் இப்ப ஃபீவர்கூட வந்திருக்கு," என்றான்.

"அப்பிடின்னா அவங்க திரும்பி வர்றதுக்கு இன்னும் ரொம்ப நாள் இருக்கே. அது வரைக்கும்..."

"அதுதான் கொஞ்சம் யோசனையா இருக்கு. இவ பிறந்ததிலிருந்து அம்மாவே தான் வளத்திருக்காங்க. பாரு. ரொம்பக் கேட்டான்னா நான் டூர கேன்சல் பண்ணிட்டு வந்துட்றேன்னு அம்மா தினமும் போன் பண்ணிட்டே தான் இருக்காங்க, பாக்கலாம்."

"வேண்டாம் ஸார். அவங்கள டூர கேன்சல் பண்ணச் சொல்ல வேண்டாம். நைட்டெல்லாம் எப்படியும் நீங்க கூட இருக்கத்தான் போறீங்க. அப்புறம் பகல்ல மேக்ஸிமம் ஆபீஸுக்குக் கூட்டிட்டு வந்துடுங்க," என்று தனக்குத் தோன்றியதை யோசிக்காமல் சொல்லியே விட்டிருந்தாள் தாரிணி.

"அது சரி," என்றவன், அதற்கு மேல் எதுவும் சொல்லி விடாததில் சற்று நிம்மதியாகக் கூட உணர்ந்தாள்.

அதே நேரம், "நெய்ல் கலர் பண்ணி விடுங்க டாடி," என்று குழந்தை நெய்ல் பாலிஷ் பாட்டில் ஒன்றை எடுத்து வந்து தனது தந்தையிடம் கொடுக்க, "இப்ப வேண்டாம்டா. ஹாஸ்பிட்டலிலிருந்து வீட்டுக்குப்

போனதுக்கப்புறம் டாடி கண்டிப்பா அடிச்சு விடுவேன்.
ஓ.கே. வா?'' என்று கேட்டான் குருபிரசாத்.

''ம்கூம்... இப்பவே...'' என்ற சிறுமி, தனது தந்தை
எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தனது கைகளை
நீட்டிக் கொண்டே இருக்க, சரியென்று நெயில் பாலிஷை
அடித்து விட்டான்.

ஆனால் அத்தோடு நின்று விடாமல் அக்காவுக்கு
என்று தன்னுடைய கைகளுக்கும் அவள் வைத்துவிடச்
சொன்னதில் திகைத்துப் போய் விட்டிருந்தாள் தாரிணி.

''ம்கூம். எனக்கு வேண்டாம்டா செல்லம்,'' என்று
அவள் எவ்வளவு மறுத்தும் அதைக் காதில் கூட வாங்கிக்
கொள்ளாமல் தாரிணியின் இடது கையைப் பிடித்துத்
தனது தந்தையிடம் கொடுத்திருந்தாள் ஹன்ஸிகா.

அவன் கையைப் பிடித்ததில் தன்னையறியாமலேயே
உடல் சிலிர்த்துப் போய்விட, உதட்டைக் கடித்துத்
தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொள்ள எவ்வளவோ
முயன்றாள் தாரிணி.

ஆனால் அவனுடைய ஒரு பார்வை அந்த முயற்சி
களையெல்லாம் தவிடு பொடியாக்கி விட்டிருந்த வெட்
கத்தால் குப்பெனச் சிவந்து விட்டிருந்த முகத்துடன்
குனிந்து கொண்டாள்.

லேசாகத்தான் என்றாலும் கையை இழுக்க முயன்று
விட்டுப் பிறகு அதில் பலனில்லையென்று பேசாமல்
இருந்து விட்டிருந்தாள்.

குழந்தையின் விருப்பத்திற்காகப் பெருவிரலில்
மட்டும் அடித்து விட்டுத் தாரிணியின் கையை அவன் விடு



வித்திருக்க, ம்கூம்... எனக்கு மாதிரியே எல்லா விரலும்
என்று மீண்டும் அடம் பிடித்தாள் குழந்தை.

தாரிணியின் வெண்டைப் பிஞ்சு விரல்களை விடு
விக்க மனமில்லையோ என்னுமளவிற்கு நீளநீளமாக
மென்மையாக இருந்த அவளுடைய விரல்கள் முழு
வதற்கும் பொறுமையாக அடித்துவிட்டு அதற்குப்
பிறகே விடுவித்திருந்தான் குருபிரசாத்.

தாரிணியின் அந்த முகச்சிவப்பும், அவஸ்தையும்
தன்னையும் என்னவோ செய்வதை அவனால் உணர்ந்து
கொள்ள முடிந்தது.

மிகவும் முயன்று தன்னைச் சாதாரணமாகக் காட்டிக்
கொண்டிருந்தவளிடம், ''என்ன, இன்னொரு கைக்கும்
அடிச்சு விட்றதா?'' என்று கேட்டான் குருபிரசாத்.

''அச்சச்சோ!'' என்றவள், ''இனி உங்களுக்கு வேணும்னா
அடிச்சுக்கோங்க!'' என்றாள்.

''ஓ யெஸ். நீ அடிச்சு விட்டா நான் ரெடி,'' என்று கையை
நீட்டியவனின் கண்களும் இப்பொழுது என்ன சொல்
கிறாய் என்று சிரித்துக் கொண்டே கேட்பதைப் போலி
ருந்தன.

''அச்சச்சோ! பாய்ஸ் எல்லாம் அடிக்கவே கூடாது!''
என்று குழந்தை கைகளைக் கொட்டிக் கொண்டு சிரிக்க,
''யார் சொன்னாங்க?'' என்று கேட்டான் குருபிரசாத்.

''அதுவும் நீங்கதான் டாடி,'' என்று தொடர்ந்து குழந்தை
சிரிக்க, பெரியவர்களாலும் கூட இப்பொழுது சிரிப்பை
அடக்க முடிந்திருக்கவில்லை.

''ஓ அதுவும் நானே தானா?'' என்று அவன் குனிந்து
தனது குழந்தையைத் தூக்கிக் கொள்ள, கைக்கடிகாரத்

தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''இனி நான் கிளம்பினா சரியா இருக்கும்,'' என்று அவசரமாக எழுந்தாள் தாரிணி.

''நான் வேணும்னா கொண்டு வந்து விட்டுட்டு வரட்டுமா?'' என்று கேட்டவனிடம், ''அச்சச்சோ! வேண்டாம் ஸார்,'' என்று உடனே மறுத்து விட்டிருந்த தாரிணி, ''அப்புறம் பாப்பாவ இங்க யார் பாத்துக்குவா?'' என்று இருவரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

# 11

இரவு வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னரும் கூட மருத்துவமனையில் நடந்ததைத் தாரிணியால் மறந்திருக்க முடியவில்லை.

அவன் தொட்ட இடம் இன்னும் கூட குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது அவன் பார்த்த அந்தச் சரசமான பார்வையை நினைத்த போதெல்லாம் குப்பென முகம் சிவந்து தாரிணியின் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

அன்று பார்த்துப் பார்த்து மிகவும் அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் தாரிணி.

மனம் முழுக்க சந்தோஷம் வியாபித்திருக்க, தரையில் கால் பாவியிருக்கவில்லை.



மகளிடம் தெரிந்த அந்த அபரிமிதமான வித்தியாசம் மனதை உறுத்த, அதைக் கேட்டே விட்டிருந்தார் லட்சுமி.

''அதெல்லாம் ஒண்ணுமில்லமா. இன்னைக்கு வெள்ளிக்கிழமைங்கறதால தலைக்குக் குளிச்சு புது டிரஸ் போட்டேன். அவ்வளவுதான்,'' என்று அவளது தாயை நம்ப வைப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது தாரிணிக்கு.

''என்னவோ போ...'' என்று ஒருவழியாகச் சமாதானமடைந்திருந்த லட்சுமியாலும் உண்மையிலேயே நம் மகள் இவ்வளவு அழகா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''குட் மார்னிங் ஸார்.''

''வெரி குட்மார்னிங்!'' என்று நிமிர்ந்த குருபிரசாத்தின் பார்வை தன்னை அளவிடுகிறதோ என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அப்புறம் என்ன விசேஷம்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லையே ஸார்.''

''அப்ப சரிதான்.''

''ஏன் சிரிக்கறீங்க?''

பிறை நெற்றி, குவிந்த கன்னம், மீன் விழிகள், தாமரை மொட்டு இதழ்கள்...

தனக்கு முன்னால் நின்றிருப்பவளை அன்றுதான் ஏதோ முதன் முறையாகப் பார்ப்பதைப் போல அவனால் தாரிணியிடம் இருந்து கவனத்தைத் திருப்பிக் கொண்டிருக்க முடியவில்லை.

"அப்புறம் பாப்பா டிஸ்சார்ஜ் ஆயாச்சா ஸார்?"

"ஆமாம், நேத்து மதியம்."

"இப்ப அவளுக்கு உடம்பு கம்ப்ளீட்டா சரியாயிடுச்சு இல்லையா ஸார்?"

"சரிதான். நூறு சதவிகிதம் பழையபடி ஆயிட்டா."

"வீட்ல தனியா இருந்துக்குவாளா? உங்களத் தேட மாட்டாளா?"

"மாட்டான்னு தான் நினைக்கறேன். நான் கம்பெனிக்குக் கிளம்பற வரைக்கும் கூட அவ எழுந்திருக்கல, பாக்கலாம்."

"இப்பதான் உங்களுக்கும் கொஞ்சம் மனசுக்கு ஃப்ரீயா இருக்கும். இல்லையா ஸார்?"

"அது சரிதான். ஃபீவர் இருக்கும்போது எங்க ஃபீவர் திடீர்னு அதிகமாயிடுமோன்னும், ஓரளவு சரியானதுக்கப்புறமும் எங்க போன ஃபீவர் திரும்ப வந்துடுமோன்னும் ஒரு வாரமா நைட்டெல்லாம் தூக்கமே இல்லை. பகல்ல கிடைக்கற நேரத்துல போட்ட குட்டித் தூக்கம் மட்டும் தான். அதையெல்லாம் கம்பேர் பண்ணும்போது நிஜமாவே இப்ப மனசுக்கு ரொம்ப ஃப்ரீயா தான் இருக்கு!" என்று உணர்ந்து சொன்னவனைப் பார்த்தாள் தாரிணி.

பாவம் என்று உள்ளம் உருகிப் போய் விட்டிருந்தது தாரிணிக்கு. தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் எந்த அளவிற்கு அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்கிறான் என்றிருந்தது.

கணக்கு வழக்கில்லாமல் பணம் இருக்கிறது. அதைக் கொடுத்துவிட்டுத் தனக்கென்ன என்று பாரத்தை



மற்றவர்களின் தலையில் போட்டுவிட்டு இவன் ஜாலியாக இருக்க நினைக்கவில்லையே என்றும்.

பெற்ற குழந்தையின் மேல் இவ்வளவு பாசத்தைக் காட்டுபவன் கட்டிக் கொண்டிருந்த மனைவியின் மேலும் இதைவிட அதிகமான பாசத்தைக் காட்டியிருப்பான் தானே.

அவனுடைய மனைவி மட்டும் உயிருடன் இருந்திருந்தால் ஒரு குடும்பமே சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருந்திருக்குமே என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

உண்மையிலேயே கடவுளுக்குக் கண்ணில்லையென்று தான் சொல்ல வேண்டும். இல்லையென்றால் இவ்வளவு அழகான குடும்பத்தைக் கலைக்க எப்படி மனம் வந்திருக்கும்.

"என்ன யோசனை?"

"ஒண்ணுமில்ல சார்," என்ற தனது வார்த்தைகளை அவன் நம்பவில்லையென்பது புரிய, "நீங்க தப்பா எடுத்துக்கலேன்னா சொல்றேன். பாப்பா குறும்பு பண்ணினா தினமும் இங்க கூட்டிட்டு வந்துடுங்களேன்," என்றாள்.

"அது சரி. இது பிஸினஸ் நடக்கற இடமில்லையா?" என்று பட்டும் படாமல் சொன்னவன், தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருக்க, தானும் தன்னுடைய இடத்திற்கு வந்து விட்டிருந்தாள் தாரிணி.

நாம் அதிகப்படியான உரிமை எடுத்துக் கொள்வதாக நினைத்துக் கொள்வானோ என்று நினைத்தவளுக்கு, எது எப்படியோ, முன்னைப் போல எந்நேரமும் இறுக்கத்துடன்

இருக்காமல் சற்று இலகுவாக இருக்கிறானே. அதுவே போதுமென்றிருந்தது.

கடவுள் புண்ணியத்தில் இனி எப்பொழுதும் இவன் இப்படியே இருக்க வேண்டும். மீண்டும் எங்காவது பழையபடி நடந்து கொண்டானென்றால் அதை நிச்சயம் தன்னால் தாங்கிக் கொள்ளவே முடியாதென்று தோன்றியது.

இன்டர்காம் ஒலிக்க எடுத்துப் பேசியவள், ''இதோ எடுத்துட்டு வர்றேன் ஸார்,'' என்று அவன் கேட்ட ஃபைலுடன் விரைந்தாள்.

அதற்குப் பிறகு எதைப் பற்றியும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவிற்கு வேலையே சரியாக இருந்தது.

மாலை ஐந்து மணிக்கு மகள் அழைக்கிறாளென்று குரு பிரசாத் கிளம்பியிருக்க, ''ஒரு நிமிஷம் சார்,'' என்று வேகமாக வந்தாள் தாரிணி.

''ஸார், இத ஹன்ஸிக்குக் குடுத்துடறீங்களா?'' என்று ஒரு கிஃப்ட் பார்சலை நீட்டியவளிடம், ''என்ன இது?'' என்று கேட்டான்.

''அவளுக்கு ரொம்பப் பிடிச்சது. வாங்கிக்கோங்களேன் ப்ளீஸ்.''

''அது சரி, அதுக்காக என்னன்னு கூடவா நான் தெரிஞ்சுக்கக் கூடாது?'' என்று குறைப்பட்டுக் கொண்டே வாங்கிக் கொண்டான் குருபிரசாத்.

''பாப்பாவுக்குப் பிடிச்ச ரொம்ப சிம்பிளான கிஃப்ட் வீட்டுக்குப் போய்ப் பாத்துக்கோங்களேன்,'' என்றவளிடம்



''சரிதான். இன்னும் அரை மணி நேரத்துல நீயும் கிளம்பிக்கலாம்.'' என்று அங்கிருந்து சென்றே விட்டிருந்தான் குருபிரசாத்.

''தாரிணி.''

''நான் ரெடிமா. என்னமா நீ எவ்வளவு நேரம் பண்ணிட்டிருக்க? நாமெல்லாம் நைட்டே அங்கயே இருந்திருக்க வேண்டியவங்க. கடைசிக்கு இப்பவாவது கொஞ்சம் நேரத்துல போகலாம்னு பாத்தா அதுக்கும் இல்லாம...

''சரிதான்மா. இனி நீங்க வந்தாப் போதும்,'' என்று தனக்கு முன்னே வந்து நின்றிருந்த மகளைப் பார்வையால் அளவிட்டார் லட்சுமி.

''என்னமா பாக்கறீங்க?''

ஆழ்ந்த பச்சையில் சேலை முழுக்க மெல்லிய ஜரிகைக் கோடுகள் இழையோட, அந்தச் சேலைக்குப் பொருத்தமாக வளையல், நெக்லஸ் கம்மல் எனப் பார்ப்பதற்கு ஏதோ அந்த வானத்துத் தேவதையே கீழே இறங்கி வந்து விட்டாற் போலிருந்த மகளைப் பார்த்தவருக்கு, அதற்குப் பிறகுதான், அடடா தாயின் கண்ணே மகளுக்குப் படுவதா என்றிருந்தது.

''அட வாங்கமா. இப்ப நீங்க நின்னு யோசிச்சிட்டிருக்கீங்க. அப்புறம் லேட்டானதுக்குக் காரணம் இவதான்னு என்னத்தான கை காட்டுவீங்க!'' என்றாள் தாரிணி.

''பின்ன இருக்கறதைத் தான சொல்ல முடியும்?'' என்ற லட்சுமி, ''உன் மாமா வீட்ல நிச்சயம் திரும்பவும் கல்யாணப் பேச்செடுக்காம இருக்க மாட்டாங்க. என்ன சொல்றது?'' என்று கேட்டார்.

''இஷ்டமில்லைன்னு ஒரே வார்த்தைல முடிச்சுடுங்க!'' என்ற தாரிணி ஆட்டோவுக்கு போன் செய்தாள்.

''இதுக்கே முதல்ல திட்டு வாங்கப் போறோம். அவங்க வீட்ல எத்தன கார் சும்மா நின்னுட்டிருக்கு! அதோட காலையிலிருந்து ரெண்டு மூணு தடவ போனும் வேற பண்ணிட்டாங்க, தெரியுமாம்மா.''

''அதுக்கென்னமா பண்ண முடியும். நமக்குப் பிடிச்சதத் தான நாம செய்ய முடியும்?''

''என்னவோ போ. அங்க போய் என்ன பேசறதுன்னு தான் எனக்கு ஒண்ணுமே புரியல,'' என்று மகளுடன் தானும் ஏறி அமர்ந்தார் லட்சுமி.

''சரிதான்மா. அதையெல்லாம் அப்பா பாத்துக்குவார். நீங்க எதுக்குத் தேவையில்லாம பயப்பட்றீங்கன்னுதான் எனக்கும் புரியவே மாட்டேங்குது,'' என்ற தாரிணி சற்று உள்ளே நகர்ந்து அமர்ந்து தனது தாய் வசதியாக அமர்ந்து கொள்ள இடம் கொடுத்தாள்.

லட்சுமியின் உடன் பிறந்த அண்ணான் வீட்டில் தான் விசேஷம்.

புதுமனை புகுவிழா.

ஆண்கள் இருவரும் காலையில் நேரத்திலேயே இரண்டு சக்கர வாகனத்தில் கிளம்பிச் சென்றிருக்க, இப்பொழுது பெண்கள் இருவரும் கிளம்பியிருந்தனர்.

தாரிணியின் தம்பி மட்டும் பள்ளியில் பத்தாவது படித்துக் கொண்டிருந்ததால் விடுமுறை எடுக்க முடியாதென்று பள்ளிக்குச் சென்று விட்டிருந்தான்.

லட்சுமியின் அண்ணனுக்கு நான்கு ஆண் பிள்ளைகள்.



அதில் இருவருக்குத் திருமணம் முடிந்திருக்க, மூன்றாவது பிள்ளைக்குத்தான் தாரிணியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதற்குப் பதில் சொல்லியிருக்காததோடு வெளியே இருந்து வேறு தாரிணியைப் பெண் பார்க்க வருவதாக இருந்ததில் அவர்களுக்கு மிகுந்த கோபமென்று கூடச் சொல்லலாம்.

என்னதான் பணம் தேவைக்கு மிஞ்சியே இருந்தாலும் கூட அது மட்டும் திருமண பந்தத்திற்குப் போதாதென்று தாரிணியின் தந்தையே யோசிக்காமல் மறுத்து விட்டிருந்ததோடு, தாரிணி சிறு பெண், இப்போதைக்குத் திருமணப் பேச்சே வேண்டாமென்றும் முடித்து விட்டிருந்தார்.

அவரே அப்படிச் சொல்லி விட்டதற்குப் பிறகு அந்த வீட்டினர் அனைவருமே அந்தப் பேச்சையே அத்தோடு மறந்தும் விட்டிருந்தனர்.

முக்கியமாகத் தாரிணி.

ஆனால் இப்பொழுது இதென்ன தாய் திரும்பவும் ஏதேதோ சொல்கிறாரென்று மனதிற்குள் திக்கென்றது தாரிணிக்கு. ஆனாலும் அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சரிதான், சில நாட்கள் பேசிவிட்டுப் பிறகு மீண்டும் பழையபடி விட்டு விடுவார்களென்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் அப்படி நடந்திருக்கவில்லை.

தங்கள் மகள் தாரிணியை அவர்களுடைய மூன்றாவது மகனான கதிரேசனுக்குத் தருவதாகத் தாரிணியின் பெற்றோர் வாக்குத் தரும்படியும் நேர்ந்தது.

தொடர்ந்து வந்த இருபது நிமிடங்களில் அவர்கள் இருவரும் விசேஷ வீட்டைச் சென்றடைந்திருந்தார்கள்.

நன்றாகப் படிப்பதாலோ, அனைவரிடமும் இனிமையாகப் பேசிப் பழகுவதாலோ, தோற்றத்தில் அழகாக இருப்பதாலோ, தாரிணி என்றால் அந்த வீட்டிலிருப்பவர்கள் அனைவருக்கும் மிகவும் பிடிக்கும்.

ஆனால் அதற்கெல்லாம் பெரிதாக உரிமை எடுத்துக் கொள்ளாமலும், பெருமை பாராட்டாமலும் மிகவும் சாதாரணமாக நடந்து கொள்வாள் என்பதால் அவளின் மேலிருக்கும் பிரியம் அனைவருக்குமே மேலும் அதிகம் தான் ஆனதென்று கூடச் சொல்லலாம்.

''வாங்க, வாங்க.''

ஏதோ யோசனையுடனே வந்தவள் அதற்குப் பிறகு தான் விசேஷ வீட்டிற்கு வந்திருந்ததையே உணர்ந்தாள்.

விசேஷத்திற்கு வந்திருந்தவர்கள் வீடு முழுவதும் நிரம்பி வழிய, எங்கும் நிற்காமல் நேராக உள்ளறைக்குச் சென்று விடத்தான் தாரிணி முயன்றாள்.

ஆனால் அதற்கு முதலில் அவளுடைய தாய் லட்சுமியே விட்டிருக்கவில்லை.

''தாரிணி! நின்று எல்லார் கூடவும் பேசி விட்டுப் போ,'' என்று அவர் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''வாங்க மேடம். எப்படியோ பெரிய மனசு பண்ணி வந்துட்டிங்க!'' என்று தனது அத்தை அதாவது மாமாவின் மனைவி அருகில் வந்திருப்பதைக் கண்டாள்.

தனது தாய் மற்ற சொந்தங்களுடன் நலம் விசாரித்துப் பேசிக் கொண்டிருப்பது தெரிய, ''அச்சச்சோ! என்ன



அத்தை நீங்க, வர்றதுக்குக் கொஞ்சம், அதுவும் ரொம்பவும் கொஞ்சம் லேட்டாயிடுச்சு தான். அதுக்காக இப்படிக் கேட்டுட்டிங்களே!'' என்று சிரித்தாள் தாரிணி.

''எம் மருமக நீ சொன்னா சரிதான்,'' என்று சிரித்த தனது அத்தை, ''நீயெல்லாம் நைட்டே வந்துடுவேன்னு நாங்கெல்லாரும் ரொம்பவும் எதிர்பார்த்தோம். அதனால கேட்டேம்மா,'' என்றவரை அதே புன்னகையுடன் பார்த்தாள்.

ஏனோ அனைவரும் தன்னையே பார்ப்பதைப் போலத் தோன்றிய உணர்வில் மனதிற்குள் சற்று ஒரு மாதிரியாக உணர்ந்தாள் தாரிணி.

தானும் சற்று அதிகப்படியாகத்தான் அலங்கரித்துக் கொண்டு வந்திருக்கிறோமோ என்று சற்று சங்கடமாகவும்.

''ஒரு நிமிஷம் இங்க வா,'' என்று தனது அத்தை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போக, உடனே சென்றாள் தாரிணி.

இருவரும் அருகில் இருந்த ஒரு அறைக்குள் வந்திருக்க, ஏதோ முக்கியமான விஷயம் என்கிற அளவில் மட்டும் புரிய, ''என்ன அத்தை, சொல்லுங்க?'' என்று அவரைப் பார்த்தாள்.

''நான் கேக்கறேனேன்னு நீ எதுவும் தப்பாவோ, சங்கடமாவோ எடுத்துக்க மாட்டியேம்மா...''

''என்ன அத்தை, முதல்ல நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னே எனக்குப் புரியல...''

''உன்ன நம்ப கதிரேசனுக்குப் பாக்கலாம்னு எங்க எல்லாருக்கும் ஒரு ஆசமா, முக்கியமா அவனுக்கு...''

............

''என்னமா, உனக்கு இதுல ஏதாவது ஆட்சேபணை இருந்தாலும் தயங்காம சொல்லு.''

இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்ல முடியுமென்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இல்லை, எனக்கு விருப்பமில்லை என்று சொல்லி விட மனம் துடித்தாலும், ஆசையாகக் கேட்பவரிடம் முகத்திலடித்தது போலச் சொல்ல தாரிணியால் முடிந்திருக்கவில்லை.

அனைத்திற்கும் மேலாக இது வாழ்க்கை சம்பந்தப் பட்ட விஷயம், உடனே ஒற்றை வார்த்தையில் பதில் சொல்ல வேண்டுமென்று எப்படி இவரால் எதிர்பார்க்க முடிகிறதென்று ஆச்சரியமாகவும் இருந்தது.

............

''என்னமா, ஏன் எதுவுமே பேச மாட்டேங்கற?''

''இல்ல, இப்ப எனக்கு எதுக்குக் கல்...''

தாரிணியின் தயக்கத்தைப் பார்த்து நன்றாகவே சிரித்த வசந்தி, ''அட, நான் ஒரு பைத்தியம். இப்படி நேரடியா உங்கிட்டயே கேட்டா நீயும் பாவம் என்ன பதில் சொல்லுவ? சரி, வாடாம்மா. என்னக் காணம்னு தேடிட்டிருப்பாங்க,'' என்று வேகமாக வெளியே சென்றார்.

கடவுளே! இதென்ன இப்படியொரு தலைவலி என்று அதிர்ச்சியுடன் நின்று விட்டிருந்தாள் தாரிணி.

அப்படியானால் தன்னுடைய பெற்றவர்களிடம் மட்டும் பேசி விட்டால் போதும், வேறு பிரச்சனை எதுவுமில்லையென்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறதே.



எது எப்படியோ தன்னிடம் வரட்டும், இன்னும் இரண்டு வருடங்களுக்கு உன்னைத் தொல்லை செய்யவே மாட்டோமென்று நீங்கள் தானே சொன்னீர்களென்று ஒற்றை வார்த்தையில் முடித்து விடலாமென்று மனதிற்குள் எரிச்சலுடன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அப்படித் தன்னுடைய பெற்றவர்களை மட்டும் சமாளித்து விட்டால் போதும். மிகவும் மும்முரமாகக் கதிரேசன் அத்தானுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்பதால் நிச்சயம் தனக்காகவெல்லாம் பார்த்துக் கொண்டு காத்திருக்க மாட்டார்களென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

சரிதான், வரும்போது பார்த்துக் கொள்ளலாமென்று வெளியே வந்தவள், அங்கிருந்த உறவினர்களிடம் நலம் விசாரித்துப் பேச ஆரம்பித்து விட்டிருந்தாள்.

நேருக்கு நேராகப் பார்ப்பவர்களிடம் மட்டும் சிரித்த முகத்துடன் சாதாரணமாகப் பேசிய தாரிணி அப்படியே அந்த அறையிலேயே பேசாமல் அமர்ந்தும் விட்டிருந்தாள்.

இப்போதிருக்கும் மனநிலையில் பார்ப்பவர்களிடம் சகஜமாகப் பேச முடியும் போல தாரிணிக்கே தோன்றவில்லை.

தன்னருகில் அமர்ந்திருந்த ஒரு தூரத்து உறவுக்காரப் பெண்மணியிடம் அவர் கேட்பதற்குப் பதிலுக்குப் பேசிக் கொண்டிருந்தவள் யாரோ தன்னை அழைக்கும் குரலில் திரும்பிப் பார்த்தாள்.

அகிலா!

அவள் தாரிணியுடன் பள்ளிப் பருவம் முடியும்வரை படித்தவள். நல்ல தோழியும் கூட.

அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசி வெகுநாட்களாகி விட்டிருந்ததால் இருவரும் ஆசையுடன் அமர்ந்து பேச ஆரம்பித்து விட்டிருந்தனர்.

சில நிமிடங்கள் சென்றிருக்கலாம். ''தாரிணி, ஒரு சின்ன உதவிமா,'' என்று தனது அத்தை வர, ''என்ன அத்தை?'' என்று எழுந்து சென்று கேட்டாள்.

''டிபனுக்கு இலை போட்டாச்சுமா. நீ போய் அவங்க கேக்கறத எடுத்துக் குடுத்து பக்கத்திலிருந்து கொஞ்சம் பாத்துக்கறியா? அப்பதான் ஆளுங்க கொஞ்சம் பாத்து நீட்டாப் பரிமாறுவாங்க.''

''சரி அத்தை,'' என்றவள், அகிலாவைத் திரும்பிப் பார்க்க, ''சரி தாரு. நீ போய்ப் பாரு. நானும் எல்லாத் தையும் பாத்துப் பேசிட்டு வந்துட்றேன்,'' என்று சென்றாள் அகிலா.

ஆனால் டைனிங் ஹாலுக்குச் சென்று பார்த்த தாரிணிக்கு அங்கு சென்ற பிறகு தான் தனது அத்தை சொன்னது போல பரிமாறும் இடத்தில் எடுத்துக் கொடுக்கவோ முன்னின்று செய்யவோ வேலையென்று எதுவும் இல்லையென்பது தெரிந்தது.

பஃபே முறை விருந்து நடந்து கொண்டிருந்ததால் கேட்டரிங் ஆட்களே அனைத்தையும் பார்த்துக் கொண்டார்கள்.

எதற்கும் தனது அத்தையிடம் சென்று ஒரு வார்த்தை கேட்டே விடலாம் என்று திரும்பவும், மாமன் மகன் கதி



ரேசன் தன்னை அழைக்கவும் சரியாக இருக்க, அவனை நோக்கிச் சென்றாள் தாரிணி.

புன்னகையுடன், ''நல்லாருக்கீங்களா அத்தான்?'' என்று அவள் அருகில் வர, ''அப்புறம் ரொம்பப் பெரியாள் ஆயிட்ட, சரியா ஃபங்ஷன் நேரத்துக்கு வந்து அட்டெண்ட் பண்ணிட்டுப் போற அளவுக்கு!'' என்று கேட்டான் அந்தக் கதிரேசன்.

''அச்சச்சோ! அப்படியெல்லாம் ஒன்னுமில்ல அத்தான். நான் நேரத்துலயே வந்துட்டேன். உள்ள இருந்தேன்,'' என்று அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தவள், அதற்குப் பிறகுதான் அங்கு நின்று கொண்டிருந்தவனைப் பார்த்தாள்.

குரு பிரசாத்!

இவன் எங்கே இங்கே?

அதே நேரம் குருபிரசாத்தும் தன்னை நோக்கித் திரும்ப ஒரு சிறு புன்னகை ஒன்றை உதிர்த்தாள் தாரிணி.

''நான் சொல்லிட்டிருந்தேனே, என்னோட அத்த பொண்ணு தாரிணின்னு, இவதான்...'' என்று கதிரேசன் தன்னை குருபிரசாத்திற்கு அறிமுகப்படுத்த, ''நானும் சார்கிட்ட தான் வொர்க் பண்றேன்,'' என்று தானும் அந்த வினாடியே சொல்லி விட்டிருந்தாள் தாரிணி.

ஆனால் அதற்கு குருபிரசாத்திடமிருந்து ஒரு புன்னகை அதுவும் மிகச் சிறிய அளவில் மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

''அட அப்படியா!'' என்று கதிரேசனும் தொடர்ந்து வேறு விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டிருக்க, அதற்குப் பிறகுதான் தானும் சற்று அவசரப்பட்டு

அதைச் சொல்லியிருக்க வேண்டாமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது தாரிணிக்கு.

"அப்புறம் இங்க யாரத் தேடி வந்த?"

"பந்தி பரிமாறும்போது தேவையான எல்லாத்தையும் அத்தை பக்கத்துல இருந்து எடுத்துத் தரச் சொன்னாங்க."

"ஓ, அதுக்குதான் வந்தியா? நானே வந்து அதுக்கு யாரையாவது கூப்பிடலாம்னு நினைச்சேன், வா," என்று கதிரேசன் முன்னே நடக்க, அவனைப் பின் தொடர்ந்தாள் தாரிணி.

ஆனால் அவளுடைய எண்ணங்கள் அனைத்தும் குருபிரசாத்தைச் சுற்றித்தான் ஓடிக் கொண்டிருந்தன.

அவன் தனது பெரியத்தானிடம் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"பஃபேல சாப்புட்றவங்களுக்குப் பிரச்சனையே இல்ல. அது வேண்டாம்னு பந்திக்கு சாப்பிட வர்றவங்களுக்கு மட்டும் எல்லா டிபனும் வருதான்னு நீ கொஞ்ச நேரம் பக்கத்துல இருந்து பாத்துக்கோ," என்றான் கதிரேசன்.

"சரி அத்தான்."

"அதுக்குன்னு தனித்தனியா ஆளுங்க இருக்காங்க. அதனால நீ பேசாம நின்னு வர்றவங்கள உபசரிக்கற வேலைய மட்டும் பாரு. நான் போய் அம்மாவ வரச் சொல்றேன்," என்றவன் சென்றே விட்டிருக்க, தான் மட்டும் தனியாக நின்றிருக்கச் சங்கடமாக இருந்தாலும், தனது அத்தை வந்து தன்னை விடுவிக்கும் வரை கிட்டத்தட்ட அரை மணி நேரம் அப்படியே நின்று விட்டிருந்தாள் தாரிணி.



"அடடா! நீ மட்டும் தனியாதான் நின்னுட்டிருக்கியா? கதிரு அப்பவே வந்து சொன்னான். ஆனா வர்றவங்க கூடப் பேசிட்டு என்னால இப்பதான் வர முடிஞ்சது. சரி. இனி நீ போம்மா," என்று வந்த தனது அத்தையிடம்,

"பரவாயில்ல அத்தை. நீங்க போய்ப் பாருங்க. நான் இன்னும் கொஞ்ச நேரங்கூட நின்னு பாத்துக்கறேன்," என்று புன்னகையுடன் சொன்னாள்.

"இல்லமா. நீ பாவம், வந்ததுலிருந்து இங்கதான நின்னுட்டிருக்க. நீ போ. எங்க உன்னக் காணோம்னு நம்ம சொந்தங்களெல்லாம் கேட்டுட்டிருந்தாங்க," என்று அவர் மீண்டும் சொன்ன பிறகே அங்கிருந்து நகர்ந்தாள் தாரிணி.

## 12

ஏற்கெனவே தனது எம்.டி.யிடம் கேட்டுக் கொண்டது போல அரை நாள் மட்டும் விடுமுறை எடுத்துக் கொண்டு அன்று மதியமே வேலைக்கு வந்து விட்டிருந்தாள் தாரிணி.

சொந்தங்கள் படுத்தி விட்டிருந்த பாடில் எங்கே சொன்னது போல வர முடியாமல் போய் விடுமோ என்று அவளும் மனதிற்குள் சற்று பயந்துதான் போய் விட்டிருந்தாள்.

எப்படியோ அனைவருக்கும் தப்பித்துக் கொண்டு வேலைக்கு வந்து சேர்ந்திருந்தவள் எம்.டி. அவருடைய இருக்கையில் இல்லாததைக் கவனித்தாள்.

ஏன் எங்கே போயிருக்கக் கூடுமென்று யோசித்துக் கொண்டே தன்னிடத்திற்குச் சென்ற தாரிணி அதற்குப் பிறகு வேலையில் மும்முரமாகி விட்டிருந்தாள்.

வேலை செய்யும் ஈடுபாட்டில் நேரம் சென்றதே தெரியாது போக, மீண்டும் அவள் நடப்புக்கு வந்தபோது மாலை மணி ஐந்தாகி விட்டிருந்தது.

அப்பொழுதும் எம்.டி. வந்திருக்காதது தெரிய, எப்படியும் கிளம்பும்போது சொல்லிக் கொள்வதற்காக அழைக்க வேண்டுமே, அப்பொழுதே பேசி விடலாமென்று மீண்டும் தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

கிளம்பும் வரை கூட எம்.டி. வந்திருக்காததில் அவரை போனில் மட்டும் அழைத்துச் சொல்லி விட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள் தாரிணி.

அன்று குருபிரசாத்தைப் பார்க்க முடியவில்லையே என்னும் கவலை அவன் மறுநாள் வேலைக்கு முடிந்தால் வர முடியுமா என்று கேட்டதில் காணாமல் போய் விட்டிருந்தது.

மறுநாள் காலையில் தான் வேலைக்கு வந்தபோது எம்.டி. குருபிரசாத் ஏற்கெனவே வந்து வேலையைத் தொடங்கி விட்டிருந்தது தெரிந்தது.

''குட் மார்னிங் சார்.''

''வாங்க மேடம், விட்டிருந்தா இந்நேரம் வீட்ல நல்லாக் குறட்ட விட்டுட்டுத் தூங்கிட்டிருந்திருப்பீங்க.''

''சான்ஸே இல்ல ஸார். தூக்கத்துக்கு சன்டே மன்டே தெரியாதே. வழக்கம்போல ஆறு மணிக்கு முழிப்பு வந்துடும். எழுந்துக்குவேன்.''



''அப்ப வேலயப் பாக்கலாமா?''

''ஷ்யூர் ஸார்.''

''இன்னைக்குப் பத்து மெஷின் டெஸ்பேட்ச் ஆக வேண்டியிருக்கு. அதுக்கான டீடெய்ல்ஸ் தர்றேன். இன்வாய்ஸ், பில் எல்லாத்தையும் ரெடி பண்ணிடு.''

''ஓ.கே. ஸார்.''

''முதல்ல போய் ஆர்டர் ஃபைல எடுத்துட்டு வர்றியா?''

''இதோ ஸார்,'' என்று உடனே அங்கிருந்து நகர்ந்தவளுக்கு மதியம் வரை வேறு எதைப் பற்றியும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு வேலையே சரியாக இருந்தது.

அதிலும் பிரசாத் சொல்லச் சொல்ல அவனுடைய வேகத்திற்கு ஈடு கொடுத்து வேலை செய்வது சவாலாகவும், அதே நேரம் மிகுந்த சுவாரஸ்யம் நிறைந்ததாகவும் இருந்தது.

எப்பொழுதுமே அவனிடம் வேலை செய்வது அப்படித்தான் இருக்குமென்பதோடு, அது தாரிணிக்கு மிகவும் பிடித்தமானதும்கூட.

அதுவும் இப்பொழுது சில நாட்களாக அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதே போதும் என்னுமளவிற்கு அவனுக்காகத் தன்மனம் ஏங்கத் தொடங்கி விட்டிருந்ததில் செய்வதறியாது திகைத்துப் போய் விட்டிருந்தாள் தாரிணி.

அனைத்திற்கும் மேலாக அவனுடைய கம்பீரமான தோற்றமும் அவசியமிருந்தால் சொல் என்னும் அளவிற்குத் தள்ளித் தூர நிறுத்தும் அவனுடைய அலட்

சியமான பேச்சும், அவன் மீதான ஈர்ப்பை நாளுக்கு நாள் அதிகப்படுத்திக் கொண்டே சென்றன.

வேலைப் பளு சற்று குறைந்ததும் மீண்டும் தாரிணியின் மனம் அலைபாயத் தொடங்கி விட்டிருந்தது.

அவனிடம் பேசுவதற்காகச் சில முறை முயன்று விட்டுப் பிறகு மீண்டும் வேண்டாமென்று விட்டு விட்டிருந்தாள்.

அவன் தன்னிடம் எப்பொழுதுமே சிரித்துக் கொண்டே இயல்பாகப் பேசினால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தாரிணியின் முயற்சி குருபிரசாத்தின் கண்களில் படத் தவறவில்லை.

''என்ன சொல்லு?'' என்று அவளைப் பார்த்தான்.

''இல்ல, வீட்ல பாப்பா தனியா இருந்துக்குவாளா ஸார்?''

''அவளுக்கென்ன? நீ குடுத்த கிஃப்ட்லயே அவளுக்கு இன்னும் ஒரு வாரமும் கூடப் பொழுது போயிடும் போலிருக்கு. அதோட உன் கிஃப்ட் ரொம்பப் பிரமாதம். ஏற்கெனவே சொல்லணும்னு நினைச்சேன். தேங்க்ஸ்!'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம், ஹன்ஸி சொன்னத வெச்சு நானும் அதத்தான் எதிர்பார்த்தேன்.''

''ஆனா இதெல்லாம் எத்தன நாளைக்கு? கூடிய சீக்கிரம் டாடா சொல்லிட்டு நீயும் கிளம்பத்தான போற.''

..........



''என்ன பாக்கற, உங்க மாமா வீட்ல உனக்கு மாப்ள தயார் இல்லையா?''

''அப்படியெல்லாம் இல்லையே!'' என்று பட்டென்று சொன்னவளின் குரலில் இருந்த எரிச்சல் வெளிப்படையாகவே தெரிந்தது.

''அட, என்ன இவ்வளவு கோபம்? இருக்கறதத் தான சொல்றேன். விட்டா நாள் கிழமைன்னு கூடப் பாக்காம கதிரேசன் உன்னக் கல்யாணம் பண்ணிக்குவார் போலிருக்கே.''

''போதும் ஸார்.''

''என்ன போதும், உன்ன சுத்தி நடக்கறது எதுவுமே உனக்குத் தெரியலன்னு நினைக்கறேன்.''

''சுத்தி ஆயிரம் நடக்கும். அதப்பத்தி எனக்கென்ன வந்தது.''

''இப்ப எதுக்கு நீ இவ்வளவு டென்ஷனாகற? என்னாச்சு உனக்கு?''

எதிரே அமர்ந்திருந்தவனின் புன்னகையில் சற்றே நடப்புக்கு வந்திருந்த தாரிணியால், உண்மையிலேயே தான் சற்று அதிகப்படியாகத்தான் உணர்ச்சி வசப்படுகிறோமோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் முழுமையாகவே நடப்புக்கு வந்திருந்தவள், ''எனக்கொன்னும் ஆகல ஸார். எனக்குப் பிடிக்காதத என்ன சம்பந்தப்படுத்தி யாரும் பேசக்கூடாதுன்னு மட்டும்தான் சொல்றேன். வேறொன்னுமில்ல,'' என்றாள்.

''சும்மா பிடிக்காததுன்னு மட்டும் சொல்லிட்டே இருந்தா, எதுவா இருந்தாலும் காரணம் இல்லேன்னா யார் ஒத்துக்குவாங்க, சொல்லு.''

குரு பிரசாத்தின் வார்த்தைகளில் இருந்த எனை இல்லை, தனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ. இ பொழுது வெளிப்படையாகவே தெரிய, அவனை பார்த்தாள் தாரிணி.

''இப்ப என்ன, உங்களுக்குக் காரணம் வேணும் இல்லையா?''

''ஷ்யூர்.''

''எனக்கு இப்ப மேரேஜ் புடிக்கல.''

தான் சொல்வதை அவன் நம்பவில்லையென்பது அவ னுடைய புன்னகையில் வெளிப்படையாகவே தெரிய, ''ஏன் சிரிக்கறீங்க?'' என்று கேட்டாள்.

''சமாளிக்கறதுல சின்னக் குழந்தைங்ககூட உங்கிட்ட தோத்துப் போகணும் போ.''

''நான் ஏன் சமாளிக்கணும்...''

''சரி சரி. விடு.''

குருபிரசாத்தின் வார்த்தைகளில், ''ஆமா சார், நான் ஒருத்தர விரும்பறேன்!'' என்று சொல்லியே விட்டிருந் தாள் தாரிணி.

..............

''என்ன சார், பேசாம இவகிட்ட கேக்காமலே இருந் திருக்கலாம்னு யோசிக்கிறீங்க இல்லையா?''

''அப்பிடி ஏன் நினைக்கணும், அது யாருன்னே கேக் கறேன். சொல்லு.''

''வேண்டாம் ஸார்...''



அதற்கு மேல் எதையும் சொல்லாமல் நின்று விட் டிருந்தவளைப் பார்த்தவன், ''என்ன, எல்லாமே சும்மா தான் இல்லையா?'' என்று கேட்டான்.

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. ''அது நீங்க தான்!'' என்று சொல்லியே விட்டிருந்தாள் தாரிணி.

''வரவர உனக்கு விளையாட்டு அதிகமாயிடுச்சு.''

''இந்த மாதிரி விஷயத்துல்லாம் கூட எந்தப் பொண் ணாவது விளையாடுவாளா?''

''அதத்தான் நானும் கேக்கறேன். கிணறு வெட்டப் பூதம் கிளம்பின கதையா நான் ஏதோ கேக்கப் போக, நீ ஏதோ சொல்லிட்டிருக்க.''

''நான் உங்கள விரும்பறேன். உங்களத் தவிர வேற எந்த ஆணையும் என்னால கனவுல கூட ஏத்துக்க முடியாது.''

''உளறாத.''

அப்படிச் சொன்னவனின் குரலில் இருந்த எரிச்சலும் கோபமும் நெஞ்சை உலுக்கிவிட, தாரிணியின் கண்கள் அவளையறியாமலேயே கலங்கி விட்டிருந்தன.

..........

''தாரிணி...''

..........

''நீ பாட்டுக்கு என்னென்னவோ சொல்ற. வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் தனியா உக்காந்து யோசிச்சுப் பாரு. அப்பதான் உன்னோட முட்டாள்தனம் உனக்கே புரியும்.''

''இதுல யோசிக்க இனி என்ன இருக்கு? குறைந்த பட்சம் இந்த ஜென்மத்துல என் மனசு மாறப் போறதில்ல. அவ்வளவுதான்.''

தாரிணியிடமிருந்து வந்த தீர்க்கமான பதிலில், ''நான் எப்படி நீ சொல்றதையெல்லாம் ஏத்துக்க முடியும்? என் நிலைல இருக்கற யார்தான் நீ சொல்றதுக்கு சம்மதிப்பாங்க, சொல்லு?'' என்று கேட்டான்.

''ஏன் சம்மதிக்க மாட்டாங்களாம்?''

''நான் ஏற்கெனவே கல்யாணமானவன்.''

''சரிதான். இருக்கட்டும்.''

''எனக்கு நாலு வயசுல ஒரு குழந்தை யிருக்கு.''

''கல்யாணமானவங்களுக்குக் குழந்தை இருக்கறதுல என்ன ஆச்சரியம்?''

''நல்லாப் பேசற. ஆனா என்ன மாதிரி ஒருத்தர விரும்பறேன்னு சொல்ல உன்னால எப்படி முடியுது?''

''உங்கள மாதிரி ஒருத்தர இல்ல, நான் விரும்பறது உங்கள.''

''அதான், ஏன் இப்படி நடைமுறைக்குச் சாத்தியமே இல்லாத ஒன்னப் புடிச்சுகிட்டு இப்படி உளறிட்டிருக்கேன்னு கேக்கறேன்.''

''மனசார ஃபீல் பண்ணிதான் பேசிட்டிருக்கேன் குரு. புரிஞ்சுக்காம உளர்றதுக்கு நான் ஒண்ணும் சின்னப் பொண்ணு கிடையாது. புரிஞ்சுக்கோங்க ப்ளீஸ்.''

குரு என்ற அவளது அழைப்பும், மிகவும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் சாதாரணமாகப் பேசிய விதமும் உண்மையிலேயே குருபிரசாத்தை என்னவோ செய்திருந்தன.



ஆனாலும் அவன் அதைச் சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அதே சமயம் தன்மேலும் தவறு இருக்கிறதோ என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அப்படியே பார்த்தாலும் ஒரு சில முறை மட்டும் வேண்டுமானால் தான் சற்று சிரித்துப் பேசியிருக்கக் கூடும். அவ்வளவே. அதை...

எதிரே நின்றிருப்பவள் உயிரைக் கண்களில் தேக்கிக் கொண்டு தனது பதிலுக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

''உன்னோட ஸ்டைல்ல, அதாவது உனக்குப் புரியற மாதிரியே பதில் சொல்றேன். கேட்டுக்கோ,'' என்றவன், ''நீ நினைக்கறதெல்லாம் குறைந்த பட்சம் இந்த ஜென்மத்துல நடக்கறதுக்கான வாய்ப்புகள் ரொம்ப ரொம்பக் குறைவு!'' என்றான்.

''இல்ல ஸார், கூடிய சீக்கிரம் எல்லாம் நல்லபடியா நடக்கும். அதுல எனக்கு முழு நம்பிக்கையிருக்கு.''

''சான்ஸே இல்ல, வயசு வித்தியாசத்துல ஆரம்பிச்சு நம்ம ரெண்டு பேருக்கும் எந்த விதத்துலயுமே பொருத்தமில்ல.''

''வயசு வித்தியாசமா? அப்படிப் பாத்தா எனக்கும் கதிரேசன் அத்தானுக்கும் மட்டும் என்னவாம்... ப்ளீஸ் குரு, ஏதேதோ சொல்லாதீங்க. வேண்டாம்னு மனசுக்குள்ள நினைச்சுக்கிட்டா ஆயிரம் காரணங்களக் கண்டு பிடிக்கலாம்...''

''பாஸிபிலிட்டியே இல்லேன்னு சொல்லிட்டிருக்கேன், அதுக்கும் மேலயும் நீ பாட்டுக்குப் பேசிட்டே

இருக்க. முதல்ல நீ ஒரு விஷயத்தப் புரிஞ்சுக்கோ. என் மனைவியத் தவிர வேற எந்தப் பொண்ணையும் என்னால மனசளவுல கூட நினைச்சுப் பாக்க முடியாது. ஒரு நிமிஷம் நான் சொல்றத முழுசாக் கேட்டுட்டு அப்புறமாப் பேசு. எதுக்கு நம்ம பர்ஸனல் விஷயங்கள மத்தவங்ககிட்ட சொல்லணும்னுதான் நானும் இவ்வளவு நேரமும் எதுவும் பேசாம இருந்தேன்.''

...............

''அவங்கதான் உயிரோடயே இல்லையேன்னு திரும்பவும் ஆரம்பிச்சுடாத. ஒரு சில மாசங்கள் அதுவும் அபீசியலாப் பாத்துட்டிருக்கறவங்களே கண்டதையும் உளற முடியுங்கறபோது ஆத்மார்த்தமா கணவன் மனைவியா வாழ்ந்தவங்களோட உணர்வுகளப் பத்தி எதுவும் சொல்ல வேண்டிய அவசியமே இல்லேன்னு தான் நினைக்கறேன்.''

சும்மாதான் ஏதேதோ சொல்கிறானென்று நினைத்துக் கொண்டிருந்த தாரிணி, அவன் இப்படியொரு பதிலைச் சொல்வானென்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

ஆனாலும்...

சரிதான், நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான், அவனுடைய மனம் மாறுவதற்காகக் காத்திருப்பதைத் தவிர இனி வேறு வழியே இல்லையென்று மனதில் ஒரு வலியுடன் நினைத்துக் கொண்டாள்.

இவன் அவ்வளவு எளிதாக மாறக்கூடியவனோ, இளகக் கூடியவனோ அல்ல என்பதோடு, காதல் ஒன்றும் கட்டாயத்தின் பேரில் வரும் ஒன்றல்லவே என்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



''உன்னைச் சொல்லித் தப்பில்ல. உன்னோட வயசு அந்த மாதிரி. ஆனா இனிமேலாவது இப்பிடி முட்டாள்தனமா கற்பனை பண்ணிக்காம இருக்கறது உனக்கு நல்லது.''

...............

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கிக் கொண்டிருக்க, உண்மையிலேயே தான் இவ்வளவு பலவீனமானவளா என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அது சரிதான். அவன் எப்பொழுதும் போலவே தான் இப்பொழுதும் இருக்கிறான். அதற்காக நாம் மனம் விட்டு விடக் கூடாது.

''என்ன, போய் வேலயப் பாக்கறியா?''

அவன் அப்படிக் கேட்டுக் கூட முடித்திருக்கவில்லை. தன்னுடைய இடத்திற்கு வருவதற்காகத் திரும்பியிருந்தாள் தாரிணி.

''ஒரு நிமிஷம்,'' என்று மீண்டும் அழைத்த குருபிரசாத், ''இதே முட்டாள்தனமான எண்ணத்த நீ தொடர்ந்து உம் மனசுக்குள்ள வெச்சுட்டிருக்கேன்னு தெரிஞ்சா அப்புறம் நீ வேற வேலையப் பாத்துட்டுப் போக வேண்டியிருக்கும். ஞாபகத்துல வெச்சுக்கோ!'' என்று சொல்லி விட்டுத் தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

''சரி, இனி போய் வேலையப் பாக்கலாம்னு நினைக்கறேன்,'' என்றவனின் குரலில் ஏளனம் இருந்ததோ?

இருந்திருந்து தன்னைப் போய் எப்படி மற்றவர்கள் இப்படி நடத்தலாம் என்று எண்ணும் அவளுடைய தன்

மானமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டிருந்ததை ஒரு விரக்தியுடன் உணர்ந்தாள்.

எப்படியோ தன்னுடைய இருக்கைக்கு வந்து விட்டிருந்தவளுக்கு வாழ்க்கையே வெறுமையாகி விட்டாற் போலிருந்தது. அனைத்துமே முடிந்து விட்டாற் போலவும்.

தன்னால் இனி சகஜமாக அனைவரையும் போல நடந்து கொள்ளவே முடியாதோ என்று நினைத்தவளுக்கு மீண்டும் கண்கள் கலங்க ஆரம்பித்து விட்டிருந்தன.

ஆனால் முயன்று அப்பொழுது தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். அப்படி மிகவும் முயன்றும் கூட அவளால் அப்பொழுது வேலையில் துளியும் கவனம் செலுத்த முடிந்திருக்கவில்லை.

என்னதான் சொன்னதும் உடனே அதைக் குருபிரசாத் ஏற்றுக் கொள்வானென்று எதிர்பார்த்திருக்கவில்லை என்றாலும், அதற்கு அவன் இப்படியொரு காரணத்தைச் சொல்லி மறுப்பானென்றும் அவள் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

எது எப்படியோ குருபிரசாத்தைத் தவிர வேறு எந்த ஆணையும் இந்த ஜென்மத்தில் தன்னால் கணவனாக வரிக்க முடியாது என்பதில் மட்டும் அவளுக்குத் துளியும் சந்தேகமிருக்கவில்லை.

கல் கனியும் வரை காத்திருப்போம். அது எத்தனை வருடங்களானாலும் சரி என்று மனதிற்குள் தீர்க்கமாக முடிவெடுத்து விட்டிருந்தாலும் அதைச் செயல்படுத்த நடைமுறை வாழ்க்கையில் எத்தனை சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருக்குமென்பதை அவளால் போகப் போகத்தான் உணர்ந்து கொள்ள முடிந்தது.



# 13

பிரம்மப் பிரயத்தனப்பட்டு முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு வழக்கம்போல மாலையில் கிளம்பும் போது சொல்லிக்கொள்ள வந்தாள் தாரிணி.

அவரவர் நிலையைத் தெளிவுபடுத்திச் சொல்ல இருவருக்குமே பலப்பல எண்ணங்கள் மனதிற்குள் முட்டி மோதிக் கொண்டிருந்தாலும் ஏனோ இருவராலும் மனம் விட்டுப் பேச முடிந்திருக்கவில்லை.

தாரிணி கிளம்புவதாகச் சொல்ல, இருவருடைய விழிகளுமே சில வினாடிகள் சந்தித்துப் பின் மீண்டும் பிரிந்தன.

குரு பிரசாத்திற்கு எப்படியோ, தாரிணியின் மனம் மீண்டும் கலங்கிவிட, அவளையும் மீறி வாத்துடித்த அழுகையை உதட்டைக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

வேண்டாம் மனமே, இப்போதைக்கு வேண்டாம். பொறு. அவன் தன்னை மறுப்பதையே தாங்கிக் கொள்ள முடியாத இந்த நேரத்தில் அவன் மேலும் மனம் புண் படும்படி ஏதாவது சொல்லிவிட்டால் அவ்வளவுதா னென்று மிகவும் முயன்று தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டாள்.

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப்போன குரு பிரசாத்தாலும் ஏனோ மேலே எதையும் சொல்ல முடிந் திருக்கவில்லை.

தாரிணி கிளம்பும் வரை தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டவன், அவள் கிளம்பியதும், ''உஃப் அப்பாடா'' என்று தனது இருக்கையில் சாய்ந்து தளர்வாக அமர்ந்து விட்டிருந்தான்.

தாரிணியை மறுப்பது அவனுக்கும் அவ்வளவு இலகுவான ஒன்றாக இருக்கவில்லை.

தாரிணி அவளைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டிருந்தால் எப்படியோ, ஆனால் இனி அவ்வளவுதான் அனைத்துமே முடிந்து போய் விட்டது என்பதைப் போலிருந்த அவனுடைய முகபாவனையில் அவனாலும் சகஜமான மனநிலையில் தொடர்ந்து இருக்க முடிந்திருக்கவில்லை.

அதே சமயம் அவள் சொல்வதைச் சரியென்று கேட்டுக் கொள்ளும் மனநிலையிலும் அவன் இருக்கவில்லை.

சிறு பெண் நடைமுறை வாழ்க்கை புரியாமல் ஏதேதோ பிதற்றுகிறாளென்று தான் நினைக்கத் தோன்றியது.

தான் ஒரேயடியாக நின்று மறுத்து விட்டால் பிறகு அவளும் போகப் போகத் தான் முட்டாள்தனமாக உளறி விட்டோமென்பதைப் புரிந்து கொண்டு பழைய நிலைக்குத் திரும்பி விடுவாளென்று நினைத்துக் கொண்டான்.

ஆனால் மேலே தொடர்ந்து யோசித்தவனுக்கு அதற்குப் பிறகுதான் தான் எண்ணுவது தவறோ என்று தோன்றியது.

அப்படித் தாரிணி ஒன்றும் இந்தக் காலத்துப் பட்டாம் பூச்சிகளைப் போல நினைத்தால் ஒரு நிறம் மாறும் பெண்ணைப் போல அவனுக்குத் தோன்றவில்லை.



சரிதான், அப்படியே இல்லா விட்டாலும் கூட அவள் எதிர்பார்ப்பதும் நடப்பதற்கில்லை.

இப்படித் தனக்குள் ஏதேதோ எண்ணிக் கொண்ட குருபிரசாத்திற்கும் வாழ்க்கையில் முதன் முறையாக அவனே எண்ணி ஆச்சரியப்படத் தக்க வகையில் இந்த விஷயத்தில் அவனுக்கு அவன் மீதான நம்பிக்கை ஏனோ வர மறுத்தது.

ஆனால் அவன் ஒரு தந்தையாக இருந்து யோசித்த போதுதான் தாரிணியைப் போலத் தனது மகள் விருப்பப்பட்டால் தான் முதலில் அதற்கு ஒத்துக் கொள்வோமா என்று நினைக்கத் தோன்றியது.

அதற்காக குரு பிரசாத் தன்னைக் குறைவாக மதிப்பிடுகிறானென்று கிடையாது. நடைமுறை வாழ்க்கையைப் பற்றி யோசிக்காமல் பேசும் சிறு பெண்ணிற்கு அதைப் புரிய வைத்து விட்டால் போதும், பிறகு அவள் தானாகவே மாறி விடுவாளென்று தோன்றியது. அவ்வளவே.

என்னதான் அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருக்கும்போது குரு பிரசாத்திற்கும் மனதிற்கு சற்று சங்கடமாகவே இருந்தாலும் போகப் போக அவனால் தனது எண்ணங்களை வேறு வேலைகளில் சுலபமாகத் திசை திருப்பிக் கொள்ளவும் முடிந்தது.

ஆனால் தாரிணியால் அப்படி முடிந்திருக்கவில்லை. போகப் போகத்தான், மேலே யோசிக்க யோசிக்கத்தான் அவளுடைய எண்ணம் மேலும் தீவிரமடைய ஆரம்பித்திருந்ததென்று கூடச் சொல்லலாம்.

ஒருவேளை குருபிரசாத் இப்படியே தீவிரமாக இருந்து விட்டால், தான் நினைப்பது நடக்காமலே போய்விட்

டால் என்ற எண்ணங்கள் மட்டும் அவ்வப்பொழுது அவளை மிகவும் நிலை குலைய வைத்தன.

ஆனால் உடனே அப்படியெல்லாம் ஆகாது. அப்படியெல்லாம் குருபிரசாத்தால் தன்னை ஒரேயடியாக எப்பொழுதுமே மறுத்துவிட முடியாது என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொள்வாள்.

ஆனால் அதெல்லாம் அப்போதைக்குத்தான். ஒரு வேளை அவனுடைய கல்மனம் கனியாமலே போய் விட்டாலென்று தோன்றும் எண்ணங்களை அவளால் முழுமையாகக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஒரு வாரம் கடந்திருந்தது.

குருபிரசாத்திற்கு எப்படியோ, தாரிணிக்கு அவனைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதே மனதிற்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

தான் எதிர்பார்த்தது போல அப்படியொன்றும் அவன் கடுமையாக நடந்து கொள்ளாததில் வெளிப்படையாக அவன் பார்க்கத் தன்னை ஓரளவு சாதாரணமாகக் காட்டிக் கொண்டாள் எனலாம்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமையானதால் வழக்கம் போல மனதிற்குள் எரிச்சலாக வந்தது.

குருபிரசாத்திடம் சொல்லிக் கொண்டு வெளியே வருவதற்காக ஒரு எட்டு எடுத்து வைத்திருந்தவள் ஒரு நிமிஷம் என்ற அவனுடைய அழைப்பில் நின்று திரும்பினாள்.

"நாளைக்கு வேலைக்கு வர முடியுமா?"



முந்தைய வாரத்தைப் போல ஏனோ அவனுடைய கேள்வியால் சந்தோஷப்பட முடிந்திருக்கவில்லை.

கடந்த ஞாயிறிலிருந்து தான் கிட்டத்தட்ட நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருப்பது தான் நினைவிற்கு வந்தது.

"என்ன, பேசு."

அவனை நிமிர்ந்து பார்த்த தாரிணிக்கு, அலை மோதும் எண்ண ஓட்டங்களிலிருந்து, குறைந்தது ஒரு நாளாவது விடுமுறை கிடைத்தால் பரவாயில்லாமல் இருக்கும் போலத் தோன்றியது.

உடனே, "இல்ல ஸார், நாளைக்கு வர்றதுக்கில்ல," என்று சொல்லி விட்டிருந்தாள்.

"ஏன் அப்படியென்ன முக்கியமான வேல?"

"அது ஆயிரம் இருக்கும். அதையெல்லாம் வெளிய சொல்ல முடியணுமே."

"ஓ, சரிதான். அதையெல்லாம் போய்ப் பாரு," என்றவனின் குரலில் ஏளனம் இருந்ததோ?

சரிதான் என்று கிளம்பப் போனவள் மீண்டும் நின்றாள்.

"என்ன?"

"எனக்கு மன்டே லீவ் வேணும்."

"முடிஞ்சாப்பாரு, இல்லேன்னா ஒரேயடியா ரிஸைன் பண்ணிட்டே போயிடேன்."

திடீரென்று இப்படிச் சொல்வானென்று எதிர்பார்த்திருக்காத தாரிணிக்கு மனம் ஆடிப்போய் விட்டிருந்தது.

எப்படி இவனால் இப்படியெல்லாம் பேச முடிகிறதென்று நினைத்தவளுக்குக் கண்களும் கூட லேசாகக் கலங்கிப் போய்விட்டிருந்தன.

ஆனால் அதை அவனுக்கு முன்பாகக் காட்டிக் கொள்ள வேண்டாமென்று நினைத்தவள் குனிந்து தனது கைப்பையைப் பார்ப்பதைப் போல சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு பிறகு மீண்டும் நிமிர்ந்தாள்.

அதே போலப் பட்டென்று அப்படிச் சொல்லி விட்டிருந்த குருபிரசாத்திற்கும் தான் அந்த மாதிரி சொல்லியிருக்கக் கூடாதோ என்று நினைக்கத் தோன்றியது.

அதே நேரம் தன்னை நிமிர்ந்து பார்த்த தாரிணியை மேலே என்ன என்பதைப் போலப் பார்த்தான்.

''நான் வேலைக்கு ஜாய்ன் பண்ணி ஆறு மாசமாச்சு. அப்படியெல்லாம் அவசியமில்லாம லீவே எடுத்த...''

''லீவ் எடுத்துக்கோ.''

..........

''எதுவா இருந்தாலும் கொஞ்சம் முன்னாடியே சொல்லுன்னு சொல்றேன். அவ்வளவுதான்... என்ன, சொல்லு?''

''மன்டே லீவ் எடுத்துக்கலாம்னா நான் நாளைக்கு வேலைக்கு வர்றேன்.''

''அவசியமிருந்தா போன்ல கூப்புட்றேன்,'' என்றவன் தனக்கு வந்திருந்த மொபைல் அழைப்பை அட்டெண்ட் செய்து பேசப்போக, மீண்டுமொரு முறை அவனிடம் சொல்லிவிட்டு வெளியில் வந்தே விட்டிருந்தாள் தாரிணி.



பேசாமல் அவன் கேட்ட உடனே சரியென்றிருக்கலாமோ என்று இப்பொழுது நினைக்கத் தோன்றியது.

குரு பிரசாத் சொன்னது போல மீண்டும் போனில் எல்லாம் அழைத்திருக்கவில்லை.

அதுவும் மாதத்திற்கொரு முறை கல்லூரித் தோழிகள் அனைவரும் ஒன்று சேரும் நாளென்பதால் பேசாமல் தான் அன்று வேலைக்காவது சென்றிருந்திருக்கலாமென்று போகப் போகத் தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

''தாரிணி.''

தனது தாய் அழைக்க, ''என்னமா?'' என்று கேட்டாள்.

''இல்ல, இன்னைக்கு உன் தோழிகளையெல்லாம் சந்திக்கற நாள்னு நினைக்கறேன், இல்லையா?''

''ஆமாம்மா.''

''ஆனா கிளம்பாம இன்னும் இப்படி உக்காந்திருக்க?''

''நான் இன்னைக்குப் போகல.''

''ஏன்?''

''சும்மாதான்,'' என்ற மகளைச் சற்று கூர்மையாக ஆராயும் பார்வை பார்த்தார் லட்சுமி.

''என்னமா, சொல்லுங்க.''

''ஏன் ஒரு மாதிரி இருக்க?''

''ஆமாம்மா, லேசா சளி புடிச்ச மாதிரியிருக்கு.''

''நான் இன்னைக்காக மட்டும் கேக்கல, கொஞ்ச நாளாவே ஒரு மாதிரியா இருக்கியே, ஏன்னு கேக்கறேன்.''

''அப்படியெல்லாம் ஒன்னுமில்லையே.''

"சரிதான், நம்பிக்கறேன்," என்ற தாயின் குரலில் எதுவும் பேசாமல் அவரைப் பார்த்தாள் தாரிணி.

"சரி, வந்து சாப்புடவாவது செய்வியா, இல்ல அதுவும் மாட்டியா?"

"அட என்னமா நீங்க, இன்னைக்கு சன்டே தானேன்னு கொஞ்சம் ஃப்ரீயா உக்காந்தேன்," என்று முயன்று வரவழைத்த குரலில் புன்னகையுடன் சொல்லிக் கொண்டே எழுந்தாள் தாரிணி.

"எல்லாம் சரிதான். ஆனா கொஞ்ச நாளாவே உடம்புக்கு சரியில்லாதவ மாதிரிதான் இருக்க. எதுக்கும் கொஞ்சம் பாத்துக்கோ," என்ற தனது தாயின் வார்த்தைகளில் தான் சொன்னதை நம்ப மாட்டாத தன்மை வெளிப்படையாகவே தெரிந்தது.

## 14

இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்று மீண்டும் வேலைக்கு வந்திருந்தாள் தாரிணி.

"குட் மார்னிங் ஸார்."

"குட் மார்னிங்!" என்றவனின் கவனம் முழுவதும் அவனுடைய வேலையில் தான் இருந்தது.

சில வினாடிகள் நின்று விட்டுப் பிறகு தனது இடத்திற்கு வந்து விட்டிருந்தவள், வழக்கம்போல வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.



குரு பிரசாத்தைப் பொறுத்தவரை அவன் சொந்தங்கள் யாரையும் ஆபீஸிற்கு வரவழைத்துப் பேசுவதை வரவேற்காதவன்.

வழக்கத்திற்கு மாறாக அன்று ஒரு பெரியவர் வந்ததோடல்லாமல் அவர் பாட்டுக்கு அமர்ந்து பேசிக் கொண்டே இருப்பதைக் கண்டாள் தாரிணி.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த தாரிணிக்கே போரடித்து விட்டிருக்க, குரு பிரசாத்தின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

அவருடைய அடிக்கடி பழுதாகிப் போகும் பழைய நெல் அரவை இயந்திரத்தைப் பற்றி அவர் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே இருக்க, பார்க்கிற வரை பார்த்து விட்டுப் பேசாமல் அதை விற்று விட்டுப் புதிதாக ஒன்றை வாங்கி விடுங்கள் என்று நேரடியாகவே சொல்லி விட்டிருந்தான் குரு பிரசாத்.

வந்திருந்தவர் அவனுக்குப் பெரியப்பா முறையில் சற்று நெருங்கிய உறவு.

அட என்னப்பா, நீ பாட்டுக்கு இப்படி சொல்லிட்ட என்றவர், அது சரி, அப்பத்தான நீ பிழைக்க முடியும் என்று கிண்டலாகக் கேட்டார்.

அத்தோடு மட்டும் விட்டு விடாமல், என் பழைய இயந்திரத்திற்கு உன் புது இயந்திரம் ஈடாகுமா, இந்தக் காலத்தில் எதில் தரமிருக்கிறது என்று வந்திருந்த பெரியவர் ஒட்டு மொத்தமாகக் குறை சொல்ல ஆரம்பித்து விட்டிருந்தார்.

குரு பிரசாத்தைப் பொறுத்தவரை அவனுக்கு ஒன்று பிடிக்கா விட்டால் அவன் மற்றவர்களுக்காகப் பார்த்துக்

கொண்டிருக்க மாட்டானென்பதால் மேலே என்ன சொல்லிவிடப் போகிறானோ என்று தாரிணிக்கே சற்று பயமாகத்தான் இருந்தது.

ஆனால் அவள் நினைத்தது போல அப்படியொன்றும் அவன் கோபப்பட்டு விடவில்லை.

அது சரிதான் பெரியப்பா. இந்தக் கொஞ்ச நேரத்துல நீங்களே உங்க வாயால நிறைய தடவ பழைய மெஷின்னு சொல்லிட்டிங்க. என் இடத்துல சம்பந்தமே இல்லாத யாராவது இருந்தாக் கூட உங்க பிரச்சனைக்கு நான் சொன்ன தீர்வத்தான் சொல்லியிருப்பாங்க. அப்படியிருக்கும்போது நீங்களோ என் மதிப்பிற்குரிய பெரியப்பா ஆயிட்டிங்க. உங்க பிரச்சனைக்கு இதத் தவிர வேறென்ன நல்ல தீர்வு சொல்ல முடியும், சொல்லுங்க என்று கேட்டான்.

தனக்குத் தெரிந்து அவன் இவ்வளவு நீளமாகப் பேசியது இதுதான் முதல் முறையோ என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சரிதான்பா. புது மெஷின் வாங்கற போது உங்ககிட்டயே வர்றேன் என்று வந்தவரும் கிளம்பியே விட்டிருக்க, தாரிணிக்கே உஷ் அப்பாடா என்றிருந்தது.

இதைச் சற்று முன்னரே நாம் சொல்லியிருக்கலாமோ என்று நினைத்துக் கொண்டே குரு பிரசாத் தனது வேலையில் மீண்டும் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களிலேயே மிகவும் முக்கியமான அந்த மெயிலை மீண்டுமொரு முறை சரி பார்த்து அனுப்பியும் விட்டிருந்தான்.



அவன் சற்று நிமிர்ந்து அமரவும், அவன் கேட்டிருந்த ஒரு ரிப்போர்ட்டோடு தாரிணி அவனுடைய டேபிளுக்கு வரவும் சரியாக இருந்தது.

''என்ன ஸார், புது மெஷின் ஆர்டர் இன்னொன்னு வந்துடுச்சு போலிருக்கு. பில் ரெடி பண்ணிடட்டுமா?'' என்று முடிந்த அளவு புன்னகையைத் தனக்குள் மறைத்துக் கொண்டு கேட்டாள் தாரிணி.

''ஐயய்யோ! திரும்பவுமா? அப்படி ஏதாவது என்குயரி கொஞ்சம் முன்னாடி வந்துட்டுப் போனவர்கிட்டிருந்து வந்தா எங்க பாஸ் இந்த பிஸினஸயே விட்ற ஐடியால இருக்கார்னு ஒரே போடு போட்டுடு!'' என்றான்.

அவன் சொன்ன பாவனையில் நன்றாகவே சிரித்த தாரிணி, ''என்ன ஸார் இவ்வளவு பயம்?'' என்று அதே புன்னகையுடன் கேட்டாள்.

''பின்ன, கெட்ட நேரம் ஏதாவது இருந்து இவருக்கு நான் குடுக்கற மெஷின்லயே ஏதாவது பிரச்சன வந்துடுச்சுன்னு வெச்சுக்கோ. அப்புறம் என் நிலைமைய நினைச்சுப்பாரு. தினமும் இதே கதிதான்!'' என்று பயந்தவன் போலச் சொன்னான் குரு பிரசாத்.

''ஆனாலும் உங்க தொழில் மேல உங்களுக்கு இவ்வளவு நம்பிக்கை இருக்கக் கூடாது ஸார்!'' என்றவளைப் பார்த்து, ''எதுக்கும் கொஞ்சம் முன்னெச்சரிக்கையோட இருந்துட்டாப் பின்னாடி வர்ற பிரச்சனைகளைத் தவிர்த்திடலாம் பாரு,'' என்றான்.

''பின்ன எதுக்காக ஸார் அவருக்கு அப்படி ஒரு தீர்வ சொன்னீங்க? என்னதான் பிராக்டிகல் லைஃப்க்கு ஒத்துப் போறதத்தான் நீங்க சொன்னீங்கன்னாலும் அதையெல்

லாம் சரின்னு ஏத்துக்கற மனப்பக்குவம் இந்தக் காலத்துல எத்தனை பேருக்கு இருக்கு?'' என்று கேட்டாள் தாரிணி.

அவள் பேசுவதில் உள்ளர்த்தம் ஏதும் இருக்கிறதோ என்று குரு பிரசாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அதனால தான் அந்தக் காலத்து மனுஷர்கிட்ட சொன்னேன் பாக்கலாம்,'' என்றவனைப் பார்த்தவளுக்கு ஏனோ ஒரு உருண்டை போல ஏதோ வந்து தொண்டைக் குழிக்குள் சிக்கிக் கொண்டது போலிருந்தது.

இத்தனைக்கும் பிறகும் கூட இவன் தன்னிடம் சிரித்தபடி பேசுகிறானே என்று அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

தான் நினைத்ததையே அவனும் சொல்ல, தாரிணியால் மனதிற்குள் அவனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

''உன் இடத்துல வேற யார் இருந்தாலும் கூட நான் இதே மாதிரி தான் பேசுவேன். அதுக்காக நீ வேற மாதிரி எதையும் கற்பனை பண்ணிக்க மாட்டேன்னு நினைக்கறேன்,'' என்றவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் தாரிணி.

மீண்டும் எதையாவது சொல்லி மிஞ்சியிருக்கும் கொஞ்ச நஞ்ச மன நிம்மதியையும் கெடுத்து விடுவானோ என்று தாரிணிக்கும் சற்று பயமாகத்தான் போயிற்று.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம்தான்.

அவன் பழையபடி நன்றாகப் பேசியதில் தானும் சந்தோஷமாகப் பேச ஆரம்பித்து விட்டிருந்தாள் தாரிணி.



''குடிக்க ஏதாவது கிடைச்சா கொஞ்சம் நல்லா இருக்கும்.''

''ஏதாவதுன்னா, என்ன ஸார் குடுக்கறது?''

''டீயத் தவிர நீ வேற என்ன குடுக்கப் போற. அதயே குடு.''

கடந்த ஒரு வாரமாக அவன் தானே எடுத்துக் கொண்டிருந்தது போய், பழையபடி மீண்டும் அவன் தன்னை ஊற்றிக் கொடுக்கச் சொல்லிக் கேட்டது தாரிணிக்கு சந்தோஷமாக இருந்தது.

''எடுத்துக்கோங்க ஸார்,'' என்று அடுத்த சில வினாடிகளிலேயே டீ நிறைந்த கப்பை அவனுக்கு முன்பாக நீட்டினாள் தாரிணி.

''உனக்கு?''

''நாந்தான் குடிக்க மாட்டேனே.''

''மறந்துட்டேன் பாரு,'' என்றவன்,

''இனிமேல் நீ என்ன குடிப்பயோ, அதையே எனக்கும் சொல்லிடேன்,'' என்றான்.

''இல்ல ஸார். நான் எதுவுமே குடிக்க மாட்டேன்.''

''ஏன், இப்படியெல்லாம் உங்க வீட்டுக்கு மிச்சம் பண்ணிக் குடுக்கிறியா?''

''மிச்சமா? அப்படியெல்லாம் இல்ல ஸார். அப்படிப் பாத்தா நான் எல்லா விதத்துலயும் வீட்டுக்குச் செலவு தான் குடுப்பேன்.''

''பாத்தாத் தெரியல,'' என்றவனிடம், ''ஹன்ஸி எப்படியிருக்கா?'' என்று கேட்டாள் தாரிணி.

''நல்லார்க்கா.''

''இப்ப எங்க இருக்கா?''

''ஊர்ல.''

''ஓ ஊருக்குப் போயாச்சா?''

''ஏன்?''

''என்னன்னு தெரியல. அவளப் பாக்கணும் போல இருக்கு!'' என்றவளின் வார்த்தைகளில் இருந்த ஏக்கம் வெளிப்படையாகவே தெரிந்தது.

ஆனாலும் அதைக் கண்டும் காணாமல் வேறு வேலையில் கவனமாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டவன் ஒரு சில வினாடிகளுக்குப் பிறகே மீண் டும் நடப்புக்கு வந்ததைப் போல நிமிர்ந்தான்.

''ம் என்ன சொன்ன?'' என்றவன், அவள் பதில் சொல் வதற்கு இடம் கொடுக்காமல், ''எக்ஸ்பென்ஸஸ் ஃபைல் எடுத்துட்டு வா,'' என்று அனுப்பினான்.

அதற்குப் பிறகு மீண்டும் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்து விட்டிருந்தவர்களுக்கு மதிய உணவு இடை வேளை வரை நிற்கக் கூட முடியாத அளவுக்கு வேலையே சரியாக இருந்தது.

அதற்குப் பிறகும் மதிய உணவிற்காக குரு பிரசாத் வெளியே சென்று விட்டுத் திரும்ப மாலை நேரம் ஆகி விட்டிருந்தது.

ஆனால் அப்பொழுது அவனுடன் அவனுடைய மகள் ஹன்ஸிகாவும் வந்திருந்தாள்.

''அக்கா!'' என்று சந்தோஷமாகத் தன்னருகில் ஓடி வரும் சிறுமியைப் பார்த்துத் தானும் ஆசையுடன் எழுந்து வந்தாள் தாரிணி.



''அக்கா! நான் வந்தாச்சு!'' என்று துள்ளிக் குதித்த குழந்தையை ஆசையுடன் தூக்கிக் கொண்டவள், ''வாவ் ஹன்ஸி! ஊர்ல இருந்து எப்ப வந்த?'' என்று கேட்டாள்.

''நான் இப்ப அடம் புடிச்சு தாத்தா கூட வந்துட்டேன்,'' என்று கைகொட்டிச் சிரித்த சிறுமியிடம், ''அடம் புடிச்சா?'' என்று கேட்டாள் தாரிணி.

''பின்ன தாத்தா கூட்டிட்டு வரமாட்டாரே!'' என்றவள், ''எனக்கு டாடி தான் வேணும். அதான் வந்துட்டேன்,'' என்று தனக்கே உரியதைத் தானே பத்திரப்படுத்திக் கொள்ளும் பாவனையில் சொன்னாள் சிறுமி.

''ஏய் வாலு, இந்தா பாட்டி போன்ல...'' என்று குருபிரசாத் தனது மொபைலுடன் அருகில் வர, தாரிணியின் கையை விட்டுத் தானும் அவசரமாக இறங்கினாள் சிறுமி.

வேகமாக வந்து மொபைலை வாங்கிக் கொண்டு போய் சற்று தள்ளி நின்று பேச ஆரம்பித்திருந்தவளைப் பெரியவர்கள் இருவரும் புன்னகையுடன் பார்த்தார்கள்.

அப்படியே அவளுடைய தந்தையைப் போல என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆசையாகத் தனது மகளைப் பார்த்துக் கொண்டிருந் தவளிடம், ''என்ன, சாப்பிட்டயா?'' என்று குரு பிரசாத் கேட்க, ''ஆமா ஸார்,'' என்று உடனே அவன் பக்கமாகத் திரும்பினாள் தாரிணி.

''நீங்க ரெண்டு பேரும்...''

''நாங்களும் ஆச்சு.''

''அப்புறம் காலைல பாப்பா ஊர்ல இருக்கறதா சொன் னீங்க...''

''ஆமா, மதியம் தான் ஊர்ல இருந்து வந்தா. அம்மாவும் அப்பாவும் ஒரு வேலையா வந்திருக்காங்க. அப்ப இவளும் அவங்ககூடக் கிளம்பி வந்துட்டா.''

''இல்ல, நான் நாளைக்கு தான் வருவேன்,'' என்று தனது மகள் போனில் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்து அருகில் சென்றான் குரு பிரசாத்.

''பாத்தியா, வரும்போது என்ன சொல்லிட்டு வந்த?'' என்றவனிடம், ''நாளைக்குப் போறேன் டாடி, ப்ளீஸ்!'' என்று கெஞ்சினாள் சிறுமி.

''சரி குடு,'' என்று தனது மகளிடமிருந்து மொபைலை வாங்கிப் பேசியவன், ''சரிப்பா. அப்ப நீங்க ரெண்டு பேரும் வேலைய முடிச்சுட்டு வாங்க. காலைலயே கிளம்பிக்கலாம்,'' என்று போனை வைத்து விட்டுத் திரும்பினான்.

''எப்படியோ நினைச்சத சாதிச்சுட்ட!'' என்று மகளைப் பார்த்துச் சிரித்தவன்,

''சரி வா, கொஞ்ச நேரம் கம்ப்யூட்டர்ல ஏதாவது கேம்ஸ் விளையாடு. எனக்கு வேற வேலையிருக்கு,'' என்று மகளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போனான்.

திரும்பித் தன்னைப் பார்த்துக் கமுக்கமாகச் சிரித்துக் கொண்டே போன சிறுமியைப் பார்த்த தாரிணியாலும் புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

மேலும் சிறிது நேரம் சென்றிருக்க, கையைத் திருப்பி நேரம் பார்த்தாள்.

வழக்கமாகத் தான் கிளம்பும் நேரத்தை விடவும் கூடப் பதினைந்து நிமிடங்கள் அதிகமாகவே ஆகி விட்டிருந்



ததைக் கண்டவள், அனைத்தையும் எடுத்து வைத்து விட்டு எழுந்து கொண்டாள்.

நேராக எம்.டி.யின் டேபிளுக்கு வந்தவள், அவன் கம்ப்யூட்டரில் எதையோ மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்ததில் பேசாமல் நின்றாள்.

சில நிமிடங்களில் நிமிர்ந்தவன், ''என்ன, கிளம்பறியா?'' என்று கேட்டான்.

''ஆமா ஸார்,'' என்றவள், ''அதுக்கு முன்னாடி நீங்க சொன்ன மாதிரி செஞ்சிருக்கேன். பாத்துட்டிங்கன்னா...'' என்று தனது கையிலிருந்த ஃபைலை அவனுக்கு முன்பாக நகர்த்தி வைத்தாள்.

''பாக்கறேன். வெச்சுடு. அதுக்கும் முன்னாடி வேற வேல ஒன்னிருக்கு.''

''என்ன ஸார், சொல்லுங்க?''

சில வினாடிகள் யோசித்தவன் பின்னர், ''சரி விடு. நானே பாத்துக்கறேன்,'' என்று சொல்ல, ''பரவாயில்ல ஸார், சொல்லுங்க,'' என்று மீண்டும் கேட்டாள் தாரிணி.

''ஹன்ஸிக்கு ஸ்டிக்கர்ஸ், ஏக்டிவிட்டி புக்ஸ்னு ஏதேதோ வேணும்னு சொல்றா. நீ இங்க பக்கத்துல ஏதோ ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்ல தான் வாங்கினதா சொன்ன. முடிஞ்சா ஹன்ஸியும் நீயும் டிரைவரக் கூட்டிட்டுப் போய் அத வாங்கிட்டு வந்துட முடியுமா?''

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை, அதற்குள், ''ஷ்யூர் ஸார்,'' என்று சொல்லி விட்டிருந்தாள் தாரிணி.

அதே நேரம் ''அக்கா'' என்று சிறுமியும் எழுந்து வர, திரும்பினாள் தாரிணி.

"நீங்க போறீங்களா?"

"ம், ஆனா..."

"ம்கூம், போகக் கூடாது..."

"நாம ரெண்டு பேரும்தான் போகப் போறோம்."

"ரெண்டு பேருமா, எதுக்கு?"

"உனக்குத் தேவையானதை யெல்லாம் வாங்கறதுக்கு தான் இப்பப் போகப் போறோம்."

தான் சொன்னதை யெல்லாம் சந்தோஷமாகக் கேட்டுக் கொண்ட சிறுமி, உடனே, "டாடி! நீங்க?" என்று திரும்பித் தனது தந்தையைப் பார்த்தாள்.

"நான் வர்லமா. டாடிக்கு வேற வேலையிருக்கு. நீங்க மட்டும் போய்ட்டு வாங்க."

சரிதானென்று ஹன்ஸிகா தாரிணியுடன் கிளம்பியிருக்க, தொடர்ந்து வந்த அரை மணி நேரத்தில் தேவையானவை அனைத்தையும் அருகிலிருக்கும் அந்தப் பெரிய ஷாப்பிங் மாலில் வாங்கிக் கொண்டு திரும்பியிருந்தார்கள்.

திரும்பி வந்ததும் அவசியத்தை விட ஐந்தாறு மடங்கு அதிகமாகவே தனது எம்.டி. கொடுத்திருந்த பணத்தை பில்லோடு சேர்த்து அவனுடைய டேபிளில் வைத்தாள்.

"ஹாய் டாடி!" என்று அருகில் ஓடி வந்த மகளிடம், "என்ன, உனக்கு வேண்டியதையெல்லாம் வாங்கிட்டியா?" என்று கேட்டான் குருபிரசாத்.

"எல்லாமே வாங்கிட்டேன். நான் பாட்டி கூட ஊருக்குப் போகட்டுமா?"



"அது சரி," என்று சிரித்தவன், "இனி இதையெல்லாம் கொண்டு போய் எல்லாருக்கும் காட்டணும் இல்லையா?" என்று சிரித்தான்.

அதே நேரம் அருகில் நின்றிருந்த தாரிணியை நோக்கித் திரும்பியவன், "சரி தாரிணி, இனி நீ கிளம்பு. உனக்குதான் ரொம்ப லேட்டாயிடுச்சு," என்றான்.

"லேட்டெல்லாம் இல்ல ஸார். சில நாள் வேலை அதிகமா இருக்கும்போது இத விடக் கூட நேரம் கழிச்சு கிளம்பிட்டு தான இருக்கேன்," என்றவள், தனது கையிலிருந்த மற்றொரு சிறு கவரைச் சிறுமியிடம் கொடுத்தாள்.

"இதென்ன?"

"இது கார்ன் டாடி. நீங்க கூட எனக்குப் பிடிக்கும்னு எப்பவுமே வாங்கித் தருவீங்களே!" என்று அந்தக் கவரைப் பிரித்துத் தனது தந்தையிடம் காட்டினாள் சிறுமி.

"உங்களுக்கும் பாதி தரட்டுமா, சரியா?" என்று மழலையில் கேட்ட மகளை ஆசையுடன் தூக்கிக் கொண்டவன், தாரிணியிடம், "உன் உதவிக்கு நன்றி!" என்றான்.

"அச்சச்சோ! என்ன ஸார் இது பெரிய வார்த்தையெல்லாம்!" என்று சிரித்தவள், இருவரிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள்.

## 15

மேலும் ஒரு வாரமும் கூட சென்றிருந்தது.

தன்னிடம் வேலை செய்யும் ஒரு நல்ல பெண் என்பதைத் தாண்டி வேறு எந்த விதத்திலும் தான் ஒரு பிரசாத்தின் மனதைக் கவர்ந்திருக்கவில்லை என்பதை மனதில் ஒரு வலியுடன் போகப் போகப் புரிந்து கொண்டாள் தாரிணி.

ஆனால் அவனுடைய நிலைமையோ அவளுக்கு நேர்மாறாக இருந்தது. ஒவ்வொரு நாளும் - ஏன், ஒவ்வொரு வினாடியும் அவன் மீதான தனது ஈர்ப்பு அதிகமாகிக் கொண்டே போவதையும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

இப்படியே போனால் எங்கே பைத்தியமாகிப் போவோமோ என்று கூட தாரிணி மனதிற்குள் பயந்து போனாள்.

அனைத்திலும் உச்ச கட்டமாக அன்று காலையில் தனது தந்தை தன்னை அழைத்துச் சொன்னது தான் தாரிணியின் மனதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

உன்னைக் கதிரேசனுக்கே திருமணம் செய்து கொடுக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்பது தான் அது.

சற்று தனக்குள் யோசித்த பிறகு தான் தனது சம்மதத்தைப் பற்றிக் கூடத் தந்தை ஒரு வார்த்தை கேட்கவில்லை என்பது மனதில் உறைத்தது.

அப்படியானால்...

ம்கூம். இன்னொரு முறை கேட்கட்டும். முடியாதென்று ஒற்றை வார்த்தையில் அடித்துச் சொல்லி விடலா



யென்று மனதிற்குள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் தாரிணி.

தாரிணி இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டிருக்க, ஒரு பிரசாத்தின் நிலையோ அதற்கு நேர் எதிராக இருந்தது.

அவனும் அனைத்து உணர்ச்சிகளையும் கொண்ட ஒரு சராசரி மனிதன் தானே.

ஆரம்பத்தில் எப்படியோ, இப்பொழுது சில நாட்களாகத் தாரிணியைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்தவனுக்கு அவளுடைய கண்களில் தெரியும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் அவனையும் ஒரு வழி செய்ய ஆரம்பித்திருந்தன.

என்னதான் தாரிணியின் மனதை மாற்றுவதற்காக ஒன்றுமில்லாதவற்றை யெல்லாம் மிகைப்படுத்திச் சொல்லியிருந்தான் என்றாலும், வழக்கத்திற்கு மாறாக அவன் பேசிய விதம் தாரிணி படும் வேதனையால் மனதை உறுத்தத் தொடங்கி விட்டிருந்தது.

ஏனோ ஆரம்பத்திலிருந்து இடம் கொடுத்து விட்டுக் கடைசியில் கறாராக நடந்து கொள்வதைப் போல, உண்மையில் தான் அப்படி நடந்து கொள்ளவில்லை என்றாலும் கூட பிரசாத்தால் அப்படி நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதிலும் சற்று முன்னர் நடந்தது அவனுடைய மனதிற்கு மேலும் கஷ்டமாக இருந்தது.

தந்தை ஊரில் ஒரு அவசரமான வேலை, கிளம்பியே ஆக வேண்டுமென்று நிற்க, மகளோ ஒரு நாள் இருக்

கலாமென்று ஏக்கத்துடன் தனது முகத்தைப் பார்த்தது தான் நினைவிற்கு வந்தது.

அனைவரிடமும் சிக்கிக் கொண்டு, யாரிடமும் எதையும் அடித்துப் பேச முடியாமல் இடையில் நின்று தவிக்கும் தனது அம்மாவின் நிலைமையும், தன் ஒருவனால் தான் அனைவருக்கும் சிரமமோ என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சரி, அப்படித்தான் அவனுடைய அம்மா தனது பேத்தியுடன் இங்கே சில நாட்கள் வந்து இருக்கலாமென்றாலோ, அந்தப் பெரிய கிராமத்து வீட்டில் எந்தப் பொறுப்பையும் எடுத்துச் செய்யாத பெரிய மருமகளினால் அதற்கும் முடியாத நிலை.

ஊர் உலகம், நியாயம், நல்லது என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்காமல் தான் மட்டும் கொஞ்சம் இறங்கி வந்தால் தன்னைச் சார்ந்தவர்கள் அனைவரும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருப்பார்களோ என்று தோன்றியது.

இரவு உணவுக்கு அனைத்தும் தயாராகி விட்டதென்று ராஜம்மா வந்து சொல்லி விட்டுச் சென்றாள்.

தான் மட்டும் தனியாகச் சென்று சாப்பிடப் பிடிக்காமல் போனதால், இன்னும் சற்று நேரம் போகட்டுமென்று தன்னுடைய அறைக்கு வந்து விட்டிருந்தான் குரு பிரசாத்.

அதே நேரம் தனது மொபைல் அழைக்க எடுத்துப் பேசினான்.



''என்னம்மா, சொல்லுங்க,'' என்று தனது தாய் சொன்னதை முழுவதுமாகக் கேட்டவனுக்கு எரிச்சலோடு கோபமும் சேர்ந்து வந்தது.

தனது தாய் தந்தையுடன் ஊருக்குப் போக மாட்டேனென்று அழும் மகளை நினைத்து இதென்ன இவ்வளவு பிடிவாதம், இது எங்கே போய் முடியுமென்று அவனுக்குச் சற்று பயமாகக் கூட இருந்தது.

''ஒரு நிமிஷம் உங்க பேத்திகிட்ட போனக் குடுங்கம்மா!'' என்றவன் மகளுடன் சில வார்த்தைகள் பேசினான்.

இப்பொழுது ஊருக்கு அழாமல் சந்தோஷமாகப் போய் விட்டாயானால் நாளை இரவு அப்பா உன்னைப் பார்க்க ஊருக்கு வருவேனாக்கும் என்று அவன் சொன்ன ஒரு வார்த்தையிலேயே சந்தோஷமாகத் துள்ளிக் குதித்த மகளை மனதில் ஒரு வலியுடன் அனுப்பி வைத்தான்.

பெரியப்பா, பெரியப்பா குழந்தைகள் என அவர்களுடன் ஆசையாகத் துள்ளித் திரிந்து விளையாடிக் கொண்டிருந்த மகள் இப்பொழுது ஊருக்குப் போவதை நினைத்தே அழுகிறாளென்றால்...

அங்கே அவளுடைய மனதிற்குப் பிடிக்காமல் ஏதேனும் அல்லது அவளுடைய மனதைப் புண்படுத்துகிற மாதிரி....

தனது எண்ணம் போகும் போக்கை நினைத்துத் தன்னையே நொந்து கொண்டான் குரு பிரசாத்.

மகள் இந்த மண்ணுலகை எட்டிப் பார்த்த அந்த வினாடியே மனைவி இறந்து போயிருக்க, இந்த நான்கு ஆண்டுகளாக மகளை இந்த அளவிற்கு ஆளாக்கி

விட்டவர்களைப் போய்த் தவறாக நினைக்கிறோமே என்று மனதிற்குள் குற்ற மனப்பான்மையுடன் நினைத்துக் கொண்டான்.

அங்கே கிராமத்தில் என்றால் யாரையும் எதையும் கேட்க முடியாது. அப்படியே கேட்டாலும் இங்கு போல கேட்டதை உடனே வாங்கித் தருவதற்கு அது ஒன்றும் ஒரு சிறு நகரமும் கூடக் கிடையாதே.

ஆனால் இங்கே அப்படியில்லை.

ஏதோ ஒரு நாளைக்குத் தானே என்று கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதால் எப்பொழுதுமே அதே போல நினைப்பதெல்லாம் நடக்குமென்று நினைத்துக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது.

அப்படி நினைத்துக் கொண்டு இங்கேயே இருக்க வேண்டுமென்று தான் ஊருக்குப் போக மாட்டேனென்று அடம் பிடிக்கிறாள் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டான்.

கூடவே மகளுக்குத் தன் மேலிருக்கும் பாசமும் ஒரு காரணமாக இருக்குமோ என்றும். தொழில் தொழிலென்று அதுவே உயிர் மூச்சாக இருந்த குரு பிரசாத்தால் அனைத்தையும் விட மகள் தன் மேல் வைத்திருக்கும் அன்பும் ஆசையும் தான் அவளை இங்கிருந்து கிளம்ப விடாமல் தடுக்கிறதென்பதை ஏனோ அப்பொழுது புரிந்து கொள்ள முடியாது போயிற்று.

ஆனால் அதையும் அவன் புரிந்து கொள்ள வேண்டிய நிலை வந்தது.

அதுவும் சாதாரணமாக அல்ல, சிலர் மண்டையில் ஓங்கி அறைந்து உறைக்க வைக்கும்படி நேர்ந்தது.



# 16

என்ன முயன்றும் அன்று முழுவதுமே குருபிரசாத்தால் ஏனோ இயல்பாக இருக்க முடியவில்லை.

இன்று இரவு ஊருக்கு வருகிறேனென்று மகளிடம் நேற்றுச் சொல்லியனுப்பியதும், அதை நூறு சதவிகிதம் மனதார நம்பிக்கொண்டு ஊரில் தனக்காக மகள் காத்துக் கொண்டிருப்பதும் தான் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து கொண்டே இருந்தன.

மகளிடம் சொன்னது போல அன்று ஊருக்குச் செல்வதில் ஒன்றும் அவனுக்குச் சிறிதும் ஆட்சேபணை இருக்கவில்லை.

அன்று செய்தாக வேண்டுமென்று சில நாட்களுக்கு முன்னரே முடிவு செய்து விட்டிருந்த ஒரு முக்கியமான வேலையை முடித்து விட்டுச் செல்வதா அல்லது வந்து பார்த்துக் கொள்வதா என்பதுதான் அவனுடைய குழப்பமாக இருந்தது.

அது ஒரு பெரிய ஆர்டர் கிடைப்பதற்கான பேச்சு வார்த்தை என்பதால் எவ்வளவு நேரமானாலும் இருந்து பார்த்து விட்டே போய் விட்டாலென்ன என்று வழக்கமில்லாத வழக்கமாக முடிவெடுக்க சற்று சிரமப்பட்டுக் கூடப் போனான்.

கடைசியில் பிள்ளைப் பாசமே ஜெயித்தது.

எதிர்பாராமல் வந்து விட்டிருந்த ஒரு வேலையால நமது சந்திப்பை இன்று வைத்துக் கொள்ள முடியாதென்று அவன் போனில் அழைத்துப் பேச, உங்களுடைய தயாரிப்பைத்தான் வாங்கியாக வேண்டுமென்று எங்கள் எம்.டி. முடிவாகச் சொல்லி விட்டார். அதனால் நாளை போன் செய்து விட்டு ஆர்டருடன் நேரில் நாங்களே வந்து விடுகிறோம். அப்பொழுதே அனைத்தையும் பேசி விடலாமென்று அந்தப் பெரிய கம்பெனியின் நிர்வாகி சொல்லிவிட, மனதிற்குள் சற்று நிம்மதியாகக் கூட உணர்ந்தான்.

அதற்குப் பிறகு வழக்கமான உற்சாகத்துடன் மகளைப் பார்ப்பதற்காக ஊருக்குக் கிளம்பி விட்டிருந்தான்.

அப்படியிருந்தும் அவன் ஊரிலிருக்கும் தன்னுடைய வீட்டைச் சென்றடைந்த போது இரவு மணி ஒன்பதாகி விட்டிருந்தது.

ஒரு வேளை குழந்தைகள் தூங்கியிருந்தா என்று சத்தம் வராமல் காம்பவுண்டுக்குள் காரை விட்டவன் வீட்டிற்குச் சென்று தள்ளியே காரை நிறுத்தி இறங்கிக் கொண்டான்.

அவரவர்களுக்கு விருப்பமானவையென்று குழந்தைகள் மூவருக்குமாக வாங்கியிருந்தவற்றைக் கையோடு தூக்கிக் கொண்டு நடந்தான்.

அவன் வீட்டிற்குள் வந்தபோது ஹாலில் யாரும் இருக்கவில்லை.

ஆனால் டைனிங் ஹாலிலிருந்து வந்த பேச்சுக் குரலில் அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்களென்பது புரிந்தது.



விட்டிருந்தால் இன்னும் சில வினாடிகளில் அவனும் டைனிங் ஹாலுக்குள் சென்றே இருப்பான்.

ஆனால் அதற்கு விடாமல் மந்தாகினியின் குரல், அதாவது அவனுடைய அண்ணியின் குரல், அவனைத் தடுத்து விட்டிருந்தது.

அது மட்டுமல்லாமல் அவளுடைய வாயிலிருந்து வந்த வார்த்தைகள் கூடை கூடையாக எரிநெருப்பை எடுத்துத் தலையிலேயே கொட்டுவதைப் போலிருந்தது.

இப்பொழுது அண்ணன் மனைவியின் குரல் முன்னிலும் உரத்து ஒலிக்க, மம்மி, பாருங்க மம்மி, ஹன்ஸி இன்னும் ஒருவாய் கூட சாப்பிடாம அப்படியே வெச்சிருக்கா என்று அண்ணனின் மகன் வினயின் குரலும் சேர்ந்து கேட்டது.

''ஏய், என்னடி இன்னும் ஒருவாய் கூட எடுக்காம அப்படியே வைச்சிருக்க, முதல்ல சாப்புடு. இல்லன்னா எனக்கு வர்ற கோபத்துல நடக்கறதே வேற.''

அண்ணி மிரட்ட, ''முடியாது. சாப்பிடவே மாட்டேன்.'' என்ற தனது மகளின் குரலில் தெரிந்த பிடிவாதம் எப்பொழுது இப்படியெல்லாம் பேசப் பழகினாளென்று குரு பிரசாத்திற்கே ஆச்சரியமாக இருந்தது.

''ஏன்டி, ஏன் சாப்பிட மாட்ட?''

''என் டாடி வந்ததும் அவர் கூடத்தான் சாப்பிடுவேன்.''

''மணி என்னாச்சுன்னு பாரு. இனி உங்க அப்பா வர மாட்டார். முதல்ல எடுத்துச் சாப்புடு.''

''ம்கூம், மாட்டேன்.''

''ஏய், உம்மனசுக்குள்ள என்னடி நினைச்சுட்டிருக்க? எதுக்கெடுத்தாலும் எதுத்தெதுத்தே பேசிட்டிருக்க.

இனிமேல் உங்க அம்மாவையே இருந்து இதப் பாத்துக்க சொல்லுங்க. என்னால எல்லாம் இந்தக் குட்டிச்சாத்தான் கிட்ட மண்டைய உடைக்க முடியாது!'' என்ற மனைவியைச் சமாதானப்படுத்தினான் ஹரிஹரன்.

''என்ன மகிம்மா, அப்படித்தான் நம்ம குழந்தைக மாதிரி நினைச்சுக்கிட்டுப் போனாப் போகுதுன்னு விட்டுடேன்.''

கோழை அண்ணன் மனைவியைச் சமாதானப்படுத்துவதும், அதற்குப் பதில் சொல்வதாக எண்ணிக் கொண்டு வாய்க்கு வந்ததையெல்லாம் பேசும் தனது அண்ணியின் குரலும் விட்டால் பக்கத்து வீட்டுக்கும் கூடக் கேட்கும் போலிருந்தது.

''க்கும், இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சலில்ல. எனக்கு மட்டும் என்ன இதப் பாத்துக்கணும்னு தல விதியா, உங்கம்மாவுக்கு ஆயிரம் ஜோலி. எப்பவுமே வீடு தங்கறது கிடையாது. உங்க தம்பி அதவிட, அங்கடவுன்ல கேக்க ஆளில்லாம கண்டபடி சுத்திட்டுதான இருக்கார். அது சரிதான். அவரக் கேள்வி கேக்க யாரு இருக்கா. அவரு தான் எல்லாத்தையும் நிக்க வெச்சுக் கேள்வி கேட்டுட்டிருக்கார். எதுக்கு இப்படி உங்க தம்பி வருவார்னு பயந்துக்குறீங்க?''

''நானெதுக்கு பயப்படணும், பைத்தியம்!'' என்று சிரிக்கும் கணவனின் பாவனையிலேயே அவன் பயப்படுவது வெளிப்படையாகத் தெரிந்தது.

''சை, எப்படித்தான் உங்களால இப்படியெல்லாம் இருக்க முடியுதோ, எனக்குக் கேவலமா இருக்கு...''

''போதும் மகி, வாய்க்கு வர்றதையெல்லாம் பேசாத''



''க்கும்...'' என்று எளனத்துடன் முகவாயைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்ட மனைவியைச் செய்வதறியாது பேசாமல் பார்க்கத்தான் ஹரிஹரனால் முடிந்தது.

''ஏன், அப்படியென்ன ஐயாவுக்குத் தம்பிப் பாசம் பொங்கி வழியுதாம்! கோடி கோடியா பணம் புழங்கியும் கூட நீங்க எடுத்துச் செலவு பண்ற பணத்துக்கு ஆயிரம் கேள்வி கேக்கறாரே. அது மட்டுமா? எடுத்த பணத்தையெல்லாம் அப்படியே திருப்பிக் கட்டிடணுமாமே. அப்படியிருக்கும்போது அவரு குழந்தைய மட்டும் நான் ஏன் பாத்துக்கணுமாம்?''

இதென்ன இப்படி எதையெதையோ சம்பந்தப்படுத்திப் பேசுகிறாளென்று குருபிரசாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கோடி கோடியாகப் பணம் இருக்கிறதென்று கணக்கு என்றில்லாமல் லட்ச லட்சமாக எடுத்து வீண் ஜம்பம் செய்யலாமாமா?

அப்படிச் செய்வதற்காகத்தான் இரவு பகலென்று பாராமல் உழைப்பதும், வருடத்தில் பாதி நாட்கள் எங்கெங்கோ நாடு நாடாகச் சோறு தண்ணீர் இல்லாமல் சுற்றிக் கொண்டிருப்பதுமாமா?

''சரி விடு மகி, யாராவது வந்துடப் போறாங்க...''

''வரட்டுமே, எனக்கென்ன பயம்? இருக்கறதத்தான சொல்றேன். முடிஞ்சா உங்க தம்பிகிட்ட சொல்லி அவரு மகளக் கூட்டிட்டுப் போய்க் கூட வெச்சுப் பாத்துக்கச் சொல்லுங்க. சனியன் ஒழியட்டும்.''

''மகி, போதும்...''

''என்ன போதும், ஏன் நிறுத்திட்டிங்க? மேல சொல்லுங்க. இன்னும் கொஞ்ச நேரத்துல பெரிய மேடம் அதான் உங்கம்மா வந்து குழந்த குடிச்சுட்டாளா சாப்பிட்டாளான்னு நூறு கேள்வி கேக்கறதுக்கெல்லாம் என்னால பதில் சொல்லிட்டிருக்க முடியாது. நாலு நாளைக்கு சின்னப் பேத்தி பட்டினி கிடக்கட்டும், அப்பவாவது விடு அண்டு வாங்களான்னு பாக்கலாம்.''

..................

''நம்ம குழந்தைங்கன்னா இளப்பம், எப்பப் பாத்தாலும் சின்னப் பேத்தியாம். அவ்வளவு அக்கறை இருந்தா கூடவே இருந்து பாக்கட்டுமே.''

''அம்மா! நாங்க ரெண்டு பேரும் சாப்புட்டே முடிச்சுட்டோம். ஹன்ஸி இன்னும் அப்படியே வெச்சிருக்கா!'' என்று சொன்ன தனது குழந்தைகளை, ''சரிதான் விடுங்க. என்னவோ பண்ணித் தொலையட்டும். நமக்கென்ன! அப்பா அப்பான்னு இப்படியே ராத்திரி பூராவும் உக்காந்துட்டே இருக்கட்டும்!'' என்ற மந்தாகினி, ''சரி. வாங்க நாம மூணு பேரும் தூங்கப் போலாம்,'' என்று தனது குழந்தைகளுடன் எழும் அரவம் கேட்டது.

''ஏம்மா, சித்தப்பா வர மாட்டாரா?'' என்று கேட்ட தனது மகனிடம், ''மாட்டார்!'' என்றவள், ''சரிதான் அதெல்லாம் நமக்கெதுக்குடா விடு,'' என்றாள்.

''இல்லையேம்மா, சித்தப்பா எப்பவுமே சொன்னா சொன்ன மாதிரி செஞ்சுடுவார். இப்ப வந்துடுவார்,'' என்று ஆணித்தரமாகச் சொன்ன மகளையும், ''ஆமாம்மா சித்தப்பா வரும்போது டாய்ஸ் சாக்லேட் கேக் எல்லாமே நிறைய வாங்கிட்டு வருவார்!'' என்று ஆசையாகச்



சொன்ன மகனையும், ''சரிதான். முதல்ல வந்து தொலைங்க,'' என்று மந்தாகினி வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வது கேட்டது.

அதற்கு மேலும் கூட அவளுடைய வாயிலிருந்து வார்த்தைகள் என்னும் விஷக் கொடுக்குகள் விழுந்து கொண்டே தான் இருந்தன.

அதே நேரம், ''டாடி வர மாட்டாரா, பெரியப்பா?'' என்று சின்னதாகிவிட்ட குரலில் விட்டால் அழுது விடுவாள் போலக் கேட்கும் மகளின் குரல் குருபிரசாத்தின் காதுகளில் விழுந்தது.

''இல்லமா, வருவார்,'' என்று தனது அண்ணன் பதில் சொல்வதற்கும் குரு பிரசாத் டைனிங் ஹாலுக்குள் செல்வதற்கும் சரியாக இருந்தது.

''ஹய் டாடி!'' என்று தனது மகள் எழுந்து ஓடி வருவதைக் கண்டு, ''பாத்து மெதுவா வா,'' என்றான் குரு பிரசாத்.

அதே நேரம் அங்கு தனது தம்பியைக் கண்ட ஹரிஹரன் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்றிருந்தான்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். உடனே சமாளித்துக் கொண்டு சாதாரணமாகப் பேச ஆரம்பித்திருந்தான்.

எப்படி இந்தக் குடும்பத்திற்குள் இப்படியொரு ஆண் பிள்ளையென்று குரு பிரசாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

விட்டால் மனைவியின் காலிலேயே விழுந்து கு பிடவும் செய்வான் போலிருக்கிறதென்று ஏளனத்துட நினைக்கத் தோன்றியது.

அதற்குள் தன்னருகில் வந்து காலைக் கட்டிக் கொண்ட மகளை ஆசையுடன் எடுத்துத் தழுவிக் கொண்டான்.

''ஹன்ஸியும் இன்னும் எதுவும் சாப்பிடல, நீங்க ரெண்டு பேரும் வந்து முதல்ல சாப்பிடுங்க,'' என்ற தனது அண்ணனிடம் தாய் தந்தையைப் பற்றி விசாரித் தான்.

''அவங்க நம்ம இராமநாதன் அங்கிள் வீட்டுக் கல் யாணத்துக்குப் போயிருக்காங்க. முடிஞ்சா தான் இப்ப வருவாங்க. இல்லைன்னா இருந்து கல்யாணத்த முடிச் சுட்டு நாளைக்குக் காலைலதான் வருவாங்க. ஏன், மதியம் கூட ஆகலாம்,'' என்றான்.

''சரி, நாங்க கிளம்பறோம்,'' என்ற தம்பியைப் புரி யாமல் பார்த்தவன், ''ஏன் இப்பவே... இப்பதான வந்து... இருந்துட்டுக் காலைல போகலாமே. ஒருவேளை இப்ப அம்மா அப்பா கூட வந்...''

''இல்ல, கிளம்பணும், முக்கியமான வேலையொன்னு...'' என்றவன், அந்த வினாடியே மகளுடன் அங்கிருந்து கிளம்பி விட்டிருந்தான்.

சலுகையாகத் தன்மேல் சாய்ந்து கொண்ட மகளை மேலும் இதமாக அணைத்துக் கொண்டவனுக்கு, இந்தச் செல்வத்தைப் போய் வாய் கூசாமல் என்னவெல்லாம் சொல்லி விட்டாளென்று மனம் ஆற மறுத்தது.

தன்னுடன் காருக்கு வந்திருந்த தந்தையைப் பார்த்து, ''ஏன் டாடி, பெரியம்மா திட்டிட்டாங்கன்னு கஷ்டமா இருக்கா?'' என்று கேட்டாள் ஹன்ஸிகா.

''என்னது, திட்டினாங்களா? டாடி அதையெல்லாம் கேக்கவே இல்லையே!'' என்றவன் மகளை முன் பக்கப்



பக்கவாட்டு இருக்கையில் அமர்த்தி விட்டு ஓட்டுனர் இருக்கையில் தான் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

என்னதான் வெளியே மகளிடம் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாலும், எந்த அளவிற்கு விவரம் புரிந் திருக்கிறது, அப்படியிருக்கும்போது அண்ணன் மனைவி பேசியது எந்த அளவிற்கு இந்தப் பிஞ்சின் மனதைத் தைத்திருக்குமென்று வேதனையாக இருந்தது.

இரவு போக்குவரத்து நெரிசல் இல்லாததாலோ அல்லது சற்று வேகமாகத்தான் ஓட்டினானோ தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்திலேயே நகரின் எல்லையைத் தொட்டிருந்தான் குரு பிரசாத்.

விட்டால் தூங்கி விடுவாள் போலிருந்த மகளுடன் முதலில் உணவை முடித்து விடலாமென்று எப்பொழு தும் செல்லும் அந்தத் தரமான டிரைவ் இன்னுக்குள் காரை விட்டிருந்தான்.

எப்படியோ பேசிச் சிரிக்க வைத்துத் தூங்க விடாமல் மகளையும் ஓரளவு உண்ண வைத்திருந்தவன், வீடு வந்து சேர்ந்த போது சிறுமி ஆழ்ந்த தூக்கத்திற்கே சென்று விட்டிருந்தாள்.

மகளின் தூக்கம் கலையாதவாறு தூக்கிக் கொண்டு வந்து படுக்க வைத்தவன் மெல்லிய பெட் ஷீட்டை எடுத்து மகளின் கழுத்து வரை போர்த்தி விட்டான்.

நல்ல தூக்கத்தில் உருண்டு விழுந்து விடாமல் இருக்க மகளுக்கு இரு பக்கங்களிலும் இரண்டு தலையணை களை வைத்தவன், அரை மணி நேரத்தில் அவனும் தூங்குவதற்காக வந்திருந்தான்.

ஆழ்ந்த தூக்கத்தில் சிரிப்பதைப் போலிருந்த மகளின் முகத்தை ஆசையுடன் ரசித்துப் பார்த்தான் குரு பிரசாத்.

இப்படியே குழந்தையாகவே இருந்து விட்டால் எந்தப் பிரச்சனையுமே இல்லாமல் வாழ்க்கை எவ்வளவு பிரமாதமாகச் செல்லுமென்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் தொடர்ந்து யோசிக்கப் போகத்தான் அவனுக்குத் தன்னுடைய எண்ணப் போக்கின் தவறு புரிந்தது.

ஊரில் அண்ணன் மனைவி பேசியதற்குப் பிறகு மகளைத்தான் பார்த்தபோது இந்த முகம் எந்த அளவிற்குக் கலவரப்பட்டிருந்தது என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

இன்னும் தொடர்ந்து வரும் நாட்களில் தன்னுடைய மகள் அங்கேயே இருக்க நேர்ந்தால்...

ஏனோ மேலே குரு பிரசாத்தால் எதையும் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

இல்லை, என்னுடைய மகளுக்கு அந்தக் கதி நேர நான் விடவே மாட்டேன்.

என்ன ஆனாலும் சரி, இனி அவர்களுடன் என் செல்வம் இருக்கவே கூடாதென்று மனதிற்குள் முடிவே செய்து விட்டிருந்தான் குரு பிரசாத்.

சனியனாம், குட்டிப் பிசாசாம்...

நினைத்துப் பார்த்ததில் அப்பொழுது போலவே இப்பொழுது குருபிரசாத்தின் கண்கள் கோபத்தில் சிவந்து போய் விட்டிருந்தன.



எந்தக் குழந்தையானால் என்ன, குழந்தைகள் என்றாலே வெகுளியாகவும், மென்மையாகவும் நடந்து கொள்கிறவர்கள் தானே.

அதில் பாரபட்சம் காட்ட இந்த மனிதர்களால் எப்படி முடிகிறதென்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

பாரபட்சம் மட்டுமா, விட்டிருந்தால் அவர்களுடைய கோபத்தையெல்லாம் குழந்தையின் மேல் காட்டி இன்னும் என்னவெல்லாம் செய்திருப்பார்களோ என்றும்.

குரு பிரசாத்தைப் பொறுத்தவரை அவன் தன் மகள் வேறு, அண்ணன் மக்கள் வேறென்று என்றுமே நினைத்தவனில்லை.

அதே போலத்தான் தாயில்லாப் பிள்ளையென்று மகளுக்கு அதிகமாகப் பரிவு காட்டியதும் கிடையாது.

ஆனால் அந்தத் தவறைத் தனது தாய் நிறைய முறை தன் கண்கள் படவே செய்ததை அவன் அறிவான்.

ஆனால் அவர்களுடைய கணக்கே வேறு என்பதும் அவன் அறியாததல்ல.

அனைவரையும் போல எனக்கும் அம்மா வேண்டுமென்று பேத்தி கேட்க வேண்டுமென்றும், அதனால் தன்னுடைய மனம் மாறுமென்றும் அவர் மிகவும் எதிர்பார்ப்பது புரிந்தது.

ஏன் இப்படியெல்லாம் இருக்கிறார்களென்று விரக்தியுடன் நினைத்துச் சலித்துக் கொள்ள மட்டும் தான் அவனால் முடிந்தது.

ஆனால் அப்பொழுதெல்லாம் இன்னும் கொஞ்சம் மட்டும் விவரம் வந்து விடட்டும், மகளைத் தன்னுட

னேயே அழைத்துப் போய் வைத்துக் கொண்டு விடலாமென்று மனதிற்குள் தீவிரமாக நினைத்துக் கொள்வான்.

அதையெல்லாம் கோர்வையாக நினைத்துப் பார்த்தவனுக்கு அந்த நாள் இப்பொழுது வந்து விட்டதாகவே தோன்றியது.

தாய் தந்தையால் பேத்தியை விட்டு இருக்க முடியாவிட்டால் அவர்கள் வேண்டுமானால் இங்கே வந்து இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் மகளைத் தான் இனிமேல் அங்கே அனுப்பவே கூடாது.

முடிந்த அளவு அங்கு சென்று தங்குவதையாவது தவிர்த்தே ஆக வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

குரு பிரசாத்தைப் பொறுத்தவரை தான் ஒன்று நினைத்து விட்டால் அதிலிருந்து அவன் எப்பொழுதும் தவறியவன் கிடையாது. அது அவனுக்குப் பிடிக்காததும் கூட.

அவனுடைய குணத்திற்கு அவன் நினைத்ததைச் செயல்படுத்த நடைமுறையில் எவ்வளவு சிரமப்பட வேண்டுமென்பதைப் போகப் போகத்தான் அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஆனால் அதற்கெல்லாம் பயந்து விடுபவனோ, சோர்ந்து போய் விடுபவனோ குருபிரசாத் அல்லவே!

## 17

அன்று காலையில் குருபிரசாத் அலுவலகத்திற்குக் கிளம்பும் வரை கூட அவனுடைய மகள் எழுந்திருக்கவில்லை.



எழுப்பலாமா என்று பார்த்து விட்டுப் பிறகு வேண்டாமென்று கிளம்பி விட்டிருந்தான்.

இங்கு தன்னுடன் இருப்பதே சந்தோஷம் போலத் தான் இல்லாவிட்டாலும் மகள் சமர்த்தாக இருந்து கொள்வாளென்ற நம்பிக்கை குரு பிரசாத்திற்கு நிறையவே இருந்தது.

என்றும் இல்லாத விதமாக மனதிற்கு மிகவும் நிம்மதியாகவும்.

தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு என்பதைப் போல மகளைத் தாயிடம் விட்டிருந்தது தனது மனதை இத்தனை நாளும் தன்னையறியாமலேயே உறுத்தியிருக்கிறதோ என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''குட் மார்னிங் ஸார்.''

''வெரி குட் மார்னிங்! என்ன, ரொம்ப சந்தோஷமா இருக்க?''

''ஓ, அப்படியா தெரியுது. நான் எப்பவும் போல சாதாரணமா தான் இருக்கேன்,'' என்ற தாரிணி தன்னைக் கூர்மையாகப் பார்ப்பதைப் போலிருக்க, ''என்ன?'' என்று கேட்டான்.

''இல்ல, நீங்க சந்தோஷமா இருக்கீங்கன்னு நினைக்கறேன், அதான் மத்தவங்ககிட்டவும் அதையே எதிர்பார்க்கறீங்க.''

''ஓரளவு சரிதான்,'' என்றவனின் பார்வை தன்னை மெச்சுவதைப் போலிருக்க, ''எப்படி, என் திறமையைப் பாராட்டத்தான் வேணுமில்லையா?'' என்று கேட்டாள் தாரிணி.

"பின்ன அவ்வளவு சாதாரணமா விட்டுட முடியுமா?" என்று குருபிரசாத்தாலும் நீண்ட நாட்களுக்குப் பிறகு தாரிணியிடம் அன்று ஏனோ எந்தத் தயக்கமுமின்றி சாதாரணமாகப் பேச முடிந்தது.

"என்ன சார், இன்னைக்கு உங்க பிறந்த நாளா?" என்று புன்னகையுடன் கேட்டவள், "கேக் எடுத்துக்கோங்க ஸார்!" என்று ஒரு பாக்ஸைத் திறந்து நீட்டினாள்.

புரியாமல் பார்த்தவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். "இன்னைக்கு என்னோட பிறந்த நாள். அதான் ஸார் எடுத்துக்கோங்க," என்றாள்.

"அப்படியா?" என்றவன் அவளை வாழ்த்தி விட்டுக் கேக் ஒன்றை எடுத்துக் கொண்டான்.

"என்ன சொல்லு?"

"ஸார், இந்த பாக்ஸ்ல கேக் இருக்கு. ஹன்ஸிக்கு எப்படியாவது குடுத்தனுப்ப முடியுமா?"

"ஏன்?"

"ஏன்னா சாக்லேட் கேக் அவளுக்கு ரொம்பப் புடிக்கும்னு சொன்னா. அவளுக்குச் செஞ்சு தரணுங்கறதுக்காகவே பழகினேன். ரொம்ப அதிசயமா நல்லாக் கூட வந்திருக்கு. அதான்."

"இப்ப என்ன, இத ஹன்ஸிக்கு குடுக்கணுமா?"

"ஆமா ஸார்."

"ஈவினிங் வருவா, அவகிட்ட நீயே குடுத்துடு."

"அப்ப பாப்பா ஊருக்குப் போகலயா?"

"இல்ல. நேத்து நைட் தான் ஊர்ல இருந்து வந்திருக்கா."



"அப்பாடா! எங்க அவளுக்குக் குடுக்க முடியாமப் போய்டுமோன்னு நினைச்சேன். ஏன், அவளுக்காகவேன்னு நினைச்சுட்டுத் தான் செஞ்சேன்!" என்று உண்மையான அக்கறையுடன் சொல்லிக் கொண்டவளைப் பார்த்தான் குருபிரசாத்.

தன்னை விரும்புவது இயற்கையின் நியதி. ஆனால் அதே போலத் தனது மகளுக்காகவும் பார்க்கிறாளென்றால்...

ஒருவேளை இதுதான் கடவுள் போட்ட முடிச்சோ?

ஒரு சில வினாடிகள் தான், உடனே தனது தவறை உணர்ந்து நடப்புக்கு வந்திருந்தான் குருபிரசாத்.

அவள் தான் சிறு பெண், நடப்பு புரியாமல் ஏதேதோ உளறுகிறாளென்றால் தானும் கூட...

அதுவும் இப்பொழுது சில நாட்களாக அவள் தானாகவே தனது தவறை உணர்ந்து திருந்தியும் விட்டாற்போல இருக்கிறதே.

"பாவம் ஸார் ஹன்ஸி, இங்க வீட்ல அவ மட்டும் தனியா எப்படிப் பொழுது..."

"அப்புறம், கேக் நிஜமாவே நீ செஞ்சது தானா?"

தனது பேச்சைத் திசைமாற்றுகிறானோ என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. உண்மையில் அவன் செய்ததும் அதையே தான்.

"ஏன் ஸார், அந்த அளவுக்கு நல்லார்க்கா?"

"உண்மையச் சொல்லணும்னா அப்பிடித்தான்..."

"அப்ப உண்மையவே சொல்லிடுங்களேன், போனாப் போகுதுன்னு இன்னொரு கேக் கூடத் தந்தாலும் தருவேன்."

தாரிணியின் பாவனையில் நன்றாகவே சிரித்தான்.

''இன்னொன்னா? இந்த ஒன்னுக்கே வயிறு என்னாகு மோன்னு பயந்து போயிருக்கேன்...''

''சொல்லமாட்டிங்க! விடுங்க. நான் ஹன்ஸிகிட்டயே கேட்டுக்கறேன்.''

''அவளுக்கு கேக்னா அதுவும் சாக்லேட் கேக்னா அது எந்த ஃபார்ம்ல இருந்தாலும் புடிக்கும். அது எவ்வளவு மோசமா இருந்தாலும் கூட!'' என்றவனின் புன்னகை தாரிணியின் கவனத்தில் பட்டிருக்கவில்லை.

''அச்சச்சோ! மோசமானதக் குழந்தைக்கு நான் குடுப் பேனா?'' என்றவள், ''நேத்து ஊருக்குப் போக மாட் டேன்னு பாப்பா அடம் புடிச்சாளே ஸார். அதனாலதான் நீங்க உடனே போய்த் திரும்பவும் கூட்டிட்டு வந்துட் டிங்களா?'' என்று கேட்டாள்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, ''ஒரு நிமிஷம்...'' என்று விட்டு அட்டெண்ட் செய்து பேச ஆரம்பித்து விட்டிருந்தான்.

அந்த நேரத்தில் தன்னுடைய இடத்திற்கு வந்து கைப்பையை வைத்திருந்தவள், எம்.டி. பேசி முடித்ததும் அன்றைய வேலை விவரம் கேட்க அவருடைய டேபிளுக்குச் சென்றாள்.

''வா, இன்னைக்கு நான் கொஞ்சம் வெளிய போக வேண்டியிருக்கு. நான் திரும்பறதுக்குள்ள இதையெல் லாம் முடிச்சு வெச்சுடு...''

''சொல்லுங்க ஸார்,'' என்றவள் அவன் ஒவ்வொன் றாகச் சொல்லச் சொல்லக் குறித்துக் கொண்டாள்.

அதே நேரம் ஏதோ சொல்ல வந்து விட்டுப் பிறகு விட்டு விடுகின்ற தாரிணியின் முயற்சி புரிய, ''என்ன, சொல்லு?'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்ல ஸார்,'' என்றவளை வெளிப்படை யாகக் காட்டிக் கொள்ளாமல் முடிந்த அளவு கூர்ந்து கவனித்தான்.

அப்படிக் கவனித்ததனால் தாரிணியிடமிருந்து அவ் வளவு எளிதாகப் பார்வையைத் திருப்பிக் கொள்ள முடிந் திருக்கவில்லை.

தான் கேட்ட டீடெய்ல் ஒன்றை எடுப்பதற்காகக் குனிந்து பைலில் மும்முரமாக இருந்தவளும் தன்னைக் கவனிக்கவில்லையென்பது தெரிந்தது.

உண்மையிலேயே இவள் இவ்வளவு அழகா என்று குருபிரசாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மெல்லிய கச்சிதமான உடல்வாகு, இடை வரை தொங்கும் நீண்ட கூந்தல், அழகிய முகம், அதில் எந்நேரமும் மிளிரும் புன்னகை எனப் பார்ப்பவர்கள் யாரையும் மற்றொரு முறை திரும்பிப் பார்க்க வைத்து விடும் தாரிணியின் அழகு அப்பொழுது அவனையும் என்னவோ செய்வதை அவனால் துளியும் மறுக்க முடியவில்லை.

ஆனால் அந்தப் புன்னகை இப்பொழுது அவளுடைய முகத்தில் இல்லையோ?

இதென்ன, சற்று முன்னர் தானே அவ்வளவு சந்தோஷ மாகப் பேசினாள்.

நினைத்தவன், அதை அவளிடமே கேட்டான்.

உடனே நிமிர்ந்து தன்னைப் பார்த்தவள், முயன்று தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொள்வது புரிந்தது.

"என்னன்னு கேட்டா ஒண்ணுமில்லேங்கற. ஆனாக் கொஞ்சம் விட்டா உன் சோகம் என்னையும் வந்து தொத்திக்கும் போலிருக்கே!" என்றவனிடம், இல்லையே ஸார் நான் எப்பவும் போலத்தான் இருக்கேன் என்றாள்.

தான் சொல்வதை அவன் நம்பவில்லையென்பது அவனுடைய பார்வையிலேயே தெரிந்தது.

............

மேலும் சில வினாடிகளும் கூடப் பேசாமல் நின்றிருந்தவளுக்கு, அதற்குக் காரணமே நீதானென்று ஏன் நம்மால் சொல்ல முடியவில்லையென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"ம்...."

"வேண்டாம், ஒண்ணுமில்லன்னு மட்டும் சொல்லிடாத. வேணும்னே பொய் சொல்ற மாதிரியிருக்கு..."

தான் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. கண்கள் கலங்கிவிட மிகவும் சிரமப்பட்டு உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தவளைப் புரியாமல் பார்த்தான்.

ஆனால் என்ன முயன்றும் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போக, தாரிணியின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிய ஆரம்பித்து விட்டிருந்தது.

கடவுளே! இப்படி பலவீனமாக இருக்கிறோமே என்று மனதிற்கும் ஒரு மாதிரியாகி விட, பேசாமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்து தன்னிடத்திற்கு வந்திருந்தாள்.



இப்படி எதற்கெடுத்தாலும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தால் தன்னைப்பற்றி குருபிரசாத் என்ன நினைப்பானென்றும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஒரு சில வினாடியில் சிரமப்பட்டுத் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு, மீண்டும் அவனுடைய டேபிளுக்கு வந்தவள், "ஸாரி!" என்றாள்.

ஆனால் அந்த ஒரு வார்த்தையைச் சாதாரணமாகச் சொல்லி முடிக்கவே அவள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

தனது முகத்தில் நிலைத்திருந்த குருபிரசாத்தின் உணர்ச்சியற்ற பார்வையில் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள தாரிணி மிகவும் சிரமப்பட்டுப் போனாள்.

அவனுடைய பார்வையையே கேள்வியாக ஏற்றுப் பதில் சொல்வதற்காக வாயைத் திறந்தாள் தாரிணி.

"கதிரேசன் அத்தானுக்கும் எனக்கும் வீட்ல மேரேஜ் பிக்ஸ் பண்ணப் போறாங்க!" என்று சொல்லி முடிக்கும் முன்பே தாரிணிக்கு மீண்டும் அழுகை வந்து விடும் போல ஆகி விட்டிருந்தது.

............

"அதுக்கு ஒத்துக்க முடியாதுன்னு ஒரேயடியா சொல்லிடப் போறேன்..."

"ஏன், உன் பெத்தவங்க உனக்கு நல்லது தான் செய்வாங்க."

சொல்லொணாத வேதனையுடன் என்ன இப்படிச் சொல்கிறீர்கள் என்பதைப் போலத் தன்னைப் பார்த்த

தாரிணியின் பார்வையை ஏனோ அவனால் நேருக்கு நேராகச் சந்திக்க முடிந்திருக்கவில்லை.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

''இதுக்கு நான் என்ன பதில் சொல்லணும்னு நீ நினைக்கற? இல்ல, எதிர்பார்க்கற?''

''என்ன மாதிரி துரதிர்ஷ்டசாலியா இந்த உலகத்துல யாருமே இருக்கக் கூடாதுங்கறதத் தவிர இதுல இனியும் நான் சொல்ல என்ன இருக்கு.''

விரக்தியான புன்னகையுடன் சொன்னவளைப் பார்த்தான் குரு பிரசாத்.

இந்த விஷயத்தில் அவன் செய்வதற்கும் ஒன்றுமில்லையே.

''நீ இன்னும் சின்னப் பொண்ணு, உங்க வீட்ல சொல்ற மாதிரி...''

''போதும் ஸார், எனக்காகப் பேசி நீங்க பாவம் உங்க டைம வேஸ்ட் பண்ணிக்க வேண்டாம். அப்படியெல்லாம் மனசுல ஒருத்தர், வாழ்க்கைக்கு ஒருத்தர்னு இஷ்டத்துக்கு மனச மாத்திக்கற பொண்ணு நான் கிடையாது. எத்தன பேர் வாழ்க்கைல அவங்க நினைக்கறதெல்லாம் அப்படியே நடந்துடுது?''

''இப்படியெல்லாம் பேசிட்டிருந்தா...''

''ப்ளீஸ், இதுக்கு மேலயும் எதயும் தாங்கிக்க முடியும்னு எனக்குத் தோணல...''

அதற்கு மேல் பேச முயன்றும் முடியாமல் தவித்தவளைக் குருபிரசாத்தும் எதுவும் சொல்லாமல் விட்டு விட்டிருந்தான்.



''சரி, நீ போய் வேலயப்பாரு.'' என்று தாரிணியை அனுப்பி விட்டிருந்தவனால் தான் சுத்தமாக வேலையில் கவனம் செலுத்த முடியாது போயிற்று.

அவள் தன்னை வருத்திக் கொள்வது சற்றும் எதிர்பார்த்திராத விதமாக குருபிரசாத்தையும் நிம்மதியில்லாமல் தவிக்கச் செய்தது.

சரிதான், எல்லாம் சரியாகி விடுமென்று அலட்சியப்படுத்திவிட்டு முயன்று வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

ஆனால் அவன் நினைத்தது போல அப்படியெல்லாம் ஒன்றும் சரியாகி விட்டிருக்கவில்லை.

அந்த முணுமுணுவென்ற வலி இன்னும் அதிகமாகிக் கொண்டே செல்வதைப் போகப்போகத்தான் அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அதுவே கடைசியில் எந்தவொரு வேலையும் சரியாகச் செய்ய முடியாத அளவிற்குக் கொண்டுவந்து நிறுத்திய போது தான் என்ன இது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

குருபிரசாத்தைப் பொறுத்தவரை அவன் மிகவும் மனக் கட்டுப்பாடு உடையவன். அதாவது அப்படித்தான் அவன் இத்தனை நாளும் தன்னை எண்ணிக் கொண்டிருந்தான்.

ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நினைத்து விட்டால் எப்பாடுபட்டேனும் அதைச் செய்து முடிக்கும்வரை ஓய்ந்து விடாதவனும் கூட,

ஆனால் வழக்கமில்லாத் வழக்கமாக இப்பொழுது சில நாட்களாக அவனுடைய மனமே அவன் சொல்வதைக் கேட்காதது புரிந்தது.

அப்படியே மேலும் ஒரு வாரமும் கூடச் சென்று விட்டிருக்க, ஒரு ஆர்டர் சம்பந்தமாக குருபிரசாத் வெளியூர் செல்ல வேண்டிய அவசியம் வந்தது.

தொடர்ந்து ஒரு மூன்று நாட்கள் அரசு விடுமுறையும் வர, யோசிக்காமல் உடனே கிளம்பியும் விட்டிருந்தான்.

மகளை வேலைக்கார ராஜம்மாவிடம் விட்டுவிட்டு, ஏதாவது சமாளிக்க முடியாமல் போனால் ஊருக்கு போன் செய்து தனது தாயிடம் பேசுமாறும், தானும் சொல்லி விடுவதாகவும் சொல்லிவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தான்.

முதலில் மகளை ஊரில் கொண்டுபோய் விட்டு விட்டுப் போகலாமென்று நினைத்தவன் தான். ஆனால் ஏனோ அதற்கு மனம் வரவில்லை.

குருபிரசாத் கிளம்பிச் சென்ற அன்றெல்லாம் அவனுடைய மகள் ஹன்ஸிகா ஒன்றும் பேசாமல் அதாவது சமர்த்தாகத்தான் நடந்து கொண்டாள்.

நான் ஜாலியாக ரகளை செய்யாமல் நீங்கள் வாங்கிக் கொடுத்திருக்கும் பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பேன் என்று மகள் சந்தோஷமாகச் சொல்லவும் தான் அவன் நிம்மதியாகக் கிளம்பியதும் கூட.

சரிதான், அதற்கு மேல் குறும்பு செய்தால் தான் வெளியூர் சென்றிருப்பது தெரியும் தானே, தனது பெற்றவர்கள்



அவர்களாகவே கிளம்பி வந்து விடுவார்கள் என்ற எண்ணமும் கூட அவனுக்கு நிறையவே இருந்தது.

அதேபோல தனது தந்தை கிளம்பிச் சென்ற முதல் நாளெல்லாம் உண்டு, விளையாடி சந்தோஷமாக இருந்த ஹன்ஸிகா, மறுநாள் படுக்கையை விட்டு எழும்போதே அப்பா வேண்டுமென்று அழ ஆரம்பித்து விட்டிருந்தாள்.

இதென்ன, இப்பொழுது என்ன செய்வது என்று ராஜம்மாவுக்கும் எதுவும் புரியாத நிலை தான்.

தன்னால் இயன்ற அளவு என்ன செய்தும், குழந்தை அதே பாட்டையே பாட, குருபிரசாத் சொல்லிவிட்டுச் சென்றது போல, அவனுடைய பெற்றவர்களுக்கு போன் செய்தாள்.

ஆனால் அங்கு எதிர்முனையில் பேசியதோ மந்தாகினி, அதாவது அந்த வீட்டின் பெரிய மருமகள்.

மிகவும் நெருங்கிய சொந்தத்தில் யாரோ இறந்து விட்டார்களென்று மாமனாரும், மாமியாரும் அவர்களுடைய பெரிய மகனுடன் காலையில் நேரத்திலேயே கிளம்பிச் சென்று விட்டார்கள். சிறிய மகனால் தான் இந்த வீட்டிற்கு எந்த உபயோகமும் இல்லையே. அவர்கள் திரும்புவதற்கு மாலையாகி விடும். வந்ததும் சொல்கிறேனென்று அவசியமென்று இல்லாததைக் கூட வெகுநேரம் பேசிவிட்டு அதற்குப் பிறகே போனை வைத்திருந்தாள்.

மந்தாகினியின் அவசியமற்ற பேச்சுக்களை வேலைக்காரியான ராஜம்மாவால் கூட சகித்துக் கொள்ள முடியவில்லை.

நல்லவேளை. சின்னவர் இங்கே தனியாகச் சம்பந்தமில்லாமல் வந்து விட்டாரென்று நிம்மதியுடன் நினைக்கத் தோன்றியது.

இல்லையென்றால் அவருக்கு வருகிற கோபத்திற்கு...

ஆனால் அப்படியே அங்கு ஊரில் இருக்க நேர்ந்தாலும் கூட அந்த வீட்டின் பெரியமருமகளுடன் எல்லாம் பேச்சுக் கொடுக்காமல் சின்னவர் பெருந்தன்மையாக விலகிச் சென்று விடுவார் என்பது வேறு விஷயம்.

ஆனால் இந்தப் பிஞ்சு...

இதையும் அவளுடைய கூர் நாக்கினால் அவள் தாக்கத்தானே செய்வாள்...

அப்படி ஏதாவது நடந்து தான் சின்னவர் தனது மகளை இங்கேயே அழைத்துக்கொண்டு வந்து விட்டாரோ என்று ஓரளவு சரியாகவே கணித்திருந்த ராஜம்மா, தன்னருகில் வந்து அழைத்த குழந்தையின் பேச்சில் தான் மீண்டும் நடப்புக்கு வந்தாள்.

''என்ன தங்கம்?''

''அப்பாவுக்கு போன் பண்ணுங்க. அப்பா வேணும்..''

''இப்பதான்டா செல்லம் ஊருக்குப் பாட்டி வீட்டுக்கு போன் பண்ணிப் பேசி...''

''ஊருக்கெல்லாம் வேண்டாம். அப்பாவுக்குத் தான் பேசணும்.''

''இன்னும் கொஞ்சம் நேரத்துல அப்பாவே கூப்புடுவார். நேத்து நைட் பேசினப்ப காலைல பத்து மணிக்குத் திரும்பவும் கூப்புட்றதா அப்பா சொன்னாரு தான...''



''இப்ப டைம் என்ன?''

''ஒன்பதாச்சு பாப்பா.''

''சரி. டாடியே கூப்புடட்டும்.''

''சரி. அதுக்குள்ள பாப்பா சாப்புட்டுக்குவியாம். அப்பா கூப்புடும் போது சாப்டாச்சுன்னு சொன்னா ரொம்ப சந்தோஷப்படுவார்!'' என்றெல்லாம் ஏதேதோ பேசிக் குளிக்க வைத்து அழைத்து வந்து வயிறு நிறையச் சாப்பிட வைத்திருந்தாள்.

வயிறு நிறைந்ததாலோ, தந்தையுடன் பேசலாமென்ற சந்தோஷத்திலோ, அதற்குப் பிறகு குழந்தை மீண்டும் தன்பாட்டுக்கு விளையாட ஆரம்பித்திருக்க, அதற்குப் பிறகு தானும் சென்று மதிய உணவு வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டிருந்தாள் ராஜம்மா.

சிறிது நேரத்திற்கு ஒருமுறை வந்து எட்டிப் பார்த்துக் கொண்டபடி, வேலையையும் பார்த்துக் கொண்டாள். மீண்டும் குழந்தை கேட்காவிட்டாலும், சொன்னது போல சின்னவர் ஏன் இன்னும் போனில் அழைக்கவில்லையென்று ராஜம்மாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அவரைப் பொறுத்தவரை ஒன்றைச் சொன்னால் செய்துவிடுவாரே என்றும்.

சிறுமிக்கு ஜூஸ் கலக்கிக்கொண்டு அவள் ஹாலுக்குச் செல்லவும், லேண்ட்லைன் போன் ஒலிக்கவும் சரியாக இருக்க, சென்று எடுத்துப் பேசினாள்.

எதிர்பார்த்தது போலவே சின்னவர் குருபிரசாத் தான்.

சில வார்த்தைகள் பேசியவள், ''தெரியலைங்கய்ய இதோ பாப்பா வந்துட்டா. குடுக்கறேன்.'' என்று ஹான்ஸி

விடம் அப்பா பேசறாங்க என்று ரிஸீவரைக் கொடுத்தாள். தனது தந்தையுடன் மிகவும் சந்தோஷமாகப் பேசும் குழந்தையை ஆசைதீரப் பார்த்துக் கொண்டிருந்தவள் சிறிது நேரம் பேசிவிட்டு சரி டாடி என்று ரிஸீவரை வைத்துவிட்டிருந்த சிறுமியைப் பார்த்தாள்.

''ஏன்டா செல்லம், ஏன் வெச்சுட்ட?''

''ம், அப்பா ஈவினிங் ஆறு மணிக்குக் கூப்புடுவார். அதான்.''

''ஓ அப்படியா?'' என்றவளுக்கும் குழந்தையின் புன்னகை நிம்மதியைக் கொடுத்தது.

இனி இப்படியே பேசாமல் இருந்து கொள்வாள் போலிருக்கிறதென்று நினைத்தவள், ''உனக்குப் புடிச்ச ஜூஸ்!'' என்று குடிக்கச் செய்தாள்.

''அப்புறம் அப்பா ரொம்ப நேரமா போன் பண்ணிட்டிருக்காராம், உனக்குக் கேக்கவே இல்லையாடா செல்லம்.''

''ஐயோ'' என்று சிரித்த சிறுமி, ''அது கேக்காது!'' என்று அதுவும் ஒரு பெருமை போலச் சொன்னதைப் புரியாமல் பார்த்தாள்.

''ஏன்?''

''அதான் நான் போன எடுத்துக் கீழே வெச்சுட்டேனே, அப்பா கூப்புட்ட உடனே போய் எடுக்கணும்னுதான்,'' என்று அவள் மேலும் சொல்லிக்கொண்டே போகத்தான் ரிஸீவரை எடுத்துக் கீழே வைத்து விட்டிருக்கிறாளென்பது புரிந்தது.

''ஓ, அதான் போன் வரலையா?'' என்றவள், ''அப்படிச் செஞ்சா அப்பா கூப்புட்டாலும் நமக்குக் கேக்கவே



கேக்காது. இனிமேல் அப்பிடி செய்யாத, சரியா?'' என்று சிறுமிக்குப் புரியும்படி எடுத்துச் சொன்னாள்.

''அப்பாவும் சொன்னார் ராஜம்மா பாட்டி. நீங்க பேசாம இருந்தா தான் நான் இந்த ட்ரெயின வெச்சு விளையாட முடியும்,'' என்று ஸீரியஸாகச் சொன்னாள் ஹன்ஸிகா.

''சரிதான்,'' என்று சிரித்த ராஜம்மா, சரி இனி நீங்க விளையாடுங்க செல்லம். நான் போய் வேலயப் பாக்கறேன் என்று சமையலறைக்கு வந்து விட்டிருந்தாள்.

சொன்னது போல குருபிரசாத் மாலையில் போன் செய்து மகளுடன் பேசினான். அதேபோல அவனுடைய பெற்றவர்களும் தங்களது பேத்தியுடன் போனில் பேசினார்கள்.

அப்பொழுதெல்லாம் பேசாமல் இருந்துவிட்ட சிறுமி, மீண்டும் இரவு அப்பா வேண்டுமென்று அழ ஆரம்பித்து விட்டிருக்க, இந்த நேரத்தில் என்ன செய்ய முடியுமென்று கையைப் பிசைந்து கொண்டு நின்று விட்டிருந்தாள் ராஜம்மா.

அதற்குப் பிறகு என்ன சமாதானம் சொல்லியும் ஒன்றும் பலன் இருக்கவில்லை.

அப்பா, அப்பா என்று வெகுநேரம் கேட்டுக்கொண்டே இருந்த ஹன்ஸிகா, அழுதபடியே தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

பார்க்கப் பாவமாக இருந்தாலும், எப்படியோ நாளை இரவு வரை சமாளித்து விட்டால் சிறியவர் வந்து விடுவாரென்று குழந்தைக்கு இரு மருங்கிலும் தலையணைகளை வைத்துக் கழுத்து வரை போர்த்திவிட்டுக் கீழே தனது பாயை விரித்துத் தானும் படுத்து விட்டிருந்தாள்.

இரவுபோலவே மறுநாள் காலையிலும் அதிகாலையிலேயே எழுந்து அடம்பிடித்த சிறுமியிடம், ராஜம்மாவின் எந்தச் சமாதானமும் செல்லுபடியாகவில்லை.

முதலிரண்டு நாட்களும் ஹன்ஸிகா பேச்சுக்கு நடுவில் அவ்வப்பொழுது சொல்லிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் பெயரைச் சொல்லி அது யாரென்று விசாரித்தாள் ராஜம்மா.

"அவங்க தான் தாரிணிக்கா!" என்று முகம் பிரகாசமுற உடனே பதில் சொன்ன குழந்தையைப் பார்த்தாள்.

"ஓ, அப்படியா. அவங்ககூட வேணுமுன்னா நாம போன்ல பேசலாமா?"

"ஐய்!" என்றவள், உடனே முகம் வாடிப் போனாள்.

"ஏன்டா செல்லம்?"

"அவங்க போன் நம்பர்.." என்று யோசித்தவள், உடனே ஓடிச்சென்று ஒரு நோட்டை எடுத்து வந்தாள்.

"என்னடா இது?"

"இதுல தான தாரிணிக்கா போன் நம்பர் இருக்குது," என்றவள், தானே ஒவ்வொரு எண்ணாக அழுத்தி டயல் செய்யவும் ஆரம்பித்தாள்.

## 18

"ஏய், உம்மனசுல நீ என்னடி நினைச்சுட்டிருக்க?" என்று கோபத்துடன் தனக்கு முன்னால் வந்து நின்றிருந்த தாயை நிமிர்ந்து பார்த்தாள் தாரிணி.



........

"உன்னைத்தான், பேசு."

"என்ன பேசணும், சொல்லுங்க?"

"ஓ, எதிர்த்துப் பேசற அளவுக்கு வந்துட்டியா? சரிதான். இனி உங்கிட்டப் பொறுமையாப் பேசிப் பலனில்ல...."

"என்ன லட்சுமி, ஏன் அவளப் போட்டுத் திட்டிட்டிருக்க?" என்று வந்த கணவனைப் பார்த்த லட்சுமி, "பின்ன இது பண்ற வேலைக்குக் கொண்டாடவா முடியும் ... நீங்களே சொல்லுங்க?" என்றார்.

"அதான், அப்பிடி என்ன செஞ்சான்னு கேக்கறேன்."

"கதிரேசன் ரெண்டு நாளா ஒரு நாலஞ்சு முறை கூப்டாச்சு. ஆனா இவ பேச மாட்டாளாம்."

"ஏம்மா, ஏன் இப்படிப் பண்ற?" என்ற தந்தையைப் பதில் சொல்ல முடியாது பார்த்தாள் தாரிணி.

"என்னமா, சொல்லு?"

மீண்டும் கேட்ட கணவனிடம், "ம்... அவ பேசுவா. எனக்கென்னவோ ரொம்ப பயமா இருக்கு!" என்று புலம்பவே ஆரம்பித்து விட்டிருந்தார் லட்சுமி.

"கொஞ்சம் பேசாம இருக்கறியா?" என்று மனைவியை அடக்கிய பிரபாகரன் -

"எதுவா இருந்தாலும் உம் மனசுல இருக்கறத வெளிய சொன்னாதான எங்களுக்குப் புரியும்," என்று மகளைத் தீர்க்கமாகப் பார்த்துக் கேட்டார்.

"அப்பிடியெல்லாம் ஒன்னுமில்லப்பா!" என்று முதன் முறையாக மெல்லிய குரலில் வாயைத் திறந்து சொன்னாள் தாரிணி.

என்னவாக இருந்தாலும் பெரியவர்களிடம் பேசிப் பயனில்லை, கதிரேசனிடமே யாரும் அறியாத வண்ணம் நேரடியாகப் பேசிவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்கு இரவே வந்து விட்டிருந்தாள் தாரிணி.

இப்பொழுது மேலே பார்க்கப் பார்க்க, அதுதான் நல்ல, சரியான வழியென்றும் தோன்றத் தொடங்கி விட்டிருந் தது.

மகளின் அந்தப் பதிலிலேயே சந்தோஷம் அடைந்து விட்டிருந்த பிரபாகரன்,

"குழந்தைய போட்டு ஒரு வழி பண்ணினா அவளும் தான் பாவம் என்ன பண்ணுவா. அவ நல்லாப் பேச ணும்னா நீயும் கொஞ்சம் பொறுமையா அன்பா பேசு," என்று போகிற போக்கில் மனைவியை ஒரு அதட்டு அதட்டிவிட்டுப் போனார்.

மேலே யோசித்த லட்சுமிக்குக் கணவன் சொல்வதும் சரிதானோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

பாவம், ஒரு பெண்ணாக அவளுடைய மனதும் நாம் சொல்வதையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே, அதற்கும் சிறிது நாட்கள் ஆகத்தானே செய்யுமென்று தனக்குத் தானே நினைத்துக் கொண்டார்.

"சரிமா, இனிமேலாவது கதிரேசன் அத்தான் கூப் பிட்டாப் பேசு," என்றவர், "என்ன பேசுவ தான?" என்று கேட்டார்.

நிச்சயம் பேசித்தான் ஆக வேண்டும், அப்பொழுது தான் ஒரு தீர்வு கிடைக்குமென்று மனதிற்குள் நினைத் துக்கொண்ட தாரிணி சரியென்று தலையை ஆட்டி னாள்.



அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, லேண்ட்லைனில் அழைத்தால் பேச மாட்டாளென்று மொபைலில் அழைக்கிறான் போலிருக்கிறதென்று வேண்டா வெறுப்புடன் மொபைலை எடுப்பதற்காக எழுந்து சென்றாள்.

தாய் தன்னைப் பார்த்துக்கொண்டே அங்கிருந்து நகர்வது தெரிந்தது.

மொபைலை எடுத்து யாராக இருக்குமென்று யோசித் துக் கொண்டே காதில் வைத்தாள் தாரிணி.

எதிர் முனையிலிருந்து வந்த குரலில் இருக்கின்ற பிரச் சனைகள் எல்லாம் மறைந்து அந்த இடத்தில் சந்தோஷ மும், உற்சாகமும் வந்து குடிகொண்டு விட்டாற்போல மனம் லேசாகிப் போனதை உணர்ந்தாள்.

ஆனாலும் சுற்றுப்புறத்தை உணர்ந்து தன்னை அடக்கிக் கொண்டு பேசினாள்.

"வாவ் ஹன்ஸி, நீ எங்கிருந்து பேசற?"

..........

"ஓ, சரி. நான் வர்றது இருக்கட்டும். நீ மட்டும் தான் இருக்கியா? அப்புறம் என்ன பண்ணிட்டிருக்க?"

மேலும் சிறிது நேரமும் கூட பேசிக் கொண்டிருந் தவள், "பத்து நிமிஷத்துல திரும்பவும் கூப்புட்றேன்," என்று போனை வைத்து விட்டிருந்தாள்.

போனை வைத்துவிட்டு யோசித்தவளுக்கு, அப்படித் தான் தான் கிளம்பிச் சென்றால் என்னவென்று தோன்றத் தொடங்கிவிட்டிருந்தது.

உடனே தான் சென்று பார்த்தாக வேண்டிய வேலையொன்று இருக்கிறதென்றும், முடிந்தால் மதியத்திற்குள், கடைசிக்கு எப்பொழுதும் வேலை விட்டு வரும் நேரத்திற்கு வந்து விடுவதாகத் தனது தாயிடம் சொல்லிவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள் தாரிணி.

விடுமுறை நாளில் என்ன வேலையென்று எதிர்ப்புத் தெரிவிக்காமல் தாய் உடனே சம்மதம் சொன்னது அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

பாவம் குழந்தையென்று ஹன்ஸிகாவுக்காக அவளுடைய மனம் பரிதாபப்பட்டது

ஏற்கெனவே குருபிரசாத்தின் விசிட்டிங் கார்டைக் கையில் வைத்திருந்தவளுக்கு, அவனுடைய வீட்டைக் கண்டுபிடிப்பது ஒன்றும் அவ்வளவு சிரமமானதாக இருக்கவில்லை.

அதிலும் கசகசவென்று இல்லாமல் சற்றுத் தள்ளித் தள்ளிக் கட்டப்பட்டிருந்த அந்தப் பெரிய வீடுகளில் ஒன்றான குருபிரசாத்தின் வீட்டை அவள் சென்று அடைந்தபோது, ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு வந்து தன்னை ஆட்கொள்வதைப் போல உணர்ந்தாள்

ஏதாவது அவசர அபாயமென்று கூச்சலிட்டால் கூட யாரும் வெளியே வந்து பார்ப்பார்களா என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

முதலில் காதிலாவது விழுமா என்றும்.

ஆட்டோவை விட்டு இறங்கி நடந்தவள், அடுத்த சில வினாடிகளில் வேக நடையுடன் கதவருகிலேயே வந்து விட்டிருந்தாள்.



வந்தவள் காலிங் பெல்லைக் கண்டுபிடித்து அழுத்தப் போகவும், கதவு திறந்து கொள்ளவும் சரியாக இருந்தது.

படபடவென்று அடித்துக் கொண்ட மனதைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''அக்கா!'' என்று ஓடிவந்த சிறுமியைத் தூக்கிக் கொண்டவள், தொடர்ந்து உள்ளே பார்த்தாள்.

''யாரப் பாக்கறீங்கக்கா?'' என்று கேட்ட ஹன்ஸிகாவின் அறிவை மனதிற்குள் மெச்சிக் கொண்டவள், ''வாங்கமா!'' என்று உள்ளிருந்து வந்த பெண்மணியைப் பார்த்தாள்.

''வரலாம்,'' என்றவள், ''நீங்கதான்...''

''ஆமாம்மா. நான் கொஞ்சம் முன்னாடி உங்ககூட போன்ல பேசினேனே. அந்த வேலைக்காரி ராஜம்மா தான்.''

''ஓ, அப்படியா?'' என்றவள் சிறுமியிடம் சந்தோஷமாகப் பேச ஆரம்பித்து விட்டிருந்தாள்.

''வாங்கமா, உள்ள வந்து உக்காருங்க.''

வந்த பெண்ணிடம் சந்தோஷமாக ஒட்டிக்கொண்டாளே என்று ஹன்ஸிகாவைச் சற்று ஆச்சரியமாகப் பார்த்த ராஜம்மாவின் பார்வை தாரிணியின் கண்களில் படத் தவறவில்லை.

அப்படியானால் ஹன்ஸிகா வேறு யாரிடமும் இந்த அளவிற்குப் பழக மாட்டாளோ என்றும் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

குழந்தையின் ஒட்டுதலில் என்னவோ கிடைத்து விட்டாற் போலத் திருப்திப்பட்டுப் போன மனதை முயன்று ஒரு நிலைப்படுத்த முயன்றாள்.

சாப்பிடுவதற்கென்று எதையெதையோ கொண்டு வந்து வைத்த ராஜம்மாவிடம், ''இதெல்லாம் எதுக்கு? வேண்டாமே!'' என்று மறுத்தாள்.

ஹன்ஸிகாவுக்காகத் தான் வாங்கி வந்திருந்த சாக் லேட் பாரை எடுத்துக் கொடுக்க, அதை ஆசையுடன் வாங்கிக் கொண்டாள் சிறுமி.

சரிதான், ஜூஸாவது எடுத்துக் கொள்ளுங்களென்று சிறிது நேரத்தில் மீண்டும் ராஜம்மா கொண்டு வந்து நீட்டியதை எடுத்துக் கொண்டாள்.

முதலில் அன்பாகச் சொல்லிக் குழந்தையைக் குடிக்க வைத்துவிட்டுப் பிறகு தான் ஒரு டம்ளரை எடுத்துக் கொண்ட தாரிணியின் குணம் ராஜம்மாவுக்கும் பிடித் திருந்தது.

செயற்கைத்தனம் சிறிதுமில்லாத தாரிணியின் இயற் கையான ஒட்டுதல், அவளுடைய மனதிற்குள் ஏதேதோ எண்ண வைத்தது.

அப்படி மட்டும் நடந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று மனதில் நினைத்துக் கொண்டவளுக்கு, பிரமாதமான ஜோடிப் பொருத்தமும் கூட என்று தோன் றியது.

ஆனாலும் சிறியவரின் குணம்...

அவருக்காக என்று இல்லாவிட்டாலும், இந்தக் குழந் தைக்காகவேனும் அவர் மறுமணம் செய்து கொள்ளத் தான் வேண்டுமென்று தோன்றியது.



ஊரில் சின்னவரைப் பெற்றவர்களுடைய ஆசையும் அதுதானே என்றும்.

அதற்குப் பிறகு ஹன்ஸிகாவைத் தாரிணியே மாலை வரை பார்த்துக் கொண்டாள்.

அவள் சொல்வதையெல்லாம் சந்தோஷமாக ஏற்றுச் செய்த சிறுமியின் உற்சாகம் அதுவரை பார்த்தறியாத ஒன்றாக இருந்தது.

''சரிடா செல்லம், இனி நான் கிளம்பட்டுமா?'' என்ற தாரிணியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள் ஹன்ஸிகா.

''என்னடா?''

''ம்கூம், நீங்க போகக் கூடாது! நான் விடமாட்டேன்.''

''ஏன்?''

''போகக் கூடாது, போகவே கூடாது!'' என்று அழுத்த மாகச் சொன்னவளைப் புன்னகையுடன் பார்த்தாள் தாரிணி.

''அப்புறம் எங்க மம்மி, டாடி என்னத் தேட மாட்டாங் களா?''

''தேடுவாங்களா?'' என்று சிறிதாகிப் போன குரலில் கேட்ட சிறுமியை ஆசையுடன் தூக்கிக் கொண்டாள் தாரிணி.

''ஆமாண்டா செல்லம், நாம ரெண்டு பேரும் நாளைக்கு அப்பா ஆஃபீஸ்ல பாத்துக்கலாம். சரியா, அதுவரைக்கும் சமத்தா இருக்கணும்!'' என்று அவள் சமாதானம் சொல்லவும், குருபிரசாத் வீட்டிற்குள் வரவும் சரியாக இருந்தது.

திடீரென்று அவனைக் கண்ட தாரிணியும், தனது வீட்டில் அவளை எதிர்பார்த்திருக்காத குருபிரசாத்தும் என இருவருமே முதலில் சற்றுத் திகைத்துத்தான் போனார்கள்.

ஆனால் முதலில் நடப்புக்கு வந்திருந்த குருபிரசாத் வந்தவளை வரவேற்றுச் சில வார்த்தைகள் பேசினான்.

''ஏன் நிக்கற, உக்காரு,'' என்று சொன்னவனுக்கு அதற்குப் பிறகுதான் தனது மகள் அவளுடைய தோள் பட்டையில் சலுகையாகச் சாய்ந்திருப்பது கண்களில் பட்டது. அதேபோல மகளைத் தாரிணி தூக்கிக் கொண்டிருந்த விதமும்.

அனைத்திற்கும் மேலாக சாதாரணமாகத் தன்னைக் கண்டாலே ஓடிவரும் குழந்தை, மூன்று நாட்களுக்குப் பிறகு பார்த்தும் கூடத் தன்னைக் கண்டு கொள்ளாமல் தாரிணியிடம் ஒட்டிக் கொண்டிருந்ததும் அவனுக்கு மனதிற்குள் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

ஆனாலும் அவன் அதைச் சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சுத்தமாகக் கண்டுகொள்ளவில்லையென்று சொல்லி விட முடியாது. ஐய் டாடி வந்தாச்சு என்று தனது சந்தோஷத்தைச் சிரித்தபடி வெளிப்படுத்தினாள். அவ்வளவே.

''ஏய் வாலு, இறங்கு, அப்பதான அவங்க உக்கார முடியும்,'' என்று மகளைப் பார்த்தவன், ''சாப்பிட, குடிக்க ஏதாவது கொண்டு வரட்டுங்களாய்யா?'' என்று தயக்கத்துடன் வந்து கேட்ட ராஜம்மாவிடம் இப்பொழுது வேண்டாமென்று சொல்லியனுப்பினான்.



ஆனால் மீண்டும் உடனே அழைத்தவன், தாரிணிக்குக் கொண்டு வரச் சொன்னான்.

''அச்சச்சோ! நாங்கெல்லாம் அப்பவே சாப்பிட்டாச்சு, என்னக்கா?'' என்று தனது மகள் சொல்லிச் சிரிக்க, அப்படியானால் இவள் வந்து வெகுநேரம் ஆகிவிட்டது போல என்று நினைக்கத் தோன்றியது.

அதை ஊகித்தவள் போல, ''நான் காலைல பத்து மணிக்கு வந்தது. இப்பதான் கிளம்பலாம்னு இருந்தேன்,'' என்றாள் தாரிணி.

அதே நேரம், ''ம்கூம் போகக்கூடாது,'' என்று மீண்டும் ஹன்ஸிகா சொல்ல, ''அது சரி. அப்புறம் அவங்க வீட்ல தேட மாட்டாங்களா?'' என்றான் குருபிரசாத்.

அதே நேரம் ராஜம்மா தனக்கு முன்னால் தயக்கத்துடன் வந்து நிற்க, என்னவென்று கேட்டான் குருபிரசாத்.

அவள் சொன்னதைக் கேட்டவன், ''சரிதான். நீங்க போய்ட்டு வாங்க. நாளைக்குக் காலைல நேரத்துல இங்க இருக்கற மாதிரி வந்துட்டாக் கூடப் போதும்,'' என்று அனுப்பினான்.

தனது மகளும் தாரிணியும் ஒட்டி உறவாடிக் கொண்டிருந்ததைப் பார்த்து ராஜம்மா என்ன நினைத்திருப்பாளென்று குருபிரசாத்தால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இவளை யார் இங்கே வீட்டிற்கு வரச் சொன்னதென்றும்

வந்ததோடு மட்டுமல்லாமல் ஏதோ தாயும் பிள்ளையும் போலத் தனது மகளுடன் கொஞ்சிப் பேசுவதும் சிரிப்பதும்...

ஏனோ எரிச்சலாக வர, முயன்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

அது மட்டுமா, கடந்த மூன்று நாட்களாகத் தனது தூக்கத்தையும் அல்லவா கெடுத்திருக்கிறாள், வேலையையும் சேர்த்து..

தன்னுடைய மனதைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாததற்கு இவளைக் குற்றம் சொல்லி என்ன பயனென்று நியாயம் பேசிய மனச்சாட்சியை அடக்கினான்.

''நீ எப்பிடி இங்க?''

குருபிரசாத் கேட்க, நடந்ததைச் சொன்னாள் தாரிணி.

''குழந்த கூப்புட்டா உடனே கிளம்பி வந்துட்றதா? ஊர் உலகத்துல பாக்கறவங்க நாலுபேர் என்ன நினைப் பாங்கன்னு யோசிக்க வேண்டாம்.''

அப்படிக் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தாள் தாரிணி.

குருபிரசாத்தின் கோபம் கலந்த எரிச்சல் அவளை என்னவோ செய்தது.

அவனைப் பார்த்ததும் வந்து மனதை நிரப்பியிருந்த அந்த இனம்புரியாத சந்தோஷமும், உற்சாகமும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்ருந்ததை உணர்ந்தாள்.

சிறிதாகிப் போன தாரிணியின் முகம் அவனையும் என்ன செய்ததோ, அதற்கு மேல் அவனும் எதையும் சொல்லியிருக்கவில்லை.

குருபிரசாத்திடம் காதலையும், கனிவையும் எதிர் பார்த்திருந்த தாரிணிக்கு, அவனுடைய சுடுமுகம் எல்லையில்லாத துயரைக் கொடுத்திருந்தது.



அதற்கு மேல் அங்கு நின்று கொண்டிருப்பதே முள்ளின் மேல் நின்று கொண்டிருப்பதைப் போலிருக்க, கிளம்புவதற்காக எழுந்து கொண்டாள்.

கூடவே குருபிரசாத் தானும் எழுந்து கொண்டது, சரி இனி என்ன, கிளம்ப வேண்டியது தானே என்று அவன் சொல்லாமல் சொல்வதைப் போலிருந்தது.

அதற்குள் தனது தந்தையிடம் வந்து நின்றிருந்த ஹன்ஸிகா, ''அக்காவக் கொண்டு போய் அவங்க வீட்ல விட்டுட்டு வந்துடலாமா டாடி?'' என்று கேட்டாள்.

''என் வரத் தெரிஞ்சவங்களுக்குப் போகத் தெரியாதா? எனக்கு ஆயிரம் வேலையிருக்கு. கண்ட உப்புப்பெறாத விஷயங்களுக்கெல்லாம் என்னால டைம் வேஸ்ட் பண்ணிட்டிருக்க முடியாது,'' என்று கோபத்துடன் சொல்லி விட்டிருந்தான்.

குருபிரசாத் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. வர்றேன் என்று இருவரிடமும் பொதுவாகச் சொல்லி விட்டுத் தாரிணி வெளியேறி விட்டிருந்தாள்.

ஏதேதோ சொல்லித் தாரிணியை அனுப்பி விட்டிருந்த குருபிரசாத்தாலும் அதற்குப் பிறகு நிம்மதியாக இருக்க முடியவில்லை.

அதிலும் கலங்கிய கண்களுடன் அவள் ஓடிச் சென்றது தான் மீண்டும் மீண்டும் அவனுடைய மனக்கண் களில் தோன்றிக் கொண்டே இருந்தது.

உண்மையிலேயே தான் சற்று அதிகப்படியாகத்தான் பேசி விட்டோமோ என்று நினைத்தவன், உடனே அப்படியெல்லாம் ஒன்றுமில்லையென்று நினைத்துக் கொண்டான்.

மென்மையாக எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்ளும் கட்டத்தைத் தான் அவள் எப்பொழுதே தாண்டி விட்டாளே. பிறகு இப்படிப் பேசாமல் என்ன செய்வதாம்.

"டாடி!" என்று அருகில் வந்த மகளிடம் கட்டாயத்தின் பேரில் சில நிமிடங்கள் சிரித்தபடி பேசியவன், பிறகு அவளுக்காக வாங்கி வந்திருந்தவற்றைக் கொடுத்து விளையாடிக் கொண்டிருக்கச் சொல்லிவிட்டுக் குளிக்கப் போனான்.

என்ன வேலைகள் செய்தாலும், மனதை எதில் திருப்ப முயன்றாலும் அதற்கெல்லாம் நடுவில் தாரிணியின் முகம் தான் மீண்டும் மீண்டும் வந்து அவனை ஒரு வழி செய்து கொண்டிருந்தது.

அவளும் சந்தோஷமாக இல்லாமல், தன்னுடைய நிம்மதியையும் கெடுத்துக் கொண்டு.......

குருபிரசாத்தைப் பொறுத்தவரை இது அவனுக்கு முற்றிலும் புதிய அனுபவம், இது நாள்வரை இப்படி எதிலும் சிக்கிக் கொண்டு மீள முடியாமல் அவன் திணறியதே இல்லை.

உண்மையை மறைக்காமல் சொல்ல வேண்டுமானால் தாரிணியை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

குறையென்று ஒதுக்கிவிட எதுவுமே இல்லாத நல்ல பிரமாதமான பெண் தான்.

ஆனால் பிரச்சனை இப்பொழுது அதுவல்லவே.

தனக்கு மட்டும் ஏற்கெனவே திருமணம் ஆகாமல், ஒரு குழந்தை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், அவ



ளுடைய காதலை மிகவும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளலாம் தான்.

ஏற்றுக் கொள்வதென்ன, இப்படிப்பட்ட பெண் கிடைப்பதற்குத் தான் பாக்கியம் அல்லவா செய்திருக்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது தான் இருக்கும் நிலைக்கு....

"டாடி!" என்று மகள் வர, "என்னடா?" என்று திரும்பினான் குருபிரசாத்.

"எனக்கு தாரிணிக்கா வேணும் டாடி. வரச் சொல்லலாமா?"

"என்னது?" என்றவனுக்குத் தனது மகளுடைய மனதிற்குள்ளும் ஆசையை விதைத்து விட்டாளோ என்று தோன்றியது.

"எதுக்குமா?"

"அக்கா இருந்தா நல்லா இருக்கும் டாடி. அதனால தான் போன் செஞ்சு அக்காவ வரச் சொன்னோம்."

"ஏன் அப்பிடி செஞ்சீங்க?"

"நான் உங்கள தான் வரணும்னு அழுதேனா, ஆனா அது முடியாதுன்னு சொல்லிட்டாங்க. அதனால தான் இங்க பாருங்க டாடி, இதப் பாத்து தான் நானே போன் பண்ணிட்டேன்," என்று மகள் நீட்டிய நோட்டை வாங்கி பார்த்து விட்டுக் கீழே வைத்தான் குருபிரசாத்.

மேலும் சிறிது நேரமும் கூட மகளுடன் நேரத்தை செலவழித்தவன், பிறகு உணவு கொடுத்து உற வைத்திருந்தான்.

அவனுக்குத்தான் சுத்தமாகச் சாப்பிடவே பிடிக்காமல் போனது.

நேராக ஹாலுக்கு வந்து அமர்ந்தவனுக்கு, எங்கே விட்டால் பைத்தியமே பிடித்து விடுமோ என்னுமளவிற்குத் தாரிணியைப் பற்றியே நினைவுகள் ஓடின.

## 19

வழக்கத்தை விடவும் சற்று முன்னதாகவே அலுவலகம் வந்து சேர்ந்திருந்தவனுக்கு, அன்று செய்யப்பட வேண்டிய வேலைகள் தான் வரிசையாக நினைவுக்கு வந்தன.

முக்கியமான அன்றைய ஆர்டருக்கு அனுப்ப வேண்டிய இயந்திரங்களைத் தயாராக வைக்கச் சொல்லி போன் செய்து சொன்னான்.

மேலும் சில முக்கியமான வேலைகளைச் செய்து முடித்தவன், கைக்கடிகாரத்தைத் திருப்பி மணி பார்த்தான்.

இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தாலும் எப்பொழுதும் இந்த நேரத்திற்கு வந்து விடுபவளாயிற்றே என்று தாரிணியை எதிர்பார்க்கத் தொடங்கினான்.

சில வினாடிகள் தான், அதற்குள் வேறு முக்கியமான வேலைகளைப் பார்க்க ஆரம்பித்திருந்தவன் மீண்டும் நிமிர்ந்தபோது நேரம் பத்துக்கு மேல் ஆகியிருந்தது.



என்ன இது, இன்னும் இந்தப் பெண் தாரிணியைக் காணவில்லையே.

வரத் தாமதமாகுமென்றால் போன் செய்து சொல்ல வேண்டியது தானே.

அதற்குப் பிறகு தான் அவள் ஒரு நாளும் தாமதமாகவோ அல்லது கேட்காமல் விடுமுறை எடுத்ததோ கிடையாதே என்பது மனதில் பட்டது.

அப்படியானால்....

ஏதேதோ எண்ணங்கள் தோன்ற, அப்படியெல்லாம் இருக்காது. வருகிற வழியில் ஏதாவது தாமதமாகியிருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

ஆனால் மேலும் ஒரு மணி நேரமும் கூடக் கடந்ததற்குப் பிறகு தான், இல்லை தாரிணி வேண்டுமென்றே தான் வராமல் இருக்கிறாள் என்பது புரிந்தது.

என்ன இது பொறுப்புணர்ச்சி சிறிதும் இல்லாமல், இப்படிச் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறாளென்று எரிச்சலாக வந்தது.

சரிதான் வரட்டும், பேசிக் கொள்ளலாமென்று வேலையில் கவனத்தைச் செலுத்த முயன்றவனுக்கு, மனதைத் துளியும் வேலையில் ஒரு நிலைப்படுத்த முடிந்திருக்கவில்லை.

உடனே போனை எடுத்து அவளுடைய மொபைலுக்கு அழைத்து விட்டிருந்தான்.

எதிர் முனையில் தாரிணி அட்டெண்ட் செய்து ஹலோ சொல்லியிருக்க, நான் குருபிரசாத் என்றான்.

சில வினாடிகள் மௌனத்திற்குப் பிறகு மெல்லிய குரலில், ''சொல்லுங்க ஸார்,'' என்றாள் தாரிணி.

"என்ன சொல்றது?" என்றவனின் கோபம் அப்படியே அவனுடைய வார்த்தைகளில் எதிரொலித்தது.

"டியூட்டிக்கு வரணும்னு நான் கூப்பிட்டு ஞாபகப் படுத்தினால் போதுமா? இல்ல நானே வந்து அழைச்சுட்டு வந்தாதான் மேடம் வருவீங்களா?"

..............

"என்ன, பேசு."

"நான் இனிமேல் வேலைக்கு வர மாட்டேன். என் ரெஸிக்னேஷன் லெட்டர் உங்களுக்குக் கூரியர்ல நாளைக்கு வரும்!" என்று சொல்லி முடிப்பதற்குள்ளேயே தாங்கிக் கொள்ள முடியாமல் அழ ஆரம்பித்து விட்டிருந்தாள் தாரிணி.

எதிர்ப்புறத்தில் தாரிணி சொன்னதைக் கேட்ட குருபிரசாத்தும் எதுவும் சொல்லத் தோன்றாமல் அப்படியே நின்று விட்டிருந்தான்.

ஆனால் அதெல்லாம் சில விநாடிகள் தான்...

தாரிணி அழுகையை முயன்று கட்டுப்படுத்திக் கொள்வது புரிந்தது.

"ரிஸைன் பண்ணிட்டு?.... சரிதான். அது உன் இஷ்டம். ஆனா நினைச்சா வர்றதுக்கும் போறதுக்கும் இதென்ன சத்திரமா? கம்பெனிக்குன்னு சில ரூல்ஸ் இருக்கறது தெரியாது...."

தாரிணி முழுமையாக உடைந்து போனது இதில் தான்.

இனி வேலைக்கு வருவதற்கில்லையென்று சொல்லும் போது மிகச் சிறிய அளவிலேனும் கவலைப்படுவான், காரணம் கேட்பான் என்றெல்லாம் எதிர்பார்த்திருந்த



வளுக்கு, மூன்றாவது மனிதர்களிடம் பேசுவதைப் போல அவன் பேசியதில் நெஞ்சுக்கூடே காலியாகி விட்டாற் போலிருந்தது.

அது சரிதான், அவனைப் பொறுத்தவரை தான் அவனுக்கு மூன்றாவது மனுஷிதானே.

அவனிடம் கூலிக்கு வேலை செய்பவள் தானே.

இந்தத் தாரிணி போனால், வேறு ஒரு மாலினி.

ஆனால் இனிமேல் தன்னுடைய வாழ்க்கை....

நீண்டு விரிந்து மனக்கண்களில் தெரிந்த எதிர்காலம் பயமுறுத்த, தாங்கிக்கொள்ள முடியாமல் கதறிவிட்டிருந்தாள் தாரிணி.

அவளுடைய கதறல் நெஞ்சைத் தொட, அப்படியே சிலை போல அமர்ந்து விட்டிருந்தான் குருபிரசாத்.

வேண்டாம், அழாதே! உனக்காக நான் இருக்கிறேன் என்று சொல்லத் துடித்த நாவைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

சொல்லி விடுவது சுலபம். ஆனால் அதற்குப் பிறகு...

ஆனாலும் அந்த வினாடியில் தன்னைப் புது மனிதனாக உணர்ந்தான் குருபிரசாத்.

தன்னுடைய வாழ்க்கைக்கே ஏதோ அர்த்தம் கிடைத்து விட்டாற் போல சந்தோஷமாகவும் -

கதறித் துடிப்பவளைச் சமாதானப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை, அதற்கு மேல் வதைக்கவும் வேண்டாமென்று, "எதுவா இருந்தாலும் நேர்ல வந்து சொல்லிட்டுப் போ. உன்னோட ஒரிஜினல் செர்ட்டிஃபிகேட்ஸ்

சிலது இங்க இருக்குங்கறது மறந்துடாத!'' என்று போனை வைத்து விட்டிருந்தான்.

போனை வைத்து விட்டிருந்தவனுக்கு, தாரிணியை அந்த வினாடியே பார்த்தாக வேண்டும் போல நாடி நரம்பெல்லாம் பரபரத்தது.

அவளுக்கும் பாவம் இப்படித்தான் இருக்குமோ?

அதிலும் ஆசையை நெஞ்சில் சுமந்து கொண்டு தன்னுடைய சம்மதத்திற்காகவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு....

தாரிணியின் நிலையை முழுமையாகப் புரிந்து கொண்டவனுக்கு அதற்குப் பிறகுதான் தன்னுடைய வார்த்தைகள் என்னும் கூர் அம்புகள் அவளை எந்த அளவிற்குக் காயப்படுத்தியிருக்கக் கூடுமென்பதையும் அவனால் சரியாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

இதுவே அவளுடைய இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தால்....

மேலும் யோசித்தவனுக்குத் தாரிணியின் இடத்தில் வேறு யாரையும் கற்பனை கூட செய்ய முடிந்திருக்கவில்லை.

அதிலும் அதுவரை அவன் பார்த்திருந்த பெரும்பான்மைப் பெண்களைப் போல அல்லாமல் நடை உடை பாவனை என அனைத்திலுமே ஒரு நாகரிகத்தையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கும் தாரிணி இப்பொழுது அவனுடைய கண்களில் மிகவும் உயர்ந்து தெரிந்தாள்.

அன்று காலையில் வேலை நேரத்திற்கு எப்பொழுதும் போல வந்த தாரிணியைத் தலையை அசைத்து வரவேற்றான் குருபிரசாத்.



பார்ப்பதற்கு ஏதோ நோய் வந்து படுத்து எழுந்தவளைப் போல ஆளே பாதியாகி விட்டிருந்தது தெரிந்தது.

ஒரே நாளில் கூட தோற்றத்தில் இந்த அளவிற்கு மாற்றம் வந்துவிடுமா என்று குருபிரசாத்திற்கே மிகவும் ஆச்சரியமாகிப் போனது.

பாவம், எந்த அளவிற்கு மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தால், இது சாத்தியமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தன்னுடைய டேபிளுக்கு வந்திருந்தவளிடம், ''உக்காரு,'' என்றான்.

ஏதேதோ பேசத் தோன்றிய மனதையும், நாவையும் வேலை நேரத்தில், அதுவும் அலுவலகத்தில் வைத்து வேண்டாமென்று கட்டுப் படுத்திக் கொண்டான்.

''பரவாயில்ல.... என் ரெஸிக்னேஷன் லெட்டர்.''

இவ்வளவு மெதுவாகக் கூட பிறருக்குக் கேட்கிற மாதிரி பேச முடியுமா என்று நினைத்து ஆச்சரியப்படுமளவிற்கு அவளுடைய குரல் இருந்தது.

இதோ இதோ என்று பயமுறுத்திய கண்ணீரை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள் தாரிணி.

அந்தக் கவரை எடுத்துக் கூடப் பார்க்காமல் நகர்த்தி வைத்தவன், ''சரிதான். ஆனா இன்னும் ஒரு மாசம் நீ இங்க வேல செஞ்சாகணும்,'' என்றான்.

இன்னுமா, கடவுளே! இதற்குமேல் எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தி எனக்கில்லையே என்று மனதிற்குள்

அரற்றியவள், எதுவும் பேசாமல் அதாவது பேச முடியாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

“முக்கியமா இன்னைக்கு நிறைய மெஷின்ஸ் வெளிய போக வேண்டியிருக்கு. அதுக்கு இன்வாய்ஸ் ரெடி பண்ணணும்,” என்றவன், “என்ன முடியுமா?” என்று கேட்டான்.

முடியும் என்பதைப் போலத் தலையை ஆட்டிய தாரிணிக்கு, எப்பொழுதும் போலத் தன்னால் அன்றைக்கு வேலை செய்ய முடியாது என்பது அப்பொழுது தெரியாது போயிற்று.

ஆனால் அவள் மனதிற்குள் எண்ணிப் பயந்து கொண்டிருந்தது போல குருபிரசாத் எதையுமே பேசியிருக்காததில் முயன்று வேலையில் ஓரளவு கவனத்தைச் செலுத்தினாள்.

அது மட்டுமில்லாமல், அவன் எப்பொழுதும் இல்லாத வகையாக மிகவும் மென்மையாகக் கூட நடந்து கொண்டான், அல்லது தனக்குத்தான் அப்படித் தோன்றுகின்றதோ என்று நினைத்துக் கொண்டாள்.

சில நிமிடங்கள் இயல்பாகவும், உடனே அடுத்த சிறிது நேரம் ஏதோ வாழ்க்கையே முடிந்து போய் விட்டாற் போல மனம் மிகவும் பாரமாகவும் என மாறிமாறித் தோன்றிய உணர்வில் மேலும் அதிகமாகச் சோர்ந்து போனாள் தாரிணி.

மதிய உணவு வேளையில் ஏதோ உணவு வந்தது. குருபிரசாத் சொன்னான் என்பதற்காக இரண்டு வாய் சாப்பிட்டவளுக்கு அதற்கு மேல் அது தொண்டையில் இறங்க மறுத்தது.



என் இப்படி மண் மாதிரி இருக்கிறதென்று நினைத்துக் கொண்டவளுக்கு, தனக்குத்தான் உணர்வுகள் மரத்துப் போய் விட்டன என்பது புரியவில்லை.

மாலை வரை எப்படியோ நேரம் போய்விட, அன்றைய நாள் கடந்து விட்டதற்காகக் கடவுளுக்கு நன்றி சொன்னாள்.

ஆனாலும் இது எத்தனை நாட்களுக்கென்று சோர்ந்து போன மனதை வேலையில் திசை திருப்ப முயன்றாள்.

மாலை கிளம்பும் போது சொல்லிக்கொள்ள வந்தவளிடம் உங்கூடக் கொஞ்சம் பேசணும் என்றவன், தாரிணியின் பார்வையில், இங்க இல்ல, கார்ல போகும்போது என்றான்.

முதல் நாள் தாரிணி போனில் அழுததிலிருந்து குருபிரசாத் முற்றிலும் மாறுபட்டவனாகியிருந்தான்.

அதற்குப்பிறகு மனம்விட்டு யோசித்தவனால் தாரிணியின் அன்பை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

சமுதாயம், நடைமுறை போன்ற கட்டுகளையெல்லாம் எளிதாகச் சமாளித்துவிட முடியுமென்ற நம்பிக்கை இப்பொழுது அவனுக்குமே வந்து விட்டிருந்தது.

ஆனாலும் குருபிரசாத் அவற்றையெல்லாம் சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாதாரணமாக நடந்து கொண்டான்.

சுற்றி நடக்கும் எதையும் கண்டுகொள்ளும் மனநிலையில் இருக்காத தாரிணிக்கும், அவனிடம் தெரிந்த அந்த வித்தியாசம் மனதில் பட்டிருக்கவில்லை.

போனால் போகிறதென்று இனியும் நோகடிக்காமல் விட்டுவிட்டான் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டாள்.

சில நிமிடங்களில் கிளம்பலாம் என்று எழுந்து நடந்தவனுடன் தானும் நடந்தாள்.

இதுவே சில நாட்களுக்கு முன்னர் என்றால் குருபிரசாத்துடன் செல்வதை நினைத்துத் தாரிணியின் மனம் துள்ளியிருக்கும்.

ஆனால் இப்பொழுது அவளுக்கு எதுவுமே தோன்றவில்லை.

அரைமணி நேரத்தில் அவர்கள் சென்ற கார், அவனுடைய வீட்டு வாசலில் வந்து நின்றிருந்தது.

இங்கே ஏன் என்று நினைத்தவளுக்கு மீண்டும் அன்று தான் வந்தபோது நடந்ததெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன.

அந்த வினாடியில் தாரிணியைத் திரும்பிப் பார்த்த குருபிரசாத்திற்கு உள்ளம் அதிர்ந்து போனது.

அனைத்துமே முடிந்து போய்விட்டாற்போல என்ன இப்படி இருக்கிறாளென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எந்த அளவிற்குத் துடிப்பாக இருந்த பெண், அதுவும் அவளுக்குச் சிரிக்காமல் பேசக்கூடத் தெரியாதே.

''இறங்கி வா,'' என்று சொன்ன குருபிரசாத் தானும் இறங்கிக் கொண்டான்.

சில வினாடிகள் தயக்கத்திற்குப் பிறகு தானும் இறங்கியவள், அவனுடன் வீட்டிற்குள் சென்றாள்.



உள்ளே வந்தவளைத் திரும்பிப் பார்த்தவன், ''பாத்ரூம் அங்க இருக்கு. போய் ஃபேஸ்வாஷ் ஏதாவது பண்றதா இருந்தா பண்ணிட்டு வா. காபி குடிச்சுட்டுப் பேசலாம்,'' என்று சொல்லிவிட்டு அவளுடைய பதிலுக்காகக் காத்திருக்காமல் உள்ளே சென்றிருந்தான்

அவன் சொல்வது போல கைகால் முகம் கழுவிக் கொண்டால் சற்று ஃப்ரஷ்ஷாக இருக்குமோ என்று நினைத்தவள், நேராகக் குளியலறைக்குள் சென்றாள்.

சில நிமிடங்களில் வெளியே வந்தவளுக்கு, ''டவல் அங்கேயே ஹேங்கர்ல இருக்கு,'' என்று உள்ளறையிலிருந்து குருபிரசாத்தின் குரல் மட்டும் கேட்டது.

முன்பே ஒரு முறை வந்திருக்கிறாளென்பதால் அவளுக்கு அங்கு எதுவும் புதிதாக இருக்கவில்லை.

அது மட்டும் தான் காரணமா, ஏதோ காலம்காலமாக இருந்து வாழ்ந்த வீட்டைப் போலல்லவா மனதிற்குத்......

முகம் கழுவி, முடியை ஒதுக்கிக் கொண்டவளுக்குப் புத்துணர்ச்சி வந்து விட்டிருந்ததோ என்னவோ, மீண்டும் ஏதேதோ எண்ணங்கள் தோன்ற, வேண்டாமென்று முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

காபி என்று ஏதோ சொன்னானே என்று நினைத்தவள், அங்கிருந்து சற்றும் நகர மாட்டேனென்று மறுத்த கால்களுடன் தானும் உள்ளறைக்கு வந்திருந்தாள்.

ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்பதற்காகத் தாரிணி வாயைத் திறக்கப் போகவும், இரண்டு கப்களில் ஆவி பறக்கக் காபி மற்றும் ப்ளேட்களில் பிஸ்கட்டுடன் குருபிரசாத் சமையலறையிலிருந்து வெளியே வரவும் சரியாக இருந்தது.

நேராகக் கொண்டு வந்து ஒரு கப் காபி மற்றும் ஒரு ப்ளேட் பிஸ்கட்டைத் தாரிணியிடம் கொடுத்தவன், அங்கிருந்த சோஃபாவில் அமர்ந்து எடுத்துக் கொள்ளுமாறு உபசரித்தான்.

அப்படியே தானும் அதே சோஃபாவின் மறுபக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

எதையோ தேடும் தாரிணியின் பார்வையில் ஊரக்குப் போயிருக்கா, யாருமில்ல என்றான்.

நல்ல பசியில் இருந்ததால் கடகடவென்று காபியில் நனைத்து நாலு பிஸ்கட்டுகளை உண்டிருந்த குருபிரசாத், சற்றே திரும்பித் தாரிணியைப் பார்த்தான்.

''என்ன, வெறும் காபி மட்டும் தானா, பிஸ்கட் எடுத்துக்கோ,'' என்றான்.

அவன் சொன்னதற்காகத் தாரிணி ஒரு பிஸ்கட்டை எடுத்துக் கொண்டிருக்க, தான் காபியைக் குடிக்க ஆரம்பித்திருந்தான் குருபிரசாத்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து காதில் வைத்தவன் சில வினாடிகள் பேசிவிட்டுத், ''திரும்பவும் கூப்புட்றேன்,'' என்று போனை வைத்திருந்தான்.

எப்படிப் பேச்சைத் தொடங்குவதென்று குருபிரசாத் யோசித்துக் கொண்டிருக்க, கடவுளே! இன்னும் கூட உன்னால் என்னை வதைக்க முடியுமா என்று மனதிற்குள் ஊமையாய் அழுதாள் தாரிணி.

ஏதோ யோசனையில் நிமிர்ந்த குருபிரசாத் இன்னும் என்ன சொல்லப் போகிறானோ என்னும் பாவனையில்



கவலையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த தாரிணியின் பார்வையைச் சந்தித்தான்.

''காபி குடிச்சாச்சா?'' என்று குருபிரசாத் கேட்க, ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் தாரிணி.

வாயைத் திறந்தால் எங்கே அழுது விடுவோமோ என்று தாரிணி பயந்து கொண்டிருக்க, அது அவனுக்கும் புரியாமலில்லை.

திருமணப் பேச்சு எந்த அளவில் இருக்கிறது என்று கேட்க நினைத்தவன் பிறகு வேண்டாமென்று, ''ரிஸைன் பண்றதா முடிவே பண்ணிட்டயா?'' என்று கேட்டான்.

இவனே இப்படியொரு கேள்வியைக் கேட்டால் என்ன பதில் சொல்ல முடியுமென்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

.......

''எதுக்கும் இன்னும் கொஞ்சம் யோசிச்சுட்டு அதுக்கப்புறமா.....''

''இன்னும் எத்தன நாள் யோசிச்சா உங்க மனசு மாறும்னு எனக்குத் தெரியலையே!'' என்று விரக்தியான புன்னகை யொன்றை உதிர்த்தவளைப் பார்த்தான் குருபிரசாத்.

''வீட்ல கல்யாணப் பேச்சு எந்த அளவுல இருக்கு?''

''தெரியல...''

''என்ன, சொல்லு?''

''இன்னும் நான் எப்பிடிச் சொன்னா, இல்ல எத்தன தடவ சொன்னா நம்புவீங்கன்னு தெரியல. உங்க

தவிர வேற யாரையும் இந்த ஜென்மத்துல நான் கல் யாணம் பண்ணிக்கப் போறதில்ல...''

உறுதியான குரலில் தீர்க்கமாகச் சொன்ன தாரிணியைப் பார்த்தவன், ''ஓ அப்ப உங்க வீட்ல இருக்கறவங்க சரிதான்னு பேசாம அப்பிடியே விட்ருவாங்களா?'' என்று கேட்டான்.

''மாட்டாங்க. காரணம் கேப்பாங்க. சொன்னா ஆயிரம் பிரச்சனைகள் வரலாம்.....''

குருபிரசாத் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, ''ஆனாலும் உங்க இடத்துல வேற எந்த ஆணை யும்..''

அதற்கு மேல் பேசமுடியாமல் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்திருந்தாள் தாரிணி.

தன்னை மீறி நீண்ட தனது கரங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டான் குருபிரசாத்.

ஒரு சில வினாடிகள் தான். அதற்குள் தாரிணியும் முயன்று சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''சொல்லுங்க குரு. நான் என்ன செஞ்சா நீங்க என்ன ஏத்துக்குவீங்க? இல்லை உங்கள மனசுல சுமந்துக்கிட்டு காலம் பூராவும் தனிமையாகவே வாழ்ந்துட்டுப் போற துக்கும் நான் தயார் தான். அதுக்கு எத்தனை தடை...''

சில விஷயங்கள் பேசறதுக்கு நல்லா இருக்கும் என்றவனைச் சொல்லொணாத வேதனையுடன் நிமிர்ந்து பார்த்தாள் தாரிணி.

''அப்ப இன்னும் கூட நான் சொல்றத நீங்க நம்பல இல்ல...''



''இல்லமா, மனசார நம்பறேன். அதனால தான் நிறைய யோசிச்சு முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்துக் குத் தள்ளப்பட்டிருக்கிறேன்.''

அப்படிச் சொன்னவனை நிமிர்ந்து பார்த்த தாரிணிக்கு அவன் என்ன சொல்ல வருகிறான் என்பது புரிய வில்லை.

''ஆமாம்மா, நானும் எல்லா உணர்ச்சிகளும் அடங் கிய ஒரு சராசரி மனுஷன் தான். உன்ன மாதிரி ஒரு பிரமாதமான பொண்ண வேண்டாம்னு மறுக்கறது எனக்கும் அவ்வளவு சுலபமா இருக்கும்னா நினைக்கற..''

குருபிரசாத்தின் வார்த்தைகள் தன்னை ஏதேதோ செய்ய, உண்மையிலேயே தனது காதுகளில் சரியாகத் தான் விழுகிறதா என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''என்னமா, இவனா இப்பிடியெல்லாம் பேசறான்னு பாக்கறியா, நீ முதன் முறையா உன் மனச எங்கிட்ட வெளிப்படுத்தினப்பவே நான் முழுசா உடைஞ்சிட் டேன். ஆமாம் தாரு, நீ ஜெயிச்சிட்டே, உன் அன்பு...''

''குரு...''

''ஆமான்டா, இதுக்கு மேலயும் யாருக்காகவும் பாத்துட்டிருக்க வேண்டாங்கற முடிவுக்கு வந்துட்டேன். உன்ன மாதிரி ஒரு அற்புதமான நல்ல பொண்ணோட மனசக் கஷ்டப்படுத்திக்கிட்டு, என்னையே நானும் ஏமாத்திக்கிட்டு..

''போதும்மா, இதுவரைக்கும் பட்டதெல்லாம் போதும்..''

எழுந்து தன்னருகில் வந்து நின்றிருந்தவனை, உதடு துடிக்க நிமிர்ந்து பார்த்தாள் தாரிணி.

''தாரு..'' என்று அழுத்தமாக அழைத்தவன் அவளுடைய இரு தோள்பட்டைகளிலும் கைகளை வைத்துத் தூக்கி நிறுத்தினான்.

அவனுடைய தொடுகையில் உடல் சிலிர்த்துப் போனவளால், நடப்பைச் சிறிதும் நம்ப முடிந்திருக்கவில்லை.

அவனுடைய பிடி அப்படியே இருக்க, ''என்னடா..'' என்றவனின் கண்களை நேருக்குநேராகப் பார்த்தாள்.

தாரிணியின் கண்களில் மாறிமாறித் தெரிந்த ஆசையும், நிராசையும், அவளால் இன்னும் நடப்பை நம்ப முடியவில்லையென்பதை எடுத்துக் காட்டியது.

''தாரு..''

மேலும் அவன் அவளைத் தன்னருகில் இழுத்துக் கொள்ள, ''குரு, நீங்க..'' என்று அழுகையில் உதடுதுடிக்க மேலே பேச்சு வராமல் அப்படியே நின்று விட்டிருந்தாள் தாரிணி.

அவனுடைய மூச்சுக்காற்று தன்மேல் விழுமளவிற்கு குருபிரசாத் மேலும் நெருங்கியிருக்க, என்னவென்று வரையறுத்துச் சொல்ல முடியாத ஒரு இன்ப அவஸ்தையில் தாரிணியின் உடல் அவளையறியாமலேயே நடுங்க ஆரம்பித்திருந்தது.

''என்னடா..'' என்றவன் அவளுடைய முகத்தைத் தனது கைகளில் மென்மையாக ஏந்திக்கொள்ள, ''குரு!'' என்று அவனுடைய கண்களுக்குள் எதையோ தேடிய தாரிணியின் கண்கள் ஏதோ ஒரு இனம் புரியாத மயக்கத்தில் தானாகவே மூடிக் கொண்டன.



''குரு.. குரு..'' என்று அரற்றியவளை அவன் எல்லையற்ற காதலுடன் அருகில் இழுத்து அணைத்துக் கொள்ள, மனம் மிகவும் லேசாகி நாடி நரம்பெல்லாம் தொய்ந்து போய் அப்படியே அவனுடைய மார்பில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டாள் தாரிணி.

நல்ல மூச்சுக் காற்றுக்கும், தண்ணீருக்கும் கூட வழியில்லாத பாலைவனத்தில் அலைந்து திரிந்து ஒன்றும் முடியாமல் இனி அவ்வளவுதான், உயிரை விட வேண்டியதைத் தவிர வேறு வழியே இல்லையென்று மூர்ச்சையடைந்து கீழே விழப்போகும் அந்த நிதர்சனமான உண்மை புரிந்த கடைசி க்ஷணத்தில், அந்த சொர்க்கத்தையே நேரில் கண்டு கொண்டாற்போல தாரிணிக்கு அவனுடைய அணைப்பு இருந்தது.

அதுவரை அவள் பட்ட துன்பமெல்லாம் அந்த அணைப்பில் அப்படியே கொஞ்சம்கொஞ்சமாகக் காணாமல் போய்க் கொண்டிருந்ததையும் ஏதோ கனவு போல அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

முடிவே இல்லாமல் இந்த அணைப்பு அப்படியே நீண்டு கொண்டே போனாலென்ன என்றும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எவ்வளவு நேரம் அந்த அணைப்பு நீடித்ததோ, அது வரை முற்றிலும் தன்னிலை மறந்து போய் அவனுடை அணைப்பில் கட்டுண்டு கிடந்தவள் மீண்டும் நட புக்கு வந்தபோது வெகுநேரம் கடந்து விட்டிருக்கு போலத் தோன்றியது.

அப்பொழுதும் அவனுடைய அணைப்பு இளகின அல்லவோ?

தாரிணியின் அரவம் உணர்ந்து, ''தாரு..'' என்று குருபிரசாத் மேலும் அவளை அருகில் இழுத்து இறுக அணைத்துக் கொள்ள, அதற்குப் பிறகு அவளுடைய நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

''குரு.. குரு..'' என்று அரற்றிக்கொண்டே அவனுடைய மார்பில் மேலும் வாகாக முகம் புதைத்துக் கொண்டாள்.

மேலும் வெகுநேரம் சென்றிருக்க, சற்றும் மனமே இல்லாமல் தனது அணைப்பைத் தளர்த்தினான் குருபிரசாத்.

''தாரு..''

குருபிரசாத்தின் மென்மையான அழைப்பில் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் தாரிணி.

அவளுடைய முகத்தில் தெரிந்த வெட்கமும், செம்மையும் தன்னை ஏதேதோ செய்ய, விழுங்கி விடுவதைப் போல அவளது கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தான் குருபிரசாத்.

''குரு..''

''ம்..''

''என்னால நம்பவே முடியல..''

.......

''உங்ககிட்டதான்..''

''என்ன நம்ப முடியல.''

சில வினாடிகளில் முழுமையாக நடப்புக்கு வந்திருந்த குருபிரசாத், அதற்குப் பிறகு தான் தாரிணியின் முக வாட்டத்தைக் கவனித்தான்.



''ஏய், என்னடா, என்னாச்சு?''

சிறிதாகிப் போன, கவலையே உருவான அவளுடைய முகத்தைப் பார்த்தவன், ''தாரு, என்னடா?'' என்று மீண்டும் கேட்டான்.

''உண்மையாகவே..''

''ம்..''

''இல்ல, நிஜமாவே உங்களுக்கு என்னப் புடிச்சிருக்கா? இல்ல சும்மா ஏதாவது..''

''என்ன உதை கேக்குதா உனக்கு? அப்ப சும்மா ஜாலிக்கு தான் நான் இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கறேன்னு நினைச்சுட்டிருக்கியா?''

அவனோடு ஒட்டி நின்றிருந்த விதத்திலும், அவன் அதைச் சுட்டிக்காட்டிய விதத்திலும் முகம் கன்றிவிட, வெட்கத்தில் மேலும் முகம் சிவந்து போனாள் தாரிணி.

ஆனால் தனது மனைவியைத் தவிர வேறு யாரையும் மனதால் கூடத் தன்னால் நினைத்துப் பார்க்க முடியாதென்று அவன் ஏற்கெனவே சொல்லியிருக்கிறானே.

ஒருவேளை, ஐயோ பாவம், போனால் போகிறதென்று தான் தன்னை ஏற்றுக் கொண்டானோ?

மேலே யோசிக்க யோசிக்க, ஆம், அப்படித்தான் என்ற முடிவுக்கே மனதிற்குள் வந்து விட்டிருந்தாள் தாரிணி.

என்னவென்பதைப் போலப் பார்த்தவனிடம் அதைக் கேட்டே விட்டிருந்தாள்.

''ஓ, அதுதான் உன் குழப்பமா? நல்லவேளை, மனசுக்குள்ளே வெச்சுக்காம கேட்டுட்ட!'' என்றவனை மேலே

என்ன சொல்லப் போகிறானோ என்பதைப் போலப் பார்த்தாள்.

ஆமாம், நான் எதற்கும் பொய் சொல்வதில்லையே. அது உண்மைதான் என்றெல்லாம் ஏதாவது சொல்லி விடுவானோ என்று அந்தச் சில வினாடிகளுக்குள்ளேயே மனதிற்குள் மிகவும் பயந்து போனாள்.

''கூல்டவுன்மா!'' என்றவன் தனது கைகளுக்குள் இருந்தவளை அப்படியே அழைத்து வந்து தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

தனது கைகளுக்குள் இருந்த தாரிணியின் மென்மையான வெண்டைப் பிஞ்சு விரல்களை ஆசையாக வருடியவன், ''அப்ப நீ உம்மனச மாத்திக்கணுங்கறதுக்காக நான் ரொம்பவும் மிகைப்படுத்திச் சொன்னது என்னவோ உண்மைதான்.

''ஆனா இந்த நிமிஷத்துல என் உடம்புல இருக்கற ஒவ்வொரு அணுவுலயும், என் மனசு முழுக்கவும் நீதான் நிரம்பியிருக்க! போதுமா?'' என்றான்.

அப்படிச் சொன்னவனைப் பார்த்த தாரிணிக்கு நெஞ்சு நெகிழ்ந்து போனது.

''குரு..'' என்று சந்தோஷத்தில் அவனுடைய கன்னத்தில் இதழ் பதித்தாள்.

''இங்க..!'' என்று அவன் தனது உதட்டைக் காட்ட, குப்பென மேலும் முகம் சிவந்து போனாள் தாரிணி.

அவளுடைய வெட்கத்தை ரசித்துக் கொண்டே புருவத்தை உயர்த்தி என்னவென்று கேட்டவனிடம், ''அதெல்லாம் அப்புறமா!'' என்றாள்.



''புரியல..''

''கல்யாணத்துக்கு அப்புறமா.''

''அப்பவாவது கிடைக்குமா?'' என்றவனின் பார்வை தன்னை ஏதேதோ செய்ய, ''ப்ளீஸ் குரு...'' என்று பேச்சை மாற்ற முயன்றாள் தாரிணி.

''அதத்தான் நானும் கேக்கறேன்,'' என்றவன் ''சரிவிடு,'' என்றான்.

''உன்னைப் பொண்ணு கேட்டு உங்க வீட்டுக்கு வந்தா உங்க அப்பா சண்டை, அடிதடின்னு எதிலாவது இறங்கிட மாட்டாரே!'' என்றவனின் வாயைப் பொத்தினாள் தாரிணி.

''என்ன குரு நீங்க?'' என்று கேட்டவளிடம், ''ஏன்னா எனக்கு அதையெல்லாம் நினைச்சா கொஞ்சம் பயம்!'' என்றான்.

தன் குருவாவது பயந்து கொள்வதாவது என்று நினைத்துக் கொண்ட தாரிணிக்கு அவன் விளையாட்டுக்குக் கேட்கிறான் என்பது புரியாமலில்லை.

ஏற்கெனவே திருமணமானவன் என்ற ஒன்றிற்காகத் தவிர, இவனைக் கூட யாராவது மறுக்க முடியுமா?

அதுவும் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில், பார்க்கவும் தோற்றத்தில் ராஜா மாதிரி கம்பீரமாக!

அப்படியென்றும் தாரிணி இல்லாததை நினைத்துவிட வில்லையென்றாலும், நடைமுறை வாழ்க்கை வேறு மாதிரியானது என்பது அப்பொழுது அவளுக்குப் புரிந்திருக்கவில்லை.

என்னதான் தாரிணியிடம் தனது மனதை வெளிப் படுத்திவிட்டான் என்றாலும், குருபிரசாத் அவை அனைத்தையும் எதிர்பார்த்தே இருந்தான்.

ஏன், முன்னிலும் அதிகமாகவே இப்பொழுது அவன் மனதிற்குள் கவலைப்பட ஆரம்பித்திருந்தான் என்று கூடச் சொல்லலாம்.

## 20

ஏதோ வாழ்க்கைக்கே புது அர்த்தம் கிடைத்து விட் டாற் போல வாழ்க்கையே மிகவும் அர்த்தமுள்ளதாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது குருபிரசாத்திற்கு.

தாரிணியுடனான தனது எதிர்காலத்தை அவனால் எளிதாகக் கற்பனை செய்ய முடிந்ததோடு, அந்த நாளை ஆவலோடு எதிர்பார்க்கவும் தொடங்கியிருந்தான்.

ஆனால் அதற்கு முன்னர் அவன் எதிர்கொள்ள வேண்டியதும் நிறைய இருக்கிறதே.

என்னதான் தாரிணியை விட அவன் அந்தஸ்தில் உயர்ந்தவனாகவே இருந்தாலும், உங்கள் பெண்ணை எனக்கு இரண்டாம் தாரமாகக் கொடுங்களென்று அவ ளுடைய பெற்றவர்களிடம் சென்று கேட்க வேண்டி யிருக்கிறதே என்பது தான் அவனுக்கு ஒரே யோசனை யாக இருந்தது.

அதற்காக அவன் ஒன்றும் தன்னைக் குறைத்து மதிப் பிட்டான் என்றில்லை.



சமுதாயத்தில் அது எந்த நிலையில் இருக்கும் பெற்றவர்களாக இருந்தாலும் தங்களுடைய மகளுக்கு அவரவர்களுடைய அந்தஸ்துக்குச் சற்றும் குறை வந்துவிடாத துணையைத் தானே தேட முற்படுவார்கள்.

அப்படி அவர்களுடைய நிலையில் இருந்து பார்க்கும் பொழுது இரண்டாம் தாரமென்பது ஒரு பெரிய குறை அல்லவா?

ஆனால் அது தாரிணிக்குப் புரிந்திருக்கவில்லை! புரிந்தாலும் அதை அவளுடைய மனம் ஒத்துக்கொள்ள மறுத்தது.

தாரிணியைப் பெண் கேட்டு குருபிரசாத் அவ ளுடைய வீட்டிற்குச் சென்று பேசும் முன்னரே, அவள் தன்னுடைய பெற்றவர்களிடம் சொல்லி விட்டிருந்தாள்.

உடனே சம்மதம் கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கா விட்டாலும், அந்த அளவிற்கு எதிர்ப்பு வருமென்றும் அவள் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பெற்றவர்களின் அளவு கடந்த கோபம் அவளை மிகவும் பாதித்து விட்டிருந்தது.

அதிலும் அவள் என்றுமே அறிந்திராத வகையில் தன்னை மிகவும் அதிகமாகப் பேசி விட்டிருந்த தந்தை, நானும் உன் அம்மாவும் உயிருடன் இருக்கும் வரை நீ நினைப்பது நடக்கப் போவதில்லை. ஒன்றுசெய். விரைவில் நாங்கள் இருவரும் இந்த உலகத்தை விட்டே போய்விட வேண்டுமென்று வேண்டுமானால் கடவுளை வேண்டிக்கொள். அப்பொழுது நீ நினைப்பது போல அனைத்தும் நடக்குமென்று கட்டுக்கடங்காத கோபத் துடன் சொல்லிவிட்டுச் சென்றிருந்தார்.

சினிமாக்களில் எல்லாம் இந்த உரையாடலைக் கேட்க நேரும் போது, இதென்ன, இந்த ஒன்றுக்கு மட்டும் அனைத்துப் பெற்றவர்களும் இதையே சொல்கிறார்களென்று கிண்டலாகச் சிரித்தவள் தாரிணி.

ஆனால் இப்பொழுது தனக்கே வந்த போது தான் அந்த வார்த்தைகள் தந்த வலியும் வேதனையும் முழுமையாகப் புரிந்தது.

அதுவும் அவளுடைய தந்தை அப்படிச் சொல்லி விட்டதைத் தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக்கொள்ள முடியாது போயிற்று.

பெற்றவர்கள் அவளுக்கு ஒரு கண் என்றால் குரு பிரசாத் அவளுக்கு மற்றொரு கண்ணல்லவா?

அதுவும் அவளது தந்தை இவ்வளவு கோபப்பட்டதை அவளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து தாரிணி இப்பொழுது தான் முதன்முறையாகப் பார்க்கிறாள்.

தாரிணியின் தந்தையான பிரபாகரன் நியாயமான ஆசைகளையும், சற்று அதிகப்படியாகவே என்றாலும் கூடக் குழந்தைகள் எதையாவது கேட்டுவிட்டால் சற்றும் யோசிக்காமல் நிறைவேற்றி வைப்பவர்.

அதிலும் அவருக்குத் தனது செல்ல மகள் தாரிணி என்றால் கேட்க வேண்டியதே இல்லை.

ஆனால் குடும்ப நிலையையும், ஒரு பெண்ணாகத் தனது எல்லையையும் நன்கு அறிந்து கொண்டிருந்த தாரிணி, அப்படியெல்லாம் அவசியம் என்று படாத எதையும் இதுநாள் வரை கேட்டதே இல்லை.

அதனாலேயே இதற்கு இவ்வளவு எதிர்ப்பு வருமென்பதையும் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை எனலாம்.



இந்த விஷயத்தில் தங்களது மகளான தாரிணியின் தீவிரம் பெற்றவர்களான அவர்களையும் மனதிற்குள் சற்று யோசிக்க வைத்தது. முக்கியமாக தாரிணியின் தந்தையை.

மறுநாளில் இருந்து தாரிணி வேலைக்குச் செல்வது நிறுத்தப்பட்டது.

ஆனாலும் எங்கே அவனுடன் போனில் பேசிவிடுவாளோ என்று வீட்டிலிருக்கும் மொபைல், லேண்ட் லைன் என அனைத்துத் தொலைபேசிச் சேவைகளும் துண்டிக்கப்பட்டன.

இப்படியெல்லாம் செய்ய வைத்துவிட்டாளே என்று பிரபாகரனுக்கும் மனதிற்குள் வேதனையாகத்தான் இருந்தது.

ஆனாலும் மகளின் மனதை மாற்றுவதற்கு அவருக்கு அதைத்தவிர வேறு வழியெதுவும் தெரிந்திருக்கவில்லை.

மொத்தத்தில் வெளியுலகத் தொடர்பே துளியும் இன்றி வீட்டுச் சிறைக்குள் அடைபட்டுப் போனாள் தாரிணி.

அப்படியே இரண்டு நாட்களும் கூடக் கடந்து போய் விட்டிருக்க, செய்வதறியாது திகைத்துத் திணறிப் போய் விட்டிருந்தாள் தாரிணி.

முதலில் அவ்வளவாகப் பெரிதாகத் தோன்றாதது, போகப்போக அவளை மிகவும் சோர்வடையச் செய்த வேதனைக்குள்ளாக்கியது.

பெற்றவர்களின் கடினமும், கட்டுதிட்டங்களு அவளுடைய தீவிரத்தை மேலும் அதிகமாக்கியதே தவி சற்றும் குறைத்திருக்கவில்லை.

திடீரென்று தனது அறைக்கதவு திறக்கப்பட, திரும்பிப் பார்த்தாள் தாரிணி.

கதிரேசன்.

இவன் எங்கே இப்பொழுது வந்திருக்கிறான் என்று நினைத்தவள், உடனே இவன் வந்ததும் கூட நல்லதற்குத்தான் என்று நினைத்துக் கொண்டாள்.

''வாங்க அத்தான்!'' என்று முடிந்த அளவு முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டு தாரிணி வரவேற்க, ''சரி, பேசிட்டிருங்க, வர்றேன்,'' என்று வெளியே வந்து விட்டிருந்தார் அவளுடைய தாய் லட்சுமி.

''உக்காருங்க, அத்தான்.''

அங்கிருந்த இருக்கையைக் காட்டித் தாரிணி உபசரிக்க, அவளுடைய முகத்தில் தெரிந்த சோர்வும் உடல் மெலிவும் கதிரேசனின் கண்களில் படத் தவறவில்லை.

தாரிணி காட்டிய இடத்தில் அமர்ந்தவன், ''சொல்லு. என்ன பிரச்சன?'' என்று கேட்டான்.

கதிரேசன் கேட்க, அப்படியானால் இவனுக்கு எதுவுமே தெரியாதா என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தாரிணியின் முகத்திலிருந்து அதை அப்படியே யூகித்தவன், ''அத்தையும், மாமாவும் உங்ககிட்ட பேசச் சொன்னாங்க. மத்தப்படி நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது,'' என்றான்.

.......

சில நிமிடங்கள் மௌனத்திற்குப் பிறகு வேறு வழியின்றி வாய் திறந்தாள் தாரிணி,



''நானே உங்ககிட்ட பேசணும்னு தான் நினைச்சுட்டிருந்தேன். நீங்க மனசு வெச்சா நிச்சயம் இதுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் அத்தான்..''

''முதல்ல விஷயத்துக்கு வா.''

கதிரேசன் பொறுமையை இழந்து கொண்டிருப்பது தெரிய, தயக்கத்துடன் என்றாலும் மெதுவாக அனைத்தையும் சொல்லி விட்டிருந்தாள் தாரிணி.

.......

''தயவுசெஞ்சு நீங்க இப்ப எனக்கொரு உதவி செஞ்சாகணும்..''

''சொல்லு.''

''குருகிட்ட எனக்காக நீங்கதான் போய்ப் பேசணும். அவருகிட்ட என் நிலைய எடுத்துச் சொல்லணும்..''

''சொல்லி..''

அப்படிக் கேட்டவனைக் கவலையுடன் நிமிர்ந்து பார்த்தாள் தாரிணி.

கதிரேசனின் முகத்தில் தெரிந்த எரிச்சலும், கோபமும் தாரிணியின் கண்களில் படத் தவறவில்லை.

ஒருவேளை தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறதோ என்று நினைத்தவள், ''என்ன அத்தான்...'' என்று அவனது பதிலுக்காக அவனுடைய முகத்தையே பார்த்தாள்.

''ம், சொல்லு.''

''திடீர்னு இப்படியெல்லாம் ஆகும்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல. நடந்தது எதுவுமே அவருக்குத் தெரியாது. அதான்..''

''என்ன நீ என்னன்னு நினைச்சுட்டிருக்க?''

பட்டென்று கதிரேசன் அப்படிக் கேட்க, அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்துப் போனாள் தாரிணி.

ஏன் இந்த நேரத்தில் ஒரு உதவிதானே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவளால் அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

தான் பாட்டுக்கு மனதிற்குப் படுவதைச் சொல்லப் போய், அவன் அதை எப்படி எடுத்துக் கொள்வானோ என்று மனதிற்குள் மிகவும் பயமாக இருந்தது. அதுவும் இந்த நேரத்தில் தனக்கு இருக்கும் ஒரே வழியே இந்தக் கதிரேசன் அத்தான் தான் என்னும் போது...

''உன் முகத்தப் பாத்துட்டே உக்காந்துட்டிருக்க எனக்கும் ஆசதான். ஆனா அதுக்கும் மேல எத்தனையோ வேலைகள் இருக்கே.''

என்ன இப்படி அநாகரிகமாகப் பேசுகிறானென்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான் அறிந்திருக்கும் கதிரேசன் அத்தான் இவர் இல்லையே என்றும்.

''தப்பா எடுத்துக்காதீங்க அத்தான். இந்த மாதிரி நிலைல நான் இருக்கேங்கறத மட்டும் நீங்க அவருகிட்ட சொல்லிட்டாக்கூடப் போதும். மத்தத அவரு பாத்துக்கு வார்..''

''அப்படி அவன் என்னத்தப் பாப்பான்..''

ஏதோ சொல்ல வந்துவிட்டுப் பிறகு நிறுத்தி விட்டிருந்த கதிரேசனைப் புரியாமல் பார்த்தாள் அவள்.



''அதுவும் இருந்திருந்து இந்த மாதிரி கேவலமான வேலயப் போய் நீ என்ன செய்யச் சொல்ற..''

கடவுளே! அப்படியானால் இவனாலும் தனக்கு உதவியென்று எதுவும் ஆகாது போலிருக்கிறதே என்று மனமுடைந்து போனாள் தாரிணி.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அவனுடைய பதிலுக்காகக் காத்திருக்கும் தாரிணியைப் பார்க்க கதிரேசனுக்கும் என்ன தோன்றியதோ?

''சரி, முயற்சி பண்றேன்,'' என்று சொல்லி விட்டிருந்தான்.

அவனுடைய பதிலில் உடனே முகம் மலர்ந்திருந்த தாரிணி, ''ரொம்ப தேங்க்ஸ் அத்தான்!'' என்றாள்.

''ரொம்பவும் சந்தோஷப்படாத.''

''......''

''என்ன பாக்கற? அதுக்கும் மேலயும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கே. அதையெல்லாத்தையும் சமாளிச்சா தான சந்தோஷப்பட முடியும். அதச் சொல்றேன்.''

''அதுவும் சரிதானே..''

மீண்டும் மனம் பாரமாகிவிட, துணி கொண்டு துடைத்தாற் போல தாரிணியின் முகத்திலிருந்த சந்தோஷமும் காணாமல் போய் விட்டிருந்தது.

''சரி, நான் கிளம்பறேன்,'' என்று எழப் போனவனுடன் தானும் எழுந்து கொண்டாள் தாரிணி.

அவள் மேலும் ஏதோ சொல்ல வருவது தெரிய, ''என்ன, சொல்லு?' என்று கேட்டான்.

"இல்ல அத்தான், அவர-இன்னைக்கே போய்ப் பாக்க முடியுமா..?"

"ட்ரை பண்றேன்," என்றவனைப் பார்த்து, சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் தாரிணி.

## 21

தாரிணியிடம் சொன்னது போல அன்றே - ஏன், அப்பொழுதே சென்று குருபிரசாத்தைச் சந்தித்தான் கதிரேசன்.

ஆனால் தாரிணிக்கு உதவுவதற்காக அல்ல.

அது தெரியாமல் கதிரேசனின் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த தாரிணி இனி அனைத்துமே சுபமாகி விடுமென்று முழு மனதாக நம்பத் தொடங்கி விட்டிருந்தாள்.

குருபிரசாத்தைச் சந்தித்து விட்டேனென்று வந்து சொல்லப்போகும் கதிரேசனின் வார்த்தைகளுக்காக ஆவலுடன் காத்திருக்கலானாள்.

வெளியே கிளம்புவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்த குருபிரசாத், அப்பொழுது கதிரேசனின் வரவைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால் இரண்டு நாட்களாக அவனே கதிரேசனைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு தான் இருந்தான்.



அதிலிருந்து அன்று காலையிலிருந்து சற்று தீவிரமாகவே.

"வா கதிர்!" என்று உள்ளே வந்த கதிரேசனை வரவேற்ற குருபிரசாத், தனக்கு முன்பாக இருந்த இருக்கையைக் காட்டி அமரச் சொல்லி உபசரித்தான்.

"என்னப்பா, எங்கயோ கிளம்பிட்டிருக்க போலிருக்கு!" என்று கேட்டுக்கொண்டே அமர்ந்தான் கதிரேசன்.

"ஆமாம்பா, திடீர்னு வெளிநாடு போயாக வேண்டிய கட்டாயம் ஒன்று வந்துடுச்சு. இங்கிருந்து இப்ப சென்னைக்குப் போய் அதுக்கப்புறம் கனடா போக இன்னும் கூட ரெண்டு நாள் ஆயிடும்."

"ஓ" என்ற கதிரேசனின் மனம் சந்தோஷத்தில் துள்ளியது.

தனக்குச் சாதகமாக அனைத்தும் நடக்கிறதே, விடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தானென்று நினைத்துக் கொண்டான்.

"என்ன, ஏதோ தீவிர யோசனைல இருக்க?" என்று கேட்ட குருபிரசாத்திடம், "அதெல்லாம் ஒன்னுமில்லையே!" என்று அவசரமாகச் சொன்னான்.

"சரிதான், எனக்குதான் அப்படித் தோனுது போலிருக்கு!" என்று தனது இருக்கையில் அமர்ந்தான் குருபிரசாத்.

"அப்புறம் என்ன சாப்புட்ற?"

"சாப்புட்றதா? நீ வேற அரக்கப் பரக்கக் கிளம்பிட்டிருக்க, இந்த நேரத்துக்கு நான் வந்து தொல்ல பண்றேன்.."

"ஆமாம் பறக்கறதுக்குதான்!" என்று சிரித்த குருபிர சாத். "ஆனா ஃப்ளைட்டுக்கு இன்னும் ரொம்ப நேரம் இருக்கு." என்றான்.

இவனால் மட்டும் எப்படிப் படிக்கும் காலத்திலிருந்தே இப்படி மற்றவர்களை ஈர்க்கும் வகையில் பேசமுடிகிற தென்று கதிரேசனால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

இப்படிப் பேசித்தான் தாரிணியை மயக்கினானோ என்றும்.

அதுமட்டுமா? உயரம், வசீகரம், பணம், அலட்சியம் போலப் பேசியே பெரிய பெரிய காரியங்களையெல் லாம் கூட எளிதாகச் சாதித்துவிடும் திறமை..

விட்டால் இன்னும் கூட நிறையச் சொல்லிக்கொண்டே போகலாமே.

ஆனாலும் இவனுக்கு இரண்டாம் தாரமாகத் தனது அத்தை மகளைக் கேட்கிறதா...

அதுவும் சிறு வயதிலிருந்தே தான் ஆசைப்பட்டு, மணக்க நினைத்திருக்கும் தாரிணியை.

கூடாது.

இவன் ஊரில் இல்லாத நாட்களில் தான் நினைப் பதைச் சாதித்தாக வேண்டும்.

அதுவும் அத்தை, மாமாவுமே தனக்குப் பெண்ணைக் கொடுக்கத் தயாராக இருக்கும் போது நாம் எதற்காக மற்ற உப்புப்பெறாத விஷயங்களுக்காகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பாக மாமாவே சம்மதித்து விட்டிருக்கும் பொழுது.



"சொல்லு, என்ன காலைலயே..." என்ற குருபிரசாத்தின் குரலில்தான் மீண்டும் நட்புக்கு வந்தான் கதிரேசன்.

"இல்ல, மார்க்கெட்டிங் மேனேஜர் போஸ்ட் ஒன்னு இப்ப வேகன்ட்டா இருக்குன்னு கேள்விப்பட்டேன்."

"ஆமா, அதுக்கு ஏற்கெனவே நிறைய அப்ளிகேஷன்ஸ் வந்திருக்கு. நான் அதையெல்லாம் பாத்துட்டு அப்புறமா சொல்றேன்."

"சரிப்பா. உன் பதில் எனக்கு ஃபேவரா இருக்கட்டும்."

"அப்புறம் நானே உங்கூடப் பேசணும்னு நினைச்சுட் டிருந்தேன் கதிர்."

"என்ன விஷயம் குரு?"

சில வினாடிகள் இடைவெளிக்குப் பிறகு விஷயத் தைச் சொன்னான் குருபிரசாத்.

"ஓ, ரொம்ப சந்தோஷம்."

அப்படிச் சொன்ன கதிரேசனைப் பார்த்த குருபிர சாத்திற்கு, அந்த வார்த்தைகள் அவனுடைய மனதின் ஆழத்திலிருந்து வந்திருக்கவில்லையென்பது புரிந்தது.

உடனே அவன் மணக்கவிருந்த பெண்ணாயிற்றே, அவனுக்கும் இதை ஜீரணித்துக் கொள்ளச் சற்று சிரம மாகத்தானே இருக்குமென்று தோன்றியது.

"தாரிணி வீட்டுக்குப் போய்ப் பேசலாம்னு இருக் கறப்பதான் இப்பிடியொரு அவசரமான பிஸினஸ் ட்ரிப் வந்துடுச்சு.."

"புரியுது, அவகிட்ட நான் விஷயத்த சொல்லிட றேன்."

"தேங்க்ஸ்பா!" என்றவன் இரண்டு கப்களில் டீயை ஊற்றி ஒன்றைக் கதிரேசனுக்கு நகர்த்திக் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.

"டீ எடுத்துக்கோ கதிர்."

"எடுத்துக்கலாம். அப்புறம் இப்பக் கொஞ்ச நாளா தாரிணி வேலைக்கு வர்றதில்ல போலிருக்கு." என்றான்.

"ஆமா, உடம்புக்குச் சரியில்ல, குணமானதும் வருவான்னு நேத்து காலைல தாரிணி வீட்லிருந்து கூப்புட்டு சொன்னாங்க." என்றவனுக்கு அவள் வேலைக்கு வராதது தின் காரணம் உடல்நலக் குறைவல்ல என்பதும் புரியவே செய்தது.

வெளிநாடு கிளம்புவதற்குச் சற்றும் மனமே இல்லா விட்டாலும் தவிர்க்கவே முடியாததும் மிகவும் அவசரமானதுமான இந்தப் பயணத்தை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் முடித்துவிட்டு வந்து பிறகு பேசிக் கொள்ளலாமென்ற முடிவுக்குத் தான் குருபிரசாத்தால் அப்பொழுது வர முடிந்தது.

ஓ, அதை அப்படியே நம்பிவிட்டானா? சரிதான். அப்படியே நினைத்துக் கொண்டு இருக்கட்டுமென்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டான் கதிரேசன்.

கதிரேசனின் எண்ண ஓட்டம் குருபிரசாத்திற்கும் புரியவே செய்தது.

எப்படியோ தான் திரும்பி வரும்வரை தாரிணி சமாளித்துக் கொண்டு விட்டால் போதுமென்று நினைத்துக் கொண்டான்.

அவளை நினைத்ததிலேயே மனம் லேசாகி அவனுடைய உள்ளமெங்கும் சந்தோஷமும், உற்சாகமும் வந்து வியாபித்துக் கொண்டது.



அதே நேரம் கதிரேசனின் உள்ளம் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது.

என்ன திமிர் இருந்தால் இவர்கள் இருவரும் தன்னை மாறிமாறித் தூது அனுப்பிக் கொண்டிருப்பார்கள். கவனித்துக் கொள்கிறேனென்று மனதிற்குள் கறுவிக் கொண்டான்.

இந்த இருவரும் மணந்துகொள்ள இருப்பதே இத்தனை நாளும் காத்திருந்த தனக்கு அவமானம் தரும் விஷயம்.

அப்படியிருக்கும்போது..

ஏதோ யோசனையிலேயே இருந்த கதிரேசனின் முகம் குருபிரசாத்தின் கவனத்தில் படத் தவறவில்லை.

அதை வெளிப்படையாகக் கேட்கவும் செய்தான்.

"இத்தனைநாளா நமக்குத் தாரிணி தானே மனைவியா வரப் போறான்னு நானும் ஜம்பமா அப்பாவோட தொழிலையே மேம்போக்காப் பாத்துட்டு இருந்துட்டேன்.."

"நீ வந்ததே வேலயப்பத்தி விசாரிக்க தான, அப்ப ஏற்கெனவே எங்க விஷயம் தெரியுமா உனக்கு?"

இப்படி வசமாக மாட்டிக்கொண்டோமே என்று நினைத்தவன், இனிமேலாவது இவனிடம் பேசும்போது சற்று யோசித்துப் பேச வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

வேல கேக்க வந்தது தம்பிக்காக. ஏன்னா இங்க வேகன்ட் இருக்கறதா பேப்பர்ல பாத்துட்டு சொன்னதே அவன்தான். ஆனா இப்ப அவனுக்கு முன்னாடி எனக்கே

வேல தேவைப்பட்டுடுச்சுன்னு சொல்றேன். வேறொன்னுமில்லே,'' என்றான்.

சமாளிக்க முடியாமல் உளறுகிறோமோ என்று கதிரேசனுக்கே சற்று சந்தேகமாகத் தான் போயிற்று.

''எப்பிடியோ, நீயே நேர்ல வந்ததுல எனக்கொரு பெரிய வேல சுலபமா நடந்துடுச்சு கதிர். நான் திரும்பி வர்றவரைக்கும் தாரிணிய நிம்மதியா இருக்கச் சொல்லு. அவங்க வீட்டுக்கும் விஷயம் தெரிஞ்சுடுச்சுன்னு நினைக்கறேன் இல்லன்னா கூப்புடாம இருக்க மாட்டா. நீ ஒன்னு பண்ணுப்பா, தாரிணி வீட்டுக்கு ஏதாவது போக வேண்டியிருந்தா அங்கிருந்து என்னக் கூப்புடு. என்னா அவள எந்த நம்பர்லயும் புடிக்க முடியல,'' என்றான்.

அழுத்தக்காரன், ஏதோ ஒன்றுமில்லாததைப் போனால் போகிறதென்று சொல்வதைப் போலப் பட்டும் படாமல் சொல்கிறானே என்று நினைத்த கதிரேசனுக்கு மனதிற்குள் எரிச்சலும் கோபமும் ஒரு சேரத் தோன்றின.

இனிவரும் நாட்களில் உங்கள் இருவரின் நிலமையும் இன்னும் மோசமாகும். போகப் போகத் தெரிந்து கொள்வீர்களென்று தனக்குத்தானே சபதம் போல சொல்லிக் கொண்டான் கதிரேசன்.

''சரிதான் குரு. நீ நிம்மதியா பிஸினஸ் ட்ரிப்ப முடிச்சுட்டு வா. எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்,'' என்றான்.

''தாரிணிய நான் விரும்பறது உனக்கு ஏதோ அநியாயம் பண்ணிட்ட மாதிரி என் மனச ஒரு ஓரமா உறுத்திக்கிட்டே இருந்தது. நீ அத சாதாரணமா எடுத்துக்



கிட்டதப் பாத்ததுக்கப்புறம் தான் அந்த கில்டி ஃபீலிங் என்ன விட்டுக் கொஞ்சம் போயிருக்கு.''

அப்படிச் சொன்ன குருபிரசாத்தைப் பார்த்த கதிரேசன், ''நீ பேசறது உன்னோட இயற்கையான பெருந்தன்மையைக் காட்டுது. சொந்தங்கறதால எங்க ரெண்டு வீடுகள்லயும் சின்ன வயசுலிருந்தே உரிமையாய்ப் பேசிக்குவாங்க. ஆனா நடைமுறை வாழ்க்கைக்கு அதெல்லாம் அப்பிடியே ஒத்துப் போயிடும்னு சொல்ல முடியாதே!'' என்றான்.

அப்பொழுதும் கூடத் தனது வீட்டில் தான் அந்த மாதிரிப் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர, தாரிணியின் வீட்டில் அப்படி எதையும் பேசியதே கிடையாதே என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வெளியே மாப்பிள்ளை பார்த்து அது பிசகாகிப் போனதாலோ அல்லது அவருடைய பெண்ணைப் பல வருடங்களாகக் கேட்டுக் கொண்டிருந்ததாலோ அதுவும் இப்பொழுது சில நாட்களுக்கு முன்னர் தான் தனது சம்மதத்தைத் தாரணியின் தந்தை சொல்லியிருந்தார், அதுவும் தன்னிடம் மட்டும் பட்டும் படாமல் ஏதோ பேச்சு வாக்கில்.

நான் சொன்னது எனக்குச் சம்மதம் என்று மட்டும் தான், சாதாரண விஷயங்களுக்கே பிள்ளைகளின் சம்மத்தை அறிந்து அதன்படி செய்பவன் நான். அப்படியிருக்கும் போது இது தாரிணியின் வாழ்க்கை விஷயம், இதில் கடைசி முடிவும் அவளுடையது தானென்றும் சொல்லிவிட்டுச் சென்றிருந்தார்.

அந்த அளவிற்குப் பார்ப்பவர் இப்பொழுது தனது செல்ல மகளின் விருப்பத்திற்கு ஏன் தடை சொல்ல

வேண்டுமென்று கதிரேசனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

உடனே அது சரிதான், தனது மகளை இரண்டாவது தாரமாகக் கொடுப்பதற்கு பிரபாகரன் மாமாவுக்கு எப்படி மனம் வருமென்று நினைத்துக் கொண்டான் (வருமென்றும்).

அதிலும் மிகவும் தன்மானம் பார்ப்பவராயிற்றே, அனைவரையும் தாம்தூமென்று அதட்டி உருட்டும் தனது தந்தையின் வார்த்தைகளே அவரிடம் எடுபடாத போது..

எது எப்படியோ இந்த இடைவெளியை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் தான் நம்முடைய திறமை இருக்கிறது.

கதிரேசனின் தீவிர யோசனை ஏதோ குருபிரசாத்திற்கும் அவ்வளவாகச் சரியாகப் படவில்லை.

முடிந்தால் தான் திரும்புவதற்கு முன்னரே தனது தந்தையைத் தாரிணியின் வீட்டிற்குப் போய்ப் பேசச்..

"சரி குரு. இனி நீ கிளம்பற வேலயப் பாரு," என்று கதிரேசன் எழுந்து விட்டிருக்க, "உங்கிட்ட சொல்லிட்ட தைரியத்துல தான் நான் நிம்மதியாப் போறேன் கதிர். எதுவானாலும் எனக்கு போன்ல கூப்புடு. நானும் அங்க போய்ட்டு உனக்கு கான்டேக்ட் பண்றேன்," என்றான் குருபிரசாத்.

சாதாரணமாக எப்படியோ, நம்பியவர்களுக்கு யாரும் பாதகம் செய்ய மாட்டார்கள், அதைத்தான் நான் உன்னிடமும் எதிர்பார்க்கிறேன் என்பதைக் குறிப்பிட்டுச்



சொல்வதற்காகத் தான் குருபிரசாத்தும் கதிரேசனிடம் கடைசியாக அப்படிச் சொன்னது.

கதிரேசனுக்கும் அது புரியவே செய்தது. ஆனால் ஏற்கெனவே கடுங்கோபத்துடன் பழிவாங்கக் காத்துக் கொண்டிருக்கும் கதிரேசனுக்கு அது காதைத் தாண்டி மனதிற்குள் நுழைந்தால் அல்லவா?

## 22

வீட்டிற்கு வந்த கதிரேசனை வரவேற்றார் பிரபாகரன்.

"வாப்பா."

"வரலாம் மாமா. எங்க யாரையும் காணல?"

"அத்தையும், தாரிணியும் உள்ள இருந்தாங்க, பசங்க ரெண்டு பேரும் கடைல இருக்காங்க."

தன்னுடைய கேள்விக்கு இவ்வளவு விளக்கமாகப் பதில் சொன்ன மாமாவை அவன் அப்பொழுது தான் முதன் முறையாகக் கண்டான்.

ஓ, அன்பு மகளுக்காக அவருடைய உள்ளம் வாடிக் கிடக்கிறதோ என்று ஏளனத்துடன் நினைத்தான்.

இவர் மட்டும் சற்று இறங்கி வந்து சரியென்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் தன்னுடைய திருமணம் எப்பொழுதோ நடந்திருக்குமே என்று கதிரேசனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அன்பு மகளாம். அவளுடைய விருப்பங்களுக்கு முக்கியத்துவமாம்.

நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துப் போவதைப் பார்த்துக் கொண்டு போக வேண்டியது தானே.

கதிரேசன் தன்னிடம் ஏதோ பேச முயற்சிப்பது புரிய, கையிலிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, "சொல்லுப்பா," என்று நிமிர்ந்தார்.

"மாமா, தாரிணி விஷயமா.."

"சொல்லு"

.......

"என்னப்பா, சொல்ல வந்தத சொல்லு. ஏன் தயங்கற?"

"தாரிணி விரும்பற பையன் ஏற்கெனவே என்னோட க்ளாஸ்மேட். அவனோட கேரக்டர் ஒன்னும் அப்பவே சரியா இருக்.."

"இத சொல்லத்தான் இவ்வளவு யோசிச்சியா? நீ சொல்றதுல உண்மையிருந்தா தயங்காம சொல்லிட வேண்டியது தான?"

"சொல்லிடலாம் மாமா. ஆனாலும் தாரிணி விரும்பற பையன். நீங்க கொஞ்சம் இறங்கி வந்தா இந்த வீட்டு எதிர்கால மாப்பி.."

"நான் இறங்கி வந்தா தான, அவ காலம் முழுக்கக் கல்யாணமே பண்ணிக்கலேன்னாலும் கூடப் பரவாயில்ல.."

"ஆனாலும் தாரிணி பாவம் தான.."

தன் மேல் விழுந்த தனது மாமாவின் கூர்மையான பார்வையில் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள கதிரேசன் சற்று சிரமப்பட்டுத்தான் போனான்.



"நீ சொல்ற காரணங்களெல்லாம் என்னைப் பொறுத்த வரைக்கும் இரண்டாம் பட்சம் தான். அவ எத்தன நாள் எப்பிடி தலைகீழா நின்னாலும் அந்தப் பையனைக் கல்யாணம் பண்ணிக்க நான் விடப்போறதில்ல."

அப்பாடா என்று மனதிற்குள் நிம்மதிப் பெருமூச்சு விட்டான் கதிரேசன்.

இன்னும் என்னென்ன பொய்களையெல்லாம் சொல்ல வேண்டியிருக்குமோ! அதுவும் இந்த மாமாவிடம் தன் வார்த்தைகளெல்லாம் எடுபடுமா என்று கலக்கத்துடன் வந்தவனுக்கு அவன் வந்த வேலை சுலபமாக நடந்தேறியது.

எப்படியோ தன்னால் திருமணம் நின்றதாக இல்லையே என்று அது வேறு ஒரு நிம்மதி.

"சின்னப் பொண்ணு. பாவம், புரியாம ஏதேதோ உளறிட்டிருக்கா. நீ ஏன் அவளக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது கதிரேசன்?"

உண்மையில் தன்னைத்தான் கேட்டாரோ? இல்லை, தனது காதுகளில் சரியாக விழவில்லையா?

அனைத்திற்கும் மேலாக இந்த மாமாவுக்குப் புத்தி ஏதாவது பிசகிப் போயிற்றா?

வருடங்கள் பலவாகத் தானும், தன் வீட்டினரும் கேட்டுக் கொண்டிருப்பதே அதைத்தானே.

ஒருவேளை இப்பொழுது மகள் செய்து கொண்டிருக்கும் முட்டாள்தனத்தினால் மனிதர் மனமுடைந்து போய் விட்டாரோ.

"என்னப்பா, எதுவும் பேச மாட்டேங்கற?"

தன்னுடைய மௌனத்தை அவர் வேறு மாதிரி எடுத்துக் கொண்டு விட்டார் என்பது புரிந்தது.

"அதுக்கு தான மாமா நாங்க ரொம்ப நாளாக் கேட்டுட்டிருக்கோம்!" என்ற கதிரேசனைச் சந்தோஷம், துக்கம் என எதுவுமில்லாத மனநிலையுடன் பார்த்தார்.

அதற்குப் பிறகு கதிரேசன் - தாரிணியின் திருமண ஏற்பாடுகள் மெதுவாக நடைபெற ஆரம்பித்தன.

முதலில் சில நாட்கள் தன்னைச்சுற்றி நடந்து கொண்டிருந்த எதையுமே தாரிணி அறிந்திருக்கவில்லை.

அறிந்து கொண்ட பின்னரோ அதை எதிர்த்து அவளால் ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போட முடிந்திருக்கவில்லை.

முதலில் அவளுடைய சம்மதத்தைப் பற்றி யாராவது கவலைப்பட்டால் அல்லவா?

தான் ஏதோ உலகத்தில் இல்லாத தவறைச் செய்து விட்டது போல வீட்டு அங்கத்தினர் அனைவரும் தன்னை அவர்களுடைய இஷ்டத்திற்கு ஆட்டுவிப்பதைத் தாரிணியால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

முக்கியமாக அவளுடைய தந்தை நடந்து கொள்ளும் முறையை.

தன்னுடைய குருவிடம் மட்டும் தான் பேச முடிந்தால்..

ஆனால் அவன் ஏன் இப்படி மௌனம் காக்கிறான்.

அவன் மட்டும் மனது வைத்தால் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் அனைத்துமே சுபமாக முடியுமே.



கதிரேசனிடமிருந்தும் தாரிணியால் எதையும் அறிந்து கொள்ள முடிந்திருக்கவில்லை.

அவன் இரட்டை வேடம் போடுகிறான் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

இன்னொருவனை மனதார விரும்பும் பெண்ணைப் போய்த் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறான் என்றால் அதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது.

அதுவும் அந்த இன்னொருவனும் அவனுடன் படித்த தோழனே என்னும்போது.

தான் அறிந்த வரையில் கதிரேசன் இவ்வளவு மோசமானவனாக இருப்பானென்று தாரிணி துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதுவும் இப்பொழுது சில நாட்களாக அவன் தன்னிடம் பேசும் சந்தர்ப்பங்களையே முடிந்த அளவு தவிர்த்து விடுவது புரிந்தது.

ஒரு விதத்தில் தாரிணியும் அதையே தான் விரும்பினாள் என்று கூடச் சொல்லலாம்.

என்னவோ அவன்தான் உலகத்தில் இல்லாத ஹீரோ மாதிரி, அவனுக்குத்தான் அனைத்துமே தெரியுமென்பதைப் போல, தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதைப் போலக் கேவலமான விஷயம் இந்த உலகத்திலேயே எதுவுமில்லையென்பது எப்படி அவனுக்குத் தெரியாது போயிற்று.

அல்லது தன்னை அவ்வளவு சின்னதாக நினைத்துக் கொண்டிருக்கிறானா?

இல்லையே, அப்படியிருந்தால் திருமணம் செய்து கொள்ள விரும்ப மாட்டானே.

ஏதோ தோன்ற, தன்னுடைய அவசியமற்ற எண்ணப் போக்கினைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் தாரிணி.

# 23

கடுங்கோபத்துடன் உள்ளே வந்த தந்தையை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் தாரிணி.

''நீ உம்மனசுல என்ன நினைச்சுட்டிருக்க?''

.....

''உன்னத்தான்..''

''சொல்லுங்கப்பா, அதுதான் நீங்க நினைக்கறது எல்லாம் அப்பிடியே நடந்துட்டிருக்கே! இனியும் என்ன?''

மெல்லிய குரலில் விரக்தியுடன் கேட்ட மகளைப் பார்த்தவருக்குக் கோபம் இன்னும் அதிகம் தான் ஆனது.

எவ்வளவு துடிப்பாக, நன்றாக இருந்த பெண். நேரத்திற்கு உண்ணாமல் உறங்காமல் ஏன் இப்படித் தன்னையே வருத்திக் கொள்ள வேண்டுமென்று எரிச்சலாக வந்தது.

காதலாம் மண்ணாங்கட்டியாம்.

சரி, அப்படித்தான் வந்தது, ஏற்கெனவே திருமணமாகி ஒரு குழந்தையும் இருப்பவன் மேலா வர வேண்டும்?

பிரபாகரனைப் பொறுத்தவரை அவர் ஒன்றும் காதலை வெறுப்பவரோ, சிறிதும் யோசிக்காமல் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவரோ அல்ல.



பெற்றவர்கள் பார்த்துப்பார்த்து முடிவு செய்து நடத்திய திருமண பந்தங்கள் மட்டும் அப்படியென்ன தோல்வியே அடைவதில்லையா?

புள்ளி விவரப்படி பார்த்தால் அவை தான் அதிகமாகத் தோல்வியடைகின்றன என்று கூட எதிலோ படித்ததாக நினைவு.

அதுவும் நல்ல புத்திசாலிப் பெண் என்றெல்லாம் நாம் நினைத்துக் கொண்டிருக்க, அதற்குத் துளியும் சம்பந்தமில்லாமல் இப்படி முட்டாள்தனமாக நடந்து கொள்கிறாளே என்று மகளின் மேல் அவருக்குப் பொல்லாத கோபம் வந்தது.

சரிதான். ஒரு தந்தையாக நான் பார்த்துச் செய்வதை நீ பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டுமென்று இப்பொழுது சில நாட்களாக அது சற்று சிரமமானதாகவே இருந்தாலும் மகளிடம் கடுமையாகத் தான் நடந்து கொண்டார் அவர்.

அவன் பெரிய பணக்காரனாக - ஏன், எம்.டி.யாகவே இருக்கட்டுமே, ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணின் மனதைக் கலைத்திருக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்.

சரி. மற்றது எப்படியோ, அதுதான் மகளுக்குக் கதிரோடு திருமண நிச்சயமே நடக்க இருக்கிறதே என் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

ஆனாலும் ஏதோ சரியில்லாததைப் போல மன குள் தோன்றிய உணர்வை என்ன முயன்றும் அவ ஏதும் செய்ய இயலவில்லை.

சரிதான், போகப்போக அனைத்தும் சரியாகி விடு மென்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார்.

இப்பொழுது பிரச்சனையே அதுவல்ல.

சில நாட்களுக்கு முன்பு வரை அது சிறிய அளவே என்றாலும் சரியாக நேராநேரத்திற்குச் சாப்பிட்டுக் கொண் டிருந்த பெண் இப்பொழுதெல்லாம் அதையும் பாதி யாகக் குறைத்துக்கொண்டு விட்டாள் என்பதை மனைவி சொல்லித் தெரிந்து கொண்டார் பிரபாகரன்.

புரியாமல் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த பெண் ணிடம், ''சாப்பிட மாட்டேங்கறியாம். ஏன்?'' என்று கேட்டார்.

''எதுக்கு சாப்பிடணும்?''

அப்படிக் கேட்ட மகளிடம், ''என்னமா, எல்லா நல்ல பழக்கங்களுமேவா உன்ன விட்டுப் போயிடுச்சு, அப் பாங்கற மரியாதை கூட இல்லாமல் பேசற?'' என்று கேட் டார்.

''என் நிலைல இருந்து பாருங்கப்பா, எம் மனசுக்குப் பிடிக்காததையெல்லாம் செய்ய உங்களுக்கு எப்பிடி மனசு வந்தது? தயவுசெஞ்சு கதிரேசனுக்கும் எனக்கும் நடக்கற கல்யாண ஏற்பாடுகள நிறுத்திடுங்க..''

''அதப்பத்திப் பேசாத, என்னப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு முடிவ எடுத்துட்டா அது அப்பிடித்தான். உனக்கும் கதிரேசனுக்கும் நடக்கப்போற கல்யாண நிச்சயத்துல எந்த மாற்றமும் இல்ல. ரொம்பவும் திமிர் பண்ணினா அப்புறம் நாள் கிழமையெல்லாம் பாத்துட் டிருக்காம கல்யாண தேதிய உடனே குறிச்சுடுவேன். ஞாபகத்துல வெச்சுக்கோ. ரொம்பவும் அவசரப்பட்டா



நாலு பேர் உன்ன பத்தி என்ன நினைப்பாங்கன்னு யோசிக்க வேண்டியிருக்கு. அதனால என் கோபத்த இன் னும் அதிகப்படுத்தாம முதல்ல ஒழுங்கா நேராநேரத் துக்குச் சாப்பிடணும். சொல்லிட்டேன்.''

ஒரே வார்த்தையில் அடித்துச் சொல்லிவிட்டுத் தந்தை வெளியே சென்றிருக்க, செய்வதறியாது அப்ப டியே அமர்ந்து விட்டிருந்தாள் தாரிணி.

அது சரிதான். நேராநேரத்திற்குச் சரியாகச் சாப்பிடத் தான் வேண்டுமென்று எரிச்சல்தான் வந்தது தாரிணிக்கு.

ஆனாலும் இனிமேல் சாப்பிடாமல் இருக்கக் கூடாது. சும்மாவாவது சாப்பிட்டேனென்று பெயர் செய்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

மேலும் ஒரு வாரமும் கூட சென்றிருந்தது.

சிறை கூட இந்த அளவிற்குத் தனிமை எண்ணத் தையும், சிரமத்தையும் கொடுக்குமா என்று தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வரவர இப்பொழுது சற்று அதிகமாகவே நம்பிக் கையை இழக்கத் தொடங்கி விட்டிருந்தாள் தாரிணி.

ஒருவேளை ஏதோ ஒரு வேகத்தில் தான் குருபிரசாத் அன்று அப்படியெல்லாம் நடந்து கொண்டானோ?

பிறகு மீண்டும் தனிமையில் அமர்ந்து யோசித்து பழையபடி மனதை மாற்றிக்கொண்டு விட்டானோ?

ஏனோ மனம் மிகவும் பாரமாகிவிட, வெகுநேரம் அழுது தீர்த்தாள் தாரிணி.

ஆனாலும் தன்னுடைய குருபிரசாத்தைப் பற்றி தொடர்ந்து அவளால் அப்படி நினைக்க முடியவில்லை.

என்னதான் ஆரம்பத்தில் மறுக்கவே செய்தாலும், அவனுக்கும் தன்மேல் ஒரு ஈர்ப்பு இருந்துகொண்டே இருந்ததைத் தாரிணி அறிவாள்.

தனக்கு அவன் சொன்ன அறிவுரைகளெல்லாம் அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்ட சமாதானங்களோ என்று கூடத் தாரிணிக்கு நிறையமுறை தோன்றியிருக்கிறது.

பேச்சு செயல் என அனைத்திலுமே அவன் கடைப்பிடித்த ஒதுக்கமே தாரிணிக்கு அவன்மேல் மிகுந்த மரியாதையை ஏற்படுத்தியிருந்தது. போகப்போக அதுவே காதலாகவும்.

"என்னங்க, ஏதோ யோசனையாவே இருக்கீங்க?"

மனைவி கேட்க, எதுவும் பேசாமல் பார்த்தார் பிரபாகரன்.

"என்னங்க?"

"தாரிணியோட நிச்சயத்தப் பத்திதான் யோசிச்சுட்டிருக்கேன்."

"எதுக்கும்.."

"சொல்லு, ஏன் நிறுத்திட்ட?"

"இல்ல, எதுக்கும் ஒரு முறைக்கு நாலு முறை யோசிச்சுக்கணும்னு சொல்றேனுங்க. நம்ம தாரிணியோட குணம் தெரிஞ்சதுனால தான் இதக்கூட சொல்றேன், அவ எதுக்குமே இதுநாள் வரைக்கும் பிடிவாதம் பண்ணினதில்ல. சொன்னா உடனே சரின்னு கேட்டுக்குவா."

......



"ஆனா இப்பக் கொஞ்ச நாளா அவ நடந்துக்கறத நினைச்சாலே ரொம்ப பயமா இருக்கு. மனசு உடைஞ்சு ஏதாவது பண்ணிக்குவாளோன்னு.."

ஏற்கெனவே மனம் குழம்பிப் போயிருந்த பிரபாகரன் மனைவியின் வார்த்தைகளில் மேலும் சற்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தார்.

ஆனாலும் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"என்னங்க?"

"அதுக்காக அவ பண்ற முட்டாள்தனத்துக்கெல்லாம் சரிசரின்னு தலைய ஆட்டிட்டுப் பேசாம இருக்க முடியுமா? தேவையில்லாம மனசப் போட்டுக் குழப்பிக்காம வேலயப்பாரு." என்றுவிட்டுப் படுக்கைக்கு வந்திருந்தார்.

என்னதான் மனைவியிடம் மறுத்துவிட்டு வந்திருந்தாலும் கதிரேசனுக்குத் தாரிணியைக் கொடுப்பதை நினைத்து இப்பொழுது அவருக்குமே சற்று யோசனையாகத்தான் இருந்தது.

அவசரப்பட்டு விட்டோமோ என்று பயமாகவும்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள்தான். உடனே தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டுவிட்டிருந்தார்.

இரண்டாம் தாரமாக எவனுக்கோ கொடுப்பதை விட கதிரேசன் எவ்வளவோ மேலென்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டார்.

எவ்வளவு பிரமாதமான இனிமையான பெண், ஏதோ போனால் போகிறதென்று அகப்பட்டவனுக்குத்

திருமணம் செய்து கொடுக்க வேண்டிய நிலைக்கு நம்மைத் தள்ளி விட்டாளே என்று மனமும் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

## 24

அன்று காலையில் எழும்போதே ஏனோ பிரபாகரனின் மனதிற்கு எதுவுமே சரியாகப் படவில்லை.

ஏதோ அனைத்துமே கைமீறிப் போவதைப் போல உணர்வு தோன்றி அவரை மனம் குழம்பச் செய்தது.

தொடர்ந்து வரும் இரண்டு நாட்களில் திருமண நிச்சயம் நடக்கவிருப்பதால் அதைப் பற்றி பேசுவதற்காகத் தனது எதிர்காலச் சம்பந்தியின் வீட்டிற்குப் புறப்பட்டார்.

உடன் வருவதாகச் சொன்ன மனைவியை மறுத்து விட்டுத் தான் மட்டும் தனியாகத்தான் சென்றார்.

அனைவரும் வீட்டில் இருக்கிறார்களோ என்னவோ என்று நினைத்துக்கொண்டே வாசலில் காலணிகளை விட்டவருக்கு, ''சரிதான் விடுங்கம்மா,'' என்ற கதிரேசனின் குரல் தான் முதலில் கேட்டது.

தாய் மகனுக்குள் ஏதோ விவாதம் போலிருக்கிறதென்று நினைத்துக் கொண்டவர், விட்டிருந்தால் இன்னும் சில வினாடிகளில் வீட்டுக்குள்ளேயே சென்றிருப்பார்.

அதற்குள் மீண்டும் கேட்ட கதிரேசனின் வார்த்தைகள் அவரைத் தடுத்து நிறுத்தியிருந்தன.



''சரிம்மா. அதுக்கு இப்ப என்னதான் செய்யலான்றீங்க? நிச்சயதார்த்தத்த வேணும்னா நிறுத்திடலாங்கறீங்களா?''

''எனக்கெதுவுமே புரியல போடா. சரி, போனாப் போகுது விடு. பேச்சுக் குடுத்தது குடுத்த மாதிரியே இருக்கட்டும்.''

போனால் போகிறதா? எது போனால் போகிறது? நிச்சயதார்த்தமா? இல்லை..

''இப்பவும் வேற வழியில்லேன்னு தான் அவரு இறங்கி வந்திருக்காரு. எனக்கு வந்த எரிச்சலுக்கு அன்னைக்கே அப்பிடியெல்லாம் என்னால பண்ணிக்க முடியாதுன்னு சொல்லலாம்னுதான் இருந்தேன்..''

''அதத்தான்டா இப்பவும் சொல்றேன். போய் ஒரே வார்த்தை முகத்துலடிச்ச மாதிரி சொல்லிட்டு வந்துடு. நீ எதுக்கு அந்த மாதிரி நடத்த சரியில்லாதவளக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஒரேயடியா நின்னு உன்னோட வாழ்க்கைய ஸ்பாயில் பண்ணிக்கற?''

''நீங்க கேக்கறதுல இருக்கற நியாயம் எனக்குப் புரியுதுமா. இப்ப எப்பிடியிருந்தாலும் கல்யாணத்துக்கப்புறம் மாத்திடலாங்கற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு..''

''ஒரு வேளை இன்னும் நடத்த மோசமாயிட்டா?''

.......

''ம்... இதுதான், உன்னாலயே பதில் சொல்ல முடியல பாத்தியா? வேண்டான்டா. எத்தனையோ நல்ல பொண்ணுங்க இருக்கும் போது இவளுக்காக நாம ஏன் பாக்கணும்? எப்ப இத்தன நாளா நாம கேக்கும் போதெல்லாம்

பேசாம இருந்துட்டு இப்ப அவங்களே வலிய வர்றாங்களோ. அதுல இருந்தே நாம புரிஞ்சுக்க வேண்டாம்..''

''சரிதான்மா. சொல்லுங்க. இப்ப நாம என்ன தான் செய்யலாம்?''

''வாக்கு குடுத்தது குடுத்த மாதிரியே இருக்கட்டும். எங்கெங்கயோ பாத்தும் அமையாம, கடைசில இதுதான் உனக்கும் அமைஞ்சிருக்கு. இப்பவே வருஷங்கள் கழிஞ்சு போச்சு. இதயும் வேண்டாம்னு சொல்லி எல்லாமே கெட்டுடப் போகுது.''

''சரிம்மா.''

''ஆமா, நாம பாட்டுக்குப் பேசிட்டே இருக்கோம், உங்கப்பா இருந்திருந்தா இதுக்குள்ள அவர் இஷ்டத்துக்கு ஆயிரம் தடவ மூக்க நுழைச்சிருப்பாரே! என்னவோ அவருக்குத்தான் எல்லாமே தெரியுங்கற மாதிரி. எங்க போய்ட்டார்?''

தாயும் மகனும் அப்பொழுது தான் நடப்புக்கு வந்திருக்க, பிரபாகரன் வீட்டிற்கு வந்ததையோ தங்களுடைய உரையாடலைத் தாங்கிக் கொள்ள முடியாது கிளம்பிச் சென்று விட்டதையோ என எதையுமே அவர்கள் அறிந்திருக்கவில்லை.

கிளம்பிச் சென்ற வேகத்திலேயே வீடு திரும்பி விட்டிருந்த கணவனைப் புரியாது பார்த்தார் லட்சுமி.

என்னவென்று விசாரிக்கலாமென்று பார்த்தால் இறுக்கமாகக் கடுகடுவென்றிருந்த அவருடைய முகத்தைப் பார்த்தவருக்கு மேலே வாயைத் திறக்கவே பயமாக இருந்தது.

இங்கே மகளும் வேறு நேற்று மதியத்திலிருந்தே நீங்கள் நடக்கவிருக்கும் நிச்சயத்தை நிறுத்தி விடும்



வரை எதையும் கையால் கூடத் தொடமாட்டேனென்று உண்ணாமல் அழிச்சாட்டியம் பண்ணுகிறாள்.

எதுவும் பேசாமல் உள்ளறைக்குச் சென்று விட்டிருந்த கணவனைச் செய்வதறியாது பார்த்தபடி நின்று விட்டிருந்தார் லட்சுமி.

அதேநேரம் வீட்டிற்குள் வந்த அந்தப் புதிய மனிதரை வரவேற்றார்.

கணவருக்குத் தெரிந்தவராக இருப்பாரோ, யாரென்று தெரியவில்லையே என்று நினைத்துக் கொண்டே வந்திருந்தவரைப் புரியாமல் பார்த்தார்.

''நான் ராகவேந்திரன். பிரபாகரன் இருக்காரா?''

''ம். உள்ளே இருக்கார். உட்காருங்க. இதோ அவர்கிட்ட சொல்றேன்,'' என்று அங்கிருந்து நகர்ந்தார்.

சில வினாடிகளில் முன்னறைக்கு வந்திருந்த பிரபாகரன் வந்திருந்தவரை உபசரித்து விட்டுத் தானும் அமர்ந்தார்.

''நான் ராகவேந்திரன்.''

''சொல்லுங்க.''

''எப்படி ஆரம்பிக்கறதுன்னு தெரியல. ஆனாலும் நிச்சயம் பேசியே ஆக வேண்டிய விஷயம்..''

வந்திருப்பவர் வயதிலும் வசதியிலும் தன்னைவிடப் பெரியவர் என்பது பார்த்த உடனேயே புரிந்தது.

அப்படியென்ன விஷயம்? முதலில் இவர் யாரென்றே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள வில்லையே..

தயங்கித் தயங்கி என்றாலும் நிதானமாகவும், தெளிவாகவும் வந்த விஷயத்தை முழுமையாகச் சொல்லி

முடித்திருந்தார் ராகவேந்திரன். அதாவது குருபிரசாத்தின் தந்தை.

சும்மா என்றால் எப்படியோ, சற்று முன்னர் சுதிரேசனும் அவனுடைய தாயும் பேசிக் கொண்டிருந்தது பச்சை ரணமாக நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்ததால் பிரபாகரனாலும் முகத்திலடித்தது போலெல்லாம் உடனே எதையும் சொல்லிவிட முடிந்திருக்கவில்லை.

ஏன், எதையுமே அவரால் பேச முடிந்திருக்கவில்லை, அதாவது பேசத் தோன்றவில்லை.

வந்திருப்பவர் தன்னுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, தொண்டையைச் செருமிக் குரலைச் சீர்படுத்திக்கொண்டு வாயைத் திறந்தார் பிரபாகரன்.

சற்று தொலைவில் நின்று கவனித்துக் கொண்டிருந்த மனைவியைத் திரும்பிப் பார்த்தவர், ''குடிக்கத் தண்ணி எடுத்துட்டு வா,'' என்றார்.

''சரி. மகன் மேல இருக்கற பாசத்துல கிளம்பி வந்துட்டீங்க. என்னோட இடத்துல இப்ப நீங்க இருக்கீங்கன்னு வெச்சுக்கோங்க. என்ன முடிவு எடுத்திருப்பீங்க, சொல்லுங்க.''

அப்படிக் கேட்ட பிரபாகரனை எதுவும் பேச முடியாமல் பார்த்தார் குருபிரசாத்தின் தந்தை ராகவேந்திரன்.

''பதில் சொல்ல முடியல இல்லையா? உங்கள கேள்வி கேக்கணுங்கற எண்ணமோ, ஆசையோ எனக்கில்ல. அதே மாதிரி பணமோ, வசதியோ எங்கிட்ட எதுவும் பெருசாக் கிடையாது. ஆனாலும் குழந்தைங்களுக்கு



நல்ல படிப்பையும், பழக்க வழக்கங்களையும் போதிச்சிருக்கோம்..''

......

''சரி. நேரடியாகவே விஷயத்துக்கு வர்றேன்,'' என்றவர் மனைவி கொண்டு வந்து நீட்டிய தண்ணீரை அவர் எடுத்துக் கொண்டதும் தானும் எடுத்துக் குடித்து விட்டுப் பேச்சைத் தொடர்ந்தார்.

''ஆனாலும் நாங்க எடுக்கற முடிவுகளுக்கு அவங்க கட்டுப்படுவாங்க. உங்க மகனுக்கு எம்பொண்ண ரெண்டாந்தாரமாகக் குடுக்கறதுக்கு எனக்குத் துளியும் சம்மதமில்ல..''

''ஆசப்பட்டது உங்க வீட்டுப் பொண்ணும் தான்.''

''அதனால தான் உக்காந்து பேசிட்டிருக்கேன்.''

''எதுக்கும் நீங்க கொஞ்சம் யோசிக்கலாமே.''

''எதுக்கு யோசிக்கணுங்கறீங்க? அப்படி யோசிச்சா உங்கமகன் எம்பொண்ணோட மனசக் கெடுத்த பாவத்துக்கு..''

''வேண்டாமே, எப்பிடியோ தெரிஞ்சோ தெரியாமலோ அவங்க ரெண்டு பேரும் ஆசப்பட்டுட்டாங்க. பெரியவங்க நாம சரியான முடிவ எடுக்கறதப்பத்தி யோசிக்கலாமே..''

ராகவேந்திரனின் தணிவான குரல் பிரபாகரனை யோசிக்க வைத்தது என்றாலும் அவர் அதைச் சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''என் சின்ன மகனப்பத்தி நானும் கொஞ்சம் சொல்லக் கடமைப்பட்டிருக்கேன். தயவுசெஞ்சு கேளுங்க,'' என்றவரை எதுவும் பேசாமல் பார்த்தார்.

அதையே சம்மதமாக எடுத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார் ராகவேந்திரன்.

''சின்ன மகனுக்குக் கல்யாணமான வருஷத்துலயே ஒரு குழந்த. அந்த டெலிவரிதான் என் மருமக போய்ச் சேர்ந்ததும். போன மாசத்தோட நாலு வருஷமும் கூட முடிஞ்சு போய்டுச்சு. நாங்களும் எத்தனையோ தடவ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அவனக் கம்பெல் பண்ணியிருக்கோம்..''

பிரபாகரனின் அக்கறையில்லாத முகபாவனை அவருடைய பேச்சையும் சற்று நிறுத்தியிருந்தது.

ஆனாலும் உடனே தொடர்ந்து சொல்ல ஆரம்பித்து விட்டிருந்தார்.

''அவனுக்கு மட்டும் இன்னொரு கல்யாணம் நடந்தா அதவிட ஒரு பெரிய சந்தோஷம் எங்களுக்கு வேற இருக்கவே முடியாது. தோற்றம், பதவி, பணம், குணம்னு எதுலயுமே எங்க மகனும் குறைஞ்சவன் கிடையாது.''

''நீங்க பேசறதப் பாத்தா என்னவோ அந்த குண நலன்கள் எல்லாம் உங்க மகங்கிட்ட குறைவா இருக்கறதால தான் நாங்க எங்க வீட்டுப் பொண்ணைக் குடுக்க யோசிக்கறோம்னு சொல்ற மாதிரியிருக்கு.''

.......

''நீங்க உங்க மகனோட இடத்துல இருந்து யோசிக்கறீங்கன்னா நாங்க,எங்க மகளோட இடத்துல இருந்து யோசிக்கறோம். அவ்வளவுதான். தயவுசெஞ்சு அதை நீங்க புரிஞ்சுக்கோங்க.''

''அது நல்லாவே புரியுதுங்க. நீங்களும் ஒன்னும் இப்பவே உங்க முடிவ சொல்ல வேண்டாம். மெதுவா



யோசிச்சு.. வேண்டாமே. உங்க முடிவு எதுவா இருந் தாலும் அத ரெண்டு நாள் யோசிச்சுட்டு அப்புறமா சொல்லுங்களேன்.

''உங்க முடிவுகள உங்க குழந்தைகளும் ஏத்துக்கு வாங்கன்றது பெருமையான விஷயம் தான். அந்த மாதிரியான பிரமாதமான பிள்ளைகளுக்கு நீங்களும் ஏன் அவங்க விரும்பற மாதிரியான சந்தோஷமான நிம்மதி யான வாழ்க்கையைக் குடுக்கக் கூடாது?

''மகனுக்குத் திடீர்னு ஒரு முக்கியமான வேலையா வெளிநாடு போயாக வேண்டிய கட்டாயம் ஒன்னு. அத னால தான் நான் வந்து பேசறேன்.

''அவனுக்கு எப்பவுமே தன்மானம் ரொம்பவும் அதிகம். அந்த அளவுக்கு ரொம்பத் திறமையானவனும் கூட.

''தொழில்ல யாரும் நினைச்சுக் கூட பாக்க முடியாத வேகத்துக்கு வளர்ந்துட்டிருக்கான். அது உங்க பொண்ணு சொல்லி உங்களுக்கும் தெரிஞ்சு கூட இருக்கலாம்.

''இன்னும் சில வருஷங்கள்ல இந்தப் பெரிய சிட்டியி லயே விரல் விட்டு எண்ணக்கூடிய தொழிலதிபர்கள்ல ஒருத்தனா அவனும் வரத்தான் போறான்.

''நான் ஏன் இதையெல்லாம் உங்ககிட்ட சொல்லிட் டிருக்கேன்னா ஒரு குறைக்காக உங்க மகளுக்குக் கிடைக்க இருக்கற வளமான, அவ மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையை நீங்க விட்டுடக் கூடாதுங்கறதுக்காகத் தான்.

''எத்தனையோ பெரியபெரிய இடங்கள்ல இருந்தும் இப்பவும் அவனுக்கு ஜாதகங்கள் வந்துட்டே தான்

இருக்கு. ஆனாலும் அவன் 'ம்'னு ஒரு வார்த்த சொல் லாம அவனோட விஷயத்துல நாங்க செய்ய எதுவுமே இல்லேன்னு தான் பேசாம இருந்தோம்..''

.......

''நீங்க மட்டும் மனசு வெச்சா..''

கணவன் தண்ணீர் கொடுக்கச் சொன்ன தைரியத்தில் இருவருக்கும் காபி எடுத்து வந்து கொடுத்தார் லட்சுமி.

உள்ளறையில் இருந்த தாரிணிக்கு வெளியே நடந்த எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

அவளுடைய பெற்றவர்களும் அதை மகளிடம் - ஏன், வீட்டில் யாரிடமுமே சொல்லியிருக்கவில்லை.

நடைமுறையை ராகவேந்திரன் பேசியிருந்த விதம் தாரிணியின் பெற்றவர்களை யதார்த்தமாக யோசிக்க வைத்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

சொந்தபந்தம், தெரிந்தவர் அறிந்தவரென்று ஊர் உலகத்தில் இருக்கும் அனைவருக்காகவும் பார்த்துக் கொண்டு மகளுடைய வாழ்க்கையை எதற்காகப் பணயம் வைக்க வேண்டுமென்று முதன்முறையாக வேறு மாதிரி யோசிக்க ஆரம்பித்திருந்தார் பிரபாகரன்.

அதிலும் நாளுக்குநாள் உண்ணாமல் உறங்காமல் மகள் துரும்பாகிக் கொண்டே வருவதைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவருக்கு, இப்பொழுது ஊர் உலகம் இரண்டாம் தாரம் என்பதெல்லாம் மிகவும் சின்ன விஷயங்களாகிப் போயிருந்தன.

மகள் சந்தோஷமாகச் சிரித்து நிம்மதியான வளமான வாழ்க்கை வாழ்ந்தால் அதுவே போதுமென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.



அந்த மாதிரி சரியான பாதையில் யோசிக்க ஆரம்பித் திருந்தவருக்கு அதற்குப் பிறகு தான் இயல்பாகச் சிரிக்கக் கூட முடிந்தது.

''வாங்க வாங்க.''

''என்ன ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போலி ருக்கு!'' என்று உள்ளே வந்த நண்பனையும் அவனுடைய மனைவியையும் வரவேற்று அமரச் சொல்லி உபசரித் தார் பிரபாகரன்.

''அடடா! அப்ப நாங்க வந்த நேரம் நல்ல நேரம்னு சொல்லு.'' என்ற நண்பனிடம் பிரபாகரன் மனதிலிருந்த வற்றைச் சொல்ல ஆரம்பித்து விட்டிருக்க, நண்பனுடைய மனைவி லட்சுமியைப் பார்ப்பதற்காக உள்ளே வந்து விட்டிருந்தார்.

தனது நண்பன் சொன்ன அனைத்தையும் கவனமாகக் கேட்டுக் கொண்டே வந்த பிரபாகரனின் நண்பன் ராகவன், ''ஆமா அவரோட பேரு என்னன்னு சொன்ன?'' என்று தனது நண்பனைப் பார்த்துக் கேட்டார்.

''ராகவேந்திரன். அவரோட சின்ன மகனத்தான் தாரிணி..''

''அடடா, அவங்க எல்லோரையுமே ரொம்ப நல்லாத் தெரியுமே. ஏன், சொந்தமும் கூட..''

அப்படிச் சொன்ன நண்பனிடம் அப்படியா என்று கேட்டார் பிரபாகரன்.

''அட, ஆமாம்பா, என்னோட அத்தை காவேரின்னு... நீ கூட அவங்கள நிறைய முறை பாத்திருப்பன்னு..''

''ஆமாமா, எனக்கு அவங்கள ரொம்ப நல்லாத் தெரியும். அவங்க வீட்டு ஃபங்ஷனுக்குக் கூட போன வருஷம் நான் உங்கூட வந்திருந்தேனே.''

''கரெக்ட், அவங்களோட கடைசி மகதான் நீ சொல்றியே ராகவேந்திரன், அவங்க வீட்டுப் பெரிய மருமகள்.''

''ஓ!''

''என்ன சுத்தி வளைச்சு ரொம்பவும் தெரிஞ்சவங்களாயிட்டாங்களேன்னு பாக்கறியா? அது மட்டுமில்ல, ரொம்ப செல்வாக்கான தங்கமான மனுஷங்களும் கூட.'' என்ற ராகவனைப் பார்த்தார் பிரபாகரன்.

''ஆனா என்ன, என்னோட அத்த பொண்ணப் பத்தி நானே சொல்லக்கூடாது. ஆனா உங்கிட்ட அதுவும் இந்த நேரத்துல சொல்லலாம். தப்பில்ல. மந்தாகினின்னு பேரு. அத்த வீட்டுக்கே நிறையப் பசங்களுக்கு நடுவுல ஒரு பொண்ணுன்னு ரொம்பவும் செல்லம் குடுத்து வளத்திட்டாங்க. யாரோட பேச்சையும் அவ்வளவாக் கேக்க மாட்டா. தன்னிஷ்டத்துக்கு தான்தோன்றித்தனமா தான் நடந்துக்குவான்னு வெச்சுக்கோயேன். அவளையே அவ புகுந்த வீட்ல எவ்வளவு பிரமாதமா வெச்சுக்கறாங்க தெரியுமா..!''

''நீ சொல்றதெல்லாம் பாக்கும் போது..''

''தாரிணிய யோசிக்காம, ரெண்டாந்தாரமான்னு எல்லாம் பாக்காம அந்த வீட்டுச் சின்ன மகனான குருபிரசாத்துக்கு சந்தோஷமாகக் குடுக்கலாம்.

''ரொம்பப் பிரமாதமான திறமையான பையன்.

''அஞ்சாறு வருஷங்களுக்கு முன்னாடி சின்ன லெவல்ல ஆரம்பிக்கப்பட்ட கம்பெனி இன்னைக்கு



எவ்வளவு பெரிய கம்பெனியா வளந்து நிக்கிது தெரியுமா? அதுக்கு அந்தத் தம்பியோட உழைப்பும் திறமையும் தான் காரணம்.

''அதுவும் தாரிணியும் அங்கதான் வேல செஞ்சுட்டுருக்காங்கற போது உனக்குமே தெரிஞ்சுதான இருக்கும்.''

தனது நண்பன் சொல்லச்சொல்ல, ஏதோ கழுத்து வரை வந்து விட்டிருந்த மிகப்பெரிய இக்கட்டிலிருந்து எளிதாகத் தப்பித்துக் கொண்டதைப் போலப் பிரபாகரனின் மனம் மிகவும் லேசாகி விட்டிருந்தது.

அதிலும் அவருடைய நண்பனான ராகவன் சிறுவயது முதலே அவருக்கு மிகவும் நல்ல பழக்கம் என்பதால், அதற்கு மேல் அவருடைய பயமனைத்தும் அகன்று போய் மகள் நல்ல இடத்தில் சென்று வாழப் போகிறாளே என்று சந்தோஷமாகக் கூட இருந்தது.

இரண்டாம் தாரம் என்ற ஒரு உறுத்தல் மட்டும் இப்பொழுதும் 'மனதின் ஓரத்தில், அது மிகச் சிறிய அளவே என்றாலும் இருக்கவே செய்தது.

ஆனால் அதெல்லாம் மறுநாள் அவருடைய எதிர்கால மருமகனை நேரில் பார்க்கும் வரைதான்.

## 25

தனது தந்தை சற்று முன்னர் வந்து சொல்லிவிட்டுச் சென்றதைத் தாரணியால் துளியும் நம்ப முடியவில்லை.

ஆனால் இந்த விஷயத்தில் அதுவும் தனது தந்தை ஏன் விளையாடப் போகிறார் என்று நினைக்கத் தோன்றியது.

ஒருவேளை இன்னும் சில நாட்கள் இப்படியே விட்டால் எங்கே மகளுக்கு மனநிலை பாதிக்கப்பட்டு விடுமோ என்று பயந்துகொண்டு..

இருக்காது. அப்படியெல்லாம் நிச்சயம் இருக்காது.

சரிதான், குருபிரசாத்தும் அவனுடைய வீட்டினரும் வரப்போவதாகத் தனது தந்தை சொல்லிவிட்டுச் சென்ற அந்த நேரத்திற்கு இன்னும் அரைமணி நேரம்தானே இருக்கிறது. பார்க்கலாம்.

ஆனால் தனது குருவை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்த தாரிணிக்கு அந்த அரைமணி நேரமே அரை யுகமாகக் கழிந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

அடிபட்டுப் பட்டு நைந்து போன அவளுக்கு ஏனோ துளியும் நம்பிக்கை வர மறுத்தது.

ஆனால் தந்தை சொன்ன நேரத்திற்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாகவே வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நிற்கத் தாரிணியின் நெஞ்சு நடுக்கத்தில் படீர்படீரென்று அடித்துக் கொண்டது.

அனைவருக்கும் முன்னதாகவே கீழே இறங்கியிருந்த பெரிய எம்.டி. அதாவது ராகவேந்திரன் தான் முதலில் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தார்.

அடுத்ததாக அவருடைய மனைவி, பெரியமகன், மருமகள் என அனைவரும்..

தனது தாயின் அழைப்பில் வெளியே வந்திருந்த தாரிணி, தனது பெற்றவர்களைத் தொடர்ந்து தானும் வீட்டிற்குள் வந்தவர்களை வரவேற்றாள்.



அவள் முக்கியமாக மிகவும் எதிர்பார்த்தவனைக் காணாது போக, ஆவலுடன் மேலும் யாராவது வருகிறார்களா என்று வாசலையே பார்த்தாள்.

தனது பெற்றோரும், குருபிரசாத்தின் வீட்டினரும் நீண்ட நாட்கள் பழகியவர்களைப் போலப் பேசிக் கொண்டது கூடத் தாரிணியின் கவனத்தை ஈர்த்திருக்கவில்லை.

தாரிணியின் ஏக்கமும், எதிர்பார்ப்பும் புரிய, "ரோடு சின்னதுங்கறதால கார ஒரு ஓரமாப் பார்க் பண்ணிட்டு குரு வருவான். வாம்மா, வந்து உக்காரு." என்று தனது எதிர்காலச் சிறிய மருமகளை ஆசையுடன் அருகில் வந்து அமரச் சொன்னார் அம்சவள்ளி.

அனைவரும் தன்னையே புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருப்பது புரிய, கடவுளே! இப்படி நடந்து கொண்டு விட்டோமே என்று தாரிணிக்கும் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

பதிலுக்கு முயன்று அவளும் தன்னைச் சாதாரணமாகக் காட்டிக்கொள்ள வேண்டி ஒரு புன்னகையை உதிர்த்தாள்.

அதே நேரம் குருபிரசாத் உள்ளே வர, முதலில் சந்தோஷமாகச் சென்று வரவேற்றவர் பிரபாகரன்.

சில வினாடிகளில் தன்னை நோக்கித் திரும்பிய குருபிரசாத்தின் பார்வையை நேருக்கு நேராக எதிர் கொண்டாள் தாரிணி.

பல நாட்களுக்குப் பிறகு அவனைப் பார்க்க நேர்ந்ததில் தாரிணியின் கண்கள் அவளையறியாமலேயே கலங்க ஆரம்பித்து விட்டிருந்தன.

உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தவளுக்கு, அனைவரும் தங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது கூட மனதில் பட்டிருக்கவில்லை.

''தாரிணி கூட நான் கொஞ்சம் பேசலாமா?'' என்று குருபிரசாத் சற்றே திரும்பித் தனது வருங்கால மாமனாரைப் பார்க்க, ''தாராளமா!'' என்று புன்னகையுடன் தனது சம்மதத்தைச் சொன்னார் பிரபாகரன்.

அடுத்த நிமிடம் இருவரும் உள்ளறைக்கு வந்திருக்க, உயிரைக் கண்களில் தேக்கிக் கொண்டு எல்லையற்ற ஆவலுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த தாரிணியின் கண்களைச் சந்தித்தான் குருபிரசாத்.

இருவருடைய விழிகளுமே ஆசை, காதல், ஏக்கம், எதிர்பார்ப்பு என அனைத்து உணர்வுகளாலும் பின்னப்பட்டு, அங்கே வார்த்தைகளுக்கு இடமில்லாது மௌனமே மொழியானது.

எவ்வளவு நேரம் அப்படிச் சென்றிருக்குமோ, முதலில் பேசியது குருபிரசாத்.

மேலும் இரண்டு எட்டுக்கள் எடுத்து வைத்து, ''தாரு..'' என்று தன்னருகில் வந்தவனை ஆசையிலும் அழுகையிலும் உதடு துடிக்கப் பார்த்தாள் தாரிணி.

''என்னடா, ஏன் இப்பிடி ஆயிட்ட?''

''குரு, என்ன சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்ககூடக் கூட்டிட்டுப் போயிடறீங்களா? இன்னும் ரெண்டுநாள் மட்டும் நீங்க வராம இருந்திருந்தீங்கன்னா அதுக்கப்புறம் இந்த ஜென்மத்துல நீங்க என்னப் பார்த்திருக்கவே மாட்டிங்க!'' என்று உடல் குலுங்கிய



வளை இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டான் குருபிரசாத்.

அதைத் தாரிணி சொல்லியிருக்க வேண்டியதே இல்லை. அந்த அளவிற்கு உடல் பாதியாகி ஆளே அடையாளம் தெரியாமல் ஆகி விட்டிருந்தவளைப் பார்த்த குருபிரசாத் ஏற்கெனவே அதிர்ந்து தான் போயிருந்தான்.

ஆனாலும் இந்த அளவிற்கு மெலிவை அவன் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

மனதிற்குள் இத்தனை அன்பை வைத்துக்கொண்டு...

இவளுடைய இந்த அன்பிற்கு உண்மையிலேயே தான் தகுதியானவன் தானா?

''குரு..''

''அழாதடா, என்னால தாங்கிக்க முடியல.''

எங்கே வலித்து விடுமோ என்னுமளவிற்கு, பூவைப் போல மென்மையாக அணைத்திருந்தவனின் கைகளிலிருந்து தன்னை லேசாக விடுவித்துக் கொண்டு நிமிர்ந்து குருபிரசாத்தைப் பார்த்தாள் தாரிணி.

''என்னடா?''

''ஏன் குரு, ஏன் நீங்க இத்தன நாளா வராம இருந்தீங்க? ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமா... மத்தவங்க போகட்டும் குரு, உங்களால கூடவா என்னோட தவிப்ப புரிஞ்சுக்க முடியல. இல்ல என்னப் பிடிக்கலை..''

இப்பொழுது என்ன முயன்றும் குருபிரசாத்தால் சாதாரணமாக நடந்து கொண்டிருக்க முடியவில்லை. மென்மையாகவும்.

''வேண்டான்டா...'' என்றவன் அவளைத் தனது மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

"உன்னைப் பிரிஞ்சு சத்தியமா என்னாலயும் ஒரு வினாடி கூட சந்தோஷமா இருக்க முடியாதுடா. நிஜம்மா.

"நீ இங்க கஷ்டப்பட்டுட்டிருந்தேன்னா நான் எங்கயோ.."

தாரிணி பட்டிருந்த துன்பத்தை அவனும் உண்மையிலேயே அனுபவித்து விட்டிருந்தான். அதேபோல அவனும் தாரிணி தன்னை விரும்புவதைப் போலவே உயிருக்கு உயிராக அவளை விரும்பவும் தொடங்கி விட்டிருந்தான்.

ஆனால் அதை எப்படி அவள் புரிந்து கொள்ளும் வார்த்தைகளில் எடுத்துச் சொல்வது என்று அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அதாவது அப்பொழுதே.

இருவருக்கும் பேசவும், தங்களுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவும் எத்தனை எத்தனையோ விஷயங்கள் இருந்தன.

ஆனாலும் பேச முடிந்திருக்கவில்லை.

அதற்குத் தான் இனிவரும் காலம் முழுவதும் இருக்கிறதே.

"குரு.. குரு.." என்று அரற்றியவளை இழுத்துத் தன்து மார்போடு அணைத்துக் கொண்டவனுக்கும் சரி, தாரிணிக்கும் சரி, அப்பொழுது சுற்றியிருக்கும் உலகமே மறந்து போய் விட்டிருந்தது.

இத்தனை நாட்களும் அனுபவித்த பிரிவுத் துயரை அந்த அணைப்பில் ஈடு செய்ய முயன்றார்கள் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.